1511
25-3-09

வெளியீடு: 17-9-2008 Issued: 17-9-2008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, மே 6, 2008—தொகுதி 52—எண் 2**

**Tuesday the 6th May, 2008—Volume 52—No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
...gislative Assembly Secretariat, Chennai - 600 009

D
211,31'P08·
P08·52·2
228387

[Price Rs. 3.00

6-5-2008

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 301-335 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 335-336, 346 |
| (ஆ) நத்தம் ஒன்றிய உதவித் தொடக்கக் கல்வி அலுவலரும், தட்டச்சரும் போலி கையொப்பமிட்டு ஆசிரியர்களுக்குப் பணி மாறுதல் வழங்கியது | 337,348-355 |
| *திரு. இரா. விசுவநாதன் | 337-348-349, 350,351-352 |
| *மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு | 349, 350, 354-355 |
| திரு. சி. ஞானசேகரன் | 352 |
| திரு. தி. வேல்முருகன் | 352-353 |
| (இ) வேலூர் கோட்டை மசூதியில் தொழுகை நடத்த அனுமதித்தல் | 346-347 |
| *திரு. சி. ஞானசேகரன் | 346-347 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 347 |
| **3. மதுரை மாவட்டம், உத்தபுரம் கிராமம், தடுப்புச் சுவர் பிரச்சினை-நல்லிணக்கத் தீர்வு மேற்கொண்ட முதலமைச்சருக்குப் பாராட்டு** | 336-346 |
| மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி | 336-337 |
| திரு. என். நன்மாறன் | 338, 341-342 |
| திரு. ஜி.கே. மணி | 338-339 |
| *திரு. டி. சுதர்சனம் | 339 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 24

## 2008 மே 6, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத் தூறும் அறிவு"*

தோண்டத் தோண்ட ஊற்றுநீர் கிடைப்பது போல தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 201, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**201—**

### வாக்குச் சாவடி

***32429—திரு. இ. மகேந்திரன்:**

*"மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உசிலம்பட்டி தொகுதி, உத்தப்பநாயக்கனூர் ஊராட்சி, உ. வாடிப்பட்டியில் வாக்குச் சாவடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2008 மே 6

தேர்தல் ஆணையத்தின் தற்போதைய நெறிமுறைகளின்படி 1,400 வாக்காளர்களுக்கு ஒரு வாக்குச் சாவடி என்ற விகிதத்திலும் பொதுவாக ஒரு வாக்காளர் வாக்களிப்பதற்காக இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்குமேல் செல்ல வேண்டியிராதவாறும் வாக்குச் சாவடிகள் அமைக்கப்படுகின்றன. உ. வாடிப்பட்டி கிராமத்தில் 304 வாக்காளர்கள் மட்டுமே உள்ளதாலும், அவர்கள் தற்போது வாக்களிக்கும் வாக்குச் சாவடி இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளேயே அமைந்துள்ளதாலும் அக்கிராமத்திற்கென தனியாக வாக்குச் சாவடி அமைக்க தேர்தல் ஆணையத்தின் தற்போதைய நெறிமுறைகளின்படி வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, உத்தப்பநாயக்கனூர் ஊராட்சி, உ. வாடிப்பட்டி கிராமத்தில் சுமார் 500 வாக்காளர்கள் இருக்கிறார்கள். அங்கிருந்து சுமார் 2-1/2 கிலோ மீட்டர் தூரம் உள்ள உத்தப்பநாயக்கனூர் வந்து அவர்கள் வாக்களிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அங்கு ஒவ்வொரு தேர்தல் நேரத்திலும் வாக்காளர்கள் அதிகமாக வந்து வாக்களிப்பது இல்லை. 2-1/2 கிலோ மீட்டர் தூரத்திற்கு பஸ் வசதியும் இல்லாத காரணத்தால் அங்கு தனியாக ஒரு வாக்குச் சாவடி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே சட்டமன்ற, நாடாளுமன்ற தொகுதிகளை மறு வரையறை செய்து வெளியிடப்பட்ட ஆணைக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் ஒப்புதல் வழங்கிவிட்டார்கள். புதிய சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஏற்ப வாக்காளர் பட்டியல் பாகங்களை மாற்றி அமைக்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக வாக்குச் சாவடிகளை மறு சீரமைக்கும் பணியையும் மேற்கொள்ள இந்தியத் தேர்தல் ஆணையம் ஆணையிடும். அந்தச் சமயம் இந்தியத் தேர்தல் ஆணையம் வகுத்தளிக்கும் வரையறைகளுக்கு உட்பட்டு வாக்குச் சாவடிகள் அமைத்தல் தொடர்பான கோரிக்கைகள் மாவட்ட ஆட்சித் தலை[illegible]மூலமாக அந்த[illegible]யிலே பரிசீலிக்கப்படும்.

228387



2008 மே 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், எருவார்பட்டி பஞ்சாயத்து, கவுல்பட்டி கிராமத்தில் சுமார் 500 வாக்காளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எருவார்பட்டி பஞ்சாயத்திற்கு வந்து வாக்களிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அங்கு இரண்டு பிரிவினருக்கிடையே ஒவ்வொரு தேர்தல் சமயத்திலும் தகராறு ஏற்பட்டு வாக்களிக்க முடியாத நிலைமை அந்த கவுல்பட்டி மக்களுக்கு ஏற்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த அவையில் தொகுதி மறு சீரமைப்பு முடிந்தவுடன் கவுல்பட்டிக்கு தனியாக ஒரு வாக்குச் சாவடி அமைத்துத் தருகிறேன் என்று உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, தொகுதி மறு சீரமைப்பு முடியும் தருவாயில் உள்ள இந்தச் சமயத்தில் அந்த கவுல்பட்டி கிராமத்திற்கு தனியாக ஒரு வாக்குச் சாவடியை அமைத்துத் தர முன்வருவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் ஆணையம் தனி உரிமை உள்ளது. தேர்தல் ஆணையத்தினுடைய நடவடிக்கைகளில் அரசு தலையிட முடியாது. அதேநேரத்தில் அரசாங்கத்திலே உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் போன்றவர்கள்தான் தேர்தல் ஆணையத்தினுடைய விதிமுறைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு தொகுதியிலும் வாக்குச் சாவடிகளை உறுதிப்படுத்துகிறார்கள். எனவே, தேர்தலுக்காக வாக்குச் சாவடிகளை அமைக்கின்ற அந்தக் காலகட்டத்தில் அதற்குரிய அதிகாரிகள்மூலமாக தகுந்த பரிகாரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேடிக்கொள்ள முயற்சிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ல. ராதாகிருஷ்ணன்.

முற்பகல் 9-35

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி மறு வரையறை செய்யப்படும்பொழுது, கோவில்பட்டி தொகுதிக்கு உட்பட்ட நெல்லை மாவட்டத்தில்

இருக்கின்ற வருவாய் கிராமங்கள் அன்று சேர்க்கப்படவில்லை. இப்பொழுது 12 வருவாய் கிராமங்கள் தூத்துக்குடி மாவட்டத்தோடு இணைக்கப்பட்டுள்ளன. ஆனால், வாக்களிக்கின்ற வாக்காளர்கள் சங்கரன்கோயில் தொகுதியில், நெல்லை மாவட்டத்தில் வாக்களிக்கின்ற ஒரு வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். அவற்றை அரசு மறுபரிசீலனை செய்து, தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று, தூத்துக்குடி மாவட்டத்தோடு கோவில்பட்டி தொகுதியில் அந்த 12 வருவாய் கிராமங்கள் சேர்க்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு நான் விடையளிப்பது முறையாகாது. ஏனென்றால், இந்தப் பிரச்சினை, தேர்தல் ஆணையம் நேரடியாகப் பரிசீலித்திட வேண்டியதாகும். எந்த ஒரு தொகுதியிலும் இடம்பெறாமல் எந்த கிராமமும் இருக்க முடியாது. ஏதாவது ஒரு தொகுதியிலே அது இடம் பெற்றே தீரவேண்டும். அப்படி இடம் பெறாமல் இருக்குமானால் அந்தப் பிரச்சினையைத் தேர்தலுக்காக தொகுதிகள் பிரித்து அறிவித்ததற்குப் பின்னர், வாக்குச் சாவடிகளை மாவட்ட ஆட்சித் தலைவரோ, தேர்தலுக்காக மாவட்ட அளவில் நியமிக்கப்படுகிற அதிகாரிகளோ அதை ஆய்வு செய்கிறபொழுது, அந்தக் காலகட்டத்தில் கிராமங்கள் ஏதேனும் விடுபட்டு இருக்குமானால், தேர்தல் ஆணையம் உடனடியாக அதற்குரிய பரிகாரத்தைச் செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 202, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**202—**

## விதை சுத்திகரிப்பு நிலையம்

***43012—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதியில் விதை சுத்திகரிப்பு நிலையம் புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?





**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பள்ளிபட்டு தொகுதியில் புதிய விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு தொகுதி என்பது நெசவாளர்கள் சார்ந்த பகுதியாக இருந்தாலும்கூட அங்கே விவசாயிகளும் முக்கியப் பங்கு வகிக்கிற காரணத்தினாலே அந்தப் பகுதியிலே விதை சுத்திகரிப்பு நிலையம் தேவை என்கின்ற அடிப்படையிலே, அந்தப் பகுதியில் அதை அமைத்துத் தருவார்களா என்று தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்று பதில் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நான் கேட்கின்ற கேள்விக்கு உண்டு என்று பதில் சொல்ல வேண்டும் என்று முதலிலே என்னுடைய கோரிக்கையை முன்வைத்து, என்னுடைய தொகுதியில் இருக்கிற திருக்கழுக்குன்றம் வட்டம், விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கிற வட்டமாகும். அங்கு எந்தத் தொழிற்சாலையும் இல்லை. அங்கு ஏராளமான விவசாயிகள் நாற்று விடுகின்ற சமயங்களிலே நெல் விதைகளை வைப்பதற்கு இடம் இல்லாமல் இருக்கிறார்கள். அதேபோன்று, விதை சுத்திகரிப்பு நிலையத்திற்குக் கூடுதலாகக் கட்டடம் இல்லை என்ற குறை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற அந்த விதை

சுத்திகரிப்பு நிலையத்திற்குக் கூடுதலாக கட்டடமும், கூடுதலாக விதை சுத்திகரிப்பு இயந்திரமும் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா எனத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி பள்ளிப்பட்டு தொகுதியிலே புதிய விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பது. அதற்குத்தான் என்னிடத்திலே விடை இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி போட்டால் அல்லது கோரிக்கையை எழுதிக் கொடுத்தால் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்காச்சோளம் வீரிய விதைகள், ஒரு கிலோ விதை 150 ரூபாய், 200 ரூபாய் என்கின்ற அளவிலே விற்கப்படுகின்றது. ஆனால், வீரிய பருத்தி விதை 450 கிராம் 1,500 ரூபாய் என்று விற்றதை 750 ரூபாய்க்கு விற்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து, ஒரு கிலோ விதை பாக்கெட்டின் விலையை ரூ.750-க்குக் குறைத்த இந்த அரசு, மக்காச்சோளத்தின் விலையையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வீரிய விதை அல்லது B.T. இரக விதைகளைப் பற்றிக் கேட்கின்றார். தனியாகக் கேள்வி போட்டால் பதில் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 203, மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. அங்கையற்கண்ணி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.





**203—**

## அணைக்கட்டு

***3569—செல்வி ஆ. அங்கையற்கண்ணி:**

*மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் அருகே எல்.என். பட்டி கிராமத்தில் முசுகுந்தா நதியில் அணை கட்டும் பிரேரணை அரசிடம் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். பரிசீலனையில் உள்ளது.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. அங்கையற்கண்ணி.

**செல்வி ஆ. அங்கையற்கண்ணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் உள்ளது என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டம் எவ்வளவு மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது, எப்பொழுது தொடங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தத் திட்டம் சுமார் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. வனத் துறையினுடைய நிலம் தேவைப்படுகிறது. புஞ்சை நிலம் தேவைப்படுகிறது. அதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்தைக் கேட்க மதிப்பீடு ரிப்போர்ட் அனுப்பப்பட்டிருக்கிறது. அவரிடமிருந்து அது திரும்பி வந்த பிறகு, அடுத்த கட்ட நடவடிக்கை தொடரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. அங்கையற்கண்ணி.

[2008 மே 6

**செல்வி ஆ. அங்கையற்கண்ணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணி நதியின் குறுக்கே பூட்டை அணைக்கட்டு உள்ளது. அது பழுதடைந்து 5 ஆண்டுகள் ஆகிறது. இதனால், பூட்டை, செம்பராம்பட்டு, பொக்கினம், நெடுமானூர், சோழம்பட்டு ஆகிய ஏரிகளில் மழைக் காலங்களில் நீர்த்தேக்கம் இல்லாமல் அவை வறண்ட நிலையில் உள்ளன. அவற்றைச் சீரமைக்கும் பணியை எப்போது செய்வார்கள் எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் எல்.என்.பட்டி அருகில் முசுகுந்தா நதியில் அணை கட்டப்படுமா என்று கேட்டார்கள். பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். எவ்வளவு மதிப்பீடு என்று கேட்டார்கள். 9 கோடி ரூபாய் என்று சொன்னேன். எந்த நிலையில் இருக்கிறது என்று கேட்டார்கள். கலெக்டரிடம் ரிப்போர்ட் இருக்கிறது என்று சொன்னேன். இப்போது இதைக் கேட்கிறார்களே, இது எந்த ஊரிலே? (குறுக்கீடு) இது வேறா? இவ்வளவு பெரிய யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அது நியாயம்தானா என்று அரசு யோசிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திண்டுக்கல் மாவட்டம், வேடச்சந்தூர் வட்டத்தைச் சார்ந்திருக்கிற கொம்பேரிப்பட்டி கிராமத்தில் மாங்கும்பாற்று அணை கட்ட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு அமைச்சர் பெருமானிடம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாங்கும்பாறும் ஆய்வில் இருக்கிறது.



2008 மே 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் வரகூர் தொகுதி, ஆலத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட அருணகிரிமங்கலத்தின் வழியாக மருதையாறு பல்வேறு கிராமங்கள் வழியாக பாய்ந்து, கொள்ளிடத்தில் கலந்து, அதற்குப் பின்பு கடலில் கலக்கிறது. சுற்றப்புற கிராமங்களில் உள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயத் தொழிலையும், கால்நடைத் தொழிலையும் செய்து வருவதால், அந்தப் பகுதியில் ஒரு அணைக் கட்ட வேண்டுமென்பது நீண்ட நாட்களாக அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையாக இருந்து வருகிறது. கடந்த கால ஆட்சியின்போது இது அரசின் பரிசீலனையில் இருந்தது. எனவே, அந்தப் பகுதியினுடைய மக்களின் நலனைக் கருதி மருதையாற்றின் குறுக்கே அருணகிரிமங்கலத்தில் அணை கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் தொகுதி? வரகூர் தொகுதியா? அதாவது கொள்ளிடத்திலே வடவாற்றிலே கலக்கிற அந்த மருதையாறு பற்றிதானே சொல்கிறீர்கள்? இப்போது கொள்ளிடக் கரையை பலப்படுத்துகிறோம். அதேமாதிரி மருதையாறும்; அதுதான் வடவாற்றில் தண்ணீரைக் கொண்டு வந்து சேர்க்கிற இடம். மருதையாற்றையும் கருவாட்டு ஓடையையும் பலப்படுத்தும் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணையைக் கட்டுகிற கேள்வி. நமக்கு மிக முக்கியப் பிரச்சினையாக இருக்கிற முல்லைப் பெரியாறு அணையைப் பற்றி இன்றைக்குப் பத்திரிகையில் ஒரு செய்தி. கேரளத்திற்காக நீதிமன்றத்திலே வாதாடக்கூடிய வழக்கறிஞர்கள் அதைப் பார்வையிடுவதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. அது பற்றி நம்முடைய அரசுக்குத் தகவல் உண்டா? இப்படி ஒருதலைப்பட்சமாக பார்வையிடுவதால் நமக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமா என அறிய விரும்புகிறேன்.

[2008 மே 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணையை யார் வேண்டுமானாலும் பார்வையிடலாம். நூற்றுக்கணக்கான பயணிகள் போய் பார்க்கிறார்கள். அவர்களிலே ஒருவராக அந்த வழக்கறிஞர்களும் போகலாம். யார் பார்த்தாலும் சரி, கேரளத்தினுடைய அமைச்சர்கள் பார்த்தாலும் சரி, கேரளத்திற்காக நீதிமன்றத்திலே வாதாடுகிற வழக்கறிஞர்கள் பார்த்தாலும் சரி, ஏன் அந்தத் தீர்ப்பைக் கொடுக்கிற நீதிபதிகளே வந்து பார்த்தாலும் சரி, பார்க்கட்டும், நம்மிடத்திலே ஒளிவுமறைவு இல்லை. அணை பலமாக இருக்கிறது என்பதை ஆயிரம் மேடைகளிலே சத்தியம் செய்து நிரூபிப்பதற்குத் தமிழக அரசு தயாராக இருக்கிறது.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 204, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பெ. துரைசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**204—**

## மருத்துவக் கல்லூரி

***28691—மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல்லில் மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல்லில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2008 மே 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பெ. துரைசாமி.

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையிலும், மருத்துவக் கல்லூரி படிப்பிலும் மகத்தான சாதனைகளை நிகழ்த்துகின்ற வகையில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றபோது, 2006 ஆம் ஆண்டு மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், இதுவரை விழுப்புரம், திருவாரூர், தருமபுரி, சிவகங்கை, பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரி அமைக்க முடிவெடுத்து, அதை நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள். நாமக்கல் மாவட்டம், தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகம் வாழ்கின்ற ஒரு மாவட்டமாகும். அனைத்துத் துறைகளிலும் மிக வேகமாக வளர்ந்து வருகின்ற ஒரு மாவட்டமாக திகழ்ந்துகொண்டிருக்கின்றது. மாணவ, மாணவியர் தங்கள் மேல்நிலைக் கல்வியை முடித்த பிறகு வெளி மாவட்டங்களுக்குச் சென்று மருத்துவக் கல்வியைத் தொடர வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலும், தனியார் மருத்துவக் கல்லூரிகளிலே அதிக நிதி கொடுத்து, கல்வியைத் தொடர வேண்டிய சூழ்நிலை இருப்பதினாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அடுத்த ஆண்டிலாவது நாமக்கல் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி அமைய நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆண்டுதோறும் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள். அனைத்து மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இதுவரையில், இரண்டு ஆண்டுகளில் 5 மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வருகின்ற ஆண்டில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை முதல்வரிடம் எடுத்துக்கூறி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2008 மே 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பெ. துரைசாமி.

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி அமைய எவ்வளவு ஏக்கர் நிலம் தேவைப்படுகிறதோ, அவ்வளவு ஏக்கர் நிலம் தயாராக இருக்கிறது. நாமக்கல் மாவட்டம் தமிழகத்திலேயே ஒரு சிறந்த கல்வி மாவட்டமாக அழைக்கப்படுகின்ற அளவிற்கு தனியார் பள்ளிகளைக்காட்டிலும் அரசு மேல்நிலைப் பள்ளிகள், இன்னும் சொல்லப்போனால், களங்காணி என்ற கிராமத்தில் ஆதி திராவிடர் நலத் துறையால் நடத்தப்படுகின்ற பள்ளியில் பயில்கின்றவர்கள்கூட நூற்றுக்கு நூறு சதவிகிதம் தேர்ச்சி பெறுவதோடு 1,100-க்கு மேல் அதிக மதிப்பெண் பெறுகின்றவர்களாக நாமக்கல் மாவட்ட மாணவ, மாணவியர் உள்ளனர். அந்த மாணவர்களை ஊக்கப்படுத்துகின்ற வகையில், ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி, நாமக்கல் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி அமைய முன்னுரிமை வழங்கப்படுமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் வாங்குகிறார்கள். அது முட்டை வழங்குகிற மாவட்டம். (சிரிப்பு) முட்டை வாங்காமல் மாணவர்கள் நூற்றுக்கு நூறு மதிப்பெண் வாங்கியிருக்கிறார்களே, அதற்குப் பாராட்டு.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், சேலத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி இயங்கிக் கொண்டிருக்கிறது. சேலத்துக்கும் நாமக்கல்லுக்கும் வெகு தொலைவு இல்லை. குறுகிய தூரம்தான் இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை முதல்வரிடம் எடுத்துக்கூறி பரிசீலிக்கப்படும் என்று மீண்டும், மீண்டும் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. புஷ்பராஜ்.

**திரு. செ. புஷ்பராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்ட மருத்துவக் கல்லூரி கட்டடப் பணிகள் எப்போது தொடங்கப்படும்? அதன் மதிப்பீடு எவ்வளவு? பணி முடியும் காலம் எப்போது என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.



2008 மே 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட இருக்கின்ற பணிகள் தற்சமயம் நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிற காரணத்தால் உடனடியாக ஆரம்பிக்க முடியவில்லை. வெகு விரைவில் நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்கு முடிவுற்றதும் கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணையிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் ஏற்று தட்டாமல் நிறைவேற்றித் தருகின்ற மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக டாக்டர் அன்புமணி அவர்கள், எங்கள் சின்ன அய்யா அவர்கள் இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு கடலூர் மாவட்டத்தில், கடலூரில் ஒரு மருத்துவக் கல்லூரி கொண்டு வருவதற்கு ஆவன செய்வார்களா? அதற்கான இடம் கேப்பர்கோரையிலே தேர்வு செய்யப்பட்டு இருக்கிறது. இதுவரை 5 கல்லூரிகளைத் தமிழகத்திற்குத் தந்த மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், அவருடைய ஆட்சிக் காலத்திலே எங்கள் கடலூர் மாவட்டத்திற்கும் ஒரு மருத்துவக் கல்லூரியை வரும் ஆண்டிலே அறிவிப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அமைச்சரிடம் கேட்டு அமைகிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இரண்டாண்டு காலத்தில் ஐந்து புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை முதலமைச்சரிடம் எடுத்துக்கூறி, வருகின்ற ஆண்டில் அவருடைய அனுமதிபெற்று, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2008 மே 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தின் மத்தியப் பகுதியான கரூர் மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் திருச்சிக்கு அருகில் இருக்கின்றது. திருச்சியிலே ஒரு மருத்துவக் கல்லூரி இருக்கின்ற காரணத்தால், கரூருக்கு அவசியமில்லை என்று கருதப்படுகிறது. அதனால் தற்சமயம் பரிசீலிக்கும் கருத்துரு அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையில் இந்த ஆண்டே மருத்துவக் கல்லூரி அமைக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை வேலூருக்கு அருகில் இருக்கிற காரணத்தால் இந்தக் கருத்துரு எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 205, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 மே 6]

**205—**

## இராஜகோபுரம்

***30302—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்கு இராஜகோபுரம் கட்டும் பணியைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்கு ரூ.86.50 இலட்சம் மதிப்பீட்டில், 7 நிலை இராஜகோபுரம் கட்டும் பணி நடவடிக்கையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடையில் அமைந்திருக்கின்ற அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயில் மிகவும் பழமைவாய்ந்த திருக்கோயில். நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்ற அந்தத் திருக்கோயிலுக்கு மாசி மாதத் திருத்தேர் திருவிழாவன்று தமிழகத்திலேயிருந்து ஏறத்தாழ இலட்சத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் வந்து செல்கின்றனர். அம்மாவினுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் 12-11-2005 அன்று 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே இராஜகோபுரம் கட்டுவதற்காக கோயில் நிர்வாகமும் அறங்காவலர் குழுவும் ஒன்றாக இணைந்து திருப்பணியை மேற்கொண்டார்கள். திருப்பணியை மேற்கொண்டு ஆறு மாத காலத்தில் ஏறத்தாழ 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் முடிக்கப்பட்டு, இந்த இரண்டாண்டு காலமாக கிடப்பிலே கிடக்கிறது. வருகிற பக்தர்கள் அந்தப் பணிகள் முடிவடையாததைப் பார்த்து மிக வேதனையோடு செல்கின்றார்கள். ஆகவே, மிகவும்

[2008 மே 6

பிரசித்திபெற்ற இந்தத் திருக்கோயிலுடைய திருப்பணியை மிக விரைவில் செய்து முடித்து, குடமுழுக்கு விழாவையும் செய்து முடிக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கடந்த ஆட்சிக் காலத்தில் அந்தத் திருக்கோயிலுடைய பணி தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்ட நேரத்தில் 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 28 நபர்களை உபயதாரர்களாகக்கொண்டு அந்தத் திருப்பணி தொடங்கப்பட்டது. பிறகு ஏற்பட்ட மாறுதல்களின் காரணமாக, ஏற்கெனவே இருந்த அறங்காவலர் குழுத் தலைவர் அந்தப் பணியைத் தொடர்ந்து செய்ய இயலாத காரணத்தாலும், மேலும் 28 நபர்களை மட்டும் வைத்துச் செய்தால் சரியாக இருக்காது என்ற அடிப்படையிலும் இப்போது திருத்திய மதிப்பீடாக ரூ.86.5 இலட்சம் மதிப்பீட்டில் 30 இலட்சம் ரூபாயை திருக்கோயில் நிதியிலிருந்தும், 50 இலட்சம் ரூபாயை நன்கொடை மூலமாகவும், அதேபோல திருப்பணி உண்டியல்மூலமாகவும் வசூலித்துச் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டு மறு டெண்டர் கோரப்பட்டு, கடந்த 17-3-2008 ஆம் தேதியன்று ஆணையர் அலுவலகத்திற்கு உரிய விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அவை ஆய்வு செய்யப்பட்டு வெகுவிரைவிலே ஆணை வழங்கப்பட்டு, வெகுவிரைவிலே பணி துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற இந்தத் திருக்கோயிலுக்கு நாள்தோறும் பக்தர்கள் அதிகமாக வந்து செல்கின்றார்கள். அந்தப் பகுதியிலே போதுமான தண்ணீர் வசதியும், கழிப்பிட வசதியும் இல்லாமல் இருக்கின்றது. அந்தப் பகுதியிலே அதை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, மேட்டுப்பாளையம் தொகுதிக்குப்பட்ட வன பத்திரகாளியம்மன் திருக்கோயில் பவானி ஆற்றினுடைய ஓடையிலே மிக அழகான, இயற்கை எழில்வாய்ந்த தோற்றத்திலே அமையப்பெற்றிருக்கிறது.



2008 மே 6]

முற்பகல் 9-55

இந்தத் திருக்கோயிலின் பின்புறத்திலே பின் மண்டபம் கட்டுவதற்காகக் கடந்த காலத்திலே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே பணிகள் தொடங்கப்பட்டு, அந்தப் பணிகள் இன்னும் முடிவடையாமல் கான்கிரீட் தூண்கள் மட்டும் அமைக்கப்பட்ட நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் கோயிலுக்கு தற்போது 10 கோடி ரூபாய்க்கு மேலாக நிதியாதாரம் இருக்கிறது. ஆகவே மிக அதிகமாக மக்கள் வந்து செல்கின்ற அந்தப் பகுதியிலே இந்தத் திருக்கோயிலினுடைய பின் மண்டபத்தை விரைவிலே கட்டிக் கொடுப்பதற்கும் கிராமப்புறத்திலே அமைந்திருக்கின்ற இந்தத் திருக்கோயிலுக்கு வருகின்ற பக்தர்கள் தங்கிச் செல்வதற்காகத் தங்கும் விடுதி கட்டிக் கொடுப்பதற்கும், மிக விரைவிலே இராஜ கோபுரம் ஒன்றை அமைத்துத் தருவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலுடைய திருப்பணிகள் நடைபெறுகின்ற அதே காலகட்டங்களில், அந்தத் திருக்கோயிலுக்கு வருகின்ற பக்தர்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

அதோடு, கோவை மாவட்டம், தேக்கம்பட்டி, அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன அந்த பின் மண்டபத்தை ரூ.20.7 இலட்சம் மதிப்பீட்டில் உபயதாரர்கள்மூலமாகக் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இப்போது 40 சதவிகிதம் அளவிற்கு பணிகள் முடிவுற்றிருக்கின்றன. தொடங்கியவுடனேயே பணிகள் அனைத்தும் முடிய வேண்டும் என்று எதிர்பார்ப்பது உகந்ததல்ல. இப்போது 40 சதவிகிதப் பணிகள் அதிலே நடைபெற்றிருக்கின்றன. எஞ்சிய பணிகளை விரைவாகச் செய்வதற்கும் அதிகாரிகளுக்குப் பணிக்கப்பட்டிருக்கிறது.

அதோடுமட்டுமல்ல; அந்தத் திருக்கோயிலுக்கு ஏராளமான பக்தர்கள் வந்து செல்கின்ற காரணத்தாலும், அடிப்படை வசதிகள்

[2008 மே 6

தேவை என்பதை உணர்ந்தும், ஏறத்தாழ 6½ இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தார்ச் சாலை ஒன்று அமைப்பதற்கான பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கு வந்து செல்லக்கூடிய சேவார்த்திகளுக்குத் தங்கும் அறை வேண்டுமென்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதுவும் ரூ.36 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. மேலும் ஒரு கருணை இல்லத்தை அங்கே அமைப்பதற்கு 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணி நடைபெறுகிறது. ரூ.15.2 இலட்சம் மதிப்பீட்டில் பொங்கல் மண்டபம் கட்டுவதற்கானப் பணிகள், 2008-2009 ஆம் ஆண்டிற்கானப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. மேலும் அங்கே வரக்கூடிய பக்தர்களுக்குத் தேவையான கழிவறை வசதிகளைச் செய்வதற்கு ரூ.4.98 இலட்சம் மதிப்பீட்டிலும், பெண் சேவார்த்திகள் உடை மாற்றும் அறை ரூ.4.8 இலட்சம் மதிப்பீட்டிலும் ஏராளமான பணிகள் அந்தத் திருக்கோயிலில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரசித்திபெற்ற திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோயிலில் பணிகளை மேற்கொள்ள ஒதுக்கப்பட்ட ரூ.50 இலட்சம் நிதியில் வேலைகளைச் சரியாகச் செய்யாததால், பக்தர்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள குழப்பத்தை அகற்ற, அந்தப் பணிகளை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிகளில் தேக்கம் இருந்தால், அவற்றை விரைந்து நடத்துவதற்குப் பணிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி அவர்கள்.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் அரங்கநாதர் திருக்கோயில் இந்திய அளவில் புகழ் பெற்ற திருக்கோயிலாகும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய



2008 மே 6]

ஆட்சிக் காலத்திலே ஸ்ரீரங்கம் தெற்கு வாசலில் இராஜ கோபுரம் கட்டப்பட்டது. இப்பொழுது ஸ்ரீரங்கம் வடக்கு வாசலில் இராஜ கோபுரம் கட்டுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 206, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**206—**

## உயர்நிலைப் பள்ளி

***7140—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்தில் வருவாய் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்தில் வருவாய் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைத்திடக் கோரி கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை. கருத்துருக்கள் பெறப்பட்டால், விதிமுறைகளின்படி பரிசீலிக்கப்படும். தற்போது ஆரம்பப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு, அவை முதலில் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டு, பின்னர் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன.

[2008 மே 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் பெண்களுக்கென்று ஓர் அரசு உயர்நிலைப் பள்ளி அமைத்திடக் கேட்டிருக்கிறேன். பண்ருட்டி தொகுதியிலே இருக்கிற, கிட்டத்தட்ட 3 இலட்சம் மக்களுடைய பெண் குழந்தைகள் படிப்பதற்கும், பண்ருட்டி வட்டத்திற்கு அருகில் இருக்கிற அருமை நண்பர் திரு. சபா. இராஜேந்திரன் அவர்களின் நெல்லிக்குப்பம் தொகுதியில் அடங்கியுள்ள நூற்றுக்கணக்கான கிராமத்தினுடைய பெண்கள் பண்ருட்டியில் வந்து படிப்பதற்கு ஏதுவாகவும், பண்ருட்டி நகரத்தில் பெண்களுக்கென உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்த வேண்டும். அரசுக்குச் சொந்தமான வட்டாட்சியர் அலுவலகத்தில் 10 ஏக்கர் நிலமும் இருக்கிறது. இதுவரையிலும் பெண்களுக்கு என்று என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி இல்லாத காரணத்தினாலே, நகரப் பகுதியிலேயே ஓர் உயர்நிலைப் பள்ளியை அமைத்துக் கொடுத்தால் எதிர்கால பெண் தலைமுறையினுடைய கல்விக்கு வசதியாக, வாய்ப்பாக இருக்கும் என்பதால் வரும் ஆண்டுகளிலே பெண்களுக்கென்று ஓர் உயர்நிலைப் பள்ளியை அமைத்துக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறியவிரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளை அமைப்பதிலே முக்கியத்துவம் கொடுக்கிறோம். எங்கேயாவது பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், பெண் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு, பெண்கள் பள்ளிகளை முதலிலே அமைப்பதற்கு மிகுந்த முக்கியத்துவமும், முன்னுரிமையும் அளிக்கிறது. ஆனால், அதை எப்படிக் கொடுக்கிறோம் என்று சொன்னால், இப்போது நடைமுறையிலே, ஏற்கெனவே இருக்கக்கூடிய ஒரு



2008 மே 6]

பள்ளியிலேயிருந்து பெண்கள் உயர்நிலைப் பள்ளியைப் பிரித்து, அங்கே அதிகமான பெண் குழந்தைகள் படிக்கிறார்கள் என்று சொன்னால், பெண்களுக்காக தனியாக ஒரு பள்ளியை பிரித்து அமைக்க முடியும். பெண்களுக்காக நேரடியாக ஒரு பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது என்பது இப்போது நடைமுறையிலே இல்லை. இந்தக் குறிப்பிட்ட பள்ளியைப் பொறுத்தமட்டிலே, அங்கேயிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திலேயே, பண்ருட்டி அரசு மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. இந்தப் பள்ளியிலே 15 பெண் குழந்தைகள்தான் இப்போது 9 ஆம் வகுப்புக்குப் போவதாக இருக்கிறார்கள். பதினைந்தே குழந்தைகள். எனவே, இந்தப் பள்ளியைப் பொறுத்தமட்டில், உடனடியாக பெண்கள் பள்ளியாக ஆக்குவதற்கான வாய்ப்புகள் குறைவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி நகரத்தைப் பொறுத்த அளவிலே, கிட்டத்தட்ட 60 ஆயிரத்திலிருந்து 70 ஆயிரம் பொதுமக்கள் வாழ்கிறார்கள். அங்கு 10-க்கும் மேற்பட்ட தனியார், அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பிள்ளைகள் படிக்கின்றார்கள். தனியார், அரசு மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளில் கிட்டத்தட்ட 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் படிக்கிறார்கள். குறிப்பாக அங்கு, முத்தையா செட்டியார் அரசு உதவி பெறும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அங்கு மட்டும் 4 ஆயிரம் பெண்கள் படிக்கின்றார்கள். ஒவ்வோர் ஆண்டும் பெண்களை அங்கு சேர்க்கின்றபோது எங்கள் பள்ளியில் இடம் இல்லை, அதனால் சேர்ப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று அந்தப் பள்ளிகளின் நிருவாகம் மறுதலிக்கிறது. மீதியிருக்கிற தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்றால் அங்கு கட்டணம் என்ற பெயரிலே அதிகமான தொகையை வசூல் செய்கின்ற காரணத்தினாலே, பண்ருட்டி நகரத்தில் பெண்களுக்கென்று கல்விக்கூடம் இல்லாத காரணத்தினாலே, பண்ருட்டி அரசு மேல்நிலைப் பள்ளியிலே வெறும் 15 மாணவிகள் படிக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் சொல்வது உண்மை. அது முழுக்க முழுக்க ஆண்கள் பள்ளி. அந்த ஆண்கள் பள்ளியிலே சிறப்பு நேர்வாகத்தான் அமைச்சர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். அதனால்தான் அங்கு 15 மாணவிகள் படிக்கின்றார்கள். பக்கத்தில்

[2008 மே 6

திருவையூரில் ஓர் அரசு நடுநிலைப் பள்ளி இருக்கிறது. அதையேகூட அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தி, வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் 12 ஏக்கர் அரசு இடம் காலியாகக் கிடக்கின்ற காரணத்தினாலே அங்கு எதிர்வரும் காலத்தில் அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்பதை மட்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை எதிர்காலத்திலே அரசு ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 207, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**207—**

## மலைப் பாதை

***33519—திரு. தி. இராமசாமி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராசபாளையம் முதல் தேனி வரை ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு மற்றும் வருசநாடு வழியாக மலைப் பாதை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விருதுநகர் மாவட்டத்தில் பிளவக்கல் அணை, நமது



2008 மே 6]

தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்ட அணையாகும். அந்த அணைப் பகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலை இருக்கிறது. இராஜபாளையத்திலிருந்து வத்திராயிருப்பு, பிளவக்கல் அணைப் பகுதி, வழியாக வருசநாடு வழியாக தேனிக்கு ஒரு மலைப் பாதை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை இந்தப் பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாகும். இந்தச் சாலையை அமைக்கும்போது இராசபாளையத்திலிருந்து தேனிக்குச் செல்ல சுமார் 30 கிலோ மீட்டர் தூரம் குறைகிறது. விருதுநகர் மாவட்டமும், தேனி மாவட்டமும் இந்தச் சாலையின் வழியாக இணைக்கப்படும்போது வியாபாரம் பெருகுவதற்கும், விவசாய விளைபொருட்களைக் கொண்டு செல்வதற்கும், பிளவக்கல் அணைப் பகுதிக்கு சுற்றுலாவாக மக்கள் வந்து செல்வதற்கும் மிக வசதியாக இருக்கும். மேலும், தேனியில் பழங்கள் பதப்படுத்தும் தொழிற்சாலை மற்றும் தென் மாவட்டங்களின் தொழில் வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்தி நமது அரசு செயல்படும் இந்த நேரத்தில் வருசநாடு மலைப் பாதை மிகவும் அத்தியாவசியமாகிறது. தரை தளத்திலிருந்து மலையில் 5 கிலோ மீட்டர் தூரம்தான் சாலை அமைக்க வேண்டியுள்ளது. மலையின் உயரமும் குறைவு. சாலை அமைக்கப்படும் பகுதியில் விலை உயர்ந்த மரங்களோ, கடினமான உடைக்க வேண்டிய பாறைகளோ, கொடிய மிருகங்களோ இல்லை. தரை தளத்திலிருந்து மலைவரை சாலை அமைக்கத் தேவையான இடத்தை விவசாயிகளே மனமுவந்து இனாமாக வழங்கத் தயாராக உள்ளார்கள். எனவே, நமது தமிழக முதல்வர் அவர்கள் மத்திய அரசிடம் உடனடியாகச் சொல்லி, இப்படிப்பட்ட குறைகளைப் போக்கி, இந்தச் சாலையை அமைத்துக் கொடுத்து, தொழில் வளம் இல்லாத எங்கள் பகுதியைக் காப்பாற்ற வேண்டுமாறு அன்போடு, பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல விருதுநகர் மாவட்டத்தின் மக்களுடைய கோரிக்கையையும், அதைப்போல தேனி மாவட்ட மக்களுடைய கோரிக்கையையும் ஏற்று மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த நீண்ட...

[2008 மே 6

நான் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று சென்ற மானியக் கோரிக்கையிலே அங்கு சாலை அமைக்க அனுமதி தந்து, அதை நான் அறிவித்தேன். ஆனால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல அந்த மலைப் பகுதியிலே வத்திராயிருப்பிலிருந்து கிளவன்கோயில் வரையிலே ஏற்கெனவே சாலை இருக்கிறது. கிளவன்கோயிலிலிருந்து கொடிக்குளம் குடிசை வரை 8.1 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அதிலே 7 கிலோ மீட்டர் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் சாம்பல் நிற அணில் சரணாலயம் வரை அமைந்திருக்கிறது. 1.1 கிலோ மீட்டர் தேனி காப்புக் காட்டுக்குள் அமைந்திருக்கிறது. அந்த சாம்பல் நிற அணில் சரணாலயத்திலே சாலை அமைக்க வேண்டுமேயானால் மத்திய அரசினுடைய அனுமதி, உச்ச நீதிமன்றத்தினுடைய அனுமதி, அதைப்போல தேசிய வன உயிரினக் குழுமத்தினுடைய அனுமதியெல்லாம் பெற வேண்டும். அந்த தேசிய வன உயிரினக் குழுமத்திற்கு நாங்கள் வேண்டுகோள் விடுத்து அவர்கள் சில நிபந்தனைகளோடு அனுமதியைத் தந்திருக்கிறார்கள். விலை உயர்ந்த மரங்கள் அங்கே இல்லையென்று அவர் சொன்னார். ஆனால், இயற்கையாக வளர்ந்த எந்த மரங்களையும் வெட்டக் கூடாது என்று தேசிய வன உயிரினக் குழுமமும் உச்சநீதிமன்றமும் உத்தரவிட்டிருக்கின்றன. எனவே மீண்டும் நாங்கள் அதற்காக அனுமதியைக் கேட்டிருக்கிறோம். அதற்காக எவ்வளவு செலவாகும் என்ற கருத்துரு கோரப்பட்டு, 5 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடெல்லாம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மத்திய அரசை வலியுறுத்துகிறோம். விரைவில் அனுமதி பெற்றவுடன் அந்தச் சாலை அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றமும் வனத் துறையினுடைய அந்தக் குழுமமும் வளர்ச்சிப் பணிகளுக்கு உதவியாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. இராமசாமி, கொஞ்சம் வேகமாகக் கேளுங்கள்.



2008 மே 6]

**திரு. தி. இராமசாமி:** உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, அங்கு பெரிய மரங்களே இல்லை. அந்த மலைப் பாதை என்பது மிக அவசியமான ஒன்று. பெரிய மரங்கள் இல்லை, உடைக்க வேண்டிய பாறைகளும் இல்லை. சிறப்பு அனுமதி பெற வேண்டும். ஏற்கெனவே எங்கள் மாவட்டத்தில் அணில் சரணாலயம் என்று சொல்லி பாரம்பரியமாக ஆடு, மாடுகள் மேய்க்க பயன்படுத்தி வந்த அந்த மலைப் பகுதியையும் கடந்த ஐந்தாறு ஆண்டு காலமாக தடை செய்துவிட்டார்கள். ஏற்கெனவே எங்கள் மாவட்டத்திற்கு அண்ணன் கொறடா தலைமையில் மனுக்கள் குழு வந்திருந்தபோது அந்த மாவட்டத்தில் ஆடு, மாடு மேய்க்கின்றவர்கள் எல்லாம் வந்து ஒட்டுமொத்தமாக மனுவைக் கொடுத்து கோரிக்கை வைத்தார்கள். மக்கள் பிழைப்புக்கே சட்டங்கள் இடையூறாக இருந்துகொண்டிருக்கின்றன. எனவே, மக்கள் பிழைப்புக்கு இடையூறாக இருந்துகொண்டிருக்கக்கூடிய சட்டங்களைத் தளர்த்துவதற்கான முயற்சியை உச்ச நீதிமன்றத்தினுடைய அந்தத் தீர்ப்பின்படி நமது தமிழக அரசு மேற்கொண்டு இந்தச் சாலையை அமைத்துக்கொடுக்க வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணை என்பதோ அல்லது மத்திய அரசினுடைய சட்டம் என்பதோ இவையெல்லாம் நாடு தழுவிய பிரச்சினை என்கின்ற காரணத்தால் தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் எந்த அளவிற்கு அந்தச் சட்டத்தை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அந்த வகையிலே சாலை அமைக்கப்படுகிறது. நான்கூட, அன்றே ஒரு வினாவிற்கு பதிலளித்தேன், தமிழ்நாட்டிலே சரணாலயங்களை அதிகப்படுத்தினால் இதுபோன்ற இடர்ப்பாடுகள் வருகின்றன என்ற காரணத்தினாலே மேலும் சரணாலயத்தை அதிகப்படுத்துகின்ற எண்ணம் இல்லை என்பதைக்கூட குறிப்பிட்டேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கை விரைவிலே நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

[2008 மே 6

முற்பகல் 10-10

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள் எழுப்பிய இந்த வினாவிற்கு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சாலை, வத்திராயிருப்பிலிருந்து கிளவன்கோவில் வழியாக வருசநாடு செல்கின்ற சாலை, விருதுநகர் மாவட்டத்தையும், தேனி மாவட்டத்தையும் இணைக்கின்ற சாலை. இரண்டு மாவட்டங்களையும் இணைப்பதால், கிட்டத்தட்ட 55 கிலோ மீட்டர் குறைவான பயண தூரம் இருக்கின்ற காரணத்தினால், ஏற்கெனவே 2002 ஆம் ஆண்டில் P.M.G.S.Y. என்ற திட்டத்தின்கீழ், மத்திய அரசுக்கு அனுப்பி, தமிழக அரசின் சார்பாக நிதியொதுக்கம் செய்யப்பட்டு, மத்திய வனத் துறை அமைச்சகத்திற்கும், உச்ச நீதிமன்றத்தில் இருக்கின்ற குழுவிற்கும் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, கிட்டத்தட்ட 7, 8 வருடங்களாக அந்தப் பணி நடைபெறாமல், மத்திய அரசிடம் அந்தக் கோப்பு தேக்க நிலையைக் கண்டிருக்கின்றது. இன்றைக்கு இருக்கின்ற அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் சிறப்புக் கவனம் செலுத்தி, இரு மாவட்டங்களையும் இணைக்கின்ற இந்த சாலைப் பணியைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, அந்தச் சாலை மிகவும் முக்கியமானது என்கின்ற காரணத்தினாலேதான், மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், அதற்கு அனுமதி அளித்தார்கள். நீங்கள் சொன்னதைப்போல, அங்கே எந்தவிதக் கருத்துருவும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், நாங்கள் இப்பொழுது கருத்துருவை அனுப்பி, அதன் பின்னாலே தேசிய வன உயிரினக் குழுமமானது, மரங்களை வெட்டக்கூடாது, அது விலையுயர்ந்த மரமா அல்லது விலை குறைந்த மரமா என்றில்லை. இயற்கையாக வளர்ந்த எந்த மரங்களையும் வெட்டாமல், அனுமதிக்கப்பட்ட பாதையில் சாலை அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். செங்குத்தான பகுதி, கொண்டை •ஊசி



2008 மே 6]

வளைவுகொண்ட சாலைகளைத்தான் அங்கே அமைக்க முடியும். எனவேதான், அதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து எடுத்து, மத்திய அரசை வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அந்தச் சாலை மிகவும் முக்கியமானது என்பதால், தேசிய வன உயிரினக் குழுமத்திடம் நீங்கள் அனுமதியைப் பெற்றுத் தாருங்கள், அதன் பின்னர் உச்ச நீதிமன்றத்திலே அனுமதியைப் பெற்று, அதை அமைப்போம் என்று குறிப்பிட்டிருக்கிறேன். நாங்கள்தான் இப்பொழுது மதிப்பீடுகளைத் தயாரித்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைக் கேள்விக்குத் துணைக் கேள்வி கிடையாது. (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வனத் துறையினுடைய கோப்புகளைப் பார்க்க வேண்டும். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், 2002 ஆம் ஆண்டினுடைய கோப்புகளைப் பார்க்க வேண்டும். P.M.G.S.Y. என்ற திட்டத்தின்கீழ், அதற்கு நிதியும் ஒதுக்கப்பட்டு, மத்திய அரசினுடைய வனத் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. உச்ச நீதிமன்றத்தினுடைய குழுவிற்கும் அனுப்பப்பட்டிருக்கின்றது. அதோடுமட்டுமல்லாமல், அந்தப் பகுதியில் இருக்கின்ற முக்கியமான அந்தச் சாலை, வருசநாடு பகுதி, ஆண்டிப்பட்டி தொகுதியிலே வருகிறது. ஆண்டிப்பட்டி தொகுதியில் வருகின்ற காரணத்தினால், இதுவரை அது கிடப்பில் போடப்பட்டிருக்கின்றது. ஆகவே, இந்த அரசு துரித நடவடிக்கை எடுத்து, அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் 2001-2002 ஆம் ஆண்டு, P.M.G.S.Y. என்ற திட்டத்தின்கீழ் நிதியை ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதன்பின்னாலே ஐந்தாண்டுகள் அவர்கள்தான் ஆட்சியிலே இருந்தார்கள். ஆண்டிப்பட்டி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராகவும் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இருந்திருக்கிறார்கள். அந்தக் காலகட்டத்திலே அந்தக் கோப்பு ஏன் தொடர்ந்து வலியுறுத்தப்படவில்லை என்பதை நான் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்று சொல்கிறேன், நீங்கள் விதியை மீறாதீர்கள். எதிர்கட்சித் துணைத் தலைவராக இருந்துகொண்டு நீங்கள் விதியை மீறாதீர்கள். No. (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுகளைச் சொல்லக்கூடாது. முன்னாள் முதலமைச்சர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள், அந்தச் சாலை ஆண்டிப்பட்டி தொகுதியிலே வருகிறது என்ற காரணத்தால்தான் கிடப்பில் போட்டீர்கள் என்று சொன்னால், அது குற்றச்சாட்டுதான். துணைக் கேள்வி என்பது, கேட்கப்பட்ட மூலக் கேள்வியினுடைய பதிலிலிருந்து ஒரு விளக்கத்தைப் பெறலாமே தவிர, குற்றச்சாட்டை புதிய கேள்வியில் கேட்கக் கூடாது என்பது மரபு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைக் கேள்விக்குத் துணைக் கேள்வி கேட்க அனுமதிக்கக்கூடாது என்று விதியில் இருக்கிறது. நீங்கள் திரும்பத் திரும்ப கேட்டுக்கொண்டேயிருந்தால் என்ன அர்த்தம்? நீங்களே விதியை மீறலாமா? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு வந்த பிறகுதான் இதற்கான கருத்துரு அனுப்பப்பட்டதாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது தவறு. கடந்த 2002 ஆம் ஆண்டிலேயே இதற்கான கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. P.M.G.S.Y. என்ற திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கோப்புகளைக் கொஞ்சம் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா என் 208, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**208—**

## மேம்பாலம்

***1393—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) அம்பத்தூர் பழைய நகரப் பேருந்து நிலையம்-எம்.டி.எச். சாலை வழியாக பாடி வரையிலான நெடுஞ்சாலையில் இரயில் கடக்கும் இடத்தில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?.

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

முற்பகல் 10-15

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் எம்.டி.எச். சாலையிலிருந்து பூந்தமல்லி நெடுஞ்சாலை வரைக்கும் செல்கின்ற அத்திப்பட்டு-வானகரம் சாலையை அகலப்படுத்தி நான்கு வழிப் பாதையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சாலை வானகரம்-அம்பத்தூர் சாலை. இந்தச் சாலை சுமார் 6.4 கிலோ மீட்டர் நீளம் கொண்டது. இந்தச் சாலையை கடந்த ஆறு மாத காலத்திற்கு முன்பு நான் நேரடியாக ஆய்வு செய்திருக்கிறேன். மிக அதிகமான போக்குவரத்து உள்ள சாலை. இந்தச் சாலை சுமார் ஒரு கிலோ மீட்டர் அளவிற்கு ஒரு வழிச்சாலையாக இருந்தது. இந்த நிதி ஆண்டிலே ஒருங்கிணைந்த சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுமார் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மீதமுள்ள ஒருவழிச் சாலையையும் இருவழிச் சாலையாக மாற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மேலும், வாகனப் போக்குவரத்திற்கேற்ப அதை நான்கு வழிச் சாலையாகக்கூட மாற்றுவது குறித்தும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

[2008 மே 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *209*, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**209—**

## கட்டட வசதி

***22976—திரு. செ. சின்னச்சாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, பன்னாங்கொம்பு கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மருங்காபுரி தொகுதி, பன்னாங்கொம்பு கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருங்காபுரி தொகுதி, மணப்பாறை ஒன்றியம், கருப்பூர், புத்தாநத்தம், பன்னப்பட்டி, பொய்கைப்பட்டி, சாம்பட்டி, புடங்குப்பட்டி, எப். கீழையூர், சூளியாபட்டி, வடுகப்பட்டி, மலையடிப்பட்டி, தொப்பம்பட்டி, முண்டிப்பட்டி, எப். பெரியபட்டி போன்ற *21* பஞ்சாயத்துகளை உள்ளடக்கியிருக்கிற மணப்பாறை ஒன்றியத்திற்கு ஒரே ஒரு கால்நடை மருத்துவமனை மட்டும்தான் பன்னாங்கொம்பிலே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதைப்போல, துணை நிலையங்கள் என்று எடுத்துக்கொண்டால், புத்தானத்தத்திலே ஒன்றும், மறவனூரிலே ஒன்றும், எப். கீழையூரிலே ஒன்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், எப். கீழையூரிலே இருக்கிற அந்தத் துணை மையத்திலே ஆய்வாளர் பணியிடம் காலியாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே இந்த ஒன்றியத்திற்கு



2008 மே 6]

உட்பட்டிருக்கிற, *500* குக்கிராமங்களை உள்ளடக்கியிருக்கிற பகுதிக்கு ஒரு மருத்துவமனைதான் இருக்கிறது. பன்னாங்கொம்பு பஸ் நிலைய சாலையோரமாக இருக்கிற துணை நிலையத்திலே அந்த மருத்துவமனை இயங்கிக்கொண்டிருக்கிறது. எனவே, துணை நிலையத்திலே இயங்கிக் கொண்டிருக்கிற அந்தக் கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நிலம் கேட்கப்பட்டு, அந்த நிலமும் பஞ்சாயத்துத் தீர்மானம்மூலமாக அரசுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. கால்நடைத் துறையினுடைய மாவட்ட நிருவாகம் இடத்தைப் பார்வையிட்டிருக்கிறது. எனவே, இந்தச் சூழ்நிலையிலே ஏறத்தாழ அந்தப் பகுதியிலே இருக்கிற பசுக்கள் *34,000*-க்கும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. சின்னச்சாமி, கட்டடம் கட்டப்படுமா, இல்லையா என்பதுதான் கேள்வி. நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. செ. சின்னச்சாமி:** பசுக்கள், எருமைகள், வெள்ளாடுகள், கோழிகள் என்று எடுத்துக்கொண்டால், ஏறக்குறைய மூன்று இலட்சத்திற்கும் அதிகமான கால்நடைகள் அந்தப் பகுதிகளிலே இருக்கின்றன. அந்தக் கால்நடைகளினுடைய நலன் கருதி, பன்னாங்கொம்பிலே ஒரு புதிய கால்நடை மருத்துவமனை கட்டடத்தைக் கட்டித் தர அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி பன்னாங்கொம்பு கால்நடை மருந்தகம் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலேதான் *2000*-லே தொடங்கப்பட்ட மருந்தகம் ஆகும். அப்பொழுதே, அது D.R.D.A., அதாவது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம் கட்டப்பட்ட சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இப்பொழுது கூடுதல் கட்டடம் வேண்டுமென்றால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யும்பொழுது நிச்சயமாக கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசு கால்நடை மருத்துவமனை அல்ல. துணை சுகாதார நிலையத்திற்காகக் கட்டப்பட்ட சிறிய கட்டடம். அதிலே மருத்துவம் செய்கின்ற வசதி வாய்ப்புகள் குறைவாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, அது சாலையோரமாக, பஸ் நிற்கின்ற இடத்திலே இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, அங்கே கால்நடைகளைப் பிடித்து வரும்பொழுது வாகனத்தைக் கண்டு அந்தக் கால்நடைகள் எல்லாம் மிரண்டுபோய் கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடுகிற சூழ்நிலை இருக்கிறது. என்னுடைய வீட்டின் அருகிலேயே இருக்கிறது. தினந்தோறும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். எனவே, கருணை உள்ளத்தோடு, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையிலே ஈவு இரக்கம் காட்டாமல், வாய் பேசாத கால்நடைகள் என்பதால், ஓரங்கட்டாமல், தயவு செய்து அந்த வாய் பேசாதக் கால்நடைகளை எண்ணத்திலேகொண்டு புதிய கட்டடத்தைக் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் வாயிலாக கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, நிதியை ஒதுக்கீடு செய்ய முன்வராததால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை வரும் நிதியாண்டில் அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 210, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**210—**

## பள்ளி மற்றும் விடுதி

***1464—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், சிங்காரப்பேட்டை பகுதியில் அரசு ஆதி திராவிடர் நலத் துறை பள்ளி மற்றும் ஆதி திராவிடர் மாணவியர் விடுதி துவக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது ஆதி திராவிடர் நலத் துறையின்மூலமாக ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்படுவதில்லை. எனினும், கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், சிங்காரப்பேட்டை பகுதியில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் புதிய ஆரம்பப் பள்ளி தொடங்குவதற்கு மாநில தொடக்கக் கல்வித் திட்ட இயக்குநருக்கு ஆதி திராவிடர் நலத் துறையின் முன்மொழிவுகள் 26-3-2008 அன்று அனுப்பப்பட்டுள்ளன. இவ்வாண்டு சிங்காரப்பேட்டையில் புதிய ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், ஏறக்குறைய 30 ஆயிரம் ஆதி திராவிட மாணவர்கள் படிக்கின்ற மாவட்டம் ஆகும். 30 ஆயிரம் மாணவர்கள் படிக்கக்கூடிய இடத்திலே, ஒரேயொரு ஆதி திராவிட நலப் பள்ளி மட்டுமே உள்ளது என்பதை பேரவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். அம்மாவட்டத்தில் ஏறக்குறைய ஊத்தங்கரை, மத்தூர், போச்சம்பள்ளி ஆகிய இப்பகுதிகளையெல்லாம் உள்ளடக்கிய பகுதியான தேன்கனிக்கோட்டை, ஒசூர், மற்றும் சூளகிரி ஆகிய இந்த ஒன்றியங்களில் ஒரேயொரு பள்ளி மட்டுமேயிருப்பதால், 420 ஆதி திராவிட குடும்பங்கள் உள்ள அந்தப் பகுதியிலே அரசானது சிங்காரப்பேட்டையிலே கூடுதலாக ஆதி திராவிடர் நலத் துறைப் பள்ளி ஒன்றினை தொடங்கவேண்டுமென்ற கோரிக்கையினை வைத்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே விடுதியினை அளிப்பதற்கான இசைவினைத் தெரிவித்துக்கொண்டதற்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஆதி திராவிடர் தொடக்கப் பள்ளி முன்மொழியப்பட்டுள்ளதை இந்த ஆண்டே, தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறையின்மூலமாக தற்போது முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. அதற்கான ஒப்புதல் கிடைத்தவுடன் அந்தப் பகுதியில் ஆரம்பப் பள்ளி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10, 15 ஆண்டு காலமாக நிலுவையில் இருந்த கோரிக்கையை ஏற்று இந்த ஆண்டு கூடுதலாக ஒரு ஆதி திராவிடர் பள்ளி தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வந்திருப்பதை இந்த நேரத்திலே வரவேற்கிறேன். அதேபோல, நீதித் துறையின் சார்பாக நான் பேசும்போது மாநில மனித உரிமை ஆணையத்தின் சார்பாக அறிக்கை வைக்கவில்லையென்ற கோரிக்கையானது, இன்று சட்டப் பேரவையிலே வைக்கப்பட்டிருப்பதால், உண்மையிலேயே இந்த அரசை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பாராட்டுகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

**திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை ஆதி திராவிட மாணவர் விடுதி சுற்றுச் சுவர் இல்லாமல் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் உள்ளது. ஆகவே, அந்த விடுதிக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுச் சுவர் எழுப்புவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலையில் விடுதிக்கு சுற்றுச் சுவர் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். இந்த நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட மணலூர்பேட்டை பேரூராட்சியில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளி என இரண்டு பள்ளிகளிலும் சேர்த்து கிட்டத்தட்ட 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். அங்கு எந்த விடுதியுமே கிடையாது. எனவே, ஆதி திராவிடர் மாணவர் விடுதி, மாணவியர் விடுதி எனத் தனித்தனியாக விடுதிகள் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணலூர்பேட்டை பேரூராட்சியில் மாணவர் விடுதியும், மாணவியர் விடுதியும் கேட்டிருக்கின்றார்கள். மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, எந்த நிதி முதலில் அமைக்கப்பட வேண்டுமோ அதற்கேற்ப அங்கே இந்த நிதியாண்டில் விடுதி அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றையதினம் தெரிவித்துள்ளதன் அடிப்படையில் எடுத்துக்கொள்ள வேண்டியதை முதலில் எடுத்துக்கொள்வோம். (குறுக்கீடு) திரு. கே.ஏ. செங்கோட்டையன், என்ன?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள விவசாய . . .

## 3. மதுரை மாவட்டம், உத்தபுரம் கிராமம், தடுப்புச் சுவர் பிரச்சினை–நல்லிணக்கத் தீர்வு மேற்கொண்ட முதலமைச்சருக்குப் பாராட்டு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன், ஒரு நிமிடம். (குறுக்கீடு) மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டிக்கு அருகில் உத்தபுரம் கிராமத்தில் சுமார் 2 ஆயிரம் குடும்பத்தினர் வாழ்ந்து வருகின்றார்கள். அங்கு இரண்டு சமூகத்திற்கிடையில் ஏற்பட்ட பிரச்சினையில் 19 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தடுப்புச் சுவர் எழுப்பப்பட்டது. அந்தத் தடுப்புச் சுவரை ஒரு பிரிவினர் தங்களுடைய பாதுகாப்பிற்கானது என்று கூறி வந்தனர். இன்னொரு பிரிவினர் எங்களை இழிவுபடுத்தும்வகையில் அமைக்கப்பட்ட தீண்டாமைச் சுவர் என்று கூறி வந்தனர். இந்தப் பிரச்சினை நீண்ட நாட்களாக நீடித்து வந்தது. இதுகுறித்து, 19 நாட்களுக்கு முன்பு, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. என். நன்மாறன் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். உடனே, முதல்வர் அவர்கள் விசாரிக்க உத்தரவிட்டு, இன்றையதினம் மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் ஆய்வு செய்து, இரண்டு சமூகத்தினரையும் அழைத்துப் பேசி, பாதுகாப்புக்காக சுவரும் இருக்கட்டும், பாதை செல்வதற்கு வழியும் இருக்கட்டும் என்று சொல்லி, அந்தச் சுவரை இடித்து, பாதையும் உருவாக்கி, சாலையும் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொண்டு, ஒரே இடத்தில் வாழ்கின்ற இரண்டு சமூகத்தினரும் ஒன்றுபட்டு சுமுகமாக வாழ வேண்டும் என்ற சமத்துவ நோக்கத்துடன் எடுக்கப்பட்டிருக்கிற இந்த



நடவடிக்கைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய சமுதாயம் சார்பாக நெஞ்சம் நிறைந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-25

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) நத்தம் ஒன்றிய உதவித் தொடக்கக் கல்வி அலுவலரும், தட்டச்சரும் போலி கையொப்பமிட்டு ஆசிரியர்களுக்குப் பணி மாறுதல் வழங்கியது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றைய தினம் நான் எடுத்துக்கொள்வதாக இருந்த சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புகளிலே ஒன்று இன்று எடுத்துக்கொள்ளப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். முதலில் நான் சொல்வதைக் கேளுங்கள். உட்காருங்கள்.

"திண்டுக்கல் மாவட்டம், நத்தம் ஒன்றியம், உதவித் தொடக்கக் கல்வி அலுவலரும், திண்டுக்கல் டி.இ.ஓ. அலுவலகத் தட்டச்சரும் சேர்ந்து தொடக்கக் கல்வி இயக்குநரைப்போல் கையெழுத்துப் போட்டு, ஒன்பது ஆசிரியர்களுக்குப் பணி மாறுதல் உத்தரவு கொடுத்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து" மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், விதி 56-ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்துள்ளார். திரு. இரா. விசுவநாதன், திரு. தி. வேல்முருகன் ஆகியோர் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. விசுவநாதன்.

**• திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுத்தறிவித்தவன் இறைவன் என்று சொல்வார்கள். அந்த அளவிற்கு புனிதமான பணி ஆசிரியர் பணி . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. விசுவநாதன், கொஞ்சம் wait பண்ணுங்கள். (குறுக்கீடுகள்) திரு. என். நன்மாறன், என்னவென்று சொல்லுங்கள்.

### 3. மதுரை மாவட்டம், உத்தபுரம் கிராமம், தடுப்புச் சுவர் பிரச்சினை—நல்லிணக்கத் தீர்வு மேற்கொண்ட முதலமைச்சருக்குப் பாராட்டு—தொடர்ச்சி.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் எடுத்த இந்த நன்முயற்சி அவருடைய நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. அது இந்த நாடு நன்கு அறிந்த ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு பக்கமும் ஒரு சுமூக நிலையை ஏற்படுத்தி, சரியான தீர்வுக்கு வந்திருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய தமிழ் மாநிலக் குழுவின் சார்பிலும், சட்டமன்ற குழுவின் சார்பிலும் எங்களுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடுகள்) சரிதான் சார், உட்காருங்கள் சார். திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடுகள்) அதுதான் பேச விடுகிறேன் என்று சொல்கிறேனே!

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கூறிய மாதிரி, இந்த அவையில் அவர் எடுத்து வைத்தது, இரண்டு சமூகங்களுக்கிடையே நீண்டகாலமாக ஏதோ காரணத்தாலே ஏற்பட்டு வந்த பகை, தொடர்ந்து நீடித்து வரக் கூடாது என்ற காரணத்திற்காக, கடந்த காலங்களில் முதலமைச்சராக நம்முடைய கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற நேரத்தில், இரண்டு சமூகங்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று பல்வேறு நிலைகளிலே முயற்சிகள் எடுத்து வந்ததை இந்த நாடு அறியும். தமிழ்நாட்டு மக்கள் அறிவார்கள். அந்த இரண்டு சமுதாய மக்களும் உணர்ந்து, முதலமைச்சர் அவர்களின் அந்த நல்ல எண்ணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தொடர்ந்து நல்லிணக்கத்தோடு வாழ்ந்து வந்தார்கள். அந்த நல்லிணக்க உணர்வு மேலும் வளர வேண்டும், சமுதாயப் பிரிவுகள் என்ற அடிப்படையில் சாதிச் சண்டைகள் கொழுந்துவிட்டு துளிர்த்துவிடக் கூடாது என்ற காரணத்தினாலே, இப்பொழுது முதலமைச்சர் அவர்கள் இரு தரப்பினருக்கும் சமரசம் ஏற்படக்கூடிய வகையில் முயற்சி எடுத்து, அங்கே நல்ல தீர்வினை உண்டாக்கி இருப்பது சமூக நல்லிணக்கத்திற்கு மிகப் பெரிய எடுத்துக்காட்டு. இந்த நல்லிணக்கம் தமிழ்நாடு முழுவதும் வளருவதற்கு இது ஒரு அடித்தளமாக அமையும்



என்பதை இந்த நோத்திலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே தெரிவித்து. முதலமைச்சர் அவர்களின் இந்த சீரிய முயற்சிக்கு, நல்லிணக்க முயற்சிக்கு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம், ஒரு நிமிடம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் பேசட்டும். நீங்கள் உட்காருங்கள்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே ஏற்பட்டிருக்கின்ற அந்தச் சமுதாய பிரச்சினைக்கு நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் பெரு முயற்சி எடுத்து, இரு சமுதாய மக்களையும் அழைத்துப் பேசி, சுமுகமான ஒரு தீர்வினைக் கண்டு இருக்கிறார். அந்தத் தீர்வின் மூலமாக, இந்த நாட்டிலே இருக்கின்ற அத்தனை மக்களும் சமமானவர்கள் என்ற நல்லெண்ணத்தை உருவாக்கியிருக்கிறார். அவர் தன்னுடைய பொது வாழ்க்கையிலே எடுத்துக்கொண்ட இலட்சியங்களை நிறைவேற்றுகின்றமுகத்தானும், தான் எடுத்துக்கொண்டிருக்கின்ற அந்த இலட்சியம், ஜாதி, மத பேதமற்ற சமுதாயத்தைத் தமிழகத்திலே உருவாக்க வேண்டும், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும், அனைவரும் சமம் என்ற நிலையை உருவாக்குகின்றவகையிலும், முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிற தமிழக முதலமைச்சருக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நன்றி தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் *10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உத்தபுரத்திலே இரண்டு சமூகங்களுக்கு இடையே நல்லுணர்வை ஏற்படுத்தி, அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சியை நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற்படுத்தியிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்றுப் பாராட்டுகிறது. சமூகங்களுக்கு இடையே இப்படிப்பட்ட பிணக்குகள், பிரச்சினைகள் வருவதை காலத்தில் தீர்ப்பதற்குரிய முயற்சியாக இந்த நடவடிக்கை அமைந்திருக்கிறது. இந்த நடவடிக்கையே தமிழகத்திலே வேறுவிதமான உணர்வுகளைத்

தூண்டிவிடாமல் காலத்தில் தலையிட்டது என்பது பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமைந்ததாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண்பது என்பதுதான் வேறுவிதமான சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகள் வராமல் பாதுகாப்பதற்குரிய முன் முயற்சியாக அமையும் என்ற முன்னுதாரணத்திற்கு இந்தத் தீர்வு என்பது சிறப்பாக அமைந்திருக்கிறது. இந்த முயற்சியை எடுத்த நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதெல்லாம் நம்முடைய முத்தமிழ் அறிஞர், சமத்துவப் பெரியார் ஆட்சியில் இருக்கிறாரோ அப்போதெல்லாம் சமத்துவமாக தமிழகம் இருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்று. *(மேசையைத் தட்டும் ஒலி)* மதுரை மாவட்டத்திலே இரண்டு சமூக மக்கள் மத்தியிலே ஒரு மிகப் பெரிய கலவரத்தை ஏற்படுத்திவிட்டு குளிர் காயலாம் என்று நினைத்த சில அரசியல் கட்சிகளுக்கு வாய்ப்பூட்டு போட்டு, இரண்டு மக்களும் சமத்துவமாக வாழ வேண்டுமென்று, இந்த ஒரு அரிய பெரிய முயற்சி எடுத்த நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள். *(குறுக்கீடு)* திரு. சி. துரைராஜ், பேசுங்கள்.

**திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உத்தபுரம் கிராமம், என்னுடைய சேடப்பட்டி தொகுதியிலே அமைந்திருக்கிறது. இந்தக் கிராமத்திலே சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாக இரு சமுதாயத்து மக்கள் மத்தியிலே கருத்து வேறுபாடு இருந்தது உண்மை. 1989 ஆம் ஆண்டு இதே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த காலகட்டத்தில்தான் மிகப் பெரிய ஜாதிப் பிரச்சினை ஏற்பட்டு, 6 பேர் அங்கே உயிர்ப் பலியான சம்பவங்கள் எல்லாம் நடந்தன. அதன் பிறகு, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய பல்வேறு கிராமங்களுடைய முக்கியஸ்தர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, இரண்டு சமுதாய மக்களும் ஒன்றுமையாக வாழ வேண்டும், ஜாதி, மத வேறுபாடு இல்லாமல் வாழ வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின்



அடிப்படையிலே அவர்களையெல்லாம் சமரசம் செய்து அங்கே சில ஒப்பந்தங்கள் எல்லாம் எழுதப்பட்டு, அந்த ஒப்பந்தங்களின் அடிப்படையிலே இவ்வளவு நாள் அமைதியாக வாழ்ந்தார்கள். கடந்த 15, 20 தினங்களாக ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி, ஆதாயத்திற்காக அங்கே இல்லாத பல குற்றச்சாட்டுகளையெல்லாம் சொல்லி, ஒரு மிகப் பெரிய சுவர் 600 மீட்டர் நீளத்திற்குக் கட்டப்பட்டிருக்கிறது. 600 மீட்டர் என்று சொன்னால் எவ்வளவு நீளம் என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பாருங்கள். ஒரு மீட்டர் 3¼ அடி, 600 மீட்டர் என்று சொன்னால் எவ்வளவு நீளம் இருக்கும்? ஆனால் அதெல்லாம் தவறான தகவல் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குள்ள சூழ்நிலையில் அந்தக் கிராமத்திலே இரண்டு சமுதாய மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதுதான் என்னுடைய தனிப்பட்ட கருத்து, எங்களுடைய இயக்கத்தினுடைய கருத்து. அதேநேரத்திலே, ஒரு குறிப்பிட்ட சமுதாய மக்கள் நேற்றையதினம் சுமார் 300-க்கும் மேற்பட்டவர்கள் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சென்று தங்களுடைய குடும்ப அட்டைகளையெல்லாம் ஒப்படைத்துவிட்டு, இந்த ஊரிலே வாழ்வதற்கு எங்களுக்கு உயிர்ப் பாதுகாப்பு இல்லை, எங்களுடைய சொத்துகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்று சொல்லி ஒப்படைத்துவிட்டு, அந்த மக்கள் எல்லாம் ஊரைவிட்டு வெளியேறுகிறார்களே அதற்கு இந்த அரசு என்ன பரிகாரம் கண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் *10-35*

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இவ்வாறு பதிவு செய்து, தேவையற்ற விளைவுகளை திரும்பவும் தமிகத்திலே ஏற்படுத்த வழி செய்துவிடக் கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். *(குறுக்கீடுகள்)* தவறான தகவல் எதுவும் கிடையாது. தீண்டாமை ஒழிப்பு முன்னணி என்கின்ற ஒரு மாநில அமைப்பு அங்கே சென்றது. நாளேடுகள் அனைத்தும் சென்றன. நாளையதினம் எங்கள் அகில இந்திய செயலாளர் திரு. பிரகாஷ் காரத் அவர்கள் அங்கே பார்வையிட வருவதாக இருந்தார்கள். எங்களுடைய மாநிலச் செயலாளர் தோழர் என். வரதராசன் அவர்களும் மற்றைய தலைவர்களும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்திருக்கின்றார்கள். அந்தச் சுவர் எந்தக் காரணத்திற்காக வைக்கப்பட்டிருந்தாலும், யார் யார் பேசி வைக்கப்பட்டிருந்தாலும், அந்தச் சுவரை நம்முடைய

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'இந்து' நாளேட்டிலே பார்க்கின்றபோது, பெர்லின் சுவர் மாதிரி இருக்கின்றதே என்று சொன்னார்கள். அது எந்தக் காரணத்திற்காக வைக்கப்பட்டிருந்தாலும், இன்றைக்கும் அது நீடிக்கவேண்டுமா என்பதுதான் எங்களுடைய கேள்வி. ஆகவே, அந்த அடிப்படையில் இதைப் பார்க்கவேண்டும். மீண்டும் விரும்பத்தகாத விளைவுகள் உருவாவதற்கு முன்னாள் ஆளும் கட்சி முடிவெடுத்துவிடக் கூடாது என்பதைப் பணிவோடு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்) எங்களுடைய நோக்கம் அந்தச் சுவர் அகற்றப்பட வேண்டும் என்பதுதான். தற்போது அந்தப் பணியை நிறைவேற்றியிருப்பதை மனப்பூர்வமாக வரவேற்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆத்திரப்பட வேண்டாமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**• மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில், உத்தபுரம் பகுதியில் உருவாகியுள்ள ஒரு பிரச்சினை குறித்து கடந்த சில நாட்களாக தமிழகத்திலே உணர்ச்சி அலைகள் அலைமோதிக் கொண்டிருப்பதை நாம் அனைவரும் மிக நன்றாக அறிவோம். அந்தப் பிரச்சினை கடைசி கட்டத்தில், இப்பொழுது சாதி மோதல் என்ற நிலை பெற்று, அந்த உருமாற்றத்தின் காரணமாக தமிழகத்திலே யாரும் எதிர்பாராத அளவிற்கு மோதுதல்கள் உருவாகிடுமோ என்ற அச்சத்தை நமக்கெல்லாம் விளைவித்த நேரத்தில், ஒரு சுமூகமான சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது என்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒன்றாகும். ஆனாலும் நம்முடைய நண்பர் திரு. துரைராஜ் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, இரு சாராரும் ஒருமித்த கருத்தோடு இந்த உடன்பாட்டை ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள் என்று சொல்ல முடியாது. பெரும்பான்மையோர், அதாவது ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட, ஆதி திராவிட மக்கள், தாழ்த்தப்பட்டோர் என்று புறக்கணிக்கப்பட்ட மக்கள், இந்தச் சுவர் இருப்பது அவமானச் சின்னம் என்று கருதி, இந்தச் சுவரை இடிக்கவேண்டும் என்று ஆவேசத்தோடு கூறவும், இதை இடிப்பதற்கு நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்று இன்னொரு சாரார், ஆதி திராவிடர் அல்லாத சமுதாயத்தினர் கூறவுமான ஒரு சூழ்நிலையில், வடக்கே இருந்தெல்லாம்கூட சீர்திருத்த நோக்கம்கொண்ட கட்சிகளைச் சேர்ந்தவர்கள், தலைவர்கள் ஆச்சரியத்தோடு இதை உற்று நோக்கி, நேரிலே இதைப்



பார்க்கவேண்டும் என்றெல்லாம், வடபுலத்திலே உள்ள பத்திரிகைகாரர்களெல்லாம் ஆவல் கொண்ட, இந்தத் தருணத்திலேதான் நான் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை தொடர்பு கொண்டு விரிவாகப் பேசினேன். அவர்கள் இந்த விவரங்களைச் சொன்னார்கள்.

*முற்பகல் 10-40*

நண்பர் திரு. துரைராஜ் அவர்கள் சொன்னதைப்போல, சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட கலவரத்தின் தொடர்ச்சியாக எழுந்ததுதான் இந்தச் சுவர் என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆனால், 20 ஆண்டுகளுக்கு முன்பு ஏதோ ஒரு நாள் மாத்திரம் நடந்து முடிந்துவிட்ட கதையல்ல. அது தொடர் கதையாகவே அவ்வப்போது இதுபோன்ற பிரச்சினைகள், கலவரங்கள், மோதுதல்கள் அந்த வட்டாரத்திலே அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இதற்கு முன்பேகூட பெரும்பெரும் கலவரங்களெல்லாம் தமிழகத்தினுடைய தென்பகுதியிலே ஏற்பட்டதும், இரத்த வெள்ளம், குளங்களிலும், ஆறுகளிலும், வாய்க்கால்களிலும் ஓடியதும், அதிலே தலைகளெல்லாம் மிதந்ததும், இதே மாமன்றத்திலே உறுப்பினர்களால் எடுத்துக் கூறப்பட்ட செய்திகள்தான். அவைகளையெல்லாம் கடந்து, ஒரு அமைதியான சூழ்நிலையை இன்றைக்கு நாம் காண்கிற நேரத்தில், மீண்டும் அத்தகைய கலவரங்கள் விளைய வேண்டுமா என்ற கவலையின் காரணமாகத்தான், இதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள்--அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, நாட்டில் கலவரமற்ற அமைதியான ஒரு சூழ்நிலை வேண்டும் என்பதிலே அக்கறை உள்ள காரணத்தால், இதை எடுத்துச் சொல்லி--என்னுடைய கவனத்திற்கும் அந்தத் தகவல் வந்து--அது பத்திரிகைகளில் எல்லாம் பரபரப்பாக பேசப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரோடு நான் தொடர்பு கொண்டபோது, அவர்களிடத்திலே நான் சொன்ன யோசனைதான் இது. 'ஒரு சாரார் சுவரை இடிக்கவே விடமாட்டோம் என்கிறார்கள், இன்னொரு சாரார் இடித்தே தீருவோம் என்கிறார்கள். இருவருடைய வாதம் என்ன, எந்த அடிப்படையிலே இதைக் கேட்கிறார்கள் என்றபோது--எங்களுக்குப் பாதை வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். இன்னொரு சாரார் எங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும், ஆகவே, இந்தச் சுவர் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்.' நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் 'பாதையும் கொடுங்கள், பாதுகாப்பும் கொடுங்கள்' என்று சொன்னேன். பாதையைக் கொடுப்பதற்கு அடையாளமாகத்தான், அந்த நீண்ட, உயர்ந்த சுவரில் பெரிய நிலை வாசல் ஒன்றைத்

தோற்றுவித்து, அந்த வழியாக யார் வேண்டுமானாலும் போகலாம்—எப்படி இன்றைக்கு ஆலயங்களில் யார் வேண்டுமானாலும் அர்ச்சனை செய்யலாம் என்ற சட்டத்தைக் கொண்டுவந்து (மேசையைத் தட்டும் ஒலி) அதை நிறைவேற்றி நடைமுறைப்படுத்தியிருக்கிறோமோ, அதைப்போல--பகவான் சன்னிதானங்களுக்கே யார் வேண்டுமானாலும் போகலாம் என்றால், ஒரு சுவருடைய பாதையிலா செல்லக்கூடாது? ஆகவே, யார் வேண்டுமானாலும் அந்தப் பாதையிலே செல்லலாம் என்ற அளவிற்கு ஒரு பாதையையும் உருவாக்கி, பாதையும் இருக்கட்டும், அந்தச் சுவரும் இருக்கட்டும் பாதுகாப்பிற்கு என்ற முறையில் அங்கே இரு பகுதியிலும் வாழ்கின்ற மக்கள் சகோதரர்களாக, உடன் பிறப்புகளாக வாழட்டும் என்று அவர்களுக்கு கூறப்பட்டிருக்கிறது.

நான் கேள்விப்பட்டேன், அதிலே கோபம்கொண்ட உயர் வர்க்கத்தார் என்று தங்களைக் கூறிக்கொள்பவர்கள்—உயர் வர்க்கத்தாரா, தாழ்ந்த வர்க்கத்தாரா என்பது அவர்களது மனோ நிலையைப் பொறுத்ததே தவிர, சாதியிலே ஒன்றும்—"இறைச்சி, தோலிலே இலக்கமிட்டு இருக்கிறதா" என்று சிவவாக்கியர் கேட்டாரே அதைப்போல யாருடைய உடலிலோ, இறைச்சியிலோ, தோலிலோ இலக்கமிட்டு இவர் இன்ன சாதி, இவர் இன்ன சாதி என்று இல்லை, எல்லோரும் சமம்தான். அந்த நிலையில் இதைக் கடைபிடிக்கவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறுதியிட்டுக் கூறப்பட்ட பிறகு, ஆடவர்கள் சில பேர்—உயர் சாதிக்காரர்கள் என்று தங்களைக் கருதிக்கொண்டிருக்கின்ற ஆடவர்கள் சில பேர், நாங்கள் இங்கே வசிக்கமாட்டோம், நாங்கள் பக்கத்திலே உள்ள மலைப் பகுதிக்கு சென்று விடுவோம் என்று ரேஷன் கார்டுகளையெல்லாம்கூட தூக்கியெறிந்துவிட்டு போய்விட்டார்கள் என்று செய்தி வந்தது. அது அவர்களுடைய கோபத்தின் அடையாளம் என்று நாம் கருதிக்கொள்ளவேண்டுமே அல்லாமல், அவர்கள் உள்ளபடியே சாதி வேண்டுமென்று விரும்புகின்றவர்கள் என்று கருத முடியாது, எண்ண முடியாது, நினைக்க முடியாது.

அவர்கள் மலைப் பகுதியிலே வாழப்போகிறோம் என்று சொல்லிவிட்டுப் போனாலும்கூட, அந்த வீட்டு பெண்மணிகள் யாரும் செல்லவில்லை. அவர்களெல்லாம் அங்கேயேதான் தங்கியிருக்கிறார்கள் என்றும், மாவட்ட ஆட்சித் தலைவர் எனக்கு சற்று முன்புகூட செய்தி சொன்னார். பரவாயில்லை, தமிழ்நாட்டில் பெண்கள்



முன்னேறியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் காலத்திலேயிருந்து பெரியாரும், அண்ணாவும் மற்றும் பல தலைவர்களும் பட்டபாட்டின் விளைவாக பெண்கள் முன்னேறியிருக்கிறார்கள். ஆண்களும் நிச்சயமாக முன்னேறுவார்கள் என்ற அந்த நம்பிக்கையோடு அங்கே அமைதி காக்குமாறு கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

பாதுகாப்புக்கு சுவர் மாத்திரமல்ல, இன்னும் பாதுகாப்பு தேவையென்று உயர் வர்க்கத்தார் சொல்வார்களேயானால், உயர் வர்க்கத்தார் என்று கருதிக்கொண்டிருப்பவர்கள் சொல்வார்களேயானால், நான் அவர்களுக்குச் சொல்லுவேன், அண்மை காலத்திற்கு, இன்னும் சில மாதங்களுக்கு, போதிய பாதுகாப்பு அளிக்கக்கூடிய அளவிற்கு இராணுவம் வேண்டுமானாலும் அங்கே தருகிறேன், வரவழைத்துத் தருகிறேன்—மத்திய அரசுக்கு எழுதி, வரவழைத்து இராணுவத்தை வேண்டுமானாலும் அங்கே வைப்போம்.

*முற்பகல் 10-45*

அதைவிட, 'இராணுவத்தை வரவழைத்துவிட்டாயா' என்று கேட்கின்ற ஒரு சுடு சொல்லைவிட, ஒரு அவமானத்தைவிட, இன்னும் சாதி இருக்கிறது என்று நாம் ஒத்துக்கொண்டால் அது பெரிய அவமானம் என்று நான் கருதுகிற காரணத்தினாலேதான் சாதிக் கொடுமை—சாதியினால் ஏற்படுகின்ற வேற்றுமை—சாதியினால் ஏற்படுகின்ற பிளவுகள், மோதுதல்கள், அதனால் வழிகின்ற இரத்தம் இவைகள் எல்லாம் நம்முடைய இரத்தம்தான், நம்முடைய உயிர்தான், நம்முடைய மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை எண்ணி அமைதிப் பூங்காவாகத் தமிழகம் மீண்டும் மலருவதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இங்கே நண்பர் திரு. துரைராஜ் அவர்கள்கூட ஏதோ சில அரசியல் கட்சிக்காரர்கள் இதைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்று சொன்னார். அரசியல் கட்சி என்றால் எதையும் பயன்படுத்திக்கொள்ளத்தான் வரும். அதில் தவறு ஒன்றுமில்லை. எந்தக் கட்சியாக இருந்தாலும், ஒரு சம்பவம் ஏற்பட்டால் அந்தச் சம்பவத்தைப் பயன்படுத்திக் கொண்டு தாங்கள் வளரத்தான் எண்ணுவார்கள். அதில் தவறு ஒன்றும் இல்லை. அதை நான் தவறாக நினைக்கவும் இல்லை என்பதை எடுத்துக்கூறி, எப்படியோ இதுவரையிலே சமத்துவம் இல்லாமல் இருந்த ஒரு நிலை மாறி சமத்துவ நிலை அங்கே ஏற்பட்டதற்காக அந்த ஊருக்கு இருந்த உத்தபுரம் என்ற பெயரைக்கூட--உத்தமபுரம் என்று இனிமேல் நாம்

அழைக்கலாம் என்ற உணர்வோடு அந்த ஊர் மக்களையெல்லாம் உங்களோடு சேர்ந்து வாழ்த்துகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உரத் தட்டுப்பாடு பற்றித்தானே கொடுத்திருக்கிறீர்கள்? இன்றைக்குக் காலையிலே கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்விலே இருக்கிறது.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** 28 ஆம் தேதியே கொடுத்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னிடம் இருக்கிறது. நான் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** நாளைக்கு எடுத்துக்கொள்ளுங்கள்.

### (இ) வேலூர் கோட்டை மசூதியில் தொழுகை நடத்த அனுமதித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், என்ன?

***திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 ஆண்டுகளுக்கு முன்னால் வேலூரில் கட்டப்பட்டிருக்கிற கோட்டைக்குள்ளே இராணுவத்தினர் இருந்த காலத்திலேயே அங்கே இந்துக் கோயிலும் இருந்திருக்கிறது; சர்ச்சும் இருந்திருக்கிறது; மசூதியும் இருந்திருக்கிறது. சர்ச்சில் தொடர்ந்து மக்கள் வழிபட்டுக்கொண்டிருக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னாலே ஏற்பட்டிருக்கக்கூடிய எழுச்சி காரணமாக இந்துக்களும் ஜலகண்டேஸ்வரர் கோயிலைத் திறந்து வழிபாடு நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.



வேலூர் கோட்டைக்குள் தொடர்ந்து பல ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கக்கூடிய மசூதி திறக்கப்பட வழிவகை செய்ய வேண்டும் என்கிற ஒரு கோரிக்கையை வலியுறுத்தி அங்கு இருக்கக்கூடிய முஸ்லிம் மதத்தைச் சார்ந்திருக்கிற முகமதிய நண்பர்கள் அத்தனை பேரும் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள். அதனால் காவல் துறையினரும் இப்பொழுது கோட்டையைச் சுற்றி நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் சமூக நல்லிணக்கத்தைப் பற்றி நிறையவே இந்த அவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய வேலூர் எப்பொழுதுமே மும்மதங்களும், அது இந்துக்களாக இருந்தாலும் சரி, கிறித்தவர்களாக இருந்தாலும் சரி, முகம்மதியர்களாக இருந்தாலும் சரி, மத நல்லிணக்கத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டான ஒரு நகரமாகவே தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. அந்த அடிப்படையில் மும்மதத்தினருடைய கோயில்களும் அந்தக் கோட்டைக்குள்ளே அந்தக் காலத்திலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி அமைக்கப்பட்டிருக்கக்கூடிய இடத்தில் இந்துக்களும், கிறித்தவர்களும் வழிபட்டுக் கொண்டிருக்கிற இந்தச் சூழலில் முகமதியர்களையும் அந்த மசூதிக்குள் தொழுகை நடத்த அனுமதிக்க வேண்டும் என்கிற கோரிக்கை நியாயமான கோரிக்கை. அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால் சட்டம், ஒழுங்குப் பிரச்சினையெல்லாம் வரக்கூடிய ஒரு சூழல் இருந்து கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்தி, சமூக நல்லிணக்கத்தை அந்த இடத்தில் நிலைநாட்டுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் கோட்டை, கோயில் இவையெல்லாம் மாநில அரசின் ஆதிக்கத்திலே இல்லை. மத்திய அரசின் ஆதிக்கத்திலே இருக்கின்றன. பராமரிப்பிலே இருக்கின்றன. ஒரு கல்லை பெயர்க்க வேண்டுமென்றாலும்கூட மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் பெயர்க்க முடியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் எங்களை அணுகுவதைவிட டெல்லியை அணுகுவது சிறந்தது. (குறுக்கீடு)

[2008 மே 6

## (ஆ) நத்தம் ஒன்றிய உதவித் தொடக்கக் கல்வி அலுவலரும், தட்டச்சரும் போலி கையொப்பமிட்டு ஆசிரியர்களுக்குப் பணி மாறுதல் வழங்கியது—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், சொல்லியாகிவிட்டது, உட்காருங்கள். திண்டுக்கல் மாவட்டம், நத்தம் ஒன்றிய உதவித் தொடக்கக் கல்வி அலுவலரும், திண்டுக்கல் D.E.O. அலுவலகத் தட்டச்சரும் சேர்ந்து தொடக்கக் கல்வி இயக்குநரைப் போல்... (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் விளக்கம் அளித்ததற்குப் பிறகு எழுந்திருந்து பேசக் கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடு) No. தொடக்கக் கல்வி இயக்குநரைப்போல கையெழுத்து போட்டு 9 ஆசிரியர்களுக்கு பணி மாறுதல் உத்தரவு கொடுத்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் விதி 56-ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்துள்ளார். திரு. இரா. விசுவநாதன் அ.இ.அ.தி.மு.க. சார்பாகவும், திரு. தி. வேல்முருகன் பாம.க. சார்பாகவும் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்பு கொடுத்துள்ள உறுப்பினர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் திரு. இரா. விசுவநாதன்.

முற்பகல் 10-50

***திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பணி என்பது புனிதமான பணி. அந்தப் புனிதமான பணிக்குக் களங்கம் ஏற்படுத்துகின்ற வகையிலே, அவப்பெயர் ஏற்படுத்துகின்ற வகையிலே கல்வித் துறையிலே திண்டுக்கல் மாவட்டத்தில் சில விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன. திண்டுக்கல் மாவட்டம், நத்தம் உதவித் தொடக்கக் கல்வி அலுவலராகப் பணியாற்றி வருகின்ற திரு. குருசண்முகம் என்பவரும், திண்டுக்கல் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகத்திலே தட்டச்சராகப் பணியாற்றிய திருமதி தமிழரசி என்பவரும், திண்டுக்கல் ம.மு.கோவிலூரைச் சேர்ந்த திண்டுக்கல் நகரில் Travel Agency நடத்தி வருகின்ற மிக முக்கிய தி.மு.க. பிரமுகரான சுரேஷ்குமார் என்பவரும், இந்த மூன்று பேரும் சேர்ந்து தொடக்கக் கல்வி இயக்குநரைப்போல போலியான கையெழுத்து



2008 மே 6] [திரு. இரா. விசுவநாதன்]

போட்டு 9 ஆசிரியர்களுக்கு இடமாறுதல் உத்தரவை வழங்கி இருக்கிறார்கள்.

இப்போது மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலராக இருக்கின்ற திரு. செல்வகுமார் என்பவர் அதைக் கண்டுபிடித்து போலி கையெழுத்திட்டு பணி மாறுதல் செய்த 9 ஆசிரியர்களில் 8 பேர் பணியிலும் சேர்ந்துவிட்டார்கள். ஒரே ஒருவர் மட்டும் பணியில் சேராத நிலையில், 25 ஆம் தேதி புதிதாகப் பொறுப்பேற்ற மாவட்டக் கல்வி அலுவலர், போலி கையெழுத்து என்பதைக் கண்டுபிடித்து காவல் துறையிலே புகார் மனு அளித்திருக்கிறார். அந்தப் புகார் மனுவின் பெயரில் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் குருசண்முகம் கைது செய்யப்பட்டு இருக்கிறார். ஆனால் தமிழரசியும், தி.மு.க. பிரமுகர் சுரேஷ்குமாரும் கைது செய்யப்படவில்லை. அவர்கள் தலைமறைவு ஆகிவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால், சுரேஷ்குமார் என்ற அந்த தி.மு.க. பிரமுகர், உள்ளூரிலே இருக்கின்ற முக்கிய தி.மு.க. பிரமுகருக்கு மிக நெருக்கமானவர். அங்கே இருக்கின்ற ** (குறுக்கீடு) இல்லை என்ன தொடர்பு என்று சொல்ல வருகிறேன். (குறுக்கீடு) இல்லை, அவர் சம்பந்தம் என்று சொல்லவில்லை. இவருக்கும் அவருக்கும் தொடர்பு என்று...

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை, நீங்கள் motive attribute பண்ணாதீர்கள். நீங்கள், (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பவம் நடைபெற்று இருக்கிறது. அந்தச் சம்பவத்திலே என்ன நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது என்று நீங்கள் கேட்கலாமேயொழிய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சப்ஜெக்ட் மாத்திரம்தான் சொல்ல வேண்டும்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** இல்லை, இல்லை, பேரவைத் தலைவர் அவர்களே, ** என்றெல்லாம் சொல்வது, அவைக்கு ஏற்புடையதாக இல்லை. எனவே, அவைக் குறிப்பில் இருந்து தயவுசெய்து நீக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2008 மே 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** நீங்கள் சொல்லுங்கள், (குறுக்கீடு) இல்லை, இல்லை நீங்கள் பேசும்போது நாங்கள் அமைதியாகக் கேட்டுக்கொண்டுதான் இருந்தோம். (குறுக்கீடு) இல்லை, இல்லை,** நீங்கள் அதை attribute பண்ணக்கூடாது. அவருடைய உரிமையைக்கூட அது பாதிக்கும். எனவே, அவைக் குறிப்பில் இருந்து கண்டிப்பாக நீங்கள் நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்டுவிட்டது.

**திரு. இரா. விசுவநாதன்:** தி.மு.க. பிரமுகர் என்பதால் காவல் துறை அதிகாரிகளிடம் புகார் மனு அளித்தும் அவர்மீது நடவடிக்கை எடுக்கவில்லை, அவரைக் கைது செய்யவில்லை என்பதைத்தான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால், அந்த உதவித் தொடக்கக் கல்வி அலுவலரைக் கைது செய்துவிட்டீர்கள், ஆனால் அதிலே சம்பந்தப்பட்ட மீதி இரண்டு பேரையும் கைது செய்யாமல் இருப்பதற்குரிய காரணம் என்ன? அதற்குரிய காரணத்தைத்தான் நான் சொல்கிறேன். ஆகவே, செல்வாக்கு பெற்ற பிரமுகராக இருப்பதால் அவரைக் கைது செய்யாமல் காவல் துறை கண்டும் காணாமல் விட்டு இருக்கிறது. இப்படி போலிக் கையெழுத்திடுவது என்பது மிகப் பெரிய குற்றம். அப்படிப்பட்ட இமாலயக் குற்றம் செய்த ஒருவருக்கு, அவர்மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயக்கம் காட்டுவது ஏன் என்பதைத்தான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலிக் கையெழுத்தைப் பற்றிச் சொல்கிறார். நீதிமன்றத்திலே தான் போட்ட கையெழுத்தையே நான் போடவில்லை என்று சொன்ன வரலாறு எல்லாம் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 மே 6]

**திரு. இரா. விசுவநாதன்:** அது நீதிமன்றத்தில் இருக்கிறது. இதற்குத் தொடர்பு இல்லை. நீங்கள் இப்போது செய்திருக்கிற குற்றச்சாட்டுக்கு பதில் சொல்லுங்கள். சம்பந்தம் இல்லாமல் எதுவும் சொல்லாதீர்கள். இப்போது ஒரு அதிகாரி புகார் மனு அளித்திருந்தும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இந்தத் தவறை மறைக்க வேண்டுமென்று சொல்லியிருந்தால் யாரையுமே கைது செய்யாமல் இருந்திருக்கலாம். ஆனால், ஒருவரைக் கைது செய்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போதுகூட மற்ற இருவர் தலைமறைவாகி விட்டார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் தலைமறைவாகி இருக்கும்போது போலீஸ் தன்னுடைய கடமையைச் செய்வதற்காக அவர்களைத் தேடிக் கொண்டிருக்கலாம். ஆனால், அதை விட்டுவிட்டு இமாலயத் தவறு செய்தவர்களை விட்டுவிட்டார்கள் என்று சொல்வது தவறு.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள் என்று சொன்னால் அதை விட்டுவிட்டு நீண்ட நேரம் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** சுருக்கமாகத்தான் சொல்கிறேன். அதற்குமேலே மணிக்கணக்கிலேயா பேசிக் கொண்டிருக்கிறேன்? நான் கேட்க விரும்புவதெல்லாம், இது மிகப் பெரிய குற்றம். போலிக் கையெழுத்திடுவது என்பது மன்னிக்க முடியாத ஒரு குற்றம். இந்தக் குற்றத்திற்காகத் தலைமறைவாகி இருக்கிறார்கள் என்பது உண்மை அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விசுவநாதன், கமெண்ட் எல்லாம் வேண்டாம்.

**திரு. இரா. விசுவநாதன்:** இது கமெண்ட் அல்ல. அதைத்தான் சொல்ல வருகிறேன். காவல் துறை நினைத்தால் இன்றைக்கே அவர்களைக் கைது செய்யலாம். ஆனால் ஏதோ ஒரு அரசியல் சக்தி அங்கே தடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத்தான் இந்த நேரத்தில்

[திரு. இரா. விசுவநாதன்] [2008 மே 6

நான் பதிவு செய்ய விரும்புகிறேன். இப்படிப்பட்ட பெரிய தவறுகளையெல்லாம் இந்த அரசு மூடி மறைக்க முயற்சித்தால் குற்றவாளிகளை மூடி மறைத்து அவர்களை காப்பாற்ற முயற்சித்தால் வருங்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் அதிகமாக நடக்கும். ஆகவே, வருங்காலத்தில் இப்படிப்பட்ட தவறுகள் நடக்காத வண்ணம் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று சொன்னால், இந்தத் தவறு செய்தவர்கள்மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை இந்த நேரத்திலே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஆகவே, கல்வித் துறையில் நடந்த சம்பவம் என்பதால் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து போலி கையெழுத்து என்பதால், இது கிரிமினல் குற்றம் என்பதால், காவல் துறைக்கு பொறுப்பு வகிக்கின்ற முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வந்து, கிரிமினல் நடவடிக்கையும், துறை வாரியான நடவடிக்கையும் எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே வரியில் சொல்கிறேன். நான் மிகச் சுருக்கமாகச் சொல்கிறேன். பொதுவாக இதுபோன்ற மாறுதல் உத்தரவை எல்லாம் ஒரு இயக்குநர் போடுவதில்லை. அங்கே இருக்கக்கூடிய மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்தான் ஆங்காங்கு இருக்கக்கூடிய தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய ஆசிரியர் பெருமக்களுக்கு மாறுதல் உத்தரவை வழங்குவது வழக்கம். அப்படி இருக்கிறபோது ஒரு இயக்குநருடைய கையெழுத்தை, வேலியே பயிரை மேய்வதுபோல A.E.O.-வே இயக்குநருடைய கையெழுத்தைப் போட்டு, இப்படிப்பட்ட நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. வேறு எங்கேயாவது இதுபோன்ற நிகழ்வுகள் நடந்திருக்கின்றனவா? தவறு செய்தவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் அவைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், நத்தம் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்



2008 மே 6] [திரு. தி. வேல்முருகன்]

அவர்கள் பள்ளிக் கல்வித் துறையின் தொடக்கக் கல்வி இயக்குநருடைய கையொப்பத்தை தானாகவே இட்டு, போலியாக ஆவணங்களைத் தயார் செய்து ஆசிரியர்களின் இட மாறுதலுக்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார். இதிலிருந்து என்ன தெரிய வருகிறது என்று சொன்னால், மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களுடைய நடவடிக்கை என்பதும், அவர்கள் துறை அதிகாரிகளுடைய நடவடிக்கை என்பதும் நேர்மையாகவும், நியாயமாகவும் எந்தவித ஒழுங்கீனத்திற்கும் இடம் தராமல் தன்னுடைய துறையை அவர் நிர்வகித்த காரணத்தால், சட்டத்திற்குப் புறம்பாக குறுக்கு வழியில் புகுந்து இதுபோன்று காரியங்களில் ஈடுபடுத்திக்கொள்ள முடியாத சிலபேர் வேண்டுமென்றே அரசினுடைய ஆவணங்களையே போலியாக தயாரித்திருக்கிறார்கள். 3 ஆண்டுகளுக்கு முன்பு, கடந்த கால ஆட்சியில், இந்திய நாட்டின் உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதியின் உத்தரவை போலியாகத் தயாரித்துக் கொண்டு வந்து என்னுடைய கடலூர் மாவட்டத்தின் மத்திய சிறையில் இருந்தவர்களை விடுதலை செய்த வரலாறுகள் எல்லாம் உண்டு. ஆக, ஒவ்வோர் ஆட்சிக் காலத்திலும் இதுபோன்று சில விஷக் கிருமிகள் அரசுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்துகின்ற வகையில், அவப்பெயரை ஏற்படுத்துகின்ற வகையில், தானாக அரசு ஆவணங்களைத் தயாரிக்கிற நடைமுறை என்பது தமிழகத்தில் சில காலங்களில் நடந்தேறி வருகிறது. கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளினுடைய பெயர்களில் போலியான ஆவணங்களைத் தயாரித்து கோடிக்கணக்கான ரூபாய்களைக் கடன்களாகப் பெறுகின்ற நிலைமையும் தமிழகத்தில் இருந்து வருகிறது. ஆக, எந்த ஆட்சியாக இருந்தாலும், ஒரு அரசாங்கத்தினுடைய முத்திரையை, அரசு அதிகாரியினுடைய கையொப்பத்தை, அரசினுடைய உத்தரவை தானாக உருவாக்கிக்கொள்கின்ற போலி விஷமிகள் மீதும், இதுபோன்ற அரசு அதிகாரிகள்மீதும் கடுமையான நடவடிக்கை எடுத்து கிரிமினல் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கி, அவர்களைக் கைது செய்து எதிர்காலத்தில் அவர்கள் இதுபோன்ற தவறுகளை, எந்தவொரு விஷக் கிருமியும் தமிழ்நாட்டில் செய்யாத வண்ணம், முன்னெச்சரிக்கையாக அவர்களுக்கு ஒரு பாடத்தை இந்த அரசு பள்ளிக் கல்வித் துறையின்மூலம் கற்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலருடைய கையொப்பம் இல்லாமல் இங்கே இருக்கக்கூடிய தொடக்கக் கல்வி இயக்குநருடைய கையொப்பத்தோடு 9 பேருக்கு மாறுதல் உத்தரவு வந்திருக்கிறது என்று முதலிலே ஒருவருக்கு உத்தரவு வந்ததையொட்டி மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர், இயக்குநர் அவர்களிடமிருந்து இப்படி ஒரு உத்தரவு எங்களுக்கு வந்திருக்கிறது என்று எங்களுக்குத் தகவல் தெரிவித்தார்.

*முற்பகல் 11-00*

பொதுவாக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தொடக்கப் பள்ளிகளிலும், நடுநிலைப் பள்ளிகளிலும் வழங்கப்படக்கூடிய இப்படிப்பட்ட மாறுதல் உத்தரவு அங்கே இருக்கக்கூடிய மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் அளவிலேதான் வழங்கப்படக்கூடியது. இயக்குநர் அதிலே கையொப்பம் இடுவதில்லை. எனவே, என்றைக்குமில்லாத நடைமுறையாக இது இருக்கிறதே என்று அவர் ஒரு ஐயத்தின் காரணமாகக் கேட்கிறபோது, இப்படிப்பட்ட உத்தரவு இங்கேயிருந்து வழங்கப்படவில்லை என்பதை உறுதி செய்தவுடன், உடனடியாக அங்கே மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் முறையான விசாரணை மேற்கொண்டதில் அங்கே 9 பேருக்கு இப்படிப்பட்ட உத்தரவுகள் வந்திருப்பது கண்டறியப்பட்டது. நான் நேரத்தினுடைய அருமை கருதி அவற்றையெல்லாம் இங்கே படிக்கவில்லை, 9 பேருக்கு ஆணைகள் வந்திருக்கின்றன. அந்தத் தகவல் எங்களுக்கு இங்கே அனுப்பப்பட்டவுடன், உடனடியாக அதிலே விசாரணை மேற்கொண்டு நீங்கள் எங்களுக்கு அறிக்கை தாருங்கள் என்று சொன்னோம். முறைகேடான வகையிலே நடந்திருக்கிறது என்று அரசுக்குத் தெரிய வந்தவுடன், ஏப்ரல் 4 ஆம் தேதி உடனடியாக அங்கேயிருக்கக்கூடிய மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் காவல் துறையிலே புகார் மனு கொடுத்து, முறையாக காவல் துறையினர் நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இதிலே மூடி மறைப்பதற்கு எதுவுமே இல்லை. இந்தத் தவறு நடைபெற்றது என்று தெரிந்தவுடன், இப்படித் தவறு நடைபெற்றிருந்தது என்று சொன்னதும் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்தது. உடனடியாக காவல் துறைக்குத்





தெரிவித்து இது ஒரு மிகப்பெரிய forgery நடவடிக்கை, எனவே, உடனடியாக நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டிருக்கிறோம். துறை நடவடிக்கையாக உடனடியாக சம்பந்தப்பட்ட அனைத்து ஆசிரியர்களும் suspend செய்யப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு எங்கெங்கே நடந்திருக்கிறது என்று இங்கே கேட்டார்கள், ஒரேயொரு யூனியனிலே மாத்திரம் இது நடந்திருக்கிறது. நத்தம் ஒன்றியத்திலே மாத்திரமே நடந்திருக்கிறது, அங்கேயிருந்துதான் இது கிளம்பியிருக்கிறது. அந்த A.E.O. அலுவலகத்தில் இது எப்படி நடந்தது என்று கேட்டீர்கள் என்று சொன்னால், இப்படி அங்கே போய் join பண்ணக்கூடியவர்கள் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரிடம் போக வேண்டியதில்லை. A.E.O. office-க்குத்தான் போக வேண்டும். அந்த A.E.O.-வே இதிலே சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய காரணத்தினால் அவரே இந்த ஆர்டரைத் தயாரித்து அவரே அவர்களைப் பணியில் சேருவதற்கும் உடந்தையாக இருந்திருக்கிறார். உடனடியாக A.E.O.-வும் suspend செய்யப்பட்டிருக்கிறார். அவர்மீது காவல் துறை நடவடிக்கை எடுத்து, குருசண்முகம் கைது செய்யப்பட்டிருக்கிறார். மீதியிருப்பது இரண்டு பேர், தமிழரசு என்பவரும் இன்னொருவரும் abscond ஆகியிருக்கிறார்கள், தலைமறைவாக இருக்கிறார்கள். அவர்களை இப்போது போலீஸ் தேடிக் கொண்டிருக்கிறது. எனவே, இதிலே யாரையும் மூடி மறைப்பதற்கோ, யாரையும் காப்பாற்றுவதற்கோ அரசு முயற்சிக்கவில்லை. கடுமையான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்திருக்கிறோம். என்னிடத்திலே இருக்கக்கூடிய விவரங்களின்படி வழக்கு எண், முதல் தகவல் அறிக்கை எண் *21/08, 18-4-2008*, இந்தியத் தண்டனைச் சட்டத்தின்கீழ் *465, 468, 471, 467, 420* ஆகிய பல்வேறு பிரிவுகளின்கீழே வழக்குப் பதிவு செய்யப்பட்டு இப்போது நிலுவையிலே இருக்கிறது. குற்றவாளி, குருசண்முகம் இப்போது கைது செய்யப்பட்டிருக்கிறார். எனவே, அரசுக்கு எதையும் மூடி மறைக்க வேண்டிய அவசியம் கிடையாது. கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதுபோன்ற நடவடிக்கைகள் வேறு எங்கேயும் இருக்கின்றனவா என்று கேட்டார்கள். அதையும்கூட நாங்கள் விசாரிக்கச் சொல்லியிருக்கிறோம். வேறு எங்கேயும் அப்படி வரவில்லை. இது ஒரு சம்பவம், அங்கே உள்கூட்டு வைத்துக்கொண்டு செய்திருக்கிறார்கள். அரசு இதற்கு முறையான நடவடிக்கை எடுத்திருக்கிறது. எதிர்காலத்திலும் இதுபோன்ற சம்பவங்கள் ஏற்படாத வகையில் விழிப்பாக இருக்கச் சொல்லி அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அரசு சுற்றறிக்கையினை அனுப்பியிருக்கிறது.

## 4. கவன ஈர்ப்பு

### கன்னியாகுமரி மாவட்டம், சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை நிறுத்தப்பட்டுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் எஸ். ஜெயபால், கரி. இராமசாமி, எம்.ஆர். சுந்தரம், பெ.சு. விஜயகுமார், ராம. சுப்புராம், து. அமரமூர்த்தி, டி. சுதர்சனம், எஸ். பீட்டர் அல்போன்ஸ், எஸ். ஜாண் ஜேக்கப், பா. வேல்துரை, கு. ஹசன் அலி, மா. ராஜசேகரன், விடியல் எஸ். சேகர், என்.ஆர். ரங்கராஜன், ஞா. ஜாண் ஜோசப் மற்றும் திருமதி ரா. லீமா றோஸ் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ். (குறுக்கீடு) காங்கிரஸ் கட்சியின் சார்பில் யார் பேசுகிறீர்கள்? திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை நிறுத்தப்பட்டுள்ளது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

#### அறிக்கை

தமிழகத்தில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், தொழில் கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்குப் பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை மற்றும் இலவசக் கல்வித் திட்டம் ஆகியவற்றின்கீழ் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.





2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மேற்குறிப்பிட்ட கல்வி உதவித் தொகைகளைப் பெறுவதற்கான பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.50,000/-லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 658, பிற்படுத்தப்பட்டோர் நலம், சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத் துறை, நாள் 25-7-1989-ல் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்றாண்டு பட்டப்படிப்பு வரை பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவர்களுக்கு இலவசக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 81, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, நாள் 26-4-1990-ல் தொழிற் கல்வி பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் உதவித் தொகை வழங்க ஆணையிடப்பட்டது.

அரசாணை (நிலை) எண் 82, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, நாள், 26-4-1990-ல் 3 ஆண்டு பட்டப்படிப்பு வரை பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு இலவச கல்வித் திட்டத்தினை நீட்டித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அரசாணை (நிலை) எண் 79, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, நாள் 7-11-1991-ல் தொழிற் கல்விப் பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு இலவச கல்வித் திட்டம் நீட்டிக்கப்பட்டது. அதே அரசாணையில் சுயநிதி தொழிற் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின்கீழ் சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கும் இலவச கல்வி உதவித் திட்டம் பொருந்தும் என அறிவிக்கப்பட்டது.

தமிழகத்தில் கல்வி உதவித் தொகைகள் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்தன. அரசாணை (நிலை) எண் 79, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, நாள் 7-11-1991-ல் தான் சுய நிதி தொழிற் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின்கீழ் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவது குறித்து ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, சுயநிதி

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்] [2008 மே 6

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் சுயநிதி தொழிற் கல்லூரிகளில் நிர்வாக ஒதுக்கீட்டின்கீழ் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவதற்கான ஆணைகள் ஏதுமில்லை.

சில மாவட்டங்களில் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும், சுயநிதி தொழிற் கல்லூரிகளில் நிர்வாக ஒதுக்கீட்டின்கீழ் பயிலும் மாணவர்களுக்கும் உதவித் தொகைகள் கடந்த ஆண்டுகளில் தவறாக வழங்கப்பட்டுள்ளன. இத்தவறு மாநில கணக்காய்வுத் துறையின் தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து அவர்களுக்கு உதவித் தொகை வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8856, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, ஆங்கிலேயரது ஆட்சியில் ரேகைச் சட்டத்தாலும் அடக்குமுறையாலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதி. சீர்மரபினர் மேம்பாடு அடைய, உசிலம்பட்டி தொகுதியில் பொறியியல் கல்லூரி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,64,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,34,67,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9100, திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் தொகுதி, தஞ்சாவூருக்கும் கும்பகோணத்திற்கும் இடையே உள்ள பாபநாசத்தில் அரசு கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,64,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,34,67,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10015, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் மாவட்டத்தில் அரசு தகவல் தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,64,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,34,67,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10073, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் கல்லூரிகளில் மாணவ, மாணவியர்களைச் சேர்க்கும்போது, மிகக் கூடுதலாகக் கட்டணம் வசூலிப்பதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,64,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,34,67,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10224, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், தருமபுரியில் மகளிர் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,64,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,34,67,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10395, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினத்தில் கலை அறிவியல் கல்லூரி தொடங்க நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,64,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,34,67,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10402, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதியில் கலை அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,64,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,34,67,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10908, திரு. பெ. கண்ணன்.



**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,64,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,34,67,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11241, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தகவல் தொழில்நுட்பவியலைக் கட்டாயப் பாடமாக ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,64,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,34,67,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12469, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமயம் சட்டமன்றத் தொகுதியில் ஒரு அரசு கலைக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,64,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,34,67,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12738, திரு. நி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,192,64,33,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.61,34,67,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *13145*, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் எம்.வி.எம். அரசு பெண்கள் கல்லூரியில் பி.எஸ்சி., இயற்பியல் மற்றும் எம்.எஸ்சி., இயற்பியல் பாடத் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,192,64,33,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.61,34,67,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *13681*, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரையில் இந்திய தொழில்நுட்ப மையம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,192,64,33,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.61,34,67,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *14292*, திரு. ஆர். சாமி.



**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, மேலூர் அரசு கலைக் கல்லூரியில் canteen வசதி இல்லாததால் மாணவர்கள், பேராசிரியர்கள் நலன் கருதி அங்கு மகளிர் சுய உதவிக் குழுவினர்மூலம் canteen அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,192,64,33,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.61,34,67,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *14920*, திரு. எஸ். ஜெயபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *16538*, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு கல்லூரிகளில் நீண்ட நாட்களாக நிரப்பப்படாத தாழ்த்தப்பட்ட இனத்தினருக்காக ஒதுக்கப்பட்ட விரிவுரையாளர் காலிப் பணியிடங்களில் சிறப்புத் தேர்வுமூலம் விரைவில் விரிவுரையாளர்களை நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,192,64,33,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.61,34,67,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *16774*, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கல்லூரிகளில் ஷிப்ட் முறையில் மாணவர் சேர்க்கை செய்யும்பொழுது, கல்லூரி விடுதிகளை இரட்டிப்பாக உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,64,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,34,67,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16935, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரத்தநாட்டில் ஒரு பொறியியல் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,64,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,34,67,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17086, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதியில் அரசு கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,192,64,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.61,34,67,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால். கூறலாம்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே



கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இம்மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைமீது விவாதம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் முனைவர் மு. தம்பிதுரை, உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள்.

***முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தவரும், என் போன்றவர்களுக்கு அரசியலில் பல உயர் பதவிகளைக் கொடுத்துச் சிறப்பித்துவரும் சமூக நீதி காத்த வீராங்கனையுமான மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்து, சில கருத்துகளைச் சொல்வதற்கு நான் விழைகின்றேன்.

இன்றைய அரசால் உயர் கல்வித் துறைக்கு இந்த 2008-2009 ஆம் ஆண்டிற்காக 1,253.99 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையில் 114.38 கோடி ரூபாய் திட்டப் பணிகளுக்காக மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. மீதித் தொகை எல்லாம் சம்பளம் போன்ற செலவுகளுக்கே போய்விடுகிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய கொள்கை விளக்கக் குறிப்பில் பல கருத்துகளைச் சொல்லியிருக்கின்றார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழ்நாட்டில் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் ப்ளஸ் 2 தேர்வு எழுதுகிறார்கள். ஆனால், இவர்களில் எத்தனை பேர் உயர் கல்வி கற்கிறார்கள்? நமது மக்கள் தொகையில் 18 வயதிலிருந்து 24 வயது வரையுள்ள இளைஞர்களில் சுமார் 7 விழுக்காடு அளவிற்குத்தான் உயர் கல்வி கற்கச் செல்கிறார்கள் என்று

---

@ 481 முதல் 541 வரையிலான பக்கங்களில் இணைப்பு—I ஆக அச்சிடப்பட்டுள்ளது

மாண்புமிகு அமைச்சர் முன்பு சொல்லியிருக்கின்றார். உயர் கல்வி குறித்து அவருடைய கருத்தினைச் சொல்லும்போது, 'எண்ணிக்கையை உருவாக்குவதிலே நாங்கள் குறிப்பாக இருக்கின்றோம்' என்று சொல்லி, இந்த 7 சதவிகிதத்தை 2010-க்குள்ளாக, குறைந்தபட்சம் 5 ஆண்டுகளில் 15 சதவிகிதமாக உயர்த்திக் காட்ட வேண்டுமென்ற குறிக்கோளுடன் இந்தத் துறை செயல்படுவதாக, 2006, ஆகஸ்ட் 4 ஆம் தேதியன்று ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 2007, மே மாதம் இந்த அவையிலே பேசும்போது, 'நம்முடைய மாநிலத்தில் கிட்டத்தட்ட 17 சதவிகிதம் பேர் உயர் கல்வியைப் படிக்கிறார்கள்' என்ற குறிப்பையும் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, நம்முடைய நாட்டிலே சராசரியாக உயர் கல்வியைப் படிப்பவர்களுடைய எண்ணிக்கை 7 சதவிகிதம்; இப்போது தமிழகத்தில் 17 சதவிகிதம் அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்றால், அவர்களுக்கு இந்த 114 கோடி ரூபாயை வைத்துக்கொண்டு எந்த வசதிகளையும் செய்யமுடியாது. ஆக, உயர் கல்வி என்றால், உயர் கல்விக்கு வேண்டிய வசதிகளையும், வாய்ப்புகளையும் செய்து கொடுப்பது அரசினுடைய கடமையாகும். 'எண்ணிக்கையை அதிகரிப்போம்', 'தரத்தினை உயர்த்துவோம்' என்று இப்போது தன்னுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கின்றார்கள்.

முற்பகல் 11-30

பக்கத்திற்குப் பக்கம் அவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு, அவர்கள் தந்த குறிப்பைப் பார்த்தீர்களென்றால், 2007-ல், 'தரத்தை உயர்த்துவோம், எண்ணிக்கையை அதிகரிப்போம்' என்று சொன்னார்கள். இப்போது, 'எண்ணிக்கையை அதிகரிப்போம், தரத்தை உயர்த்துவோம்' என்று சொல்கின்றார்கள். ஆகவே, எண்ணிக்கையை உயர்த்துவதைத்தான் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார்கள், தரத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டார்கள். அதுதான் உண்மையான நிலை. இதைச் சொல்வதற்குக் காரணம், 7 சதவீதத்திலிருந்து 17 சதவீதம் பேர் உயர் கல்வியை தமிழ்நாட்டில் படிக்கிறார்கள் என்றால் அதற்கு அடிப்படையான காரணம், நம்முடைய தமிழகத்தில் கொண்டுள்ள கல்விக் கொள்கையின் காரணமாகத்தான் நாம் இந்தியாவில் சராசரியாக உள்ள 7 சதவீதத்தைவிட 17 சதவீதத்தில் இருக்கின்றோம். இதை ஒருநாளில் செய்திருக்க முடியாது. புரட்சித் தலைவர் அவர்களுடைய



ஆட்சியிலேதான், அவர் கொண்டுவந்த சுயநிதிக் கல்லூரி என்ற கொள்கையின் அடிப்படையில்தான், பல்வேறு கல்லூரிகளெல்லாம் தமிழகத்திலே உருவாயின. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லவேண்டுமென்றால், இன்று தமிழகத்தில் 1,400 கல்லூரிகள் செயல்படுகின்றன. 1,400 கல்லூரிகளில் அரசினுடைய கல்லூரிகள் 108 தான் உள்ளன. உதவி பெறும் கல்லூரிகள் 202. சுய நிதிக் கல்லூரிகள், 1,090 கல்லூரிகள் இன்று தமிழகத்தில் செயல்படுகின்றன என்றால், 'எண்ணிக்கையை அதிகரிப்போம்' என்பது உங்களுடைய குறிக்கோள் அல்ல. அது எங்களுடைய புரட்சித் தலைவருடைய ஆட்சியிலும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலும் செய்யப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்தக் காலம்தான் உயர் கல்விக்குப் ஒரு பொற்காலம் என்று நாங்கள் சொல்கின்றோம்.

புரட்சித் தலைவர் அவர்களும், புரட்சித் தலைவி அம்மா அவர்களும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக, நூற்றுக்கணக்கான பொறியியல் கல்லூரிகள் தமிழகத்தில் உருவாயின. அப்படி உருவானதன் காரணமாக, இலட்சக்கணக்கான தமிழர்கள் பொறியியல் கல்வியைப் பெற்று இன்று இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் சென்றிருக்கின்றார்கள். அதேநேரத்தில், இன்னும் பார்த்தீர்களென்றால், I.T.-யிலே பெரிய, மாபெரும் புரட்சி செய்திருப்பதற்குக் காரணம், இந்த அடிப்படையான உயர் கல்வியைக் கொடுத்ததுதான்.

சுயநிதிக் கல்லூரிகளைப்பற்றி நம்முடைய இன்றைய தமிழக முதல்வரிடம் ஒரு கருத்து வேறுபாடு உண்டு. அவர் ஆரம்பத்திலிருந்தே சுயநிதிக் கல்லூரிகளுக்கு ஆதரவாக இல்லை. அந்தக் கொள்கைக்கு மாறுபட்டவர். புரட்சித் தலைவரைப் பொறுத்தவரையில் நிதிநிலைப் பற்றாக்குறையின் காரணமாகவும், உயர் கல்வி வளர வேண்டும் என்ற அடிப்படையிலும் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். ஏழைகளும், சாதாரண மக்களும் படிப்பதற்காக, அரசின் கட்டுப்பாட்டில் 50 சதவீத இடத்தை அப்பொழுது மாணவர்கள் பெறுவதற்கு ஏற்ற திட்டத்தை வகுத்து, அரசினுடைய செலவு அதிகம் இல்லாமல் மாணவர் seat-களைப் பெறுவதற்கு முயற்சி செய்து வெற்றி கண்டார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்; "அடித்தளத்திலே இருக்கின்ற ஏழையெளிய மக்கள் கல்வி பெறவேண்டுமென்றால், அதை அரசுக் கல்லூரிகள்மூலம்தான் செய்யமுடியும் என்ற உணர்வோடு அரசு செயல்படுகிறது;" என்று

குறிப்பிட்டிருக்கின்றார். நான் சொன்னதுபோல, பொதுவாக நாம் இந்த சுய நிதிக் கல்லூரிகளை ஆரம்பித்த பிறகு, எந்த அளவுக்கு கல்வியில் வளர்ச்சி இருக்கின்றது என்று பார்க்கும்போது, தி.மு.க. அரசினுடைய ஆட்சிக் காலத்திலே ஆரம்பித்த அரசுக் கல்லூரிகள்--நான் சொல்வது 1977-க்குப் பிறகு. அதற்கு முன்பு நான் குறிப்பிட விரும்பவில்லை. காரணம் 1989-லே தி.மு.க. ஆட்சிக்கு வந்த நேரத்திலே சுய நிதிக் கல்லூரிகளும் வரத் தொடங்கிவிட்டன. அப்போது, அந்த வளர்ச்சியைப் பார்க்கும்போது 1989-1991-லே ஆரம்பித்த அரசுக் கல்லூரிகள் 2 தான். அதேபோல, 1996 முதல் 2001 வரையில் தி.மு.க. ஆட்சி செய்தபோது, இரண்டு கல்லூரிகள்தான் தொடங்கப்பட்டன. அதேபோல, இப்போது ஆட்சிக்கு வந்த பிறகும் இரண்டு கல்லூரிகள்தான் தொடங்கப்பட்டன. ஆகவே, எண்ணிக்கையை அதிகரிப்போம் என்று சொல்கிற இந்த அரசு, இதுவரையில் ஆரம்பித்த அரசுக் கல்லூரிகள், அமைச்சருடைய புள்ளிவிவரத்தின்படி 6 கல்லூரிகள்தான் ஆரம்பித்திருக்கின்றார்கள். பல்கலைக்கழகங்களைப் பார்க்கும்போதும் அதே நிலைதான். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, 1978-லே அண்ணா பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. 1981-லே தமிழ்ப் பல்கலைக்கழகம் துவக்கப்பட்டது. அதேபோல், பாரதிதாசன் பல்கலைக்கழகம் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நீங்கள் 2, 2, 2 என்று 6 கல்லூரிகள்தான் ஆரம்பித்தீர்கள் என்று சொன்னார். தங்களுடைய கட்சி ஆட்சியில் இருந்தபோது, ஆரம்பித்த கல்லூரிகள் எத்தனை என்று சொல்ல முடியுமா? (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, நீங்கள் சொல்லுங்கள். எங்களுடையது ஆறு கல்லூரிகள் என்றீர்கள், உங்களுடையது எத்தனை?

முற்பகல் 11-35

**முனைவர் மு. தம்பிதுரை:** எங்களைப் பொறுத்தவரையில் எங்களுடைய ஆட்சியில் நிதிப் பற்றாக்குறையின் காரணமாக புதிய ஒரு கொள்கையைக் கொண்டுவந்து சுய நிதிக் கல்லூரிகள் ஆரம்பித்ததன் காரணமாக 1,090 கல்லூரிகள் இன்றைக்குச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதைச் சொல்ல விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவர் அரசுக் கலைக் கல்லூரிகளைத் தொடங்க வேண்டுமென்று எங்களைக் கேட்கிறார். எத்தனை ஆரம்பித்திருக்கிறீர்கள் என்று கேட்டார். இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் நாங்கள் 6 கலைக் கல்லூரிகளை ஆரம்பித்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் காலத்திலே அரசுக் கலைக் கல்லூரிகளிலேகூட சுயநிதிப் பாடப் பிரிவுகள் என்று ஆரம்பித்து, அரசுக் கலைக் கல்லூரிகளிலே 500 ரூபாய் கட்டணம் வாங்கினால், சுய நிதிக் கல்லூரிகளிலே 5,000 ரூபாய் வாங்கி அவர்கள் கொள்ளையடிப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். அரசுக் கலைக் கல்லூரிகளிலேகூட சுயநிதிப் பாடப் பிரிவுகள்தான் உருவாக்கப்பட்டன. ஆகவே, சுயநிதிக் கல்லூரிகளால் ஏழையெளிய மாணவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதை மனதில் கொண்டு, தலைவர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டு கலைக் கல்லூரிகள் மட்டுமல்ல, பொறியியல் கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களின்மூலமாகவே தொடங்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**முனைவர் மு. தம்பிதுரை:** இவர்கள் வந்தபிறகு ஆறு கல்லூரிகள் ஆரம்பித்தார்கள் என்று நான் குறிப்பிட்டேன். உங்களுடைய ஆட்சியில் என்ன செய்தீர்கள் என்று இவர்கள் கேட்கிறார்கள். நாங்கள் பல்கலைக்கழகங்களை அதிகமாக ஆரம்பித்திருக்கிறோம். அதைவிட பார்த்தீர்கள் என்றால், நான் சொன்னதைப்போல, எட்டு பல்கலைக்கழகங்கள் புரட்சித் தலைவர் ஆட்சியிலே தொடங்கப்பட்டன. புரட்சித் தலைவி அம்மா ஆட்சியில் 4 பல்கலைக்கழகங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நான் கேட்பது, வேலூருக்கு போக வழி எப்படி என்றால் விழுப்புரத்திற்கு வழி சொல்கிறீர்களே! நீங்கள் எத்தனை கல்லூரிகளை ஆரம்பித்தீர்கள் என்று கேட்டால், நாங்கள் பல்கலைக்கழகங்களை ஆரம்பித்தோம், பாடப் பிரிவுகள் ஆரம்பித்தோம், அது தெரியுமா, இது தெரியுமா என்று கேட்டால் எப்படி? நீங்கள் எத்தனை? நாங்கள் எத்தனை? அவ்வளவுதான்.

**முனைவர் மு. தம்பிதுரை:** நான் முதலிலே தெளிவாகச் சொல்லிவிட்டேன். உங்களுடைய கருத்துப்படி, ஐந்து கல்லூரிகளை நாங்கள் ஆரம்பித்தோம் என்று உங்களுடைய அமைச்சரே கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார். நீங்கள் ஆறு கல்லூரிகளை ஆரம்பித்திருக்கிறீர்கள் அவ்வளவுதான். இரண்டு ஆட்சிகளிலும் அரசுக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன-நாங்கள் ஐந்து ஆரம்பித்திருக்கிறோம், நீங்கள் ஆறு ஆரம்பித்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** ஐந்து ஆரம்பித்தீர்கள் என்று நான் சொல்லவில்லை. தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது. நீங்கள் அரசுக் கல்லூரிகளில்கூட சுயநிதிப் பிரிவுகள் என்றுதான் ஆரம்பித்தீர்கள். Self-Financing Courses-தான் ஆரம்பித்தீர்கள். அவ்வளவுதானே தவிர, நீங்கள் அரசுக் கலைக் கல்லூரியை எந்த இடத்திலும் ஆரம்பிக்கவில்லை. மூன்றே மூன்று கல்லூரிகள், அதுவும் பல்கலைக்கழகங்களோடு இணைக்கப்பட்ட மூன்று கல்லூரிகள் உங்கள் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டனவே தவிர, அரசுக் கலைக் கல்லூரிகள் என்று சொன்னால், இருக்கின்ற 67 கல்லூரிகளில் 40 கல்லூரிகளுக்கு மேல் அரசுக் கலைக் கல்லூரிகளை உருவாக்கிய பெருமை தலைவர் கலைஞருக்குத்தான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசியிருப்பது 2006 ஆகஸ்ட் 4 ஆம் தேதி நடவடிக்கை குறிப்பில் இருக்கிறது. அதிலே 471 ஆம் பக்கம் எடுத்தீர்கள் என்றால் கடந்த ஆட்சிக் காலத்திலே துவக்கப்பட்ட அரசுக் கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை மொத்தம் 5 தான் என்று சொல்லியிருக்கிறார். அவரே சொல்லியிருக்கிறார். நீங்களே பாருங்கள், உங்களுடைய உரையிலே இருக்கிறது. ஆகவே, நாங்கள் வந்து ஆரம்பிக்கவில்லை என்று சொல்லவில்லை, நாங்களும் தலைவர் காலத்தில் ஆரம்பித்தோம்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மொத்த எண்ணிக்கையைச் சொல்கிறேன். குறிப்பிட்ட காலத்தில் உருவாக்கியது ஐந்து. இப்போது இருக்கிற அரசுக் கலைக் கல்லூரிகளுடைய எண்ணிக்கை 67. அந்த 67 கல்லூரிகளிலே கலைஞர் ஆட்சியில் உருவாக்கப்பட்டது எவ்வளவு? உங்கள் ஆட்சியில் உருவாக்கப்பட்டது எவ்வளவு என்ற split-up இருந்தால் சொல்லுங்கள்.



**முனைவர் மு. தம்பிதுரை:** 1977-க்கு முன் நீங்கள் 27 அரசுக் கல்லூரிகள் துவங்கியதாகச் சொல்லியிருக்கிறீர்கள்; அது வேறு. அதற்குக் காரணம் அன்று சுயநிதிக் கல்லூரி என்ற concept இல்லை. அப்படி இருக்கும்போது அரசுதான் ஆரம்பிக்க வேண்டும், வேறு யாரும் ஆரம்பிக்க முடியாது. அப்போது நீங்கள் ஆரம்பித்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், நீங்கள் break-up figure கேட்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, அவர் break-up figure கேட்கிறார்.

**முனைவர் மு. தம்பிதுரை:** எண்ணிக்கையைத்தான் சொல்கிறேனே. அவர் சொல்லுகின்ற அந்தக் கணக்கை சொல்லியாகிவிட்டது. 1977 ஆம் ஆண்டுக்கு முன்பு இவர்கள் ஆரம்பித்த கல்லூரிகள் வேறு. அதற்குப் பிறகு, நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு ஐந்து அரசுக் கல்லூரிகள் ஆரம்பித்திருக்கிறோம் என்று அமைச்சரே சொல்லியிருக்கிறார். நீங்கள் ஆறு கல்லூரிகள் ஆரம்பித்திருக்கிறீர்கள், அவ்வளவுதான் வித்தியாசம். அதுதான் உங்களுடைய எண்ணிக்கை. அதைத்தான் சொல்கிறேன். வேறு ஒன்றும் சொல்லவில்லை. உங்களுடைய குறிப்பில் இருந்துதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வேறு issue-க்குப் போங்கள்.

*முற்பகல் 11-40*

**முனைவர் மு. தம்பிதுரை:** அடுத்ததாக, பல்கலைக்கழகங்களை ஆரம்பித்திருக்கின்றோம். இன்னொன்றையும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குறிப்பாக, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைப்பற்றி. "இவர்கள் ஆட்சிக்கு வந்துவிட்டாலே சுயநிதிக் கல்லூரிகளைத்தான் ஆரம்பிப்பார்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அரசுக் கல்வியியல் கல்லூரிகளை ஆரம்பிப்போம்" என்று அமைச்சர் அவர்கள் தங்களுடைய உரையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நான் சொல்வது அப்பொழுது நாங்கள் இருந்தபோது 7 அரசு கல்வியியல் கல்லூரிகள்தான்--B.Ed. Government Colleges இருந்தன. இப்போது எவ்வளவு இருக்கின்றன என்றால் அதே 7 அரசுக் கல்லூரிகள்தான் இருக்கின்றன. நீங்கள் ஒரு கல்லூரியைக்கூட ஆரம்பிக்கவில்லை. நீங்கள் தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். ஏழைகளுக்கு உதவுவதற்காக அரசே கல்லூரிகளை ஆரம்பிக்கும் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலும் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், ஒரு கல்லூரியைக்கூட இதுவரை ஆரம்பிக்கவில்லை என்பதைத்தான் நான்

சொல்ல விரும்புகிறேன். இப்பொழுதும் self-financing colleges-தான் இருக்கின்றன. நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள், 150 கல்லூரிகளுக்கு மேலே கொடுத்திருக்கிறீர்கள். நாங்கள் 139 கல்லூரிகளைக் கொடுத்திருக்கிறோம். அதைக் குறை சொன்னீர்கள். இப்போது உங்களுடைய ஆட்சியிலே, கல்வியியலில் 150-க்கும் மேற்பட்ட சுயநிதிக் கல்லூரிகளை ஆரம்பித்திருக்கிறீர்கள் என்றால், உயர் கல்வியிலே எத்தனை அரசுக் கல்லூரிகளை நீங்கள் ஆரம்பித்திருக்கிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள் பார்க்கலாம்? ஆகவே, இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், சுயநிதிக் கல்லூரிகளை அனுமதிப்பது என்பது தவிர்க்க முடியாத ஒன்று. இதற்கு வித்திட்டவர் புரட்சித் தலைவர் அவர்கள். அதன் காரணமாகத்தான் இத்தனை கல்லூரிகள் தோன்றியிருக்கின்றன. இவ்வளவு மாணவர்கள் படித்திருக்கிறார்கள். அதேபோல, தரக்கட்டுப்பாடுபற்றியும் சொல்ல விரும்புகின்றேன். தரக் கட்டுப்பாடு என்று சொல்லும்பொழுது, தரத்தை உயர்த்துவோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் நேரக் கட்டுப்பாட்டைப் பார்க்கிறேன்.

**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் நேரக் கட்டுப்பாட்டைப் பார்க்கட்டும். நான் கல்வித் தரக் கட்டுப்பாட்டைப் பற்றிச் சொல்லிக்கொண்டே வருகிறேன். தரக் கட்டுப்பாட்டைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், நல்லதொரு தரமான கல்வியைத் தர வேண்டுமென்பதற்காக, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலேதான் பலவிதமான செயல்பாடுகள் இருந்தன. எங்களுடைய ஆட்சியில் 175 கல்லூரிகள், 55 அரசுக் கல்லூரிகள் போன்றவையெல்லாம், தரக் கட்டுப்பாட்டிலே accreditation வாங்கியது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான். உங்களுடைய ஆட்சிக் காலத்திலே எவ்வளவு கல்லூரிகளுக்குக் கொடுக்கப்பட்டது என்ற புள்ளிவிவரம் ஏதும் இல்லை. தயவுசெய்து அதைத் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதோடு . . .

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தரக் கட்டுப்பாடு பெற வேண்டும் என்று, compulsory-யாகவே மாற்றியமைத்திருக்கிறது இந்த அரசு.



**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, compulsory-யாக மாற்றியமைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். உங்களுடைய ஆட்சியிலே எத்தனை கல்லூரிகள் தரக் கட்டுப்பாடு பெற்றிருக்கின்றன? நீங்கள் தரத்தை உயர்த்துவோம் என்று சொல்லியிருக்கின்றீர்கள்; எண்ணிக்கையை உயர்த்துவோம் என்று சொல்லியிருக்கின்றீர்கள். இரண்டும் நடைபெறவில்லை. இவையெல்லாம் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலும், புரட்சித் தலைவர் ஆட்சியிலும்தான் நடைபெற்றன என்பதைத்தான் நான் சொல்ல வருகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாங்கள் அண்ணா பல்கலைக்கழகத்தை உருவாக்கினோம். அதேநேரத்தில், சிறப்பான, தரமான கல்வியைத் தரவேண்டும் என்பதற்காக, அனைத்து பொறியியல் கல்லூரிகளையும் ஒன்று சேர்த்து, அப்பொழுது பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? ,அதைப் பிரித்துவிட்டீர்கள். அண்ணாவைப் பிரித்த மாதிரி, இப்போது கோயம்புத்தூரில் ஒன்று, திருச்சியிலே ஒன்று, நெல்லையிலே மற்றொன்று என்று பிரித்து வைத்துவிட்டீர்கள். இது தேவையா? ஏனென்றால், பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில், இது Professional Course. கிராமப்புறங்களில் இருப்பவர்களாகட்டும், யாராக இருந்தாலும், சரியானதொரு கல்வியைத் தரவேண்டுமென்றால் ஒரே மாதிரியான Degree தான் வாங்க வேண்டும். ஆகவே, எல்லோருக்கும் ஒரே மாதிரியான பாடத் திட்டம் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் கொண்டு வந்தோம். இப்பொழுது என்ன இருக்கிறதென்றால், அண்ணா பல்கலைக்கழகத்தில் first year-ல் non-semester, கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகத்தில் semester. பாடத் திட்டத்தில் வித்தியாசம் வருகிறது. இத்தகைய வேறுபாடுகள் கூடாது என்பதற்காகத்தான், தரமான கல்வியைத் தரவேண்டும் என்பதற்காகத்தான் அண்ணா பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. ஆனால், இப்போது மாறிப்போய்விட்டது. கல்வித் துறையில் அரசியல் தலையிடக்கூடாது என்று இப்பொழுது சொல்கின்றோம்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா பல்கலைக்கழகத்தை மூன்றாகப் பிரித்தால் Subject மாறிவிடும் என்றார்கள். அப்படியென்றால், எம்.ஜி.ஆர். இருக்கும்போது, 9 பல்கலைக்கழகங்களை உருவாக்கினோம் என்று சொன்னார்களே, அதை எப்படிப் பிரித்து உருவாக்கினார்கள்?

அப்பொழுது மட்டும் பிரியவில்லையா? பல்கலைக்கழகங்கள் பிரிக்கப்படுவது என்பது வேறு. (குறுக்கீடு) சொல்லுங்கள், பதில் சொல்லுங்கள்.

**முனைவர் மு. தம்பிதுரை:** Engineering Colleges-ல் Professional Courses—வேலைக்குச் சேருவதற்காகத்தான் போகிறார்கள். இன்றைக்குச் சரியான கல்வி இருக்க வேண்டும், அதுவும் ஒரேமாதிரியான பாடத் திட்டம் வேண்டும் என்பதுதான் எல்லோருடைய கொள்கையும். அதில் வித்தியாசம் இருக்கக் கூடாது. கலைக் கல்லூரிகள் என்பது வேறு. பொறியியல் கல்லூரிகள் என்பது வேறு. பொறியியல் கல்லூரிகளுக்குச் செல்வதற்குக் காரணம், வேலைக்குச் செல்ல வேண்டும் என்பதுதான். ஆராய்ச்சிக்குப் பல்கலைக்கழகங்களைக் கொண்டு வரலாம். ஆராய்ச்சிக்குப் பல்கலைக்கழகங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆகவே, பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கும், ஒரு professional body என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். அதுதான் என்னுடைய கருத்து.

அதோடு, கல்வித் துறையிலே அரசியல் தலையிடக்கூடாது என்று சொல்கின்றீர்கள். இப்பொழுது அரசியல் தலையிட்டிருக்கிறதே! இப்பொழுது மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு பேராசிரியர் சபாபதியை நியமித்திருக்கிறீர்கள். அரசியலில் இருந்து வந்தவருக்கு அந்தப் பதவியை நீங்கள் தரலாமா? அது தேவையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சபாநாயகர் திரு. பி.எச். பாண்டியனுடைய துணைவியார் ஒரு துணை வேந்தராக இருந்தார்களே, அவர்கள் எப்படி இருந்தார்கள்? அவர்கள் அரசியல்வாதி கிடையாதா? (குறுக்கீடு) சரி. அவரும் Professor ஆக இருந்து, எப்போது தேர்தலில் நின்று தோற்றுவிட்டு, மறுபடியும் போய்விட்டாரோ, அப்போது அவர் அரசியலில் இல்லையென்றுதான் அர்த்தம். U.G.C.—பல்கலைக்கழகமே (குறுக்கீடு) கொஞ்சம் புரிந்துகொள்ளுங்கள் சார், ஏன் சார் கத்துகிறீர்கள்? பல்கலைக்கழகத்தில் இருக்கிற பேராசிரியர்கள் தேர்தலில் நின்று, வெற்றி பெற்றால் அவர்கள் அரசியலிலே



இருக்கலாம், அப்படி இல்லையென்றால், மீண்டும் அவர்கள் பல்கலைக்கழகங்களிலே சேர்ந்து பணியாற்றலாம் என்ற விதிவிலக்கை பல்கலைக்கழக மானியக் குழுவே கொடுத்திருக்கிறது. அந்த அடிப்படையிலே அவரும் இன்று ஒரு அரசியல்வாதி அல்ல. எப்படி உங்கள் 'சபாநாயகருடைய மனைவி அரசியல்வாதி இல்லை என்று நீங்கள் சொல்கிறீர்களோ, அதேமாதிரிதான் இதுவும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நேரம் இல்லை. (குறுக்கீடு)

**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை அமைச்சருடைய இந்தப் பதிலே விசித்திரமாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், நகைச்சுவையாக இருக்கிறதென்று சொல்லலாம். ஒரு Speaker உடைய மனைவி, பேராசிரியராக இருந்தவர், அவர் அரசியல்வாதி அல்ல என்று சொல்கிறார் என்றால் அதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதேபோல, ஒரு காலத்திலே நீங்கள் நீதித் துறையிலும் இப்படித்தான் தலையிட்டிருக்கிறீர்கள், கல்வித் துறையிலும் தலையிட்டிருக்கிறீர்கள். இதையெல்லாம் தவிர்ப்பது மிகவும் அவசியம்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒன்றும் புதிதல்ல. திரு. சந்திரசேகர் என்பவர் மத்திய அமைச்சராக இருந்தவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தராகவே இருந்திருக்கிறார். அரசியல் துறையிலே இருந்தவர்கள், அமைச்சர்களாக இருந்தவர்களெல்லாம் பல்கலைக்கழகங்களிலே துணை வேந்தர்களாக இருந்திருப்பது என்பது ஒன்றும் புதிய விவகாரம் அல்ல. Academic line-ல் உள்ளவர்கள் எவரும் அரசியல்வாதிகளாக இருக்கக்கூடாது என்று நீங்கள் சொல்வது தவறான வாதம். அதை முதலில் நீங்கள் எப்படிச் சொல்கிறீர்கள்? (குறுக்கீடு) எல்லோரும் இருக்கிறார்கள் அல்லவா? (குறுக்கீடு) நீங்களும் செய்திருக்கிறீர்கள். அந்த அடிப்படையிலே பலர் இருக்கிறார்களே, அதற்கு என்ன காரணம்? பலர் இருந்திருக்கிறார்கள். இப்போது மட்டும் புதிதல்ல. எந்தக் காலத்திலும் இருப்பதுதான். (குறுக்கீடு) எந்தக் காலத்திலும் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். மேற்கு வங்காளத்திலே சி.பி.எம். கட்சியிலே ஒரு கற்றறிந்த பேராசிரியரை மெம்பராக்கிவிட்டு, ஆறு வருடம் முடிந்த பிறகு, திரும்பவும் அவர்கள் பேராசிரியராகப் பணியாற்றியிருப்பதெல்லாம்,

டில்லியிலே முன்னாள் துணை சபாநாயகராக இருந்தவருக்கு நன்றாகத் தெரியும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் முடியுங்கள். (குறுக்கீடு) அடுத்தது, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன். (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடுகள்) அவர்கள் controversy இல்லாமல் பேசியிருக்கலாம். (குறுக்கீடு) 21 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பத்து பேர் பேசி, அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். ஏற்கெனவே இரண்டு மணி நேரம் நமக்குத் தேவைப்படுகிறது. டாக்டர் தம்பிதுரை அவர்கள் பேசவேண்டுமென்று சொன்னால், அவர்கள் கட்சியைச் சார்ந்த இன்னொரு உறுப்பினருடைய நேரத்தையும் அவர் எடுத்துக்கொண்டு பேசுவதிலே ஆட்சேபனை இல்லை. எனவே, நேரத்தை தயவுசெய்து கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடு) திரு. செங்கோட்டையனுக்கு மைக் கொடுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் 35 நிமிடங்கள் பேசினார்கள். அதற்கு எப்படி அனுமதித்தீர்கள் என்பதுதான் எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் நல்ல கேள்வி கேட்டார்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசுவதற்கு அதிக நேரம் கொடுத்ததற்குக் காரணம், இன்னொரு உறுப்பினரை நாங்கள் பேசாமல் இருக்கச் செய்தோம். (குறுக்கீடு) அந்தக் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 22 நிமிடங்கள். அவர் 25 நிமிடங்கள் பேசினார். இன்னொரு உறுப்பினரை நாங்கள் பேச விடவில்லை. அதைப்போலத்தான், இன்னொரு உறுப்பினரை நீங்கள் பேச



விடவில்லையென்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்பிதுரை பேசுவதிலே எங்களுக்கு ஆட்சேபனையில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரமில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன்.

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம். (குறுக்கீடு) டைம் ஆகிவிட்டது. சரி, திரு. தம்பிதுரை, சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள். திரு. சபா. இராஜேந்திரன் ஒரு நிமிடம் பொறுங்கள்.

**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மற்றவர்களின் நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகின்றேன். உயர் கல்வி என்பது புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்திலும்தான் பொற்காலமாக இருந்தது. காரணம், அனைவரும் கல்வியைப் பெறுவதற்காக +2 வரை Instant Examination கொண்டு வந்து, உயர் கல்வியைத் தொடர்வதற்கு புரட்சித் தலைவி அவர்கள் வழிவகுத்தார்கள். அதேபோல, மாணவர்களுக்கு மிதிவண்டி கொடுத்து, அவர்கள் கல்வியைத் தொடருவதற்கு அனைத்து உதவிகளையும் செய்து, இலவசப் பாடப் புத்தகங்களைக் கொடுத்து, இப்படிப் பல திட்டங்களை அவர் செயல்படுத்தியதன் காரணமாகத்தான், உயர் கல்வியிலே மாணவர்கள் சேருகின்ற ஒரு வாய்ப்பு தமிழகத்திலே உருவாக்கப்பட்டது என்று கூறி, நீங்கள் எண்ணிக்கையையும் அதிகரிக்கவில்லை, தரத்தையும் உயர்த்தவில்லை என்பதைக் கூறி விடைபெறுகிறேன்.

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா இராஜேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்பிதுரை அவர்கள், நீண்டகாலமாக அரசியலில் இருப்பவர். இன்றையதினம் அவருடைய பேச்சில் எனக்கு ஒரு மகிழ்ச்சி என்னவென்று

கேட்டால், இந்த அவையில் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேசுகின்றபோதெல்லாம், அவர்களுடைய தலைவியை அம்மா, அம்மா என்பார்கள். இன்றைக்குத்தான், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றி அவர் பேசினார் என்பதிலே எனக்குக்கூட மகிழ்ச்சி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சபா. இராஜேந்திரன்.

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சபா. இராஜேந்திரன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஒரேயொரு நிமிடம். அவர் தவறான ஒரு கருத்தைச் சொல்லிவிட்டார். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்றைக்குமே புரட்சித் தலைவர் அவர்களை மதிக்கின்றவர்கள்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிறார்களேதவிர, அமைச்சர் அவர்கள் சொல்வதைப்போல அல்லாமல், நாங்கள் புரட்சித் தலைவர் அவர்களைப் பற்றியும் பேசியிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன் அவர்கள்.

***திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் கரம் பற்றி, அவர் பாசறையிலே பயிற்சிபெற்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் உள்ளத்தில் இடம்பெற்று, இன்று உலகில் உள்ள கோடானுகோடி மக்களின் உள்ளத்தில் கொலுவீற்றிருக்கும் முத்தமிழ் அறிஞர், முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அறிவாலய நேசன், எங்கள் அறநெறி ஆசான் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கும், கழக இளைஞர்களின் களிப்பு, நாளைய கழகத்தின் நம்பிக்கை, எங்களுடைய இதயவாசல் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) கழகப் பொருளாளர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும்,



கழகத்தின் முதன்மைச் செயலாளர் அண்ணன் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் மாவட்டக் கழகச் செயலாளர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனது வணக்கத்தைத் தெரிவித்து, உயர்வான அரசின் உயர் கல்வித் துறையில் பேச வாய்ப்பை அளித்த தங்களுக்கும் எனது வணக்கத்தைச் சொல்லி, எனது உரையை ஆரம்பிக்கின்றேன்.

அண்ணா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட தேர்வு எழுதி, அத்தேர்வில் தேர்ச்சிப் பெற்று, நேர்காணலிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் முதல் ஆறு ஆண்டுகள் வரை பணியாற்றியவர்களை அண்ணா பல்கலைக்கழக நிர்வாகம் நிரந்தரம் செய்யாமல் இருக்கிறது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இக்கோரிக்கையினைப் பரிசீலனை செய்து அவர்களைப் பணி நிரந்தரம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பச்சையப்பன் கல்லூரியில் கடந்த 7 ஆண்டுகளுக்கு மேலாக, தொகுப்பூதியத்தில் பணியாற்றிவரும் உதவிப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் சுமார் 200-க்கும் மேற்பட்டவர்கள் இதுவரை பணி நிரந்தரம் செய்யபபடாமல் அலைக்கழிக்கப்பட்டு வருவதால் அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டார்கள். அவர்கள் உண்ணாவிரதம் இருந்த செய்தியைக் கேட்டு, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், இரவு 10 மணிக்கு உண்ணாவிரதம் இருந்த இடத்திற்குச் சென்று, அவர்களிடம் பேசி, அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு கலைஞர் ஆட்சி கருணையுடன் பரிசீலிக்கும் என்று சொல்லி, உண்ணாவிரதத்தைக் கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதன்படி அவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். அவர்கள் ஊதியம் இல்லாமல் விடைத்தாள்களைத் திருத்தும் பணியில் ஈடுபட்டனர். அவர்களுடைய நியாயமான கோரிக்கையை கனிவுடன் பரிசீலிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அம்மைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு தனி மனிதனுடைய வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும், சமூக வளர்ச்சிக்கும் ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்கும் கல்வி எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்ந்து செயலாற்றுகின்ற தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், உயர் கல்வித் துறை பல சிறப்புகள் பெற்றிருக்கின்றன. 1997 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக

முதலமைச்சராக இருந்தபோதுதான், இளைஞர்கள் ஏற்றம்பெற, எதிர்காலத் தமிழகம் பேசப்பட, உயர் கல்வித் துறையை தனித் துறையாக உருவாக்கினார்கள். 2006 ஆம் ஆண்டு ஐந்தாவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்றபோது. இந்தத் துறைக்கு ஒரு அமைச்சரைத் தனியாக நியமித்து சிறப்புச் செய்தார்கள். ஆனால், கடந்த கால ஆட்சியில், கல்வியின் மேன்மையை உணராத அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் ஒட்டுமொத்தக் கல்வித் துறையே ஒரு அமைச்சரிடம் கூடுதல் பொறுப்பாக இருந்ததை கவனித்த தமிழக மக்கள், இவர்களுக்கு இந்தக் கல்வித் துறையைப் பற்றியும் கவலை இல்லை, தமிழகத்தைப் பற்றியும் கவலை இல்லை என்பதை உணர்ந்தார்கள். தமிழகத்திலுள்ள அனைவரும் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்பதில், அதுவும் குறிப்பாக, கிராமப்புறத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுடைய கல்வித் திறனை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கத்திலே தலைவர் கலைஞர் அவர்கள் பல திட்டங்களையும், சட்டங்களையும் கொண்டு வந்தார்கள். அந்தவகையில் நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபோது, ஒரு குடும்பத்தில் பெற்றோர்கள் பட்டதாரிகளாக இல்லாத சூழ்நிலையில், அந்த மாணவனுக்கு 5 மதிப்பெண்களைக் கூடுதலாகக் கொடுத்து, கல்வித் துறையிலே முன்னேற்றுவதற்கு வழி செய்தார்கள். அதேபோல, அந்த ஆட்சிக் காலத்திலேயே கிராமப்புற பள்ளி மாணவர்களுக்கு 15 சதவிகித இட ஒதுக்கீட்டை தொழில் கல்வியிலே ஒதுக்கித் தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். அதற்குப் பிறகு வந்த கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியில், நீதிமன்றத்தில் நிச்சயம் அடிபடும் என்று தெரிந்தும் கிராமப்புற மாணவர்களுக்கு 25 சதவிகித ஒதுக்கீடு என்று கொண்டுவந்தார்கள். அவர்கள் எதிர்பார்த்த மாதிரியே நீதிமன்றத்திலே அது அடிபட்டது, அவர்களுக்கு அதிலே மகிழ்ச்சி ஏற்பட்டது, கிராமப்புற மாணவர்கள் உயர் கல்வி பெறுவதில் வீழ்ச்சி ஏற்பட்டது. ஆனால், 2006 ஆம் ஆண்டு, மீண்டும் 5-வது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முதல்வர் அவர்கள், மாணவர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே நுழைவுத் தேர்வை இரத்து செய்தார்கள். அதிலும், தனக்கே உரிய சாதுர்யமான முறையிலே எந்த நீதிமன்றமும் தலையிட முடியாத அளவுக்கு வெற்றிகரமாகச் செய்து முடித்தார்கள். கிராமப்புற மாணவர்களுக்குச் சிம்மசொப்பனமாக விளங்கிய அந்த நுழைவுத் தேர்வை இரத்து செய்ததனால் அந்த மாணவர்களும், அவர்களுடைய பெற்றோர்களும் தலைவர் கலைஞர் அவர்களை நன்றியோடு பாராட்டி, வணங்கி மகிழ்கின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*



முற்பகல் 11-55

சுய நிதிக் கல்லூரிகளைப் பொறுத்தவரை, உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி 100 சதவிகித மாணவர்களும் தேர்வு எழுதி நிர்வாகமே அவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம் என்ற நிலை ஏற்பட்டபோது, தலைவர் கலைஞர் அவர்கள் அந்த நிர்வாகத்தினரை அழைத்துப் பேசி, இட ஒதுக்கீட்டை முறையாகச் செயல்படுத்த வேண்டுமென்ற உணர்வோடு 65 சதவிகிதம் அரசுத் தரப்பிற்கும், 35 சதவிகிதம் நிர்வாகத்திற்கும் கிடைக்கின்ற வகையிலே, சேர்வதற்கான வாய்ப்பினை உருவாக்கித் தந்தார்கள்.

மத்திய அரசின் உயர் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு என்ற தீர்ப்பைப் பெற்றுத்தர தனது வாழ்நாளையே வரலாற்று நாட்களாக ஆக்கிய தலைவர் கலைஞர் அவர்களுக்கு *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தப் பேரவை நன்றி தெரிவித்த நாளில், நமது சமூக நீதிப் போராட்டம் முற்றுபெற்று விடவில்லை, அது தொடரும் என்று அறிவித்தார்கள். அந்த இட ஒதுக்கீட்டிற்கு உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்து அளித்தத் தீர்ப்பை மாற்றிட சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தி, 2007 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் நாள் இந்தப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்திற்கு இப்போது விடை கிடைத்திருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

I.I.T., I.I.M. போன்ற உயர் கல்வி நிறுவனங்கள், உயர்தட்டு மக்களுக்கு மாத்திரமே என்று இருந்ததை மாற்றி, சாமானியர்கள் நினைத்துக்கூட பார்க்க முடியாமல் இருந்ததை சாதாரண மக்களுக்குப் பெற்றுத் தந்ததில் தலைவர் கலைஞருடைய பங்கு முக்கியமானது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல, தமிழகத்தில் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த முஸ்லிம்களுக்கு 3.5 சதவிகிதமும், கிறிஸ்தவர்களுக்கு 3.5 சதவிகிதமும் கல்வி மற்றும் வேலைவாய்ப்பிலே இட ஒதுக்கீடு செய்து தந்ததை வரலாற்றுச் சாதனையாக அம்மக்கள் கருதிப் போற்றுகிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* கடந்த 2005-2006 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் உயர் கல்விக்காக ஒதுக்கிய தொகை ரூ.741.77 கோடியாகும். ஆனால், இப்போது நமது ஆட்சியிலே ஒதுக்கிய தொகை ரூ.1253.99 கோடியாகும். இது கடந்த கால ஆட்சியைவிட 70 சதவிகிதம் அதிகம். இந்த அரசு உயர் கல்வித் துறையின்மீது கொண்டிருக்கும் அக்கறையை இதிலிருந்து புரிந்துகொள்ள வேண்டும்.

அதேபோல, 2005-2006 ஆம் ஆண்டு கல்லூரிக் கல்வி இயக்ககத்தின்கீழே இயங்கி வந்த கல்லூரிகளின் எண்ணிக்கை 503. தற்போது இயங்கி வருவதோ 860 கல்லூரிகள். கல்வி கற்பதில் குறைவான விழுக்காடு உள்ள மாவட்டங்கள், கடலூர், விழுப்புரம், தருமபுரி, திருவண்ணாமலை மாவட்டங்கள் என கல்வித் துறைக் குழுவின் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். எனவே, பள்ளிக்கூடங்களையும், கல்லூரிகளையும் உருவாக்குகின்றபோது, மாவட்டத்திற்கு, தொகுதிக்கு என்று தராமல் எங்கே கல்வி அறிவு குறைவாக இருக்கிறதோ, எங்கே படிப்பதற்கேற்ற வசதி இல்லையோ இப்படிப்பட்ட தொகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து கல்விக்கூடங்களை உருவாக்கிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அந்தவகையில், இதுவரை எந்தவிதக் கல்லூரியும் இல்லாத, ஒரு I.T.I.,/ Polytecnic-கூட இல்லாத எனது நெல்லிக்குப்பம் தொகுதியில் ஒரு கலைக் கல்லூரியோ அல்லது தொழில்நுட்பக் கல்லூரியோ தொடங்கப்பட வேண்டும் என்ற எனது பணிவான வேண்டுகோளை வைக்கின்றேன். சிறப்பாகப் பணியாற்றுகின்ற மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலித்து, பதில் அளிக்கும்போது இதை அறிவித்திட வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய உயர் கல்வி படிக்கின்ற மாணவர்கள் கல்விக் கடன் பெறுவது என்பது ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. அந்த வகையில், தொகுதிக்கு செல்கின்றபோதெல்லாம் அனைத்துத் தரப்பு மாணவ, மாணவிகளுடைய பெற்றோர்களெல்லாம் கல்விக் கடனுக்காக மனுக்களை கொடுக்கின்றார்கள். வங்கிகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், அந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வினை பெற்றுத்தருமாறு தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். 2006-2007 ஆம் ஆண்டுவரை 13 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இணைய தள வசதியுடன்கூடிய மின் அணு நூலகங்கள் இருந்தன. கடந்த நிதியாண்டில் இணைய தள வசதியுடன் மேலும் 5 கல்லூரிகளில் மின்னணு நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நண்பகல் 12-00

பெரியார் ஈ.வே.ரா. நாகம்மை இலவச கல்வித் திட்டத்தின் கீழ் அனைத்து வகுப்பைச் சார்ந்த ஏழை மாணவிகள் பட்டப் படிப்புக் கல்வியை, தலைவர் கலைஞர் அவர்கள் மூன்றாம் முறையாக பொறுப்பேற்ற பிறகு, 1990 முதல் இலவசமாகப் பெற்று வருகிறார்கள்.



இதில் பெற்றோர்களுடைய ஆண்டு வருமானத்தை ரூபாய் 24 ஆயிரத்திலிருந்து ரூபாய் 50 ஆயிரமாக உயர்த்தியிருக்கின்றார்கள். அதேபோல, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், மாற்று முறையை, அதாவது--ஷிப்ட் சிஸ்டத்தை துவக்கியதனால் முதலாம் ஆண்டு சேர்க்கையிலே மாணவ, மாணவிகளுடைய எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது. அரசு பொறியியல் கல்லூரி மாணவர்கள் கல்விக் கட்டணம், கடந்த ஆண்டு ரூபாய் 12,550-லிருந்து ரூபாய் 7,550 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. எட்டாக் கனியாக இருக்கும் பொறியியல் கல்வியை ஏழை மாணவர்களும் எட்டிப் பிடிக்கின்ற வகையிலே, எங்களது பகுதியான பண்ருட்டி, திண்டிவனம், விழுப்புரம், நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் புதிய பொறியியல் கல்லூரிகள் துவங்கப்படும் என்ற அறிவிப்பு வரவேற்புக்குரியது.

இயற்கை பேரிடர்கள், வெள்ளம், தீ போன்றவற்றை முன்கூட்டியே அறிவதற்காக Anusat என்ற நுண் விண்கோள் ஒன்றை நம் அண்ணா பல்கலைக்கழகம், இந்திய விண்வெளி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து முதன்முதலில் தயாரிக்க உள்ளது. இப்படித் தயாரிக்க உதவும் இந்த ஆராய்ச்சியை முடிப்பதற்கு ஏதுவாக, 50 இலட்சம் ரூபாயை அந்த மையத்திற்கு கழக அரசு வழங்கியுள்ளது.

வெறும் கலை மற்றும் அறிவியல் பாடங்கள் இன்றைய வேலைவாய்ப்புகளுக்கு அச்சாணியாக இல்லை என்பதை அறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், பட்டப் படிப்புகளோடு தொழில்சார் திட்டத்தை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், இந்த கல்வியாண்டு முதலும், பிறகு அரசு உதவிபெறும் மற்றும் சுய நிதிக் கல்லூரிகளில் இரண்டாவதாகவும் அறிமுகப்படுத்த உள்ளார்கள் என்று எண்ணுகின்றபோது கலைஞர் அவர்கள் ஆட்சியில் வேலைவாய்ப்பற்றோர் அறுகிப்போவார்கள் என்பது உறுதியாகத் தெரிகிறது.

'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை'

என்று சொல்கிறார் ஐயன் திருவள்ளுவர்.

'எம்மை உலகத்தும் யாம் காணோம் கல்விபோல் மம்மர் அறுக்கும் மருந்து'

என்கிறது நாலடி.

இந்த அடிகளையெல்லாம் உள்நிறுத்திய உன்னதத் தலைவர், உலகம் போற்றும் உயர்ந்த தலைவர், தமிழினத் தலைவர், கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் கல்வித் துறை எப்போதும் அஞ்சியது இல்லை. இவரது ஆட்சியில் இது விஞ்சி நிற்கிறது.

'எண்ணிக்கையை அதிகரிப்போம், தரத்தினை உயர்த்துவோம்,' என்பதே கழக ஆட்சியில் உயர் கல்வித் துறையின் இலக்காக இருப்பதால் அந்த 'எண்ணிக்கையை எட்டுவோம், தரத்தினை அடைவோம்' என்று சொல்லி, எனது தொகுதியில் நிறைவேற்றப்பட்ட பணிகளுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இன்னும் சில கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகிறேன்.

நடுவீரப்பட்டு புறக் காவல் நிலையத்தை நிரந்தரக் காவல் நிலையமாக தரம் உயர்த்தித் தந்த தலைவர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஒரு கோடி ரூபாயில் நெல்லிக்குப்பம் பேருந்து நிலையம் தந்தமைக்காகவும், அதேபோல, மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி அலுவலகம் தந்தமைக்காகவும் அண்ணன் தளபதி அவர்களுக்கும், மலட்டாறு தூர் வாரும் பணிக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்ற மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நடுவீரப்பட்டு-சி.என்.பாளையம் இணைக்கும் பாலத்தைக் கட்ட ஒரு கோடியே அறுபது இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுக்கு அனுமதி அளித்த மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருத்துறையூர், வானமாதேவி ஆகிய கிராமங்களில் தீயணைப்பு நிலையம் மற்றும் (மணியடிக்கப்பெற்றது) நெல்லிக்குப்பம் நகரக் காவல் நிலையத்திற்கும் புதிய அலுவலகக் கட்டடங்களை அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, நெல்லிக்குப்பம் நகரத்திற்கு பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றிட வேண்டுமாய் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மலட்டாறின் மகத்துவத்தை உணர்ந்து, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் தூர் வாரும் பணிக்கு நிதி ஒதுக்கியுள்ளார்கள். மழைக் காலங்களில் தென் பெண்ணையாற்றில் வீணாகும் தண்ணீரை, மலட்டாறில்



திருப்பிவிடும்வகையில் தென் பெண்ணையாற்றை மலட்டாறோடு இணைக்கும் திட்டத்தை நிறைவேற்றிடவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். தென்பெண்ணையாறு மற்றும் கெடிலம் நதிகளை பலப்படுத்தி வெள்ளக் காலங்களில் விவசாயிகளைப் பாதுகாக்கின்றவகையில் நடவடிக்கை எடுத்து 11 கோடி ரூபாய் அளவில் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருப்பதை துரிதப்படுத்தி, இப்பணியை விரைந்து முடித்துத்தர ஆவன செய்திட வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

இவ்வளவு நேரம் இந்த உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜ்குமார் அவர்கள் கழக அரசால் தொடங்கப்பட்ட அரசு கலைக் கல்லூரியின் கட்டுமானப் பணிக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 99 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியை உடன் வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்கள். அதை உடன் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

***திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவை வழிநடத்தும் காங்கிரசின் கண் கண்ட தெய்வம், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் தலைவி, பதவி ஆசையே இல்லாத பார் போற்றும் தியாகத் தலைவி, அன்னை சோனியா காந்தி இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காங்கிரஸ் தலைவர்கள், முதல்வர், தளபதி, அவைத் தலைவர், துணைத் தலைவர், அமைச்சர் பெருமக்கள், சக சட்டமன்ற உறுப்பினர்கள், அவை நடைபெற காரணமாக இருக்கின்ற அனைவருக்கும், பத்திரிகை, தொலைக்காட்சித் துறை, காவல் துறை நண்பர்களுக்கும் வணக்கம்.

கலைஞரின் ஆட்சி என்ற கிரீடத்தில் ஜொலிக்கின்ற வைரங்களிலே ஒன்றாக விளங்குகின்ற இந்த உயர் கல்வித் துறையிலே பேசுவதற்கு வாய்ப்புத் தந்த அனைவருக்கும் நன்றி. உயர் கல்வியிலே நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்பட்டிருக்கிறது. வரவேற்கிறோம். கிராமத்து ஏழைத் தொழிலாளர்களின் பிள்ளைகள் எல்லாம் கல்வி பயில இது வழி வகுத்திருக்கிறது. கலை, அறிவியல் கலைக் கல்லூரிகளில் இளங்கலை பட்டப் படிப்பு படிக்கின்ற மாணவர்களுக்கான கட்டணத்தை இரத்து செய்திருக்கிறீர்கள். வரவேற்கிறோம். அரசுக் கல்லூரிகளில் துவங்கப்பட்டுள்ள சுயநிதிப் பாடப் பிரிவுகள் அனைத்தும் பொது பாடப் பிரிவாக மாற்றியமைக்கப்பட்டதை வரவேற்கிறோம்.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாற்று முறை, ஷிஃப்ட் சிஸ்டம் கடந்த ஆண்டு துவக்கப்பட்டுள்ளது. 25 கோடி மதிப்பீட்டில் 500 கூடுதல் வகுப்பறைகளைக் கட்ட இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதை வரவேற்கிறோம்.

போளூருக்கு ஒரு பெண்கள் கலைக் கல்லூரியையும், எங்களுடைய போளூர் தொகுதியிலே ஒரு பொறியியல் கல்லூரியையும், ஒரு மருத்துவக் கல்லூரியையும் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மகளிர் கல்லூரிகளுக்குச் சுற்றுச் சுவர் கட்டுவதற்கும், அவர்களுடைய கழிப்பறை வசதிக்காகவும் 38½ கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்ற இந்த அரசை மனதாரப் பாராட்டுகிறோம்.

படிப்பைத் தொடர இயலாத ஏழை மாணவர்கள், வேலைவாய்ப்பு பெற, அவர்களுக்கு தொழிற் பயிற்சி அளிப்பதில் சமுதாயக் கல்லூரிகள் சிறந்த பணியாற்றி வருகின்றன. அந்தக் கல்லூரியிலே படிக்கின்ற மாணவர் ஒருவருக்கு ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு கோடி ஒதுக்கி இந்த ஆண்டு மட்டும் 10,000 ஏழை மாணவர்கள் பயனடைகின்ற அந்தத் திட்டத்தை மனமார வரவேற்கிறோம்.

திண்டிவனம், விழுப்புரம், பண்ருட்டி, நாகப்பட்டினம், இராமநாதபுரம் ஆகிய ஊர்களில் புதிய அரசு பொறியியல் கல்லூரிகள் துவக்கப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது. அதேநேரத்தில், போளூர் விடுபட்டிருக்கிறது. த்யவுசெய்து அதையும் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல, ஏழை மாணவர்கள் பயிலுவதற்கு வசதியாக அண்ணா பல்கலைக்கழகம் 100 பொறியியல் கல்லூரிகள் துவங்குவதற்கான மனுக்களைத் தந்திருக்கிறது. அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

உயர் கல்வி என்றால் மறைந்த இளம் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களை மறக்க முடியாது. இன்றைக்குக் கணினி யுகமாகத் தமிழகம் இருக்கிறது என்று சொன்னால், அதற்கு அடிப்படை வித்திட்டவர் மறைந்த இளம் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

உயர் கல்வி என்பது என்ன? படித்தவர்களில் பள்ளிப் படிப்பு முடித்தவர்களை உயர்ந்தவர்கள் என்று இந்தச் சமுதாயம் சொல்லுமா? படித்தவர்கள் என்று இந்தச் சமுதாயம் சொல்லுமா? சொல்லாது. ஆனால், உயர் கல்வி படித்தவர்களைத்தான் இந்தச் சமுதாயம் படித்தவர்கள் என்று சொல்லும்.

இங்கே இருக்கின்ற தளபதி பட்டம் பெற்றவர்; நிதி அமைச்சர் ஒரு பேராசிரியர்; பொதுப் பணித் துறை அமைச்சர் ஒரு வழக்கறிஞர்; உயர் கல்வித் துறை அமைச்சர் ஒரு முனைவர்; சபாநாயகர் ஒரு வழக்கறிஞர்; சமூக நலத் துறை அமைச்சர் ஒரு டாக்டர்; வருவாய்த் துறை அமைச்சர் ஒரு வழக்கறிஞர்; பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், வனத் துறை அமைச்சர் ஆகியோர் பொறியாளர்கள். துணை சபாநாயகர் அவர்களும் வழக்கறிஞர்தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படியென்றால் நீங்கள் யார்?

பிற்பகல் 12-10

**திரு. பெ.சு. விஜயகுமார்:** ஆனால் இந்த உலகமே போற்றிப் புகழ்கின்ற பெருந்தலைவர் காமராஜர் அவர்களை நாம் படிக்காத மேதை என்றுதான் அழைக்கின்றோம். ஆனால், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் படிக்கவில்லை என்றாலும், தமிழ்நாட்டிலே இருக்கின்ற, எதிர்கால சமுதாயத்தினர் எல்லாம் படிக்க வேண்டும் என்பதற்காக வழி வகுத்து, கல்விக் கண் தந்த கர்ம வீரர் காமராஜர் அவர்கள், இந்தத் தமிழ்நாட்டிலே படிக்காத மேதையாக இருந்தார்கள். இந்தச் சட்டமன்றத்தில் பேசுகின்றபோது எப்படிப் பேச வேண்டும் என்று நேற்று இரவு யோசித்துப் பார்த்தேன். அப்படியே ஒரு கனவு. அந்தக் கனவிலே தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்

படித்தவரா, படிக்காதவரா என்ற கேள்வி எழுந்தது. எனக்கு ஒன்றும் புரியவில்லை. அப்போது கம்பன், காளிதாசன், பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் என்ன படித்தார்களோ அதை அவர் படித்து இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞர் அவர்கள் ஒரு பல்கலைக்கழகமாகத் திகழ்கிறார்; இந்தக் கனவு கலைவதற்குள் வள்ளுவர் வருகிறார்; கலைஞரைப் பற்றி ஏதாவது தவறாகக் கனவு கண்டால் வள்ளுவர் வராமல் இருப்பாரா? தமிழ்க் கடவுள். அவர் என்ன சொல்கிறார் என்றால்

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்றார். ஒரு ஜென்மத்தில் படிக்கின்ற படிப்பு இந்த பிறவிக்குள் போய்விடாது. ஏழு பிறவிக்கும் வரும் என்று வள்ளுவர் சொல்லி இருக்கிறார். எனவே கலைஞர்அவர்கள், அவர் எத்தனைப் பிறவிகளில் படித்தாரோ, எனக்குத் தெரியாது. ஆனால் இன்றைக்கு இந்த அளவிற்கு உயர்ந்த மனிதனாக இருக்கிறார். எனவேதான் 'கடவுளைப் பிடிக்காத கலைஞர், கலைஞரைப் பிடித்தவர் கடவுள்' என்கின்ற நிலை இப்போது இருக்கிறது.

பாரத மொழி இந்தி, பன்னாட்டு மொழி ஆங்கிலம் படிப்போம். மனித நேயத்தோடு மனிதன் எங்கெங்கெல்லாம் இருக்கிறானோ அங்கெல்லாம் பழகுவோம். பழகுவதற்கு மொழி ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். நமது முதல்வர் கலைஞர் அவர்கள் படித்தவர்களுக்கெல்லாம் பாதை அமைத்துத் தருகின்ற பல்கலைக்கழகம் அல்லவா! ஒரு தனி மனிதன் எப்படி வாழ வேண்டும், ஒரு குடும்பம் எப்படி வாழ வேண்டும், ஒரு சமுதாயத் தலைவர் எப்படி வாழவேண்டும், ஒரு தமிழினத் தலைவர் எப்படி வாழ வேண்டும் என்று இந்தச் சமுதாயத்திற்கு உதாரணமாக வாழ்கின்றார் கலைஞர் அவர்கள். ஒரு சாதாரண மனிதன் உயர வேண்டுமானால், வாழ்க்கையிலே அவனுக்கு உயர் கல்வி இருக்க வேண்டும். அந்த உயர் கல்வி கிடைக்க வேண்டும் என்று சொன்னால், "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை, கல்லாமை இல்லாத நிலை வர வேண்டும்" இன்றைக்கு தமிழகம் தொழில் துறையிலே சிறந்த மாநிலமாக இருக்கிறது. நேற்று பேசுகிறபோதுகூட தளபதி அவர்கள் தமிழகம் இன்றைக்கு இந்தியாவிலே எந்த உயரத்திலே இருக்கிறது என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டினார்கள். அப்படிப்பட்ட கட்டமைப்புகளோடு



தொழிலிலே முதல் மாநிலமாக விளங்குகின்ற தமிழ்நாட்டில் உயர் கல்வியிலும் அதே நிலை வரவேண்டும் என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். போக்குவரத்துத் துறையை அரசு நடத்துகிறது, மணல் வியாபாரத்தை அரசு நடத்துகிறது, சிமென்ட் வியாபாரத்தைத் துவக்கி இருக்கிறது. டாஸ்மாக் கடைகளை அரசாங்கம் நடத்துகிறது. அதேபோல, அனைத்து கல்லூரிகளையும், கலை, அறிவியல் கல்லூரிகளையும், பொறியியல் கல்லூரிகளையும், மருத்துவக் கல்லூரிகளையும் அரசே நடத்த வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஏனென்று சொன்னால், இன்றைக்கு M.B.B.S. படிக்க எத்தனை இலட்சம் ரூபாய் செலவாகும் என்று இந்தச் சபையிலே நான் சொல்லத் தேவையில்லை. M.S. வாங்கவேண்டும் என்று சொன்னால் எத்தனை இலட்சம் ரூபாய் செலவாகும் என்று நான் சொல்லத் தேவையில்லை. ஆனால், அவையெல்லாம் இப்போது கோடி ரூபாயை எட்டிக்கொண்டிருக்கின்றன. இன்றைக்கு ஏழை மாணவர்கள் தனியார் கல்லூரிகளிலே சேர ஆயிரக்கணக்கிலே, இலட்சக்கணக்கிலே பணத்தைச் செலவு செய்து, கொண்டிருக்கிறார்கள். அரசுக் கட்டணத்தைவிட தனியார் கல்லூரிகளிலே அதிகமாகப் பணம் வாங்கினாலும்கூட அவர்களுக்கு இரசீதை வழங்குவதில்லை. இப்போது Advance Booking-லே போய்க்கொண்டிருக்கிறது. இப்போது கல்லூரிகளில் எல்லாம் seat-கள் advance Booking-லே போய்க்கொண்டு இருக்கின்றன. அந்த நிலை எல்லாம் மாற வேண்டும்.

தனியார் கல்லூரிகளிலே, மதிய உணவு, பஸ், ஹாஸ்டல், இவையெல்லாம் கட்டாயமாக்கப்பட்டு பணம் வசூலிக்கப்படுகிறது. அவற்றையெல்லாம் தடை செய்ய வேண்டும். வேலை செய்கின்ற விரிவுரையாளர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் சம்பளம் கொடுப்பதைவிட அவர்களிடம் வாங்குகின்ற கையெழுத்து அதிகம், பல கல்லூரிகளிலே இன்றைக்கு அடிப்படை வசதிகள் கிடையாது. தகுதி வாய்ந்த துறைத் தலைவர்களும் கிடையாது. எனவே, இந்த நிலையெல்லாம் மாறவேண்டும். தமிழன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே பினாங்கு, மலேஷியா, பர்மா, சீனா போன்ற ஆசிய நாடுகளுக்கும், கிரேக்கம், பாரசீகம் போன்ற மேற்கத்திய நாடுகளுக்கும் வியாபார ரீதியாகச் சென்று இருக்கிறான். 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தமிழ்நாட்டில் இருந்து 39 M.P.-க்கள் டெல்லிக்குச் செல்கிறார்கள். இப்போது 13 அமைச்சர்கள் மத்திய

அமைச்சரவையிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆங்கிலமும், தமிழும் மட்டும் தெரிந்திருந்தால் போதுமா என்று இந்த அவையிலே கேட்க விரும்புகிறேன். ஹேமமாலியினோடு தமிழில் பேசலாம், ஜெயப்பிரதாவோடு எப்படி பேச முடியும்? எனவே, பழகுவதற்கு மொழி ஒரு தடையாக இருக்கக்கூடாது என்ற கருத்தை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-15*

டெல்லிக்குச் செல்லுகின்ற அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள், அரசு அதிகாரிகள், தொழிலாளர்கள், கம்ப்யூட்டர் என்ஜினியர்கள் எல்லாம் டெல்லி, மும்பை, இராஜஸ்தான் போன்ற மற்ற மாநிலங்களுக்குச் செல்கின்றபோது அவர்களுக்கு மொழி ஒரு தடையாக இருக்கிறது. அதை விலக்குவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். உயர் கல்வி படிக்கின்ற மாணவர்களிலே விரும்புகிறவர்களுக்கு, இந்தியாவிலே பெரும்பான்மையான மக்களால் பேசப்படுகிற இந்தி மொழி பேசுவதற்கு விரும்புகின்ற மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தி என்று சொன்னாலே அது வேம்பா? விஷமா? நம் சகோதரர்கள் பேசும் மொழிதானே, நாம் பேசக் கூடாதா? இந்தி திணிப்பதை நான் எதிர்க்கிறேன். தமிழக காங்கிரசும் எதிர்க்கிறது. ஆனால் இந்தி படிப்பதை, இந்தி பேசுவதை தடை செய்யாமல், பழித்துப் பேசாமல் இருக்க வேண்டாமா? எதிர்கால சமுதாயம் வளர வேண்டாமா? ஆங்கில மொழித் திறன் வளர்வதற்காக தமிழக அரசு 30 லட்சம் மாணவர்களுக்கு 11 வானொலி நிலையங்களிலே ஒரே நேரத்திலே ஒலிபரப்புகின்ற அந்தத் திட்டத்திற்கு 8 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறது; வரவேற்கிறோம். அதேபோல, நவோதயா பள்ளிகளை தமிழகத்தில் திறக்க வேண்டும். பள்ளி, கல்லூரிகளிலே இந்தி படிக்க விரும்புகிற மாணவர்களுக்கு கற்றுத்தர வேண்டும் என்று கேட்டு, என் தொகுதிப் பிரச்சினைக்கு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. விஜயகுமார், நேரம் இல்லை. தொகுதிப் பிரச்சினையை ஆரம்பத்திலேயே சொல்லியிருக்க வேண்டும்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** என்னுடைய போளூர் பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்தித்தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். செண்பகத்தோப்பு



அணைக்கட்டை சீக்கிரமாகத் திறந்து மிக விரைவாக 20 ஊர்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி. (குறுக்கீடு) சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** என்னுடைய போளூர் தொகுதியில் புதிய பஸ் நிலையம் ஒன்று கட்டித் தரப்பட வேண்டும். அங்கே, பேரூராட்சிக்குச் சொந்தமான 3 ஏக்கர் நிலம் இருக்கிறது. போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், அரசு உணவகத்தை அங்கே அமைத்துத் தர வேண்டும். அங்கே புதிய வட்டார போக்குவரத்து அலுவலகம் திறக்கப்பட வேண்டும். கடந்த முறை அமைச்சர் அவர்கள் வந்தபோது, அரசு பொது மருத்துவமனைக்கு அடுக்குமாடி கட்டடம் கட்டித் தருகிறேன் என்ற சொன்னார்கள். அதை இன்னும் செய்யவில்லை. அதைச் செய்து தர வேண்டும். புதியதாக காவல் நிலையம், புதியதாக காவலர் குடியிருப்பு, இவை எல்லாம் கட்டித் தரப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாம் கட்டித் தருவார்கள். நீங்கள் மற்றவற்றையெல்லாம் எழுதிக் கொடுத்து விடுங்கள். திரு. விஜயகுமார் உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டுக்கான உயர் கல்வித் துறையின் மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசிலவற்றை நான் இங்கே கூற விழைகிறேன்.

கல்வியினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, உலகப் பொது மறையை மனித குலத்திற்கு அருளிய அய்யன் வள்ளுவர் அவர்கள் அதைப் பற்றி மிக அதிகமாகவே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில்

"யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு"

என்றும்,

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு."

என்று கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அய்யன் வழியில் ஆட்சியை அறங்கேற்றிக் கொண்டிருக்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த அரசின் சார்பிலே உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையில் அரசின் கொள்கையாக, நோக்கமாகச் சொல்லியிருப்பது 'எண்ணிக்கை அதிகரிப்போம், தரத்தினை உயர்த்துவோம்' என்று சொல்லி, அரசு சார்பில் கல்லூரிகளை, கலை அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள் என பல்வேறு கல்லூரிகளைத் துவக்கியும், தரத்தினை உயர்த்துவதற்காக பேராசிரியர் பணியிடங்கள் முதலாக பல்வேறு பணியிடங்களையெல்லாம் நிரப்பியும், முக்கியத்துவம் கொடுத்து வருகிற அரசை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனதார பாராட்டுகிறோம். வரவேற்கிறோம். அதைப்போல, சமுதாயக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு 1,000 ரூபாய் உதவித் தொகை என அறிவிப்பு, அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் கழிப்பறை சுகாதார வசதிக்காக நடப்பு ஆண்டுக்கு ரூ.7.52 கோடி ஒதுக்கீடு, அரசுக் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவசப் பேருந்து பயணச் சீட்டு வழங்குவது என்று தொடர்ச்சியாகப் பல்வேறு அறிவிப்புகளைச் செய்திருக்கிற உயர் கல்வித் துறையை பாட்டளி மக்கள் கட்சியின் சார்பிலே பாராட்டுகிறோம்.

*பிற்பகல் 12-20*

காலத்தினுடைய தேவையைக் கருதி கல்வியிலே மிகப்பெரிய சீர்திருத்தங்களை, மாறுதலைக் கொண்டு வருவது அவசியம் என பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே, கல்விப் புரட்சியை உண்டாக்க வேண்டுமென்று எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள்கூட தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கல்விப் புரட்சியை உண்டாக்குவதற்கு முதல் காரணமாக விளங்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் நாங்கள் வற்புறுத்திக் கேட்டுக்கொள்வது, இப்போது கல்வி பொதுப் பட்டியலிலே இருந்துகொண்டிருக்கிறது. இது பொதுப் பட்டியலிலே இருக்கும் என்று சொன்னால், நம்முடைய மாநில அரசு விரும்புகிறவற்றையெல்லாம் நிறைவேற்ற முடியாது. நாம் தொடர்ந்து ஆரம்பத்திலேயிருந்து 'மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி' என்று சொல்லி வந்தோம். ஆனால், இப்போது மத்தியில் கூட்டணி ஆட்சியில் இருந்துகொண்டிருக்கிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள்



என்ன சொல்கிறார்களோ, என்ன கோரிக்கையை வைக்கிறார்களோ, அதையெல்லாம் ஏற்றுக்கொள்கிற நல்ல அரசுதான் நம்முடைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு. இந்தச் சூழ்நிலையில், கல்வி மாநிலப் பட்டியலுக்கு வரவேண்டுமென்று நம்முடைய சட்டப் பேரவையிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்துவார்கள் என்று சொன்னால், கட்டாயம் வரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்துகிற வேளையில் இந்தியாவிலே இருக்கிற எந்த மாநிலத்து முதலமைச்சரும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டார்கள். எல்லா மாநில முதலமைச்சர்களும் முன்வருவார்கள்; இதற்கு ஒத்துழைப்பார்கள். ஆகவே, இந்த முயற்சியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். இதைத் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டுமென்றும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இன்று கல்வியினுடைய தரத்தைப் பற்றிப் பேசுகிற வேளையில், நம்முடைய அண்ணா பல்கலைக்கழகத்தைப் பிரித்தோம். 3 இடங்களிலே புதிதாகத் துவக்கினோம். அதை பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே வரவேற்கிறோம். அதேவேளையில், இதனுடைய தரம் I.I.T., I.I.M. போன்றவற்றின் தரத்திற்கு இணையாக உருவாக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை முன்வைக்கிறோம். School of Excellency என்று சொல்லக்கூடிய வகையில், உலகத் தரத்திற்கு இணையாக உருவாக்க வேண்டும். இப்படிச் சொல்கிற வேளையிலேதான், இங்கே நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கிற சென்னையிலே இருக்கிற I.I.T., I.I.M.-களைப் பார்க்கிறோம். இதிலே இருக்கிற மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. ஆந்திராவைச் சேர்ந்த மாணவர்களுடைய எண்ணிக்கை, பிற மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களுடைய எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்றால், ஆந்திரத்தில் உண்டு உறைவிடப் பள்ளிகளை அந்த அரசு துவங்கி அங்கே மாணவர்களுக்குத் தரமான கல்வி கொடுக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையிலேயோ என்னவோ தெரியவில்லை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட சமீபத்திலே 385 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, உண்டு உறைவிடப் பள்ளிகளை உருவாக்க பேருதவி செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். அதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்கிறோம்.

ஆனாலும்கூட, இங்கே வேண்டுகோள் வைப்பது, இந்த உண்டு உறைவிடப் பள்ளி என்று தரமான கல்வி கொடுக்கிற பள்ளிகளை மாவட்டத்திற்கு ஒன்று துவக்க வேண்டும். அப்படித் துவக்கப்படுகின்ற வேளையிலேதான் I.I.T., I.I.M.-லே சேருவதற்கும், I.A.S., I.P.S. இன்னும் பல்வேறு தரமான, பல்வேறு உயர் கல்விக்குச் செல்வதற்கும், தரமான கல்வியை இந்தப் பள்ளிகளிலே கொடுக்கமுடியும் என்பதை நான் இங்கே வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு மிகப் பெரிய முயற்சியை எடுத்துக்கொண்டார்கள். தனியார் கல்வி நிறுவனங்களிலே, குறிப்பாக, பொறியியல் கல்லூரிகளிலே முறைகேடு நடப்பதாக எழுந்த புகாரின் அடிப்படையிலே அவராகவே முன்வந்து அரசின் சார்பிலே அலுவலர்களையெல்லாம் நியமித்து ஆய்வை இங்கே மேற்கொண்டார்கள். அந்த ஆய்விலே 30-க்கும் மேற்பட்ட கல்லூரிகள் கண்டறியப்பட்டன. நடுவணரசுக் கட்டுப்பாட்டிலேயிருக்கிற A.I.C.T.E.-க்குத் தகவல் கொடுத்து, நாங்கள் இதிலே நடவடிக்கை எடுக்க இயலாது என்று கடந்த வாரத்திலே A.I.C.T.E. நிர்வாகம் சொல்லியிருக்கிறது. மாநில அரசுக்கும் அதிகாரம் இல்லை, நடுவண் அரசுக் கட்டுப்பாட்டிலும் இல்லை என்று சொன்னால், யார் அதைக் கட்டுப்படுத்துவது என்ற கேள்வி மேலோங்கியிருக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையிலே, தாறுமாறாகக் கட்டணங்களை வசூலிப்பது, சுயநிதிக் கல்லூரிகள் தங்களுடைய விருப்பப் போக்கிலே கட்டாய நன்கொடை வசூலிப்பது போன்றவற்றையெல்லாம் தடுப்பதற்கு மேலும் கடுமையான முயற்சி எடுக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இந்திய தொழில் கூட்டமைப்பு ஆய்வறிக்கை ஒன்றிலே சொல்லப்பட்டிருப்பது, நம்முடைய கல்லூரிகளிலே படிக்கிற மாணவர்கள் 3 வருடங்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெற முடியாதவர்கள் 70 விழுக்காடு என்று அரசின் அறிவிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. அதைப்போல, சென்னைப் பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தர் திரு. இராமச்சந்திரன் அவர்கள்கூட சமீபத்திலே ஒரு செய்தியிலே, பல்கலைக்கழகங்களில் படித்து முடித்து வருகின்ற மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் வேலையில் நுழைய முடிவதில்லை என்ற ஓர் அறிவிப்பையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதிலேயிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால், நம்முடைய



பல்கலைக்கழகங்களிலேயும், அல்லது தனியார், அரசு பொறியியல் கல்லூரிகளிலேயும் படித்து வந்தாலும்கூட, தரம் குறைவாக இருக்கிறது. அந்தத் தரத்திற்கு இணையாக இல்லை என்பதை நம்மாலே உணர முடிகிறது. அதுமட்டுமல்ல, நான் கடந்த வாரம்கூட இதே மாமன்றத்தில் சொன்னேன். நந்தினி வாய்ஸ் என்ற ஒரு நிறுவனம் ஆய்வு செய்து அவர்களது அறிக்கையில் சொல்லியிருப்பது, பொறியியல் படிப்பு படித்து முடித்து வருபவர்களில் நேர்முகத் தேர்விற்கு செல்லமுடியாதவர்கள் 35 விழுக்காடு. நேர்முகத் தேர்விற்கு சென்று வாய்ப்பைப் பெற முடியாதவர்கள் 35 விழுக்காடு. மொத்தம் 70 விழுக்காடு போய்விட்டது. இதில் வேலைவாய்ப்பினைப் பெறக்கூடியவர்கள் வெறும் 30 விழுக்காடு என்றுதான் சொல்லப்படுகிறது. இதற்கு என்ன காரணம் என்றால், தரம் இல்லை என்பதைத்தான் கண்டறிய முடிகிறது. அரசின் சார்பில் இருக்கக்கூடிய அதிகாரிகள், நடுவண் அரசினுடைய ஆய்வுக் குழு, இங்கே இருக்கின்ற தனியார் நிறுவனங்கள் எல்லாம் இதைச் சொல்கின்ற காரணத்தினால்தான் சொல்கிறோம். ஆகவே, தரத்தை மேலும் உயர்த்த வேண்டும் என்றுதான் சொல்கிறோம். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக இருக்க வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல், நம்முடைய தமிழ்நாட்டில், குறிப்பாக சென்னை மாநகரம் தகவல் தொழில்நுட்பத் துறையில் மேலோங்கியிருக்கிறது. உலக அரங்கில் பெருமைப்படவிருக்கிறது என்றெல்லாம் நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால், அதில் பணியாற்றக்கூடியவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் மிகவும் குறைவு. அதாவது, 25 விழுக்காட்டிற்குக் குறைவு என்றே சொல்கிறார்கள். அதிலே பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை வகுப்பினைச் சேர்ந்தவர்கள் மிகவும் சொற்பம் என்று சொல்கிறார்கள். ஆகவே, இது எதைக் காட்டுகிறது? ஆந்திராவிலிருந்து, டெல்லியிலிருந்து, பிற மாநிலங்களிலிருந்து வந்தவர்கள் எல்லாம் இந்தத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களிலே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கே தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மையின வகுப்பினைச் சேர்ந்தவர்கள்

சேருவதற்கு அரசு வழிவகை செய்யவேண்டும் என்று நான் இங்கே கோரிக்கை வைக்க விரும்புகிறேன்.

அதேபோல், உச்ச நீதிமன்றம், தனியார் கல்வி நிறுவனங்கள், சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் இலாப நோக்கம் இல்லாமல் அறநோக்கோடு செயல்படவேண்டும் என்ற ஒரு அறிவிப்பை வெளியிட்டது. ஆனால், தமிழ்நாட்டில் இருக்கிற சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் அல்லது மற்ற சுயநிதிக் கல்லூரிகள் என எந்தவொரு கல்லூரியாவது அறநோக்கோடு செயல்படுகிறதா என்பதை அரசு எண்ணிப் பார்க்கவேண்டும். அறநோக்கம் இல்லாமல், இலாப நோக்கத்தோடு செயல்படுகிற இந்தக் கல்லூரிகளைக் கண்டறிந்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கின்ற அதேவேளையில், இந்த மாமன்றத்தின் வாயிலாக பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக சுயநிதிக் கல்வி நிறுவன உரிமையாளர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம், கல்விச் சேவை மகத்தான சேவை, கடந்த காலங்களில் அப்படித்தான் இயங்கிக்கொண்டிருந்தது, ஆகவே, கல்வி நிறுவன உரிமையாளர்களே உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறோம், கல்வியைச் சேவை நோக்கத்தோடு கொடுங்கள். ஏழை மக்களுக்குக் கொடுங்கள், உழைக்கின்ற மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின மக்களுக்கு வழங்குவதற்கு முன்வாருங்கள், முன்வாருங்கள், கல்வி சேவையை நீங்கள் வாரி வழங்குங்கள் என்று இங்கே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மேசையை தட்டும் ஒலி)

அதேபோல, நம்முடைய அரசின் சார்பிலே சென்னையில் இருக்கிற மாநிலக் கல்லூரி, இராணி மேரி கல்லூரி, வெலிங்டன் சீமாட்டி கல்வியியல் கல்லூரி, கோவை அரசுக் கல்லூரி, கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரி ஆகியவற்றை பல்கலைக்கழகங்களாக உயர்த்துவதாக அறிவிக்கப்பட்டிக்கிறது. நாங்கள் வரவேற்கிறோம். அதேவேளையில் ஆசிரியர் சங்கங்கள், மாணவர் சங்கங்கள் எல்லாம் கோரிக்கை வைத்திருக்கின்றன. அவர்கள் சொல்வது, இங்கே மாணவர்களுக்கான கட்டணம் கூடுதலாகும். மாணவர்களுக்கு இலவசக் கல்வி கிடைக்காமல் போய்விடக்கூடிய, எட்டாக்கனி என்ற நிலை உருவாகிவிடும் என்று அச்சப்படுகின்ற ஒரு நிலையை மாணவர்கள் சொல்கிறார்கள். அதை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அரசுக் கல்லூரியாக இருக்கும் என்று சொன்னால், இலவசக் கல்வி கிடைக்கும். பல்கலைக்கழகம் என்று சொன்னால், நிதி எங்கிருந்து



வருகிறது? பல்கலைக்கழகங்களே திரட்டிக்கொள்ளவேண்டும். மாணவர்களுக்கு இலவசக் கல்வி என்பது இல்லாமல் போய்விடும். இதை அரசு எண்ணிப் பார்க்கவேண்டும் என்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன். பேராசிரியர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் அனைவரும் வேண்டுவதெல்லாம், எங்களுக்கு பணிப் பாதுகாப்பு இல்லாமல் போய்விடும், பணி உயர்வு இல்லாமல் போய்விடும், என்று அச்சத்தைத் தெரிவிக்கிறார்கள்.

அதைப்போல, கோவை, திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரிகளை அண்ணா பல்கலைக்கழகத்தோடு இணைப்பதாகச் சொல்லப்படுகிறது. அங்கேயும் மாணவர்களும், பேராசிரியர்களும் இந்த அச்சத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதையெல்லாம் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்று சொன்னால், அவர்களை அழைத்துப் பேசி உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நல்லத் தீர்வினை உருவாக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைக்க விரும்புகிறேன்.

நம்முடைய சென்னைப் பல்கலைக்கழகம் மிகப் பிரசித்திப்பெற்ற பல்கலைக்கழகம். நமக்கெல்லாம் தெரியும். இது ஆங்கிலேயர் காலத்தில் 1857-லே செப்டம்பர் 5 ஆம் நாள் துவங்கப்பட்டது. அப்படி நிறுவப்பட்ட மிகப்பெரிய பல்கலைக்கழகம். இதோடு நிறுவிய கல்கத்தா, பம்பாய் பல்கலைக்கழகங்கள் எல்லாம் இன்னும் தரம் உயர்ந்து, பரந்து விரிந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் சென்னைப் பல்கலைக்கழகத்தினுடைய பெயர் உலகெங்கும் பரவியிருக்கின்ற இந்தவேளையில், தேசிய பல்கலைக்கழகத்திற்கு இணையாக, உலகத்தரத்திலான பல்கலைக்கழகமாக சென்னைப் பல்கலைக்கழகத்தினை உயர்த்துவதற்கு அரசு முன்வரவேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்கிறேன். அதைப்போல, கடந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒன்று சொல்லப்பட்டது. கற்பிப்பது, பயில்வது மற்றும் மதிப்பீடு செய்வது போன்ற தற்போதைய கால முறைக்கு ஏற்றவாறு நம்மை உயர்த்திக்கொள்வதற்காக முன்னாள் துணைவேந்தர் முனைவர் எஸ்.பி. தியாகராஜன் அவர்கள் தலைமையில் வல்லுநர் குழு அமைப்பதாகச் சொல்லப்பட்டு, வல்லுநர் குழுவும் அமைக்கப்பட்டது. வல்லுநர் குழுவினுடைய பரிந்துரை வந்துவிட்டதா, அதன் பரிந்துரை என்ன, அதை எப்படி அரசு நிறைவேற்றப் போகிறது, எப்போது நிறைவேற்றப்போகிறது என்பதையெல்லாம் அறிவிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை நான் முன்வைக்கிறேன்.

பிற்பகல் 12-30

அதைபோல, கல்லூரிகளிலே படிக்க இயலாதவர்கள், பள்ளிப் படிப்பைப் பாதியிலே நிறுத்திக்கொள்ளக்கூடியவர்கள் எல்லாம் தொடர்ந்து படிக்க இயலவில்லை என்று சொன்னாலும், வேலைவாய்ப்பினைப் பெறுவதற்காக சமுதாயக் கல்லூரிகள் தொடங்கி இருக்கிறீர்கள், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இதை மனதார வரவேற்கிறோம். இந்த சமுதாயக் கல்லூரிகள் ஏழை, நடுத்தரக் குழந்தைகளுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும். அரசுத் தரப்பிலேகூட, படித்து, முடித்தவுடனே 85 விழுக்காடு மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு உடனடியாகக் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, இது மகத்தான திட்டம், இந்த சமுதாயக் கல்லூரியை எல்லா இடங்களிலும் கொண்டு வாருங்கள். ஏழைகள், பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிடர் குழந்தைகள் இதனால் பயன்பெறுவார்கள் என்பதை நான் இங்கே வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போல, அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு என்ற காலம் எல்லாம் மாறி, பெண் அடிமைத்தனம் அகற்றப்பட்டு, இன்று பெண்கள் கல்வி கற்கிற நிலை உருவாகி இருக்கிறது. பெண்கள்தான் இந்த நாட்டின் கண்கள் என்று சொல்கிறோம். அப்படி இருக்கிற வேளையில், கடந்த 2007-2008 ஆம் ஆண்டினுடைய பொறியியல் கல்லூரி மாணவ, மாணவியர் சேர்க்கையைப் பார்த்தோம் என்று சொன்னால், மொத்தம் மாணவ, மாணவியர் எண்ணிக்கை 94,127 பேர். அதிலே ஆண்கள் 60,072 பேர், பெண்கள் 34,055 பேர். ஆக, ஏறக்குறைய பாதி அளவுக்குப் பெண்கள் வந்திருக்கிறார்கள். ஆகவே, பெண் கல்விக்கு இன்னும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அரசு கலை அறிவியல் கல்லூரி மற்றும் தனியார் கலை அறிவியல் கல்லூரிகளிலும் பெண்கள் நிலைமை இதுவே. ஆகவே, பெண்களுக்கு முக்கியத்துவம் வேண்டும் என்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அதைப்போல, தமிழ்நாட்டிலே மொழி சிறுபான்மை பொறியியல் கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நம்முடைய அரசு இவற்றை உடனடியாக ஆய்வு செய்யவேண்டும். இவர்கள் மொழி சிறுபான்மைக் கல்லூரிகள் என்று அங்கீகாரம் பெற்றுக்கொள்கிறார்கள். அதிலே மாணவர்களைச் சேர்ப்பது உள்ளபடியே மொழி சிறுபான்மை மாணவர்கள் அல்ல, தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் அல்ல, பிற மாநிலங்களைச் சார்ந்தவர்களைச் சேர்த்துக்கொள்கிறார்கள். இவர்களே ஒரு சான்று பெற்றுக்கொள்கிறார்கள். தமிழ் அல்லாத சிறுபான்மை மொழி பேசக்கூடியவர்களை, தமிழ் பேசக்கூடியவர்களைக்கூட இவன் தெலுங்கு பேசக்கூடியவன், இவன் மலையாளம் பேசக்கூடியவன் என்று சான்று பெற்று அந்தக் கல்லூரி நிருவாகத்தைப் பணத்திற்காக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி பல கல்லூரிகள், தருமபுரி பக்கத்திலே ஜெயம் பொறியியல் கல்லூரி என்று ஒன்று இருக்கிறது. நீங்கள் ஆய்வு செய்து பார்த்தால் அதனுடைய ஒட்டுமொத்த முறைகேடும் கண்டறியப்படும். ஆகவே, இப்படிப்பட்ட கல்லூரிகளையெல்லாம் நீங்கள் கண்டறியவேண்டும் என்று நான் வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.



இன்னும் சொல்லப்போனால், கல்வியிலே நாம் வளர்ந்து கொண்டிருக்கிறோம், மறுக்கவில்லை. அதேநேரத்தில், இன்று உயர் கல்வியிலே பின்தங்கியிருக்கிற மாவட்டங்கள் கண்டறியப்படவேண்டும். உதாரணமாக, விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், வேலூர் போன்ற மாவட்டங்களையெல்லாம் கண்டறிந்து அங்கே இருக்கிற பின்தங்கிய மாணவர்களுக்கு, உயர் கல்வி பெறமுடியாத மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

ஒரு கோரிக்கை. மேட்டூரிலே அரசுக் கல்லூரி துவங்கப்பட்டது. அதைப்போல, புதியதாக பல கல்லூரிகளைத் தொடங்கினீர்கள். இரண்டு ஆண்டுகள் ஆகப் போகின்றன. அங்கே பணியாற்றக்கூடிய ஆசிரியர் பணியாளர்களையெல்லாம் நிரந்தரப்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைக்க விரும்புகிறேன்.

அதைப்போல, மேட்டூர் அரசு கலை அறிவியல் கல்லூரிக்கு கட்டடம் கட்டுவதாக நிதி ஒதுக்கப்பட்டு, இதுவரையிலே கட்டடப் பணிகள் துவக்கப்படவில்லை, விரைவிலே துவக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மண் பரிசோதனை. ஏற்கெனவே ஒரு பரிசோதனை செய்தார்கள், சான்று வழங்கப்பட்டது. மீண்டும் ஒரு பரிசோதனை என்று சொன்னார்கள். ஏனோ காலம் தாழ்த்தப்படுகிறது, அதிலே சந்தேகம் எழுகிறது. நான் அமைச்சர் அவர்களிடத்திலே தனியாக சொல்லவிருக்கிறேன். ஆகவே, கட்டடப் பணியைத் துவக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மேட்டூரிலே ஒரு அரசு பொறியியல் கல்லூரி துவங்கவேண்டும். சேலம் பெரிய மாவட்டம். 12 தொகுதிகளைக் கொண்டது, பரந்த மாவட்டம். பக்கத்திலே இருக்கிற தருமபுரி, சேலம், ஈரோடு மாவட்டங்களிலே உள்ள மாணவர்கள் படிக்க வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே, பொறியியல் கல்லூரி துவங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் சுயநிதி B.Ed. கல்லூரிகளில் மாணவர்கள் நிறைய சேர்ந்திருக்கிறார்கள். அரசு கட்டணத்தை நிர்ணயம் செய்திருக்கிறது. ஒற்றைச்சாளர முறையில்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும்கூட, கட்டணம் கூடுதலாக வசூலிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, விரைவில் முடித்துவிடுகிறேன். நீதிமன்றங்கள்கூட இப்போது தடை விதித்திருக்கின்றன. ஆகவே, நீதிமன்றங்களை இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்வது, நீதிமன்றங்கள் சமூகப் பார்வையோடு அணுகவேண்டும். சட்டத்தை மட்டும் முன்வைத்துப் பார்க்கக்கூடாது. பின்தங்கிய மாணவர்களுக்கு சமூகப் பார்வையோடு அதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, நம்முடைய அரசினுடைய பல்தொழில்நுட்பக் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகளில் 25 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்த . .

பிற்பகல் 12-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உரையை முடிக்கமாட்டேன் என்கிறீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவரே, ஒரேயொரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு மேலேயே பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பணிமனை போதகர்கள் (Workshop instructors), இளநிலை விரிவுரையாளர்கள், J.D.O., இவர்களுக்கெல்லாம் பணி உயர்வு வழங்கப்படவில்லை. இவர்களுக்கு இளையவர்கள் 9 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மூத்தவர்களாக இருக்கிற, Seniors 27 பேர்களுக்கு வழங்கவில்லை. அதையும் நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போல பச்சையப்பன் கல்லூரியிலே பிரச்சினை பெரிதாக இருக்கிறது. நம்முடைய ஆற்காட்டார் அவர்களும் பார்த்தார்கள். அதையும் தீர்த்து வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு அரசுக் கல்லூரிகளிலே கணினி ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். 4,000 ரூபாய்தான் தொகுப்பு ஊதியம். ஆனால், 6 மாதச் சம்பளம், —6 மாதங்கள் சம்பளமே இல்லாமல் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, உயர் கல்வித் துறையின்கீழே இருக்கிற தொழில்நுட்பக் கல்லூரியிலே பணியாளர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இதோ உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, no. 17 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) No. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன். (குறுக்கீடுகள்) என்ன wind-up? (குறுக்கீடுகள்) அதுதான் wind-up செய்தாகிவிட்டதே. (குறுக்கீடு) உட்காருங்கள். 17 நிமிடங்கள் பேசியிருக்கிறார். பேச ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள். 17 நிமிடங்கள் பேசியிருக்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, உரையை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இந்த பாலிடெக்னிக்குகளிலே 25 ஆண்டுகளாகப் பணியாற்றி பதவி உயர்வு இல்லாதவர்களுக்குப் பணி உயர்வு வழங்க வேண்டுமென்று கேட்டு, உயர் கல்வி மானியக் கோரிக்கையில் பல்வேறு நல்ல அம்சங்களை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்று, இன்னும் கல்விப் புரட்சியை உருவாக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மகேந்திரன்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலே கலந்துகொண்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துகளைத்

தெரிவிப்பதற்கான வாய்ப்பினை வழங்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாம் இப்போது order-ஆகத்தான் இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லாம் order-ஆகத்தான் இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No point of order.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பில் தரமான உயர் கல்வி மட்டுமல்ல, (குறுக்கீடு) ஏழையெளிய மக்களும் உயர் கல்வி பெறுவதற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. மகேந்திரன், one minute.

***திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை மானியத்திலே நான் இதை அவசியம் குறிப்பிட்டாக வேண்டுமென்பதற்காகத்தான், இந்த வாய்ப்பை உங்களிடத்திலே போராடிப் பெற வேண்டியிருந்தது. ஒரு மொழி வளர வேண்டுமென்று சொன்னால், வளர்ந்து வருகிற விஞ்ஞான உலகத்திற்கு ஏற்ப, அந்த மொழியிலே மாற்றம் வரும். கான்பியூசியஸ் பேசிய சீன மொழி இப்போது இல்லை. அதேபோல, சாக்ரடீசும், அரிஸ்டாட்டிலும் பேசிய கிரேக்க மொழி இப்போது இல்லை. மொழி மாறிக் கொண்டிருக்கிறது. நீங்கள் பார்த்தீர்களானால் 1,500 ஆண்டுகளுக்கு முன்னாலே இருக்கிற கல்வெட்டிலே உள்ள தமிழ் மொழியைக்கூட நம்மால் படிக்க முடியாது. அதற்காகத்தான் சொல்கிறேன். இன்றைக்கு மொழியைப் பற்றிப் பேசுகிறபோது, செம்மொழி வாங்கியிருக்கிறீர்கள், வாங்கியிருக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். (குறுக்கீடுகள்) ஆக, எங்களுக்கும் அதில் உரிமை இருக்கிறது. எங்கள் அம்மா வைத்த கோரிக்கை, அதனால்தான் சொல்கிறேன். அதைப்போல, எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி, நான்காவது தமிழ் என்று அறிவியல் தமிழை அறிவித்தவர் எங்களுடைய தலைவர் அம்மா அவர்கள். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இப்போது மருத்துவப் படிப்பையும், பொறியியல் படிப்பையும் தமிழிலே பயில்வதற்கு முடியாது என்கிற நிலை இருக்கிறது. ஏன், செவிலியர் படிப்பைக் கூட தமிழிலே படிக்க முடியாத நிலை இருக்கிறது. நான் இதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. விஞ்ஞான சொற்களுக்கு சரியான அகராதிகூட இன்று இல்லையென்று சொல்கிறார்கள். எனவே, அந்த அறிவியல் தமிழை ஊக்கப்படுத்துகிற விதத்திலே நீங்கள் நல்ல அகராதியை ஏற்படுத்துவதோடு பொறியியலுக்கும், மருத்துவத்திற்கும், செவிலியர் படிப்பிற்கும் தமிழ்வழிக் கல்வியை நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். திரு. மகேந்திரன்.

***திரு. கே. மகேந்திரன்:** கொள்கை விளக்கக் குறிப்பில் தரமான உயர் கல்வி மட்டுமல்ல, ஏழையெளிய மக்கள் உயர் கல்வி பெறுவதையும் உறுதி செய்வது தமிழக அரசினுடைய கொள்கையாகும் என்றும் உள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரையில் தற்போது உயர் கல்வி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 15 சதவிகிதம்தான். இதை அடுத்த 10 ஆண்டுகளுக்குள்ளாக 25 சதவிகிதமாக உயர்த்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சமீபத்தில் மத்திய நிதியமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால், தமிழகம் உயர் கல்வியில் மற்ற மாநிலங்களைவிட முன்னோடியாகத் திகழ்கிறது. அரசுக் கல்லூரிகளில் 49,620 மாணவர்கள் சேர்க்கைக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் 48,342 மாணவர்கள் கடந்த ஆண்டில் சேர்க்கப்பட்டுள்ளனர். அரசு உதவி பெறும் கல்லூரிகளில் 1,20,871 மாணவர்கள் சேர்க்கைக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் 1,00,239 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். ஆனால், சுயநிதிக் கல்லூரிகளில் 1,27,976 இளநிலை, முதுநிலை மாணவர்கள் சேர்க்கைக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் கடந்த ஆண்டில் 75,192 மாணவர்கள் மட்டுமே சேர்ந்துள்ளனர் என்றால் கல்லூரி படிப்பு படிக்க வேண்டுமென்று நினைக்கின்ற மாணவர்கள்கூட தனியார் சுயநிதிக் கல்லூரிகளில் கட்டணம் செலுத்தி படிக்க முடியாத காரணத்தால் படிப்பைத் தொடர முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, அரசு புதிய கல்லூரிகளைக் கூடுதலாக உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். அரூரைப் பொறுத்தவரை 6.5 ஏக்கர் நிலம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கியும்கூட கல்லூரி துவக்கப்படாமல் இருக்கிறது. உடனடியாக அரூரிலே அரசு கலைக் கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்ற வேண்டுகோளோடு, அரசு கலைக் கல்லூரிகள் இல்லாத கன்னியாகுமரி, விருதுநகர், ஈரோடு உள்ளிட்ட ஆறு மாவட்டங்களிலும் அரசு கலைக் கல்லூரிகளை உடனடியாகத் தொடங்கவேண்டுமென்ற வேண்டுகோளையும் வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-40

சுயநிதிக் கல்லூரிகளில் பயில்கின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு கடந்த ஆண்டுவரை வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித் தொகை நிறுத்தப்பட்டுள்ளது. காலையில் பிற்படுத்தப்பட்ட நலத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய அனைத்து சுயநிதிக் கல்லூரிகளிலும் பயிலக்கூடிய மாணவர்களுக்கு இந்த உதவித் தொகை கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். ஏனென்றால், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு உதவி பெறக்கூடிய கல்லூரிகள் இல்லாத காரணத்தினால் ஏழை மாணவர்கள் சுயநிதிக் கல்லூரிகளில் பயில வேண்டிய அவல நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த குறைந்த அளவு கல்வி உதவித் தொகைகூட தற்போது நிறுத்தப்பட்டிருப்பது மாணவர்களிடையே அதிருப்தியையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. அரசு உடனடியாகத் தலையிட்டு இம்மாணவர்களுக்கு உதவித் தொகை கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாடு தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டம், கட்டாய நன்கொடை தடுப்புச் சட்டம் ஆகியவை அனைத்துப் பிரிவு கல்லூரிகளுக்கும் பொருந்துமாறு உரிய சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும்.

அதேபோன்று, கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டத்திலுள்ள நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி, அரசு உதவி பெறக்கூடிய கல்லூரியாகும். இங்கு அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட பல மடங்கு கட்டணம் வசூலிக்கின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர், பல்கலைக்கழகம், கல்லூரிக் கல்வித் துறைக்குப் புகார் அனுப்பியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாறாக புகார் கொடுத்த மாணவர்கள், ஆசிரியர்களை நிர்வாகம் பழி வாங்கிக்கொண்டிருக்கிறது. அரசு உரிய நடவடிக்கை எடுத்து, சட்ட்விரோதமாக வசூலித்த பணத்தை திரும்பப்பெற்றுத் தருவதோடு, நிர்வாகத்தின்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு உதவிபெறும் கோவை சி.பி.எம். கல்லூரி நிர்வாகத்தினர் மாணவர்களிடம் 60 இலட்சம் ரூபாய் சட்டவிரோதமாக வசூலித்துள்ளனர். அக்கல்லூரிமீது நடவடிக்கை எடுத்து, வசூலித்த



பணத்தை மீண்டும் மாணவர்களிடம் ஒப்படைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதேபோன்று, ஈரோடு சிக்கைய நாயக்கர் கல்லூரிக்கு கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்கள் பாதுகாவலராகச் செயல்படுகிறார்கள். அக்கல்லூரியை அரசுக் கல்லூரியாக அறிவிக்கவேண்டும். அந்தக் கல்லூரியில் ஆசிரியர்கள் பணியிடங்களை உடனடியாக நிரப்பவேண்டும்.

தமிழக அரசு ஐந்து அரசுக் கல்லூரிகளையும் இரண்டு அரசு உதவிபெறக்கூடிய கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களாக மாற்றியமைப்பதாக கொள்கைக் குறிப்பிலே சுட்டிக்காட்டியிருக்கிறது. ஏற்கெனவே எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இந்த அரசுக் கல்லூரிகள் பல்கலைக்கழகங்களாக மாறும்போது அங்கே பயிலக்கூடிய மாணவர்கள் கூடுதல் கட்டணங்களைச் செலுத்தவேண்டிய நிலைமை ஏற்படும். பல்கலைக்கழகங்கள் கூடுதலாகத் தேவையென்றால், கூடுதலான பல்கலைக்கழகங்களைப் புதிதாக நாம் உருவாக்கலாமே தவிர, இந்தக் கல்லூரிகள் மீண்டும் கல்லூரிகளாகத் தொடர்வது என்பதுதான் அங்கே பயிலக்கூடிய பத்தாயிரம் மாணவர்களுக்கு இலவசப் படிப்பு கிடைப்பதற்கான நடவடிக்கையாக அமையும் என்பதைச் சுட்டிக்காட்டுவதோடு, அரசு உதவிபெறக்கூடிய இரண்டு கல்லூரிகள் பல்கலைக்கழகங்களாக மாற்றப்பட்டால், ஏற்கெனவே அரசினுடைய உதவியோடு தன்னுடைய உள்கட்டமைப்பு வசதிகளையெல்லாம் உயர்த்தியிருக்கக்கூடிய இந்த தனியார் நிறுவனங்கள் பல்கலைக்கழகங்களாக மாறினால், அவர்களும் கொள்ளையடிப்பதற்கான நடவடிக்கைகளைத்தான் மேற்கொள்வார்களே தவிர, மாணவர்களுக்கு இலவசமான கல்வி கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க மாட்டார்கள். ஆகவே, இந்த நடவடிக்கையை மாநில அரசாங்கம் கைவிட வேண்டுமென்ற வேண்டுகோளை வைப்பதோடு, அரசுக் கல்லூரி மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் காலியாக இருக்கக்கூடிய நூலகர் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படவேண்டுமென்ற வேண்டுகோளையும் வைக்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, அரசு பொறியியல் கல்லூரிகள் 6, அரசு உதவிபெறக்கூடிய பொறியியல் கல்லூரிகள் 3, சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் 263 உள்ளன. இவற்றில் தனியார் சுயநிதிப்

பொறியியல் கல்லூரிகள் பல அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதல் பணம் வசூலிக்கின்றன. கட்டணம் மற்றும் பல்வேறு பெயர்களிலே மாணவர்களிடம் கொள்ளையடிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அப்படித் தவறு செய்திருக்கக்கூடிய கல்லூரிகளை ஆய்வு செய்து 32 கல்லூரிகள்மீது நடவடிக்கை எடுத்திட, மாநில அரசு பரிந்துரை செய்தும், மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கக்கூடிய அந்தத் துறை, அந்தக் கல்லூரிகள்மீது நடவடிக்கை எடுக்க முடியாது; (மணியடிக்கப்பெற்றது) மாநில அரசு கொடுத்திருக்கக்கூடிய அந்தப் புகார்களில் போதுமான ஆதாரம் இல்லையென்று சொல்லி, நடவடிக்கை எடுக்க முடியாது என்று எஸ்.ஆர்.எம். கல்லூரியில் நடந்த…

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகேந்திரன், உரையை முடியுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** விழாவிலே அவர்கள் கூறுகிறார்கள் என்றால், அதில் மாநில அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை இந்த அவையிலே தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, பொறியியல் கல்லூரி கட்டணத்தைப் பொறுத்தவரை கேரளத்தைப்போன்று 12,000 ரூபாயாக இந்தக் கட்டணம் குறைக்கப்படவேண்டும். சுய நிதி பொறியியல் கல்லூரிகளைக் கட்டுப்படுத்திட தனியாக சட்டம் இயற்றப்படவேண்டும். இச்சூழலில் அனைத்து மாவட்டங்களிலும் அரசுப் பொறியியல் கல்லூரிகளை விரைந்து தொடங்கிடவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள்…

பிற்பகல் 12-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன், time முடிந்தது, உட்காருங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** ஒரு நிமிடம், ஒரு நிமிடம். (குறுக்கீடு) ஒரு நிமிடம் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, no. Time இல்லை.

**திரு. கே. மகேந்திரன்:** Sir, ஏழு நிமிடம் என்று சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏழு நிமிடங்கள் ஆகிவிட்டன.



**திரு. கே. மகேந்திரன்:** ஏழு நிமிடங்கள்கூட பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏழு நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) ஏழு நிமிடங்கள் ஆகிவிட்டன. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. மகேந்திரன்:** நீங்கள் இடையில் அவர் குறுக்கீடு செய்வதற்கு அனுமதித்தீர்கள். ஒரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏழு நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. கே. மகேந்திரன்:** தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களில் அண்ணா பல்கலைக்கழகம், திருச்சி, அண்ணா பல்கலைக்கழகம், நெல்லை, அண்ணா பல்கலைக்கழகம், கோவை என்று மூன்று புதிய பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தப் பல்கலைக்கழகங்களில் திருநெல்வேலி, கோவையில் இருக்கக்கூடிய அரசுப் பொறியியல் கல்லூரிகள் தொடர்ந்து அரசுப் பொறியியல் கல்லூரிகளாகத் தொடர வேண்டும்; பல்கலைக்கழகங்களுக்குத் தனியாக உறுப்புக் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டு உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையில் பேச அனுமதி வழங்கிய தங்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 5 நிமிடங்கள்.

**திரு. கே. உலகநாதன்:** இந்த மானியக் கோரிக்கையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன். தமிழகத்தில் அரசுக் கல்லூரிகள் இல்லாத தொகுதிகளில் திருத்துறைப்பூண்டி தொகுதியும் ஒன்றாகும். அரசுக் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ அல்லது தனியார் கல்லூரியோ இல்லாத என்னுடைய தொகுதி, விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் அதிகமாகக் கொண்ட தொகுதியாகும். இந்தத் தொகுதி, 83 சிற்றூராட்சிகளையும்,

கிராமங்களைக் கொண்ட ஒரு நகராட்சியையும் உள்ளடக்கிய ஒரு தேர்வுநிலைப் பேரூராட்சியாகும். இங்கு 7 அரசு மேல்நிலைப் பள்ளிகளும், இரண்டு அரசு உதவிபெறும் தனியார் மேல்நிலைப் பள்ளிகளும், ஒரு மெட்ரிகுலேஷன் ஆங்கிலத் தனியார் மேல்நிலைப் பள்ளியும் உள்ளன. இங்கு ஆண்டிற்கு 2,257 மாணவர்கள் 12 ஆம் வகுப்பில் படித்து வெளியில் வருகிறார்கள். இவர்கள் அனைவரும் கல்லூரிகளிலோ, பொறியியல் கல்லூரிகளிலோ அல்லது ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலோ சேர வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட 30 கி.மீ. தூரமுள்ள மன்னார்குடி, திருவாரூர் அல்லது தஞ்சாவூர் போன்ற நகரங்களுக்குச் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அங்கும் இடம் கிடைக்கவில்லை என்று சொன்னால், கல்லூரி படிப்பைத் தொடர முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகையால், எனது தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான, மாணவர்களின் நீண்டநாள் கோரிக்கையான திருத்துறைப்பூண்டியில் ஒரு அரசுக் கல்லூரியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் தொடங்கிட முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1970-71 ஆம் ஆண்டு, திருவாரூர் மாவட்டத்தில் நமது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட திரு.வி.க. அரசுக் கலைக் கல்லூரியில் தாவர உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்பவியல், இளநிலைப் பட்டப் படிப்பிற்கான வகுப்புகளில் மாணவர் சேர்க்கைக்கு அனுமதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கை 1984 ஆம் ஆண்டு முதல் கடந்த 24 ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வருகிறது என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ்த் துறையின்கீழ் இயங்கிவரும் மொழியியல் ஆய்வுப் பிரிவு தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகப் பல்வேறு தமிழ் மென்பொருள்களைச் சிறப்பாக உருவாக்கி வருகிறது. உலகிலுள்ள தமிழ்ச் சமுதாயம் சிறப்படையும் வகையிலும், வியப்படையும் வகையிலும், அவர்கள் உருவாக்கிவரும் மென்பொருள்கள் பாராட்டுக்குரியவையாக உள்ளன. மொழியியல் ஆய்வுப் பிரிவில் சொற் திருத்தி, இலக்கணத் திருத்தி, சொல் மொழிப் பெயர்ப்பு, முன்மொழிவு அகராதி போன்ற மேலும் பல சிறப்பான மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன.



இதன் தொடர்ச்சியாக ஒலி, ஒளி தமிழ் அறிவான், இயந்திர மொழிப் பெயர்ப்பு போன்ற மொழித் தொழில்நுட்பக் கருவிகளை உருவாக்கும் முயற்சியில் பல வெற்றிகளும் காணப்பட்டுள்ளன. கணினித் தமிழ் வளர்ச்சிக்கான பல திட்டங்களையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு மேற்கொண்டு வருகிறது. தமிழ் மென்பொருள் உருவாக்கத்திற்குத் தமிழ் மொழியியல், கணினியியல் ஆகிய துறைகளை உள்ளடக்கிய மொழித் தொழில்நுட்ப அறிவியல் இன்றியமையாதது. எனவே, சென்னைப் பல்கலைக்கழகத்தில் கணினி மொழியியல் மற்றும் உயர் தொழில்நுட்ப மையத்தை அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையில் தனியார் துறை வளர்ச்சி பெற்று வருவது, சமூக ஆரோக்கியத்திற்கு அடையாளமாகும். கல்வியை வழங்குவது சேவை என்ற நிலையிலிருந்து, தொழில்மயமாகி உள்ளது. தனியார் கல்லூரிகளில் வசூலிக்கப்படும் கட்டாய நன்கொடையும், கல்விக் கட்டணமும் பகல் கொள்ளையைக் காட்டிலும் பயங்கரமாக உள்ளது. இதனால் பலரின் கல்வி வாய்ப்பு பறி போகிறது. அரசின் கொள்கை விளக்கக் குறிப்பில் உள்ள விவரப்படி, சுயநிதிக் கல்லூரிகளில் 1,43,126 மாணவர்கள் சேர்க்கைக்கு அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. ஆனால், 90,279 மாணவர்கள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளனர். ஒப்பளிக்கப்பட்டுள்ள இடங்களில் 52,844 மாணவர்கள் சேர்க்கப்படாமல் இடங்கள் காலியாக உள்ளன; ஏன்? தனியார் கல்லூரிகள் நிர்ணயித்துள்ள கல்விக் கட்டணங்களையும், கட்டாய நன்கொடையினையும் செலுத்தமுடியாமல் மாணவர்கள் சேர்க்கப்படவில்லை என்பதை இதிலிருந்து புரிந்துகொள்ளமுடியும். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் ஏழைகள், குறிப்பாக பட்டியல் சாதியினர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதியினர் என்பது கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

பிற்பகல் 12-50

இதேவகையில் பொறியியல் கல்லூரிகளில் தனியார் துறைக்கு 1 இலட்சத்து 4 ஆயிரத்து 814 மாணவர்கள் சேர்க்கைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆனால், 89 ஆயிரத்து 980 மாணவர்கள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளனர். (மணியடிக்கப்பெற்றது) இந்தவகையில் பொறியியல் கல்லூரிகளில் 14 ஆயிரத்து 829 மாணவர்களின் இடங்கள் நிரப்பப்படாமல் விடப்பட்டுள்ளன.

இவற்றைக் கருத்தில்கொண்டு, தனியார் துறை கல்லூரிகளில் எவ்வளவு கட்டணம் வசூலிக்கலாம் என்பதை அரசு நிர்ணயிக்க வேண்டும். கட்டாய நன்கொடை மீதான புகார் வருவதற்கு நடைமுறையில் பல்வேறு இடையூறுகள் உள்ளன. மாணவர்களின் எதிர்கால நலனை பணயமாக்கிக் கொண்டு, கொள்ளை இலாபம் பெறும் தொழிலாக கல்வி நிலையங்கள் மாறி வருவது என்பது எல்லோரும் தெளிவுபட அறிந்துள்ள உண்மையாகும். இதன்மீது அரசு தலையிட்டு, மனித வளத்தில் சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சம வாய்ப்பு வழங்கும் வகையில், சீரான கல்விக் கட்டணமும், அரசின் கட்டுப்பாடும் உருவாக்கப்படவேண்டும். இனி வரும் காலத்தில் அரசுப் பொறியியல் கல்லூரிகள் மட்டுமே திறக்கப்படவேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார். (குறுக்கீடு)

**திரு. கே. உலகநாதன்:** சிவகங்கை அரசு மன்னர் கல்லூரியில் தமிழ் எம்.ஏ., எம்.எஸ்., வேதியியல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சதன் திருமலைக்குமார். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. கே. உலகநாதன்:** சிவகங்கை அரசுக் கல்லூரியில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சதன் திருமலைக்குமார், பேசுகிறீர்களா இல்லையா?

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பளித்த தங்களுக்கு என் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அனைத்து மாவட்டங்களிலும், மாவட்டத்திற்கு ஒன்று என்ற விகிதத்தில் அரசின் சார்பில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் நிறுவப்பட வேண்டும்; அனைத்துப் பல்கலைக்கழகங்களும், மத்திய அரசின் தேர்வாணையத்தின் பாடத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, பட்டப் படிப்பு முதல் பாடத் திட்டங்களை வகுக்க வேண்டும். அனைத்து பல்கலைக்கழகங்களின்மூலம் நடத்தப்படும் பட்ட மேற்படிப்புக்கான பாடங்கள் அனைத்தும் ஒரே வகையானதாக அமையப்பெற வேண்டும். அனைத்துப் பல்கலைக்கழகங்களும் மற்றும் அரசுக் கல்லூரிகளும் மாணவ, மாணவிகளுக்குப் போதுமான



அளவில் தங்கும் விடுதி வசதிகளைச் செய்து தரவேண்டும். அனைத்துப் பல்கலைக்கழகங்களும் பல்வேறு பணியிடங்களுக்கான தகுதிகளைச் சமமானதாக முடிவு செய்யவேண்டும். அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் உரிய நேரத்தில் தேர்வுகளை நிறைவு செய்து, தேர்வு முடிவுகளை உரிய காலத்தில் தாமதமின்றி வெளியிடவேண்டும். ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் புவியியல் சார்ந்த எல்கை நிர்ணயிக்கப்பட்டு, அந்த எல்கைக்கு உட்பட்ட மாணவ, மாணவியர்க்கு முழு நேரப் படிப்பு அல்லது தொலைநெறிக் கல்வி வழங்க வேண்டும்.

துணைவேந்தர்கள் நியமனத்தில் Rule of Reservation பின்பற்றப்பட வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். பட்டப் படிப்பு படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும், தகவல் பரிமாற்றத் திறமையை வளர்க்கும் வகையில் பயிற்சிகள் கொடுக்கப்படவேண்டும். கல்லூரி அளவில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களும் முனைவர் பட்டம் பெறுவதற்கு ஊக்கப்படுத்துவதோடு, அவர்களுக்குக் கல்வி விடுமுறையும், நிதி உதவியும் கொடுக்க வேண்டும். அரசுக் கலைக் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கிடைக்கின்ற Gazetted Officer அந்தஸ்து அனைத்து அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

அரசுக் கல்லூரிக்கான முதல்வர் பதவியினை முன்பு இருந்ததுபோல் விளம்பரப்படுத்தி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளின் அனைத்து ஆசிரியர்களுக்கும் வாய்ப்பு கொடுக்கவேண்டும். தென் மாவட்டத்தில் இயங்கும் MANO கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு மற்றும் முறையான ஊதியம் வழங்கப்படவேண்டும். தென் மாவட்டங்களில் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் கூடுதலாகத் தொடங்குவதற்கு ஊக்கப்படுத்தவேண்டும்.

கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு நல வாரியம் அமைத்துத் தரவேண்டும். எங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில், HACCA-வின்கீழ் அனைத்துக் கல் குவாரிகளும் வருகின்றன. இதனால் ஜல்லி கிடைக்காமல் வெளி மாவட்டத்திலிருந்து வாங்கவேண்டிய நிலை இருக்கிறது. இதனால் வளர்ச்சிப் பணிகள் மற்றும் மக்களுக்குத் தேவையான கட்டுமான வேலைகள் தாமதமாவதோடு ஜல்லி விலையும் அதிகமாக இருக்கின்றது. இதைத் தவிர்ப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவகிரி வட்டத்தில் இராமசாமியாபுரம் ஊராட்சியைச் சேர்ந்த இராமசாமியாபுரம், வெள்ளக்கவுண்டன்பட்டி, முத்துச்சாமியார்புரம், வடமலாபுரம், ஆண்டார்குளம் ஆகிய கிராமங்கள் சிவகிரி வட்டத்தில் உள்ள புளியங்குடி நகருக்கு அருகில் இருக்கின்றன. இக்கிராமங்கள் இதிலிருந்து சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சங்கரன்கோவில் வட்டத்தில் உள்ள சின்னக்கோவிலான்குளம் காவல் சரகத்திற்கு உட்பட்டு வருகின்றன. இதனால் அவசர நிகழ்வுகளில் அந்த இடத்தைச் சென்றடைவதற்கு நேரமும், பணச்செலவும் அதிகமாகின்றன. இதனைத் தவிர்க்க இக்கிராமங்களுக்கு அருகில் உள்ள புளியங்குடி நகரில் இருக்கின்ற காவல் சரகத்துடன் இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-55*

அரசுப் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் முழுநேர பொறியியல் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் குறைக்கப்பட்டிருப்பதுபோல், பகுதிநேர பொறியியல் படிக்கும் மாணவர்களுக்கும் கல்விக் கட்டணம் குறைக்கப்பட வேண்டும். வாசுதேவநல்லூர்--தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அப்பணியினை விரைவுபடுத்திட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தென்மலையை தலைமையிடமாகக் கொண்டு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் ஒரு அரசுக் கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புளியங்குடி நகரில் ஒரு விருந்தினர் மாளிகை, தீயணைப்பு நிலையம் அமைத்துக்கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். தேசிய நெடுஞ்சாலை எண் 208-ல் அமைந்துள்ள சிவகிரி, வாசுதேவநல்லூர், புளியங்குடி ஆகிய நகரங்களுக்குப் புறவழிச் சாலை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். வாசுதேவநல்லூர் தொகுதியில் எலுமிச்சையிலிருந்து marmalade தயாரிக்க ஒரு தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம்.



**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை மானியத்திலே பேசுகின்ற வாய்ப்பைத் தந்த உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கெல்லாம் தாயாக விளங்குகின்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இனமான பேராசிரியர் அவர்களே, இளைஞர்களின் எழுச்சி நாயகனாய், கலைஞரின் மறுபதிப்பாய் மக்களுக்குப் பணியாற்றி மக்களிடத்திலே பேரும், புகழும் பெற்றிருக்கின்ற எங்கள் தளபதி அவர்களே, பொறுமையின் சின்னம் அண்ணன் ஆற்காட்டார் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களே, எங்கள் மாவட்ட மக்களின் அன்பைப்பெற்று உணவுத் துறையிலே மக்களிடத்திலே நல்ல செல்வாக்கைப்பெற்ற அருமை அண்ணன் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, சட்டமன்ற உறுப்பினர்களே உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர் கல்வித் துறையில் அனைவருக்கும் கல்வி கிடைப்பதையும், அதை விரிவுபடுத்துவதையும், தரமான கல்வியை உறுதிப்படுத்துவதையும் அரசின் குறிக்கோளாகக் கொண்டு 2006-2007 ஆம் ஆண்டில் 4 கல்லூரிகளும், 2007-2008 ஆம் ஆண்டில் 2 கல்லூரிகளும் உருவாக்கப்பட்டதை வரவேற்பதோடு, அரசுக் கலைக் கல்லூரி மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கட்டணம் ரத்து செய்ததையும் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனியார் கல்லூரிகளில் சேருவதற்காக பிளஸ்-2 மாணவர்கள் தனியாக எழுத வேண்டிய தேர்வைத் தவிர்த்து பள்ளியினுடைய இறுதித் தேர்வு மார்க்குகளையே அடிப்படையாகக்கொண்டு சேருகின்ற முறையை மக்கள் வரவேற்கின்றார்கள். கல்லூரிகளில் நியமிக்கப்பட்ட 965 ஆசிரிய பெருமக்களுக்குப் பயிற்சி அளிக்க ஆணையிட்டதை மக்கள் வரவேற்கின்றனர். அதேபோன்று கல்லூரிகளின் கட்டமைப்பு வசதிகளுக்காக, 542 வகுப்பறைகள் கட்டியதை மக்கள் வரவேற்கின்றார்கள். பெண்கள், கல்வியை சிறப்பாகப் பெற வேண்டுமென்பதற்காக பழமையான கல்லூரிகளையெல்லாம் புதுப்பித்து சிறப்புப் பராமரிப்புப் பணிகள் செய்ததைப் பாராட்டுகிறார்கள். கொடைக்கானலில் அன்னை தெரசா பல்கலைக்கழகத்திற்குக் கருத்தரங்கக் கூடம் கட்டித் தந்ததைப் பாராட்டுகிறார்கள். கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்ப்பதற்கு

இடம் இல்லை என்ற காரணத்தினால் சுழற்சி முறையைக் கொண்டுவந்து கல்லூரிகளில் மாணவர்களைக் கூடுதலாக சேர்ப்பதை பொதுமக்கள் பாராட்டி வரவேற்கிறார்கள். அதேபோன்று, பேருந்து பயண அட்டை 50 சதவிகிதம் சலுகை என்று இருந்ததை மாற்றி அனைவருக்கும் இலவசப் பேருந்து பயண அட்டைகள் வழங்கியதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்கலைக்கழகங்களில் காலியாக இருந்த துணை வேந்தர் பணியிடங்களை அரசு நிரப்பியதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கல்லூரிகள் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் இணைக்கப்பட்டுள்ளன. அங்கே பதிவாளர் பணியிடம் காலியாக உள்ளது. அந்தப் பணியிடத்தை துணைவேந்தர்தான் நிரப்ப வேண்டியிருக்கிறது. ஆனால் ஏனோ அந்தப் பணியிடத்தை நிரப்பாமல் இருக்கிறார்கள். எனவே, அரசு தலையிட்டு அந்தப் பணியிடத்தை நிரப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிளஸ்-2 படித்த மாணவர்களை கல்லூரிகளிலே சேர்க்கின்றபோது 60 சதவிகிதம் மார்க் வேண்டுமென்று cut off வைத்திருக்கிறார்கள். அதை குறைத்து நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் நகர்ப்புற மாணவர்களைப்போல், கிராமப்புற மாணவர்கள் போட்டியிட்டு படிக்க முடியாத காரணத்தால் அந்த மார்க்கை குறைத்து நிர்ணயிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏழை மக்களுக்கு எட்டாத கனியான கணினி பாடத் திட்டத்தையும் 10 ஆம் வகுப்பு முதல் ஏழையெளிய மாணவர்கள் படிப்பதற்காக அரசு ஆணையிட்டுள்ளதை இந்த நாடே பாராட்டுகின்றது.

எனது தொகுதியினுடைய கோரிக்கைகள் பற்றித் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 1967 ஆம் ஆண்டு கழக ஆட்சி அமைந்தபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆரணிக்கு வந்து அங்கே இருக்கின்ற ஜாகீர்தார் அரண்மனையைப் பார்வையிட்டு, அங்கே கல்லூரி ஆரம்பிக்க ஆணையிடுவதாக இருந்தார்கள். ஆனால், அப்பொழுது செய்யாறிலே இருந்த புலவர் கோவிந்தனார் அவர்கள் அந்தக் கல்லூரி அமைக்கும் திட்டத்தை செய்யாறுக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். அண்ணா அவர்கள் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து செய்துவரும் நமது தலைவர் கலைஞர் அவர்கள், ஆரணியிலே ஒரு கல்லூரியையும், (மேசையைத் தட்டும் ஒலி)



அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் சார்பாக ஒரு பொறியியல் கல்லூரியையும் அமைத்துத்தர வேண்டுமென்று அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-00*

அதேபோன்று, விண்ணமங்கலம், பனையூர் ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவமனைகளை அமைத்துத் தர வேண்டுகிறேன். தாலுகா காவல் நிலையம், சுமார் 100 கிராமங்களைக் கொண்டதாக உள்ளது. அதை இரண்டாகப் பிரித்து, சேவூரிலே ஒரு காவல் நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாலுகா காவல் நிலைய பழைய கட்டடத்திற்குப் பதிலாக புதிய கட்டடத்தைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காவல் துறை அலுவலர்களுக்கான குடியிருப்புகள் பழமையாக உள்ளன. அவற்றைப் புதுப்பித்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கண்ணமங்கலத்தில் தீயணைப்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குண்ணத்தூர், இரும்பேடு, காமக்கூர், தச்சூர் ஆகிய இடங்களில் கமண்டல நாக நதியின் குறுக்கே தடுப்பணைகளைக் கட்டி, 50 ஏரிகள் நிரம்புகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஐந்து புத்தூர், நடுக்குப்பம் ஆகிய இடங்களில் உள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அக்ராபாளையம், விண்ணமங்கலம் ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கண்ணமங்கலம், முள்ளண்டிபுரம் ஆகிய இடங்களில் உள்ள இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவானந்தம், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி மருத்துவமனை, ஆரணி, ஆற்காடு, செய்யாறு, பெரணமல்லூர், போளூர் ஆகிய தொகுதி மக்களின் பயன்பாட்டில் உள்ளது. எனவே, அதை மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனைவருக்கும் சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக. இந்தியத் திருநாட்டின் உயர் கல்விக்கு ஆதார வித்திட்ட அமரர் ராஜீவ் காந்தி அவர்களையும், தமிழகத்தில் கல்விக்கு முதலிடம் கொடுத்த கர்மவீரர் காமராஜர் அவர்களையும் நன்றியோடு நினைத்துப் பார்த்து, வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றிகூறி எனது உரையைத் தொடங்குகிறேன்.

அதோடு, மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகம், தமிழகத்திலே இந்த ஆண்டு ஐஐடி., ஐஐ.எம்., மத்திய பல்கலைக்கழகம் ஆகியவற்றை வழங்கியமைக்காக, மாண்புமிகு திரு. அர்ஜுன் சிங் அவர்களுக்கும், ஐக்கிய முன்னணிக் கூட்டணித் தலைவி, இந்த அரசை வழிநடத்தும் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய திரு. மன்மோகன் சிங் அவர்களுக்கும், இவை வருவதற்கு முயற்சிகள் அனைத்தையும் செய்து, விடாப்பிடியாக வாங்கிக் கொடுத்த தங்கத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் தமிழகமே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது.

அனைத்து அரசுக் கல்லூரிகளுக்கும் கூடுதலாக நவீனக் கணினிகள் தேவையென்பதை உணர்ந்து அனைத்து அரசுக் கல்லூரிகளுக்கும் நவீனக் கணினிகளை இணைய தள வசதியுடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்த அரசைப் பாராட்ட வேண்டும். ஆனால், ஏற்கெனவே கொடுக்கப்பட்ட கணினிகளில்--configuration-the old style ஆகயிருப்பதால் இணைய தள வசதிடன்கூடிய கணினிகளை வாங்கி வழங்கவேண்டும். அதற்கான மேசைகளையும், நாற்காலிகளையும் வாங்கி வழங்க வேண்டும். இதையெல்லாம்விட முக்கியம், கணினி அறிவியல் போதிக்கப்படுவதற்கு பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் அமர்த்தப்பட வேண்டும்.

ஆசிரியர் பயிற்சி, பொறியியல் மற்றும் மருத்துவப் படிப்புகளுக்கான மாணவர்கள் இடையிலே கல்வியை விட்டுச் செல்லும் நிலை இருப்பதால், இந்த இரண்டாம் சுற்று கவுன்சிலிங்கில் அனைவரும் சேர்ந்துகொள்ளும் முறையில், மாணவர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் அதை விளம்பரப்படுத்த வேண்டும். தற்போது அனைத்து அரசுக் கல்லூரிகளிலும், அரசு உதவிபெறும் கல்லூரிகளிலும் மாற்றுமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால், ஒரு சிறப்புக் குழுவை



அமைத்து, மொத்தத்தில் எவ்வளவு ஆசிரியர் பணியிடங்கள், ஆசிரியரல்லாத பணியிடங்கள் தேவை என்பதையும், தற்போது அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் எவ்வளவு என்பதையும் ஆய்வு செய்து, கணக்கிட்டு, கூடுதலான பணியிடங்களைத் தோற்றுவிக்கவும், அப்பணியிடங்களை நிரப்புவதற்கும் தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும்.

தமிழகத்தில் உள்ள 72 அரசுக் கல்லூரிகளில், மிகக் குறைவான கல்லூரிகளுக்குத்தான் சுற்றுச் சுவர் இருக்கிறது. (குறுக்கீடு) மகளிர் கல்லூரிகளுக்கு முன்னுரிமை அளித்து, அனைத்துக் கல்லூரிகளுக்கும் சுற்றுச் சுவர் கட்டித் தரப்பட வேண்டும். பெரும்பான்மையான அரசு கலைக் கல்லூரிகளில் பொதுப் பணித் துறைமூலமாகக் கட்டப்பட்டுள்ள விடுதிகளில் குடிநீர் இணைப்பு இல்லை. இதனால், மாணவியர்களைச் சேர்க்காமல், கரூர், தான்தோன்றிமலையிலே விடுதியொன்று பூட்டியே இருக்கிறது. பல அரசு கலைக் கல்லூரிகளிலே நூலகர் பணியிடம் தேவை. மொத்தக் கல்லூரிகளிலே நான்கு அல்லது ஐந்து இடங்களில்தான் நூலகர்கள் இருப்பார்கள் என்பது ஓர் அதிர்ச்சியளிக்கக்கூடிய செய்தி. நூலகர் பணியிடங்கள் அனைத்துக் கல்லூரிகளிலும் நிரப்பப்பட வேண்டும். வேலூர் மாவட்டம், குடியாத்தம், அரசினர் திருமகள் ஆலைக் கலைக் கல்லூரி விடுதியிலே தங்கியுள்ள இலங்கை அகதிகளை வேறு இடத்திற்கு மாற்றம் செய்து, அந்த விடுதியில் மாணவர்கள் தங்குவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். அரசுக் கல்லூரிகள் அனைத்திலும் ஒரு ஆய்வினை மேற்கொண்டு, எங்கெங்கு விடுதிகள் இல்லையென்பதையும், எங்கெங்கு குடிநீர் வசதி இல்லையென்பதையும் கண்டறிய வேண்டும். அந்த ஆய்வின் அடிப்படையில் தேவையுள்ள இடங்களில், ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை ஆகிய துறைகளுடன் கலந்தாலோசித்து அத்துறைகள்மூலமாகவோ அல்லது பொதுப் பணித் துறைமூலமாகவோ விடுதிகள் கட்டித் தரப்பட வேண்டும். அரசுக் கல்லூரிகளில் ஆங்கில மொழிப் பயிற்சிக் கூடம் அமைக்க வேண்டும்.

*பிற்பகல் 1-05*

முக்கியமாக இந்த இடத்திலே நான் வலியுறுத்த விரும்புகிற கருத்து, அறிவியல் கல்லூரிகளில் உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்கென 2006-2007 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட 20 கோடி ரூபாயில், வெறும் 31,90,500 ரூபாய்

முனைவது, அரசின் அறிவுமிக்கத் திட்டங்களில் ஒன்று. *(மணியடிக்கப்பெற்றது)* Sir, let me conclude. Usually you are not giving me time. But anyway - a well developed and equitable system of higher education that promote quality learning is centre for success in the emerging knowledge of society. முறையான பலப்படுத்தப்பட்ட வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சியோடுகூடிய கல்விதான், அறிவுசார் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க முடியும். Unless you allow this private participation in the education system, I don't think we can cope up with the emerging world. The future depends on the knowledge success in the world. So, unless you allow the private participation which has a lot of resources, — you have a limited resources and the people say - Sir, unless we have a quality and quantitative education in the future, how are we going to face the challenges of the world? Because this world is changing, there is no curtain to go and learn anywhere in the world. As far as the Government is concerned, the Government cannot police the institution. You have certain resources. There are people with resources and they are willing to invest in a big way. So unless you have the participation from there, you will not succeed to cope up with the future, Sir. So the future economy depends on that. Now we are going in a different way to face the challenges. So, Sir, I request you to allow, to co-operate and collaborate with the private participation in this. Sir. the last thing I want to say is, நீங்க சென்னைப் பல்கலைக்கழகம்... *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Mrs. Bader Sayeed, you have come in the correct time, Madam. *(குறுக்கீடு)* சரி, சொல்லுங்கள், சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. கு. ஹசன் அலி:** பல்கலைக்கழகத்திலுள்ள சிண்டிகேட்டிற்கு சட்டமன்றத்திலிருந்து பிரதிநிதி ஒருவர் அனுப்பப்படுகிறார். இது சென்னைக்கு மட்டும்தான் பொருந்துகிறது. திருச்சி, கோவை, நெல்லையில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு இங்கிருந்து சட்டமன்றத்தினுடைய பிரதிநிகள் அனுப்பப்படுவதில்லையே? ஏன், இதற்கு ஒரு சட்டம், அதற்கு ஒரு சட்டம். உருது அகடெமிக்கு வெறும் ரூ.6 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாய் நீங்கள் allow செய்திருக்கிறீர்கள். இப்பணத்தை வைத்து உருது அகடெமிக்கு நாம் என்ன செய்ய முடியும்? இந்தத் திட்டங்கள் பொதுவாக நல்ல



திட்டங்கள். உங்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். உங்களுடைய ஆட்சியிலே, *(மணியடிக்கப்பெற்றது)* *(குறுக்கீடுகள்)* கல்விக்கு நீங்கள் மதிப்பு கொடுக்கவில்லை. ஆனால், கலைஞருடைய ஆட்சியிலே பொன்னையும், தங்கத்தையும் பாதுகாப்பது போல், கண்ணைப் போல், பொன்னுக்கும் தங்கத்திற்கும் தனித்தனி கல்வித் துறையை ஒதுக்கி, கலைஞர் இன்றைக்கு ஒரு சாதனை புரிந்திருக்கிறார். அந்த மன்னரை, அவரை நான் வாழ்த்தி, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பதர் சயீத்.

**திருமதி பதர் சயீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஹசன் அலி, Please, போதும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* Please wind up your speech. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள்.

***திருமதி பதர் சயீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அனைவரையும் equal-ஆக பார்க்கிறேன் என்று. நீங்கள் எனக்கும் அவருக்கு கொடுத்த மாதிரி நேரத்தைக் கொடுக்க வேண்டும். *(குறுக்கீடுகள்)* இந்த மாதிரி செய்தால் எப்படிப் பேச முடியும்? *(குறுக்கீடுகள்)*

எல்லாம் வல்ல இறைவனை வணங்கிக்கொள்கிறேன். அம்மா என்பவர் தன் குழந்தை மீது அன்பு செலுத்தி, அரவணைத்து, ஆளாக்கிப் பார்த்து மகிழ்வதுபோல் எங்களையெல்லாம் பொதுவாழ்வில் வழிநடத்தி அரசியலில் வெற்றிகளை அளித்து, மக்களுக்குப் பணி செய்ய வாய்ப்பளித்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லி மகிழ்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

உயர் கல்வித் துறையில் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பலப்பல சிறந்த பணிகள் செய்யப்பட்டன. இன்று முக்கியமாகப் பேசப்படும் Common Entrance Test வேண்டாம் என்பதற்கு விதை ஊன்றியவர் எங்கள் அம்மாதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* Men of actions are only instruments of men of thoughts. என்று சொல்வார்கள். அம்மா அவர்களினுடைய சிந்தனைதான் இன்றைக்கு CET is abolished. அதேபோல், Tamil Nadu Open University

and Tamil Nadu State Council for higher education அனைத்தும் அம்மா அவர்கள் காலத்தில்தான் தொடங்கப்பட்டன. 2005-இல் உடற் கல்வி மற்றும் விளையாட்டிற்காக Physical Education and Sports University என்று தனியாக ஒரு பல்கலைக்கழகத்தைத் தொடங்கினார்கள், எங்கள் அம்மா அவர்கள். அந்த அளவுக்கு விளையாட்டுக்கு எங்கள் அம்மா அவர்கள் முக்கியத்துவம் கொடுத்தார்கள். ஆனால், இன்றுவரை நமது மாநிலத்தில் உடற் கல்விக்காக அரசு நடத்தும் கல்லூரிகள் இல்லை. ஆகவே, அரசு உடற் கல்விக் கல்லூரிகளை உடனே தொடங்க வேண்டும்.

பிற்பகல் 1-15

சமூகப் பணிக்கான School of Social work பள்ளிகள் இரண்டு மட்டுமே அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகள்மூலம் நடத்தப்படுகின்றன. இன்றைய நாட்களில் சமூகப் பணிக்கான பள்ளிகளின்--School of Social work தேவை மிகவும் அவசியம். எனவே, அரசு உடனடியாக இதுபோன்ற பள்ளிகளை நேரடியாகத் தொடங்க வேண்டும். கல்லூரிகளிலும், பயிற்சி நிலையங்களிலும்--Colleges and Training Institutes--லேயும் மாணவர்களிடம் படிக்கும் ஆர்வத்தையும், எழுதும் ஆற்றலையும் அதிகரிக்க நூல் நிலையப் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும். மேலை நாடுகளில்-abroad--book review என்ற ஒரு முறையின்மூலம் மாணவர்களிடையே படிக்கும் ஆர்வத்தையும், எழுதும் ஆற்றலையும் வளர்க்கிறார்கள். இங்கும் நூல் நிலையத்தைத் தக்க முறையில் பயன்படுத்தும் மாணவர்களை ஊக்குவிக்க ஏற்பாடு செய்ய இந்த அரசு முன்வரவேண்டும். The students have lost touch with libraries. They do not go to the libraries. There is no reading habit and therefore, they do not write as well. It is very important. I request the Hon. Minister to see that importance is given to the reading habit.

நமது மாநிலத்தில் கலைக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளிலிருந்து அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் ஆண்டுதோறும் படித்து முடித்து வருகிறார்கள். அவர்களின் எண்ணிக்கைக்கேற்ப வேலைவாய்ப்புகள் இல்லை, வேலைக்கு அவர்களுக்கு வாய்ப்பு இல்லை. நீங்கள் பல தொழிற்சாலைகள் தொடங்கப்போவதாக அறிவிப்பு செய்கிறீர்கள். ஆனால், படித்துவிட்டு வெளிவரும் மாணவர்களின் நலன் கருதி உடனடியாக வேலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.



Communication skills for students. Those who come out of the colleges, they do not have any communication skills. They only know to study some subject and when the campus interview is taken they lose out on that very badly. I have read the policy note. I request the Hon. Minister—he has stated in that there is a plan with the British Council to train teachers and students. But that is only a drop in the ocean. It is not enough. Therefore, I request our Hon. Minister to have a long term action plan on a war-footing to increase communication skills of students who are finally the teachers of tomorrow.

One thing I want to ask the Hon. Minister, மதுரையில் உள்ள Wakf Board கல்லூரியின் முதல்வர்மீது மிக serious-ஆன குற்றச்சாட்டுகள் இருந்தன. அவர் பணியில் இருந்து நீக்கப்பட்டார். ஆனால், மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார். அந்தக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவர்மீது உரிய நடவடிக்கையை அமைச்சர் எடுப்பார் என்று நான் நம்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹசன் அலி, அவர் முடிக்கட்டும்.

**திருமதி பதர் சயீத்:** உருது அகாடமி (குறுக்கீடு) நான் முடித்து விடுகிறேன், சார். உருது அகாடமி (குறுக்கீடு) மாநில உருது மன்றம் ஒரு விவாத அரங்கம். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹசன் அலி, கொஞ்சம் உட்காருங்கள். இன்னும் ஒரு நிமிடம்தான். (குறுக்கீடு) நீங்கள் பக்கத்தில் இருக்கிறவர்களிடம் ஏன் பேசுகிறீர்கள்? நீங்கள் சீக்கிரம் பேசுங்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திருமதி பதர் சயீத்:** உருது அகாடமி மன்றம் ஒரு விவாத அரங்கம் நடத்தியதைத் தவிர வேறு எந்தப் பணிகளை இந்த மன்றம் செய்து உள்ளது? மன்ற அலுவலர்கள்கூட இப்போது இல்லை. ஒரு full time Secretary, முழு நேரச் செயலாளர்கூட இல்லை. இந்த முக்கியத்துவத்தைத்தான் இந்த அரசு உருதுக்குக் கொடுக்கிறதா என்று கேட்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் சொல்லி இருக்கிறார், அவர் consider செய்வார், Engineering College-லே fees உயர்த்துவார் என்று. ஆனால், ஒரு பக்கம் சொல்கிறீர்கள், fees குறைக்கச் செய்வோம், இலவசமாக education கொடுப்போம் என்று.

இதைக்கூட நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள் ஒரு Interview-ல். You will consider regarding raising the fees. I hope you will throw some light-விளக்கம் அளிப்பார்.

I would like to focus next on the research emanating from the higher institutions of learning in Tamil Nadu. Prof. V.C. Kulandaisamy has highlighted in the print media that the research potential of Indian University is alarmingly poor.

*பிற்பகல் 1-20*

He also quotes Professor C.N.R. Rao who has reported to have stated that our Universities have largely stopped doing research. All of us have to ponder over this alarming situation and ask ourselves why has this happened. The answer is starring into our face. The quality of our education is so poor. The primary, secondary and higher education that we need to wake up and take drastic action. I can see our Minister for School Education is smiling. (The Gong was sounded) I suggest to the Hon'ble Minister to constitute a Committee to look into the quality of education.

**HON'BLE SPEAKER:** Your time is over, sit down. (Interruption) Hon'ble Minister for Higher Education. *(குறுக்கீடு)* Madam, *உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு)*

**TMT. BADER SAYEED:** Is this higher education debate? Such an important question — What are we doing? *எனக்கு அனுமதி கொடுக்க நீங்கள் மறுக்கின்றீர்கள். ஏன் இப்படி செய்கின்றீர்கள் என்று எனக்குப் புரியவில்லை.* But, definitely I am sorry, you are not allowing me to speak on such an important subject like higher education.

**HON'BLE SPEAKER:** It is time barred. *உட்காருங்கள். (குறுக்கீடு)*

**TMT. BADER SAYEED:** I suggest to the Hon'ble Minister to constitute a Committee to look into the quality of education in general and higher education in particular and recommend what changes need to be instituted.

**HON'BLE SPEAKER:** See, you have been given only seven minutes, but you have taken nine minutes. (Interruption) No, sit down. *(குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.*



**திருமதி பதர் சயீத்:** *அமைச்சரே நேரம் கொடுத்துவிட்டார். இரண்டு ஆண்டுகளாக திருவல்லிக்கேணி தொகுதியில் மேம்பாட்டுப் பணிகள் நடக்க இந்த அரசு ஆதரவாக இல்லை. பலமுறை மனு கொடுத்தும், மேம்பாட்டுப் பணிகளைத் தொடங்க அனுமதி கொடுக்க மறுக்கின்றார்கள். இந்த நிலையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். சென்னையில் பல மேம்பாலங்களைக் கட்டி வருகின்றீர்கள். நீங்கள் திருவல்லிக்கேணி தொகுதிப் பக்கம் கொஞ்சம் திரும்பிப் பாருங்கள். அங்கே போக்குவரத்துப் பிரச்சினை மிக அதிகமாக் உள்ளது. ஆகவே, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அங்கே மேம்பாலம் கட்டி, போக்குவரத்துப் பிரச்சினையைக் குறைக்க ஆவன செய்யவேண்டுமென்று அன்போடு, பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"வறியோர்க் கெல்லாம் கல்வியின் வாடை*
*வரவிடவில்லை மதகுருக்களின் மேடை*
*நறுக்கத் தொலைந்தது அந்தப் பீடை*
*நானிலம் பாய்ந்தது கல்வியின் நீரோடை" (மேசையைத் தட்டும் ஒலி)*

*இது பாவேந்தர் பாரதிதாசன் சனாதனம் ஒழிந்து, அனைவருக்கும் கல்வி கிடைப்பதில் எடுத்துச் சொன்ன வரிகள். பாவேந்தர் பாரதிதாசனுடைய கூற்றை மெய்ப்பிக்கின்ற வகையில், தலைவர் கலைஞர் அவர்கள், மத்தியிலே மண்டல் கமிஷன் அறிக்கையைக் கொண்டுவர வைத்ததோடு, இன்று மத்திய கல்வி நிலையங்களிலேயும் 27 சதவீத இடஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்திருக்கின்ற, (மேசையைத் தட்டும் ஒலி) சமூக நீதிக் காவலர், உண்மையான பெரியார், கலைஞர் அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு என்றும் உறுதுணையாக இருக்கின்ற பேராசிரியர் பெருந்தகையை வணங்கி, பொருளாளரை வணங்கி, உள்ளாட்சித் துறையா, நகராட்சித் துறையா, குடிநீர் வடிகால் வாரியமா, எந்தத் துறையிலும், தொழில் துறையிலும் இணைத்து தன் முத்திரையைப் பதிக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) வருங்கால தமிழகத்தை வழி நடத்திச் செல்லக்கூடிய எங்கள்*

ஆற்றல்மிக்க தளபதி அவர்களை வணங்கி, இந்த மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துகளை எடுத்து வைக்க விரும்புகின்றேன்.

இங்கே பேசிய நண்பர்கள் அனைவரும் கடந்த இரண்டாண்டுகளில் உயர் கல்வித் துறையில் நடைபெற்ற நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டினார்கள். முதன்முதலாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் முனைவர் மு. தம்பிதுரை அவர்கள், எண்ணிக்கையை உயர்த்துவோம் என்று சொன்னீர்களே தவிர, தரத்தை உயர்த்துவோம் என்று சொன்னீர்களே தவிர, அது பெயரளவில்தான் இருந்தது என்று சொன்னார்கள்.

*பிற்பகல் 1-25*

மானியக் கோரிக்கையினுடைய அந்தப் புத்தகத்தை அவர் படித்திருப்பார் என்றே நான் கருதுகிறேன். இந்த அரசு பொறுப்பேற்ற இரண்டாண்டுகளில், சொன்னதைச் செய்திருக்கிறோம் என்பதற்கு ஆதாரமாக எண்ணிக்கையை அதிகரித்திருக்கிறோம். தலைவர் கலைஞர் அவர்கள் அதற்காக எடுத்த நடவடிக்கைகள்--கல்லூரிகளின் எண்ணிக்கையை அதிகரித்தார். கலைக் கல்லூரிகளிலே கட்டணத்தையே முழுமையாக எடுத்தார். இலவசமாக bus pass கொடுத்தார். கல்லூரிகளிலே shift முறையைக் கொண்டுவந்தார். அதன் விளைவாக ஏற்பட்ட மாற்றம் எவ்வளவு தெரியுமா? உயர்ந்த எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? மாண்புமிகு உறுப்பினர் முனைவர் மு. தம்பிதுரை அவர்கள் தெரிந்துகொள்வதற்காகவே, எழுதியது மட்டுமல்லாமல் அதே புத்தகத்திலேயே, பின்னாலே பட வடிவிலேயும் graphic representation-ம் கொடுத்திருக்கிறோம்.

2006-ல் கலைக் கல்லூரிகளில் படித்த மாணவர்கள் 5,68,226. இப்போது 2008 முடிகிறபோது 6,74,486. (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞர் அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக இந்த ஆண்டுகளிலே கலைக் கல்லூரிகளிலே மட்டும் ஒரு இலட்சம் பேருக்குமேல் அதிகரித்திருக்கிறார்கள். பொறியியல் கல்லூரிகளில் 2006-ல், 67,836 பேர். இப்போது 2008-ல் 95,808 பேர். 27,972 பேர் அதிகரித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பல்தொழில்நுட்பக் கல்லூரிகள்--Polytechnics-- 2006-ல் 58,046. இப்போது 81,771. 23,725 பேர் அதிலே உயர்ந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக இந்த உயர் கல்வியில், கலைக் கல்லூரிகளில், பொறியியல் கல்லூரிகளில், பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் இந்த இரண்டாண்டுகளில் மட்டும் அதிகம் படித்திருப்பவர்கள் எண்ணிக்கை 1,57,957.



சொன்னதைச் செய்கின்ற அரசு, தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு என்பதற்கு எடுத்துக்காட்டு இந்த எண்ணிக்கையை உயர்த்தியிருப்பது. (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணிக்கையை உயர்த்தியிருப்பது மட்டுமல்ல. தரத்தையும் உயர்த்தியிருக்கிறோம். தரத்தை உயர்த்த வேண்டுமென்று சொன்னால், ஆசிரியர்களுடைய எண்ணிக்கையும் உயர்த்தப்படவேண்டும். கடந்தகால ஆட்சியில், நான் குறை சொல்ல வேண்டுமென்பதற்காக அல்ல, கடந்தகால ஆட்சியிலே கல்லூரி ஆசிரியர்களே நியமிக்கப்படவில்லை. கல்லூரி ஆசிரியர்களே நியமிக்கப்படாத இருந்த ஒரு சூழ்நிலை. ஆனால், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், 2006-2008-ல் 914 பேர் அரசுக் கலைக் கல்லூரிகளிலே நியமிக்கப்பட்டார்கள். நியமிக்கப்பட்டது மட்டுமல்ல, இந்திய அரசாங்கமே பாராட்டியிருக்கிறது.

நான்கூட 18 ஆண்டு காலம் கல்லூரியிலே பேராசிரியராக இருந்தேன். M.A. படித்தவர்களுக்கு உடனே direct appointment. அவர்களுக்குப் பயிற்சி கிடையாது. ஆனால், இந்த முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு ஒரு மாத காலம் ஊதியத்தோடு பயிற்சியும் கொடுத்து, அவர்கள் நியமிக்கப்பட்டதை இந்திய அரசாங்கமே பாராட்டி இந்த முறையை நிரந்தரப்படுத்துங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின்மூலமாக, அன்னை சோனியா காந்தியின் வழிகாட்டுதலோடு, டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் தலைமையிலே அமைந்திருக்கின்ற மத்திய அரசு, தமிழகத்திற்கு மூன்று பல்கலைக்கழகங்களை கொடுப்பதாக அறிவித்திருக்கிறது. அந்த மூன்று பல்கலைக்கழகங்கள் தமிழ்நாட்டிலே கோயம்புத்தூர், திருச்சி மற்றும் திருவாரூர் ஆகிய மூன்று இடங்களிலே அமைய இருக்கின்றன. கோயம்புத்தூரிலே அமைய இருக்கின்ற World Class University--இந்த நாட்டை, இந்தியத் திருநாட்டை 21 ஆம் நூற்றாண்டிற்கு அழைத்துச் செல்வேன் என்று சொல்லி, எங்கே பார்த்தாலும் கம்ப்யூட்டர்

மயமாக்கி ஏழையெளிய மக்கள், சமுதாயத்திலே பின்தங்கிய மக்களெல்லாம் செல்லிடைத் தொலைபேசி மூலமாக அனைத்தையும் அறிந்துகொள்கின்ற வசதியையும் வாய்ப்பையும் ஏற்படுத்திக்கொடுத்த, தீவிரவாதிகளாலே இந்த மண்ணிலே படுகொலை செய்யப்பட்ட அமரர் ராஜீவ் காந்தி அவர்களுடைய பெயரை அந்தக் கோயம்புத்தூர் World Class பல்கலைக்கழகத்திற்கு வைக்க இந்த அரசு முயற்சி எடுக்கவேண்டுமென்ற பணிவான வேண்டுகோளையும், அதேபோன்று ...

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** நான் முடித்துவிடுகிறேன். இது பல்கலைக்கழகங்களில் வருகிறது. அவர்கள் அறிவித்த 3 பல்கலைக்கழகங்கள், மற்ற பல்கலைக்கழகங்களைப்பற்றிச் சொன்ன பிறகு நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் 914 பேர் சென்ற ஆண்டு நியமிக்கப்பட்டது மட்டுமின்றி, இந்த ஆண்டு backlog என்று சொல்லி ஆதி திராவிடர்களிலே நியமிக்கப்படாமலிருந்த 522 பேர்களை நியமிப்பதற்கு இப்போது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது; நேர்முகத் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் 540 பணியிடங்கள் பொது நியமனத்தின்மூலம் நிரப்பப்படவிருக்கின்றன. இந்த இரண்டு ஆண்டுகளில் இதுவரை கல்லூரி வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு 5,076 துணை பேராசிரியர்களை நியமித்த அரசு தலைவர் கலைஞருடைய அரசு என்பதை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இது தரத்தை உயர்த்துவதற்காக கலைஞர் எடுத்திருக்கிற முயற்சி.

அதேபோல, infrastructure development. இந்த அரசால் சென்ற ஆண்டு 622 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டன. 39 கோடி ரூபாய் செலவில் இந்த ஆண்டு 520 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படவிருக்கின்றன. இதுவரையிலும் இந்த வரலாறே கிடையாது. Government Colleges History-லே எந்தக் கல்லூரியிலேயாவது 7 ரூம்கள், 8 ரூம்கள் கட்டி இருக்கிறார்களா என்று தயவுசெய்து மனசாட்சி உள்ளவர்கள் எண்ணிப் பாருங்கள். கலைஞர் எப்போது ஆட்சியிலே இருக்கிறாரோ அப்போதுதான் உயர் கல்வித் துறையைப் பொறுத்தவரையிலே உயர்வு. (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர்



கல்லூரிகளுக்கெல்லாம் பாதுகாப்பு வேண்டுமென்று இங்கே பேசுகிறபோது சொன்னார்கள். அனைத்து மகளிர் கல்லூரிகளுக்கும் compound சுவர் கட்டுவதற்கும், தலைவர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டு அனுமதி அளித்து அதற்கும் நிதியுதவி அளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 59 அரசு கலைக் கல்லூரிகளில் 188 நவீன கழிப்பறைத் தொகுப்புகள் கட்டப்படவும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் infrastructure development. கல்லூரிகளுக்கு கட்டட வாய்ப்புகளை, வசதிகளை உருவாக்கித் தருவது, தரத்தை உயர்த்துவதற்காக இந்த அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகள்.

புதிய பாடப் பிரிவுகள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் திரு. தம்பிதுரை அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சுட்டிக்காட்டினார்கள். அவர்கள் உருவாக்கிக்கொண்டு வந்த பாடப் பிரிவுகளெல்லாம் self-financing. அரசாங்கக் கல்லூரி இருக்கும். அங்கேயே B.Sc. Chemistry இருக்கும். அதே B.Sc. Chemistry என்று இன்னும் ஒன்று வைத்திருப்பார்கள். கேட்டால் self-financing என்று சொல்வார்கள். இங்கே இருக்கிற B.Sc.-லே tuition fees 500 ரூபாய். ஆனால் self-financing-ல் போனோம் என்றால் 25 ஆயிரம் ரூபாய். இப்படி ஒரு வேறுபாடு அரசு கலைக் கல்லூரிகளிலேயே இருந்தது. இதைத்தான் தேர்தல் அறிக்கையிலேயே கலைஞர் சொல்லி, இந்த வேறுபாட்டைக் களைய வேண்டும் என்று ஆணையிட்டு அனைத்து அரசு கலைக் கல்லூரிகளிலுமிருந்த அந்த சுயநிதிப் பாடப் பிரிவுகள் அகற்றப்பட்டன என்பது வரலாறு. ஆக, தரத்தை உயர்த்துவதற்காக கலைஞர் அரசு எடுத்திருக்கிற முயற்சிகள் கொஞ்சநஞ்சமல்ல.

மேலும் C.B.C.S. முறை; Choice Based Credit System என்ற ஒரு முறையை இந்த ஆண்டு முதல் அனைத்து இடங்களுக்கும் கொண்டு வந்திருக்கிறோம். அனைத்தையும்விட தலைவர் கலைஞர் ஏதோ கட்டடங்கள் கட்டினார், ஆசிரியர்களை நியமித்தார், அதனால் கல்வியிலே புரட்சி செய்திருக்கிறார் என்று சொல்வதற்கு நான் தயாராக இல்லை.

நாம் சோழர் காலத்தைப் படித்திருக்கிறோம். சேரர் காலத்தைப் படித்திருக்கிறோம். பாண்டியர் காலத்தைப் படித்திருக்கிறோம். ஆனால், தமிழக வரலாற்றில், வருங்காலத்திலே படிக்க இருப்பவன் 1969 முதல் இன்று வரை உள்ள இந்தக் காலத்தை நிர்ணயிக்கிறபோது, கலைஞர் காலம் என்றுதான் எழுத வேண்டும். (மேசையைத்

தட்டும் ஒலி) நான் ஏதோ இந்தக் கட்சியிலே இருக்கிறேன் என்பதற்காக பெருமைக்காகச் சொல்லவில்லை. ஒரு வரலாற்று ஆராய்ச்சி மாணவன் என்ற முறையிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1969-லே அவர் முதன்முதலாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றது முதல், இன்று ஐந்தாவது முறையாக பொறுப்பேற்றிருக்கிற இத்தனை ஆண்டு காலங்களில் அவர் அனைத்துத் துறைகளிலும் ஆற்றியிருக்கிற புரட்சி, பசுமைப் புரட்சியாக இருந்தாலும், வெண்மைப் புரட்சியாக இருந்தாலும், தொழிற் புரட்சியாக இருந்தாலும், சொத்துரிமை பெண்களுக்கு வழங்கியதன்மூலமாக பெண்களுக்குக் கொடுத்த உரிமைப் பிரச்சினையாக இருந்தாலும், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று கொண்டு வந்திருந்த பெரியாருடைய சமுதாய சீர்திருத்தப் புரட்சியாக இருந்தாலும், அத்தனை புரட்சிகளையும் உருவாக்கி தமிழகத்திலே ஒரு பெரிய மாற்றத்தை உருவாக்கிய காலம் ஒன்று உண்டு என்றால், அது ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் (மேசையைத் தட்டும் ஒலி) 1969 முதல் இதுவரை செய்திருக்கிற புரட்சி. அந்தப் புரட்சிகளெல்லாம் மேலும் வளர வேண்டும் என்று சொன்னால், நிலைபெற வேண்டுமென்று சொன்னால், இது தொடர வேண்டுமென்று சொன்னால் கல்வியிலே புரட்சி நிலைத்து நிற்க வேண்டும். அதைத்தான் ஜி.கே. மணி அவர்கள் அடிக்கடி சொன்னார்கள், கல்விப் புரட்சி தேவை, கல்விப் புரட்சி தேவை என்று. அந்தக் கல்விப் புரட்சியை உருவாக்க வேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கிறது. அதற்காக நம் மனப்பான்மையை நாம் மாற்றிக்கொள்ள வேண்டும். கல்வியில் வளர்ந்து இருக்கிறோம். ஆனால், ஏற்றுக்கொள்ள பல பேர் மறுக்கிறோம்.

*பிற்பகல் 1-35*

ஒரு காலக் கட்டத்தில் கல்வியை எனக்குச் சொல்லிக் கொடுத்தவர்கள், நான் ஐந்தாவது படிக்கும்போது எனக்குக் கல்வியை சொல்லிக்கொடுக்கும்போது, வாய்ப்பாடு சொல்லிக் கொடுப்பார்கள். எனது தாத்தாதான் என்னுடைய வாத்தியார். அவர் ஐந்தாம் வாய்ப்பாட்டை மனப்பாடம் பண்ணிச் சொல்ல வேண்டும் என்று சொல்வார். நான் சொல்வேன், 1 X 5 = 5, 2 X 5 = 10, 3 x 5 =15, 4X 5 = 20, 5 X 5 =25, 6 X 5 = 30, 7X 5 =35, 8 X 5 = 40, 9 X 5 = 45, 10 X 5 = 50, 11 X 5 = 55, 12 X 5 = 60, 13 X 5 = 65, 14 X 5 =70, 15 X 5 = 75, 16 X 5 = 80, என்று சொல்வேன், சொல்லிமுடித்தவுடன்



விடமாட்டார். திருப்பித் தலைகீழாகச் சொல் என்பார். உடனே திருப்பித் தலைகீழாகச் சொல்ல வேண்டும். 16 X 5 = 80, 15 X 5 = 75, 14 X 5 =70, 13 X 5 = 65, 12 X 5 = 60, 11 X 5 = 55, 10 X 5 = 50, 9 X 5 = 45, 8 X 5 = 40, 7X 5 =35, 6 X 5 = 30, 5 X 5 =25, 4 X 5 = 20, 3 x 5 =15, 2 X 5 = 10, 1 X 5 = 5 என்று சொன்ன பிறகுதான் முடிப்பார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படித்தான் அப்போது வாய்ப்பாடு படித்தோம். இப்போது ஐந்தாம் வாய்ப்பாடு ஏன் சொன்னேன் என்றால் இதுதான் சுலபம், வரப்படுத்துவதற்கு. அதனால் இதைமட்டும் சொல்ல முடிந்தது. அன்றைக்கு 16 ஆம் வாய்ப்பாடு வரையில் வரப்படுத்திச் சொல்ல வேண்டும். இப்போது என் வீட்டில் இருக்கிற பையனை multiplication 8 X 8 என்ன என்று கேட்டால், multiplication-னா, பெருக்கலா, வாய்ப்பாடா, அப்படி என்றால் என்ன என்று கேட்கிறான். இல்லை, 8 X 8 என்ன என்று பெருக்கிச் சொல்லுடா என்றால், கொஞ்சம் வெயிட் பண்ணுங்கள் என்று சொல்லி, உடனே ஒரு கால்குலேட்டரை எடுக்கிறான். 8 X 8 போட்டு 64 என்கிறான். 280 X 280 என்ன என்று கேட்டால், உடனே சொல்கிறான். நம்ம ஆள் என்ன சொல்கிறான், நான் படிக்கும்போது பார், தலைகீழாக வாய்ப்பாடை ஒப்பிப்பேன், இப்போது 8 X 8 என்ன என்று கேட்டால், சொல்லமாட்டேன் என்று சொல்லிவிட்டுச் செல்கிறான். இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இன்றும் இருக்கிறது. மாற்றங்கள் இருக்கின்றன. Teaching methods, சொல்லிக்கொடுக்கிற முறைகள் மாறிக்கொண்டிருக்கின்றன. பயிற்றுவிக்கிற முறைகள் மாறிக்கொண்டிருக்கின்றன. காலத்தினுடைய மாற்றத்திற்கு ஏற்ப கல்வி வளர வேண்டும். அதைத்தான் ஐ.நா. சபையிலே ஒரு கணக்கெடுத்துச் சொல்கிறபோது சொன்னார்கள். ஒரு நாட்டினுடைய வளர்ச்சி எதைப் பொறுத்து இருக்கிறது என்று சொன்னால், அந்த நாட்டினுடைய மனித வளத்தைப் பொறுத்துதான் இருக்கிறது என்று சொன்னார்கள்.

அதனால்தான் மத்திய அரசாங்கத்தில் இருக்கிற இந்தக் கல்வித் துறைக்கு Human Resources Department என்று பெயர் வைத்திருப்பது அதற்குத்தான். மனித வளம் எந்த நாட்டிலே அதிகமாக இருக்கிறதோ, அந்த நாட்டில்தான் வளர்ச்சி அதிகமாக இருக்கிறது. அந்த நாட்டினுடைய இயற்கை வளம், natural resources 15 சதவிகிதம்தான் அந்த நாட்டின் வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கிறது. ஆனால், 65 சதவிகிதம் மனித வளம்தான் அந்த நாட்டினுடைய வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கிறது. அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்கள் மனித வளர்ச்சியையும், தொழில் துறையையும் ஒருங்கிணைத்த

காரணத்தினாலேதான் இன்று I.T.-யிலே இந்திய அளவிலே மட்டுமல்ல, உலக அளவிலேயே தமிழ்நாடு தலைசிறந்து நிற்க முடிகிறது என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) மனித வளத்தைத் தொழில் வளத்திற்கு பயன்படுத்துகிற வித்தையை தலைவர் கலைஞர் அவர்கள் இந்த மண்ணில் உருவாக்கி இருக்கிற காரணத்தினால்தான். அந்த விளைவின் காரணமாகத்தான் இன்று மனித வளத் துறை தமிழகத்திலே வளம் பெற்று இருக்கிறது. வளம் பெற்றிருக்கிற இந்த மனித வளத் துறையில், புதியதாக இதுவரை கல்வி வரலாற்றிலே இல்லாத ஒரு நிலையை தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்திலே உருவாக்கி இருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. சுதர்சனம் அவர்கள் சொன்னதைப்போல, தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள்--மூன்று முறை டெல்லிக்குச் சென்று இருந்தார், நானும் அவரோடு சென்று இருந்தேன். அவர், திரு. அர்ஜுன்சிங் அவர்களைப் பார்க்கிறபோதெல்லாம் பத்திரிகைகளிலே செய்தி வரும். எந்த மாநிலத்திலே மத்திய பல்கலைக்கழகம் இல்லையோ அங்கே ஒன்றைக் கொடுக்கப்போகிறோம் என்று Planning Commission-லே ஒன்றைச் சொல்லி இருந்தார்கள். அந்தச் செய்தி பத்திரிகையிலே, அங்கு டெல்லியிலே இருக்கிறபோது வந்தது. அப்போது அவரைப் பார்க்கிற வாய்ப்பும் தலைவருக்கு வந்தது. உடனே ஒரு கடிதத்தை அடிக்கச் சொன்னார். அவருடைய செயலாளரிடம் சொல்லி, தமிழ்நாட்டில் மத்திய பல்கலைக்கழகம் கிடையாது, எங்களுக்கு உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்று உடனடியாக எழுதிக் கொடுத்தார். அதை எழுதிக் கொடுத்துவிட்டு வெளியே வந்தவுடனே Business Management எங்கள் மாநிலத்தில் கிடையாது. அதுவும் வேண்டும் என்று அதையும் ஒரு கோரிக்கையாக வைத்தார். இரண்டு கோரிக்கைகளையும் நேரடியாகப் பார்த்து திரு. அர்ஜுன் சிங் அவர்களிடம் இரண்டு முறை முதல்வர் அவர்கள் வற்புறுத்திவிட்டு வந்தார்கள். இங்கே வந்தபிறகு கடிதமும் எழுதினார். இந்த இரண்டுதான் கிடைக்கும் என்று நாங்கள் நினைத்தோம். ஆனால் மத்திய அரசாங்கம் இன்று இந்தியாவிற்காக அறிவித்திருக்கிற, World Class University என்று சொல்லப்படுகிற 14 World Class University-களில் ஒன்றை கோவையிலே உருவாக்குவதற்கு அனுமதியை அளித்திருக்கிறது, உத்தரவினைப் பிறப்பித்திருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை எண்ணுகிறபோது மகிழ்ச்சியடைகிறோம். ஆக, 3 பல்கலைக்கழகங்களை மத்திய அரசு தமிழகத்திற்குக் கொடுத்து இருக்கிறது என்று சொன்னால், அதைப் பெற்றுத் தந்த பிதாமகன் தலைவர் கலைஞர், (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் இது கலைஞர் காலம்.



மனித வளத்தை மேம்படுத்துவதில், தொழில் துறையை வளர்ப்பதில் விவசாயத் துறையில் பசுமைப் புரட்சியை உருவாக்கியதில், வெண்மைப் புரட்சியை உருவாக்கியதில், இது கலைஞர் காலம், மூன்று பல்கலைக்கழகங்கள். J.N.U.-வில் நாங்கள் எல்லாம் படிக்கிறபோது ஏக்கப்பட்டது உண்டு. I.A.S., I.P.S., படிக்க வேண்டும் என்றால் டெல்லியில் இருக்கிற ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் படித்தவர்கள்தான் வரமுடியும். பெரும்பாலும் நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால் I.A.S., I.P.S., அதிகாரிகள் அனைவரும் வடநாட்டில் இருந்து வந்தவர்கள், அனைவரும் J.N.U.-வில் படித்தவர்களாக இருப்பார்கள். உத்தரபிரதேச மாநிலம், பீஹார் மாநிலம் அங்கேயிருக்கிற அனைவரும் அங்கே படித்தவர்களாக இருப்பார்கள். நாம் இங்கே படித்துவிட்டு அங்கே சென்றால் நமக்கு வாய்ப்பே கிடையாது. மத்திய அரசாங்கத்தின் பல்கலைக்கழகத்தில் படிக்கிற வாய்ப்பு இருந்தாலே I.A.S., I.P.S., போகலாம், அப்போது அது கிடையாது. ஆனால் அப்படிப்பட்ட 3 பல்கலைக்கழகங்களை ஒரே ஆண்டில் தமிழகத்திற்குப் பெற்றுத் தந்திருக்கிற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்ற காரணத்தினால் வருங்கால இளைஞர் சமுதாயமே, நீங்கள் எழுதி வைத்துக்கொள்ளுங்கள், தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்திய நாட்டிலேயே இனிமேல் 25 சதவிகிதத்திற்குமேல் I.A.S.-கள், I.P.S.-கள், I.I.T.-லே பட்டம் பெறுபவர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்களாக உருவாவதற்கான வாய்ப்பை உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான், அந்தப் பல்கலைக்கழகம், கோவையிலே, World Class University உருவாக்கப்படவிருக்கிறது என்பது ஒன்று. இரண்டாவதாக திருச்சியிலே, Deemed University-ஆக Management University உருவாக்கப்பட இருக்கிறது. மூன்றாவதாக, தலைவர் கலைஞர் பிறந்த திருவாரூரில் மத்திய பல்கலைக்கழகம் உருவாக்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆக, இந்த 3 பல்கலைக்கழகங்களையும் உருவாக்கவிருக்கிறார்கள். (குறுக்கீடு) இதுதான் நீங்கள் சொன்னது. இதற்குமேலும் நீங்கள் சொல்ல வேண்டுமானால் சொல்லுங்கள்.

பிற்பகல் 1-40

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 பல்கலைக்கழகங்கள் தமிழகத்திலே உருவாக வேண்டும். அவற்றை உருவாக்குவதற்கு, மத்திய அரசு அனுமதி கொடுத்து மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கிற, அன்னை சோனியா காந்தி அவர்களின்

வழிகாட்டுதலோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற, பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுடைய தலைமையிலே இருக்கின்ற அரசு மற்றும் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அர்ஜுன் சிங் ஆகியோர் உதவியால், 3 பல்கலைக்கழகங்கள் தமிழகத்தில் அமையவிருக்கின்றன. அதில் ஒன்று, World Class University, கோயம்புத்தூரில் அமையவிருக்கிறது என்று நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். அந்த World Class University-க்கு இந்தியத் திருநாட்டை 21 ஆம் நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்கிறேன் என்று சொல்லி, காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையிலும், மணிப்பூரிலிருந்து ஜெயசாம்ராஜ்யம் வரையிலும் பரந்து, விரிந்து இருக்கிற இந்த பாரத தேசத்தை உலக நாடுகள் மத்தியிலே ஓங்கி உயரச் செய்து, தீவிரவாதத்தை ஒழிப்பேன் என்று சொல்லி, இலங்கையிலே சமாதானம் காண வேண்டும் என்று நினைத்து, அதன்மூலமாக நம்முடைய மண்ணிலே மறைந்த வீரத் திருமகன் அமரர் ராஜீவ் காந்தி அவர்களுடைய பெயரை நீங்கள் கோவையிலே அமைய இருக்கின்ற அந்தப் பல்கலைக்கழகத்திற்குச் சூட்ட வேண்டும், அதற்கான முயற்சியை நீங்கள் எடுக்க வேண்டும் என்ற என் பணிவான வேண்டுகோளையும், (மேசையைத் தட்டும் ஒலி) திருக்குவளை, திருவாரூர் மாவட்டத்திலே இருக்கிறது. அந்த திருக்குவளையில் பிறந்து, 5-வது முறையாக, தமிழகத்தினுடைய முதலமைச்சராக, 50 ஆண்டு காலம் இந்தச் சட்டமன்ற உறுப்பினராக பொன் விழா கண்ட நாயகர், 70 ஆண்டு கால பொது வாழ்வுக்குச் சொந்தக்காரர், இந்தச் சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கிற ஏழை எளிய மக்கள், சமுதாயத்தில் வாழ்விழந்து, பலம் இழந்து, கூனி இருக்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அல்லும்பகலும் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கிற நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெயரை அந்தப் பல்கலைகழகத்திற்கு சூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாவதாக, இருக்கின்ற பல்கலைக்கழகத்திற்கு அரசே முடிவு எடுத்து ஒரு நல்ல பெயரைச் சூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கோரிக்கையை நிச்சயமாக இந்தச் சட்டமன்றம் ஏற்று, இந்தத் துறையின்மூலமாக மத்திய அரசுக்குக் கோரிக்கை அனுப்பி வைக்கப்படும் என்பதை நான் உறுதியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோல, இங்கே பேசிய அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். திரு. குழந்தைசாமி அவர்கள் சுட்டிக்காட்டிய கருத்துக்கள், The Unitary Universities ஆராய்ச்சி மனப்பான்மையோடு ஆராய்ச்சிகளைச் செய்கின்ற பல்கலைக்கழகங்களை வளர்க்க வேண்டுமென்று அவரும், திரு. அனந்தகிருஷ்ணன் போன்றவர்கள் எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். National Knowledge Commission-கூட இந்தியாவிலே குறைந்தபட்சம் 1,500 பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறது. குறிப்பாக மேலை நாடுகளிலே பார்க்கிறபோது, அங்கே இருக்கிற பல்கலைக்கழகங்கள் எல்லாம் Unitary Status என்ற அடிப்படையிலே, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி அனைத்தையும் ஒரே இடத்திலே கொடுக்கிற பல்கலைக்கழகங்களாக இருக்கும். The Affiliated Nature அதாவது, சென்னையிலே இருக்கிற பல்கலைக்கழகத்தைப் பார்த்தோம் என்றால் அதற்கு 120. விழுப்புரத்தில் இருக்கிற college இதற்கு affiliated ஆக இருக்கும். அதுமாதிரி மேலை நாடுகளிலே எங்கேயும் கிடையாது. இந்தியாவிலேதான் இதுபோன்று affiliated colleges இருக்கின்றன. இதைத்தான் மாற்றியமைத்து, ஒவ்வொரு இடமும் ஒவ்வொரு பல்கலைக்கழகமாக வளர வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட இந்த National Knowledge Commission அறிவுறுத்தியிருக்கிறது. இன்னும் 5 ஆண்டுகள், 10 ஆண்டுகளில் இந்தியாவில் 1,500 பல்கலைக்கழகங்களை உருவாக்க வேண்டுமென்று அந்த ஆணையம் அறிவுறுத்தியிருக்கிறது.

பிற்பகல் 1-45

அந்த அடிப்படையிலே, ஒரு முதல் முயற்சியாக, தமிழகத்தைப் பொறுத்தவரையில் அரசு கலைக் கல்லூரிகள், குறிப்பாக, நீண்டகாலம் தரம் வாய்ந்த அரசு கலைக் கல்லூரிகளாகத் திகழ்ந்த சென்னையிலேயிருக்கிற மாநிலக் கல்லூரி, இடிபட்டுச் சென்றுவிடுமோ என்ற ஒரு சூழலில், இங்கேயிருக்கிற மாண்புமிகு தளபதி போன்றவர்களினுடைய முயற்சியினால் அது காப்பாற்றப்பட்டு, இன்று உயர்ந்தோங்கி நின்றுகொண்டிருக்கிற சென்னை இராணி மேரி கல்லூரி (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது பல்கலைக்கழகம், அரசு ஆடவர் மற்றும் மகளிர் கலைக் கல்லூரி, கும்பகோணம், இது நான் முதன்முதலில் வேலை செய்த கல்லூரி, அதை 'தேம்ஸ்' என்று சொல்வார்கள். அந்த கும்பகோணம் ஆடவர் கல்லூரியையும், மகளிர் கல்லூரியையும் ஒருங்கிணைத்து ஒரு பல்கலைக்கழகம் ஆகவும், கோவையிலே இருக்கிற அரசு கலைக்

கல்லூரி ஒரு பல்கலைக்கழகமாகவும் ஆக, ஒரு பரிசோதனையாக இந்த 5 அரசு கலைக் கல்லூரிகளும் 4 பல்கலைக்கழகங்களாக, Unitary பல்கலைக்கழகங்களாக மாற்றப்படுகின்றன. இந்தப் பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி செய்கின்ற, மேல் படிப்பினைச் சொல்லிக்கொடுக்கிற பல்கலைக்கழகங்களாக அமையும். இந்தப் பல்கலைக்கழகங்களினுடைய பயிற்சி எப்படி இருக்கிறது என்பதைப் பொறுத்து, மேலும் இருக்கிற கல்லூரிகளையும், சுய நிதிக் கல்லூரிகளையும், மற்றுமுள்ள சுய ஆர்வமுள்ள கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களாக உயர்த்துவதற்கான முயற்சிகளையும் படிப்படியாக இந்த அரசு மேற்கொள்ளும். இந்த 4 அரசு கலைக் கல்லூரிகள் இல்லாமல், அரசு உதவிபெறும் கல்லூரிகளாக இருக்கும் கோவை பி.எஸ்.ஜி. பொறியியல் கல்லூரியும், மதுரை தியாகராயர் பொறியியல் கல்லூரியும், இந்த இரண்டு கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களாக மாற்றப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

வேறு ஒரு புதிய பல்கலைக்கழகம், இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவிற்கு ஒரு புதிய பல்கலைக்கழகத்தை தலைவர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டு அறிமுகப்படுத்துகிறார்கள். இங்கே பேசிய எல்லோரும் சொன்னார்கள், இந்த B.Ed. அது எப்படி நடக்கிறது, எங்கே நடக்கிறது என்றே தெரியமாட்டேன் என்கிறது. சில இடங்களிலே செப்டம்பரிலே ஆரம்பிக்கிறார்கள், சில இடங்களிலே எப்போதோ தேர்வு நடக்கிறது. அவற்றுக்கு எந்த நேரத்திலே அனுமதி வாங்குகிறார்கள், எந்தப் பல்கலைக்கழகத்தினர் கொடுக்கிறார்கள், எந்த அரசாங்கம் கொடுக்கிறது என்பது தெரியமாட்டேன் என்கிறது. 280, 300 B.Ed. கல்லூரிகள் இன்று தமிழகத்தில் இருக்கின்றன. நான் முன்பே சொன்னதைப்போல, பயிற்றுவிக்கிற முறையிலே மாற்றங்கள் வளர்ந்துகொண்டிருக்கின்றன. Audio-visual Education—அதைத்தான் இப்போது ஆரம்பக் கல்வியிலேகூட, செயல்முறைக் கல்வியைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆக, ஆசிரியர்களுக்கே, பயிற்றுவிப்பவர்களுக்கே பயிற்சி -'Train the Trainers' என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஆசிரியர்களுக்கே பயிற்சி அளிக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அப்போதுதான் இளைஞர் சமுதாயம் நல்ல கல்வியைப் பெற முடியும் என்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த ஆசிரியர் பயிற்சி நிலையங்களையெல்லாம், பயிற்சிக்கூடங்களையெல்லாம், அந்தக் கல்லூரிகளையெல்லாம் ஒருங்கிணைத்து,' வெலிங்டன் சீமாட்டி கல்வியியல் பல்கலைக்கழகம் ஒன்றும் இந்த ஆண்டு, இந்தியாவிலேயே முதன் முதலாக (மேசையைத் தட்டும் ஒலி) Teachers' Training University என்ற அடிப்படையில் உருவாக்கப்படவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)



ஆக, இந்த ஆண்டு தமிழகத்திலே கல்வியிலே ஒரு புரட்சி என்று சொன்னால், ஏன் 1969-லேயிருந்து இதுவரை கலைஞர் காலம் என்று சொல்கிறோம் என்று சொன்னால், ஒரே ஆண்டிலே 10 பல்கலைக்கழகங்களுக்கு வித்திட்ட முதல்வர் டாக்டர் கலைஞர் ஒருவராகத்தான் இருக்க முடியும் என்ற உணர்வோடு, இது கலைஞர் காலம் என்று சொல்வது பொருத்தமாக அமையும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, கலைஞரைப் பொறுத்தவரையில் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும், தரத்தை உயர்த்த வேண்டும் என்பதோடு அவரது கொள்கை முடிவதில்லை, அவர் ஒரு Periyarist. அடித்தளத்தில் இருக்கிற குப்பனுக்கும், சுப்பனுக்கும்கூட அந்தக் கல்வி கிடைக்க வேண்டும் என்பதிலே ஆர்வமுடையவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் Community Education என்ற ஒன்றின் அடிப்படையில், ஒரு புதிய முறையையும் இந்த ஆண்டு புகுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக, சென்ற ஆண்டுகூட இதைக் குறிப்பிட்டோம். ஆனால், நடைமுறையிலே அதை இன்னும் சரியாகச் செயல்படுத்த முடியவில்லை. இந்த ஆண்டு அதை முழுமையாக நடைமுறைப்படுத்தவிருக்கிறோம். ஒரு நகரத்தில் ஏதோ ஒரு ஆலையிலே வேலை செய்பவர், workshop-லே வேலை செய்துகொண்டிருப்பார். Car repair செய்கின்ற அந்த workshop-லே வேலை செய்துகொண்டிருப்பார். பழக்கமாகப் படித்துக்கொண்டிருப்பார். அவருடைய அப்பா அங்கே வேலையில் இருந்திருப்பார்; டிரைவராக அங்கே இருந்திருப்பார்; பையனும் அங்கே டிரைவராக இருப்பார். ஆனால், போதிய படிப்பு இருக்காது. அவருக்கு electrical, mechanical வேலை எதுவும் தெரியாது. அவ்வாறு பயிற்சி பெறுகிற அவர்களும் படிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, அவர்கள் பள்ளிக்கூடத்திற்குப் போயிருந்தாலும், முறையான கல்வியறிவு பெற்றிருந்தாலும், பெறாவிட்டாலும்கூட, அப்படிப்பட்டவர்கள் 'படிப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஒவ்வொரு பாலிடெக்னிக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டு, இப்போதிருக்கிற பல்கலைக்கழகங்களிலே சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அவர்களுக்குச் சிறப்பான பாடங்கள் சொல்லிக்கொடுக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தின் மூலமாக ஆண்டு ஒன்றிற்கு certificate examination-ம் அவர்களுக்கு நடத்தப்பட்டு அப்படி ஒரு Certificate கிடைத்தது என்று சொன்னால், அதில் அவர்களுக்கு என்ன பெரிய பிரயோஜனம் என்று சொன்னால், இங்கிருந்து பலர் துபாய்க்குச் செல்கிறார்கள். அப்படி துபாய்க்குச் செல்கின்றபோது அந்த Electrical Certificate

இருந்தது என்று சொன்னால், சம்பளமே அதிகம். இங்கே ரூ.400/- கொடுக்கிறார்கள் என்று சொன்னால், சிங்கப்பூர், மலேசியாவில் ரூ.800/- சம்பளம் கொடுக்கிறார்கள். இதுபோன்ற Certificate இல்லாமல் அதிகம்பேர் வேலை செய்கிறார்கள். இங்கே தொழிலை கற்றுக்கொண்டு, raw-வாக அங்கு சென்றுவிடுகிறார்கள். இதுபோன்ற தொழிலை கற்றுக்கொண்டிருப்பவர்களுக்கு ஒரு Certificate-ஐயும் கொடுத்து அனுப்பவேண்டும். நம்முடைய நாட்டில் இருக்கின்ற அமைப்புசாரா தொழிலாளர்கள், கலைஞர் அவர்கள்தான் அதற்கும் வித்திட்டவர். 90 சதவிகிதம் அமைப்புசாரா தொழிலாளர்களாக இருக்கின்ற Unskilled Labourers, அந்த அமைப்புசாரா தொழிலாளர்களுக்குக் கல்வி அறிவு கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு, தலைவர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டு முதல் சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்களிலேயும், ஒவ்வொரு மாவட்டத்திலேயும், ஒவ்வொரு Polytechnic கல்லூரியிலேயும், அந்த மாவட்டத்திலே விரும்புபவர்கள், படிப்பறிவில்லாதவர்கள் எந்தத் தொழில் செய்பவர்களாக இருந்தாலும், அவர்கள் தான் செய்கின்ற தொழிலிலே, Certificate Course-ல் ஒரு Certificate-ஐ பெறுவதற்கு வாய்ப்பளித்து, அந்தத் தேர்வினை நடத்துவதற்கு திறந்தவெளிப் பல்கலைக்கழகம் முன்வந்து, அவர்களும் கல்வி அறிவு பெற்றவர்களாக மாறவேண்டும், Skilled Labourers ஆக மாற வேண்டும் என்ற முயற்சியையும் இந்த அரசு எடுத்திருக்கிறது. அதற்கு மேலும், Shift System கல்லூரிகளிலே, கலைக் கல்லூரிகளிலே இருந்ததை மீண்டும் அதிகரித்து இன்று Polytechnic கல்லூரிகளிலேயும், இந்த shift முறை கொண்டுவரப்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 1-50*

கடைசியாக ஒரே ஒரு அறிவிப்பினை மட்டும் சொல்லி நான் விடைபெற விரும்புகிறேன். தலைவர் கலைஞருடைய இந்த ஆட்சியில் தினந்தோறும் ஒரு தொழில் உருவாகிக்கொண்டிருக்கின்ற ஒரு காலகட்டம். பல்வேறு தொழிற்சாலைகளுக்குச் சென்றால் அங்கே இந்த Trained Certificate பெற்றவர்கள் தேவைப்படுகிறார்கள். இதுபோன்று பட்டம் பெற்றவர்கள், Diploma பெற்றவர்கள் தேவைப்படுகிறார்கள். அப்படி தேவைப்படுகின்றபோது, அவர்களை உருவாக்க வேண்டும் என்று சொன்னால், Community Colleges உருவாக வேண்டும். B.A. History படிக்கிறவர்கூட, அந்தக் கல்லூரிக்குச் சென்று அதைப் படித்துக்கொள்ளமுடியும். பொறியியல் கல்லூரியிலே இப்போது இருக்கின்ற நிலைமை என்னவென்று சொன்னால், 10,000



இடங்கள் இப்போது காலியாக இருக்கின்றன. இந்த ஆண்டு பொறியியல் கல்லூரியில் 10,000 இடங்களில் சேருவதற்கு ஆட்கள் இல்லை என்ற நிலை இருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்று சொன்னால்,--கர்நாடகா போன்ற மாநிலங்கள் எல்லாம் குறைந்த மதிப்பெண் இருந்தாலும் சேரலாம். ஆனால் 60% இருந்தால்தான் சேரலாம் என்று நம்முடைய மாநிலத்தில் இருக்கிறது. ஆக, கிராமப்புறத்து மாணவர்கள் 59.5 வாங்கினால்கூட அவர்களால் சேர முடியாது. ஏனென்றால் அவர்களிடம் அந்த minimum mark கிடையாது. அதனால் அதையும் குறைக்கவேண்டும் என்ற கோரிக்கை வந்ததன் அடிப்படையில், 60 என்பது 55 மதிப்பெண்ணாகக் குறைக்கப்படுகிறது, 55 என்பது 50 மதிப்பெண்ணாகக் குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலமாக கிராமப்புறத்து மாணவர்கள் மேலும் பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து பொறியியல் பட்டப் படிப்பைப் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற அடிப்படையோடு இந்த மாற்றங்களைக் கொண்டுவந்திருக்கிறோம்.

இங்கே பேசியவர்கள் எல்லாம் கேட்டார்கள். இப்போது தனியார் கல்லூரிகளிலே வசூலிக்கப்படுகின்ற தொகையை பற்றியெல்லாம் சொன்னார்கள். அவைகுறித்து ஆராய குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுதான் முடிவு செய்யவேண்டும். ஆனால், ஒன்றைமட்டும் நாங்கள் உறுதியாகச் சொல்லியிருக்கிறோம். அரசுத் தரப்பிலே 65 சதவீதத்தை நாங்கள் வழங்கவிருக்கிறோம் என்பதையும் சொல்லியிருக்கிறோம்.

இந்த ஆண்டு கட்டப்படவுள்ள கட்டடங்கள் அனைத்திற்கும், அண்ணா நூற்றாண்டு என்ற காரணத்தினால், கல்லூரிகளிலே கட்டப்படுகின்ற புதிய கட்டடங்கள் அனைத்தும், 'அண்ணா பிறந்தநாள் நூற்றாண்டு கட்டடங்கள்' என்றே அழைக்கப்படும் என்பதையும் அறிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசியபோது திரு. ஜி.கே. மணி அவர்கள், பச்சையப்பன் கல்லூரியில் இருக்கின்ற ஆசிரியர் பிரச்சினை பற்றிச் சுட்டிக்காட்டினார்கள். அண்ணா பொறியியல் கல்லூரியில் இருக்கின்ற ஆசிரியர் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம்கூட, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. விஜயகுமார் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அந்த ஆசிரியர்கள் பிரச்சினைகள் எல்லாம் எங்களுடைய கவனத்திற்கு வந்திருக்கின்றன. அந்த ஆசிரியர்கள்

எந்தக் காரணத்தைக்கொண்டும் பணியிலிருந்து நீக்கப்படமாட்டார்கள். அவர்கள் முறையாக தேர்வு எழுதி வெற்றிபெற்றிருந்தால், அவர்களுக்கு இருக்கின்ற ஒரே test, அவர்கள் இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலே நியமிக்கப்பட்டிருக்கிறார்களா என்பது மட்டும் சரிபார்க்கப்பட்டு, அவர்களை மீண்டும் அங்கே நிரந்தரமாகப் பணியிலே நியமிப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு நிச்சயமாக எடுக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இந்த உயர் கல்வித் துறையைப் பொறுத்தவரையில், இந்த இரண்டு ஆண்டுகளில், எண்ணிக்கையை அதிகரித்திருக்கிறோம், தரத்தை உயர்த்த நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். இவற்றுக்காக பல்வேறு நிலைகளிலே ஆசிரியர்களோடு பேசியிருக்கிறோம். கல்வியாளர்களோடு கலந்துரையாடியிருக்கிறோம். இந்தக் கலந்துரையாடல் மட்டும் போதாது. சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற நீங்களும் உங்களுடைய முழுமையான ஆலோசனைகளை அவ்வப்போது கொடுத்து, ஆங்காங்கே ஏற்படுகிற பிரச்சினைகள்-- ஏனென்றால், இதிலே இந்த C.B.C.S. கொண்டுவருகின்றபோது, இந்த Cluster of Colleges கொண்டுவருகின்றபோது சில பிரச்சினைகள் வரலாம். அப்படி பிரச்சினைகள் வருகின்றபோது, நிச்சயமாக அவற்றைத் தீர்த்துவைப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. அவற்றை நேரிலே சொல்லி, எந்தக் குறையும் இல்லாத அளவிற்கு நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டு, இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிவிப்புகளை @ நான் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொண்டு, இந்த மானியக் கோரிக்கையிலே கொடுத்த வெட்டுத் தீர்மானங்களை விலக்கிக்கொண்டு ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு உங்களை அன்போடு கேட்டு அமர்கிறேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

*பிற்பகல் 1-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் தங்களுடைய பதிலை முடித்திருக்கின்றார். அவர் கொடுத்திருக்கின்ற குறிப்புகளில், உதாரணமாக பொறியியல் கல்லூரிகளில் அரசு மற்றும் அரசு நிதி

@ 542 முதல் 573 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பட்டுசள்ளது.



உதவி பெறும் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை, அதாவது ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் மொத்தம் 4,030 என்று இருக்கின்றது. அதேநேரத்தில் சுய நிதிக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 1 இலட்சத்து 4 ஆயிரத்து 814 என்று இருக்கின்றது. பொதுவாக நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஏழையெளிய மாணவர்கள், ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையின மக்கள், அரசு கல்லூரிகளில் படிக்கின்றபொழுது அவர்களுடைய பொருளாதாரச் சுமை வெகுவாகக் குறைகின்றது. அதேநேரத்தில், சுய நிதிக் கல்லூரிகளில் அவர்கள் படிக்கின்றபொழுது பொருளாதாரச் செலவு அதிமாக ஏற்படுகின்றது. ஆனால், அரசு தருகின்ற புள்ளிவிவரங்களைப் பார்க்கின்றபொழுது, அரசுக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 4 ஆயிரம் என்றும், சுய நிதிக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 814 என்றும் வருகிறது. ஆகவே, அரசு இந்த ஏற்றத்தாழ்வைக் குறைத்து, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட இடங்களைக் கூடுதலாக்கி, ஏழையெளிய மாணவர்கள் பயிலுவதற்கு நல்லதொரு தக்க முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர், இன்னும் இரண்டு பேர் விளக்கம் கேட்க இருக்கிறார்கள். அந்த இரண்டையும் கேட்டுவிட்டு ஒன்றாகப் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லிவிடுகிறேன், இதை முதலில் முடித்துவிடுகிறேன். நல்ல கேள்வி. ஆனால் உங்கள் உறுப்பினர் முனைவர் தம்பிதுரை அவர்கள் பேசியதற்கு மாறான ஒரு கருத்தை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அவர்கள், தனியார் துறையிலேதான் வளர்ந்திருக்கிறது, அரசுத் துறையிலே வளரவில்லை என்று சொன்னார்கள். நீங்கள் கேட்ட அந்தக் கேள்விக்குத்தான் தலைவர் கலைஞர் அவர்கள் பதிலாக அரசுக் கல்லூரிகள் வளர்க்கப்பட வேண்டும் என்று இந்த ஆண்டு மட்டும் அரசு தரப்பிலேயே அண்ணா பல்கலைக்கழகத்தின்மூலமாக திண்டிவனம், விழுப்புரம், பண்ருட்டி, அரியலூர், இராமநாதபுரம், நாகப்பட்டினம் ஆகிய ஆறு அரசு பொறியியல் கல்லூரிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது இருக்கின்ற இந்த 4 ஆயிரம் என்பது கண்டிப்பாக இன்னும் 2 ஆயிரம் இந்த ஆண்டு அதிகரிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே,

நீங்கள் கேட்ட இந்தக் கேள்வியை தலைவர் கலைஞர் அவர்கள் உங்களுக்கு முன்பாகவே இதைச் சரி செய்யவேண்டும் என்று செய்திருக்கிறார் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும், அரியலூரிலே தொடங்க இருக்கிற கல்லூரிக்கு மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ராசா அவர்கள் 20 கோடி ரூபாயை அந்த அண்ணா பல்கலைக்கழகத்திற்கு நிதி உதவியாகக் கொடுப்பதாக அங்கே இருப்பவர்களிடம் சொல்லியிருக்கிற காரணத்தினால், அரியலூர் அதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. அதுபோல, லால்குடியிலே ஒரு கோடி ரூபாய் நிதியும், 5 ஏக்கர் நிலமும் வழங்குவதாக அமைச்சர் திரு. நேரு அவர்கள் உறுதியளித்திருக்கிற காரணத்தால் இந்த ஆண்டு லால்குடியிலேயும் அரசு கலைக் கல்லூரி ஒன்றை உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி தொகுதியினுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வந்த, பண்ருட்டி தொகுதியில் ஒரு அரசு தொழில்நுட்பக் கல்லூரி வேண்டும் என்ற வேண்டுகோளை ஏற்று மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கடலூரிலே அரசு விழாவுக்கு வருகை தந்தபோது, நான் வைத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, அதே மேடையிலே வரும் ஆண்டு அங்கு தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்புக்கிணங்க இந்த ஆண்டு கல்விக் கூடங்கள் தொடங்குவதற்கு முன்பாக, தனியார் இடங்களைத் தேடிப் பிடித்து, இந்த ஆண்டே அங்கு தொழில்நுட்பக் கல்லூரி வருவதற்கு ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், உறுதுணையாக இருந்த மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், துறையினுடைய அலுவல் பெருமக்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய அரசு 1988 ஆம் ஆண்டு ஓர் அரசு ஆணை வெளியிட்டிருக்கிறது. தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், அதேபோன்று பாலிடெக்னிக்குகளிலும், தகுதிவாய்ந்தவர்களைப் பணியில் அமர்த்த வேண்டும் என்பதற்கான ஓர் அரசு ஆணை வெளியிட்டிருக்கிறது. ஆனால், அந்த அரசு ஆணை 20 ஆண்டுகாலமாக நிறைவேற்றப்படாமல் கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. இங்கு இருக்கின்ற 'தின மலர்', 'தினகரன்', 'தினத் தந்தி' போன்ற பத்திரிகைகள் எல்லாம் இன்று 'Peon, Watchman-களைக் கொண்டு அரசு பாலிடெக்னிக்குகளின் அவலம்' என்ற தலைப்பிலே தலையங்கங்களும், கட்டுரைகளும் எழுதிக் கொண்டிருக்கின்றன. 'தினமணி' தலையங்கத்தில் 'முரண்பாடுகளுக்கு முடிவு எப்போது' என்றெல்லாம் செய்தி வெளியிட்டிருக்கிறது. பல்வேறு மாறுதல்களையும், பல்வேறு சீர்திருத்தங்களையும் உயர் கல்வியிலே கொண்டு வந்திருக்கிற மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இன்று இருக்கிற சங்கடங்களை நீக்கி தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் போதுமான, தகுதிவாய்ந்த ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கும், இதில் இருக்கிற முரண்பாடுகளைக் களைவதற்கும், அரசு ஆணையை நடைமுறைப்படுத்துவதற்கும் முன்வருவார்களா என்பதை இந்தப் பேரவை வாயிலாக அறிய விரும்புகிறேன்.



*பிற்பகல் 2-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிய இராமநாதபுரத்திற்கு ஒரு பொறியியல் கல்லூரி கொண்டு வந்ததற்காக கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் அதே சமயத்திலே, மாவட்டந்தோறும் ஒரு மருத்துவக் கல்லூரி என்று கலைஞர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். ஆகவே, எங்களுடைய இராமநாதபுரத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி அடுத்த ஆண்டு கொண்டு வருவதற்கு அவர்கள் எங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக நெல்லை, குமரி மாவட்டங்களிலே உள்ள மகேந்திரகிரி என்ற இடத்திலே 1,000 கோடி ரூபாய் செலவிலே அமையவிருந்த மத்திய அரசினுடைய I.I.S.T., Indian Institute of Space Technology, என்ற கல்லூரி நம்முடைய தமிழகத்திலே அமையவிருந்தது. ஆனால், கேரள அதிகாரிகளுடைய முயற்சியினாலே அதைக் கேரளாவிற்கு எடுத்துச் செல்லக்கூடிய அபாயம் இருந்து, அதிலே பாதி வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அது தமிழகத்திலேயே அமைய இந்த அரசு முயற்சிக்க வேண்டுமென்று தங்கள்வாயிலாகச் சொல்லி அமர்கின்றேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? திரு. டில்லி பாபு.

***திரு. ப. டில்லி பாபு:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 17-5-2007 ஆம் தேதியிலே சட்டமன்ற உறுப்பினருடைய மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி, மிகவும் பின்தங்கிய பகுதியான அரூர் பகுதிக்கு ஒரு கல்லூரி வழங்குவதற்காக ஏற்கெனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 6½ ஏக்கர் நிலமும் மாவட்ட ஆட்சியர்மூலமாக வழங்கப்பட்டு, அத்தனைப் பணிகளும் தொடங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் தருவாயில் அறிவிக்கிறபட்சத்தில் இந்தக் கல்வியாண்டிலே கல்வியைத் தொடங்குவதற்கு––கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களும் துறையினுடைய செயலாளர் அவர்களும்––அத்தனைப் பணிகளும் நடைபெற்று முடிந்ததாக இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் அரூருக்கு ஓர் அரசுக் கலைக் கல்லூரியை அறிவிக்க வேண்டுமென்று மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) தேவையில்லை, உறுப்பினர்கள் உட்காருங்கள், அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர், சொல்லுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, அரூரைப் பொறுத்தவரையில் அவர் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கொடுக்கிறேன் என்று சொன்னார்கள், 234 உறுப்பினர்களும் கொடுக்கிறோம் என்று சொல்வார்கள். எல்லோருக்கும் கொடுக்க வேண்டிய அவசியம் வரும். அதனால் தயவுசெய்து அதிலேயிருந்து விதிவிலக்கு கொடுப்பது என்பது சரியாக இருக்காது. ஏனென்றால் 234 சட்டமன்ற உறுப்பினர்களும் அவரவர்கள் தொகுதிகளில் கல்லூரி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதனாலே நீங்கள் அங்கேயிருக்கிற philanthropist மாதிரி இருக்கிறவர்களிடமிருந்து நிதியைப் பெற்று சேர்த்துக் கொடுக்கிறபோது, அரசு அதை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும். (குறுக்கீடுகள்)



## கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடிந்தது. (குறுக்கீடுகள்) விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 20 - உயர் கல்வித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,192,64,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.61,34,67,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (7-5-2008) காலை 9-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

58. மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் (தமிழ்நாடு) 1999-2000 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1994) 28 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பட்டது.] (தமிழ், ஆங்கிலம்)

59. மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் (தமிழ்நாடு) 1999-2000 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகளின்/கருத்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை. [1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1994) 28 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பட்டது.] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

183. மானியக் கோரிக்கை எண் 20-உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

184. தொழில் துறை பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

185. தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

186. புதிய தொழில் கொள்கை என்கிற சிறு நூல், 2007. (தமிழ், ஆங்கிலம்)

187. மதிப்பீட்டுக் குழுவின் இருபதாவது அறிக்கை. (2007-2008)

188. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து இரண்டாவது அறிக்கை. (2007-2008)

189. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து மூன்றாவது அறிக்கை. (2007-2008)

---





# இணைப்பு I

*(399 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 20—உயர் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009

**முன்னுரை**

ஒரு நாட்டின் வளமான பொருளாதார வளர்ச்சிக்கு தரமான மனிதவளம் முக்கிய பங்கு வகிக்கிறது. மிகச் சிறந்த மனித வளத்தை உருவாக்குவதற்கு, தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தரமான உயர் கல்வி மட்டுமல்ல, ஏழை எளிய மக்கள் உயர் கல்வியைப் பெறுவதையும் உறுதி செய்வது தமிழக அரசினுடைய கொள்கையாகும். இதன் அடிப்படையில்தான் அனைத்து தரப்பினரும் மிகச் சிறந்த உயர் கல்வியைப் பெறவேண்டும் என்று இந்த அரசு பல்வேறு திட்டங்களைத் செயல்படுத்தி வருகிறது. அதன் மூலம் இந்தியாவில் உயர் கல்வியைப் பொறுத்தவரை, தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றது.

பல்வேறு பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள், கல்லூரி முதல்வர்கள், ஆசிரியர் சங்கங்கள், மாணவர் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள் மற்றும் தலைசிறந்த கல்வியாளர்களுடன் கலந்து ஆலோசனை செய்து அதன் அடிப்படையில் உயர் கல்வி வளர்ச்சிக்கு இந்த அரசு இவ்வாண்டிற்கான திட்டங்கள் தீட்டி, அதனை செயல்படுத்தவிருக்கிறது.

1.2 உயர் கல்வி அனைவருக்கும் கிடைக்கும் வகையில் அதனை விரிவுபடுத்துவதும் தரமான கல்வியினை உறுதி செய்வதும் இவ்வரசின் குறிக்கோளாகும். இதனை நிறைவேற்றும் வகையில், கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன:

(i) 2006-2007 ஆம் ஆண்டில் நான்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்பட்டன. அத்துடன் 2007-2008 ஆம் ஆண்டில் சுரண்டை மற்றும் குளித்தலையில் இரண்டு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்பட்டன.

[2008 மே 6

(ii) 2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், கல்விக் கட்டணம் இரத்து செய்யப்பட்டது.

(iii) சட்டமன்றப் பேரவையில் அறிவித்தவாறு, பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை இலவசப் படிப்புத் திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் கல்வியாண்டு முதல் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கும் குறைவாக உள்ள ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவிகள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் முதுநிலை பட்டப் படிப்பினை இலவசமாகப் பயிலுகின்றனர்.

(iv) 2007-2008 கொள்கை விளக்கக் குறிப்பில் அறிவித்தவாறு, 2007-2008 ஆம் கல்வியாண்டு முதல் அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சுழற்சி முறை (Shift System) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் முதலாண்டு பட்டப் படிப்பில் மாணவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

(v) 2007-2008 நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, தென் மாவட்டங்களில் தொழில்நுட்பக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக திருநெல்வேலியில் பேரறிஞர் அண்ணா பெயரில் புதிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் துவக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் விளைவாக கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2005-2006-ல் 5,68,226 ஆக இருந்த மாணவர்களின் எண்ணிக்கை 2007-2008-ல் 6,74,486 ஆக உயர்ந்துள்ளது. அதேபோன்று, தொழில்நுட்பக் கல்வியைப் பொறுத்தவரையில் பொறியியல் கல்லூரிகளில் 2005-2006-ல் 66,261 ஆக இருந்த மாணவர்களின் எண்ணிக்கை 2007-2008-ல் 94,127 ஆக உயர்ந்துள்ளது.

1.3 தரமான உயர் கல்வியை வழங்குவதற்காக இவ்வரசு கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:—

(i) அரசு கல்லூரிகளில் காலியாக இருந்த ஆசிரியர் பணியிடங்களுக்கு தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் நிரந்தர அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாசிரியர்களுக்கு, இந்தியாவிலேயே முதன் முறையாக, கற்பித்தல் முறைகளில் ஒரு மாத பயிற்சி அளிக்கப்பட்டது.



2008 மே 6]

(ii) அனைத்து கல்லூரிகளும் தேசிய தகுதி மற்றும் தர நிர்ணயக் குழுவிடம் தர நிர்ணயம் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மாநில அளவில் அனைத்து கல்லூரிகளின் தரத்தினை நிர்ணயம் செய்வதற்கு முன்னாள் துணை வேந்தர் தலைமையில் மாநில தர மதிப்பீட்டுக் குழு ஒன்று இந்தியாவிலேயே முதன்முறையாக அமைக்கப்பட்டுள்ளது.

1.4 வறுமை மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் பள்ளிக் கல்வியினை தொடர இயலாமல் போகின்ற மாணவர்களுக்கு தொழிற்கல்வி வழங்குவதிலும், அவர்கள் பட்டப்படிப்பு படிக்கின்ற வாய்ப்பினை அளிப்பதிலும் சமுதாயக் கல்லூரிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம் ஆகியவை சமுதாயக் கல்லூரிகளுக்கு மிகுந்த ஊக்கம் அளித்து வருகின்றன. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் சமுதாயக் கல்லூரிகள் மூலம் வழங்கிவரும் வாழ்க்கைக் கல்வி (Learn for Livelihood) திட்டத்தில் 10,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்றுவருகின்றனர். இப்பயிற்சியினை முடித்தோரில் 8.5 விழுக்காடு மாணவர்கள் உடனே வேலை பெறுகின்றனர். தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் பரிந்துரையுடன் அரசு ஒப்புதல் அளித்துள்ள பாடங்களை நடத்திவரும் சமுதாயக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் 2008-2009 ஆம் கல்வியாண்டிலிருந்து அரசின் உதவித் தொகையாக ரூ.1,000/- வழங்கப்படும். இதற்காக ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் ஆண்டுதோறும் 10,000 மாணவர்கள் பயன் பெறுவர்.

1.5 மாணவர்களின் வேலை வாய்ப்பினை அதிகப்படுத்துகின்ற வகையில் உயர் கல்வித் துறையின் கீழ்வரும் பல்கலைக்கழகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நிருவாகம், மருத்துவமனை நிருவாகம், ஆற்றுப்படுத்துதல் மற்றும் உளவியல் மருத்துவம் ஆகிய சிறப்புப் பிரிவுகளில் தொழில்சார் படிப்புகளைத் துவக்கியுள்ளன.

1.6 மாறுபட்ட பாடத்திட்டங்களாலும், தேர்வு முடிவுகளின் மதிப்பீட்டு மாறுபாடுகளினாலும், மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தினாலும் மாணவர்கள்

[2008 மே 6

ரூ.114.38 கோடி திட்டப் பணிகளுக்கானதாகும். ரூ.1,139.61 கோடி திட்டத்தில் சேராத செலவினமாகும்.

## நிதி ஒதுக்கீடு 2008-2009

| கணக்குத் தலைப்பு (1) | திட்டப் பணி (2) | திட்டத்தில் சேராதது (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2059 பொதுப் பணி பராமரித்தலும் செப்பனிடுதலும் | — | 2170.35 | 2170.35 |
| 2202 பொதுக் கல்வி 03 பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் | 1911.27 | 90384.69 | 92295.96 |
| 2203 தொழில்நுட்பக் கல்வி | 1492.61 | 20544.09 | 22036.70 |
| 2204 போட்டி விளையாட்டுகளும் மற்றும் இளைஞர் நலப் பணிகளும் | 1228.84 | — | 1228.84 |
| 2205 கலையும் பண்பாடும் 104 ஆவணக் காப்பகங்கள் | 296.36 | 477.97 | 774.33 |
| 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் | — | 29.96 | 29.96 |
| 2251 தலைமைச் செயலகம் சமூக நலப்பணிகள் | — | 313.57 | 313.57 |
| 3425 இதர அறிவியல் ஆராய்ச்சி | 374.74 | — | 374.74 |
| 3454 மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆய்வு மற்றும் புள்ளி விவரம் 110 விவரச் சுவடியும், புள்ளி விவரக் குறிப்பேடுகளும் | — | 39.90 | 39.90 |
| 4202 கல்வி, போட்டி விளையாட்டு கலை பண்பாடு குறித்த மூலதனச் செலவு | 6134.66 | 0.01 | 6134.67 |
| மொத்தம் | 11438.48 | 113960.54 | 125399.02 |



2008 மே 6]

## 2008-2009-ஆண்டுக்கான பகுதி-II திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டங்களின் விவரம் | இறுதி நிலை செலவு | 2008-2009 செலவு |
|---|---|---|---|
| | **கல்லூரிக் கல்வி** | | |
| 1 | 10 அரசு கலைக் கல்லூரிகளில் 20 கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல். | 150.00 | 60.00 |
| 2 | தேவைப்படும் 5 அரசுக் கல்லூரிகளில் கூடுதல் ஆய்வகங்கள் கட்டுதல். | 100.00 | 40.00 |
| 3 | 25 அரசு கலைக் கல்லூரிகளில் ஒலி, ஒளி வசதி உபகரணங்கள் மூலம் கற்பிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் | 50.00 | 50.00 |
| 4 | ஐந்து அரசு கலைக் கல்லூரிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த கணினி மற்றும் சார்ந்த உபகரணங்களை வாங்குதல். | 88.00 | 88.00 |
| 5 | மூன்று அரசு கலைக் கல்லூரிகளில் சுற்றுச் சுவர் கட்டுதல். | 5.00 | 5.00 |
| 6 | கும்பகோணம், அரசு கலைக் கல்லூரியை சென்றடைய நடைபாலம் அமைத்தல் | 28.66 | 28.66 |
| | **தொழில்நுட்பக் கல்வி** | | |
| 7 | சேலம், அரசினர் பொறியியல் கல்லூரி நூலகத்தில் கூடுதல் வசதிகள் செய்துதருவது. | 87.50 | 87.50 |
| 8 | அறந்தாங்கி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் கூடுதல் இயற்பியல் ஆய்வுக் கூடம் கட்டுதல் | 14.00 | 14.00 |
| 9 | தூத்துக்குடி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் ஒரு வரைவு அறை கட்டுதல் | 25.00 | 10.00 |

[2008 மே 6

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 10 | திருச்சி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் மாணவ மாணவியர் களுக்காக கழிப்பறை வசதிகளுடன் கூடிய ஓய்வு அறை கட்டுதல். | 10.00 | 10.00 |
| 11 | கிருட்டினகிரி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் கணினியியல் ஆய்வுக் கூடத்தில் மகளிருக்கான கழிப்பறை வசதிகள் ஏற்படுத்துதல் | 5.00 | 5.00 |
| 12 | மதுரை, தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரியில் உள்ள நூலகக் கட்டட வசதிகளை நீட்டித்தல் | 42.00 | 17.00 |
| 13 | திருச்சி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் தற்போதுள்ள மாணவியர் விடுதியில் முதல் தளம் கட்டுதல் | 40.00 | 16.00 |
| 14 | மதுரை, அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில் உள்ள மாணவியர் விடுதியின் கூடுதல் உணவு அறை கட்டுதல். | 15.00 | 15.00 |
| 15 | வேலூர், தந்தை பெரியார் அரசினர் பொறியியல் கல்லூரியில் உள்ள மகளிர் விடுதியில் உணவு அறை கட்டுதல். | 22.00 | 9.00 |
| 16 | பர்கூர், அரசினர் பொறியியல் கல்லூரியில் ஒரு புதிய கட்டடம் கட்டுதல். | 50.00 | 20.00 |
| **ஆவணக் காப்பகம்** | | | |
| 17 | கணினி வழி பதிப்பு முறைக்கு கணினி மற்றும் உபகருவிகள் அமைத்திடவும், நிருவாகப் பிரிவிற்கும், ஆவண அறைகளுக்கும், உபகருவிகளுடன் கணினி வாங்குதல் | 4.84 | 4.84 |



2008 மே 6]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 18 | ஆவணக் காப்பக வளர்ச்சிக்காக தொழில் நுட்பத் திறனை மேம்படுத்துதல் | 1.50 | 1.50 |
| **தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்** | | | |
| 19 | நடமாடும் கோளரங்கங்கள் மூன்றினை அமைத்திடுதல் | 15.00 | 15.00 |
| 20 | சென்னை, பி.எம். பிர்லா கோளரங்கத்தில் கண்ணாடிக் கூரை மற்றும் பிளாஸ்மா திரை அமைத்தல் | 20.00 | 20.00 |
| 21 | திருச்சிராப்பள்ளியிலுள்ள அண்ணா அறிவியல் மையம் மற்றும் கோளரங்கத்தில் முப்பரிமாண திரையரங்கம் அமைத்தல். | 15.00 | 15.00 |
| **தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்** | | | |
| 22 | புதுமையான தொழில்நுட்பங்களைப் பரவலாக்குதல். | 5.00 | 5.00 |
| 23 | கிராமப்புற பள்ளிகளில் அறிவியல் கல்வியின் தரத்தை உயர்த்துதல். | 8.00 | 8.00 |
| **அறிவியல் நகரம்** | | | |
| 24 | உடல் ஊனமுற்றோருக்கான அறிவியல் நிகழ்ச்சிகள். | 2.00 | 2.00 |
| 25 | அறிவியல் கருத்து பரிமாற்றங்கள் பற்றிய கருத்தரங்குகள் நடத்துதல். | 8.00 | 8.00 |
| 26 | சென்னை அறிவியல் விழா 2009 நடத்துதல். | 30.00 | 30.00 |
| 27 | அறிவியல் நகர புதிய அலுவலகத்திலுள்ள உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல். | 8.50 | 8.50 |
| | **மொத்தம்** | **850.00** | **593.00** |

[2008 மே 6

## 2. கல்லூரிக் கல்வி

*2.1* கல்லூரிக் கல்வித் துறையைத் தனியாக நிருவகிக்கும் பொருட்டு முன்னதாகச் செயல்பட்டு வந்த பொதுக் கல்வி இயக்ககத்தினை பள்ளிக் கல்வி இயக்ககம் என்றும் கல்லூரிக் கல்வி இயக்ககம் என்றும் பிரித்து *1965* ஆம் ஆண்டில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகம் தோற்றுவிக்கப்பட்டது.

*2.2 13* பல்கலைக்கழகங்கள் தமிழக அரசிடமிருந்து கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் வழியாக மானியம் பெற்று வருகின்றன. கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் தற்போது மொத்தம் *860* கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

### முக்கிய சாதனைகள்

**புதிய நியமனங்கள்**

*2.3* அரசு கல்லூரிகளில் காலியாக இருந்த விரிவுரையாளர் பணியிடங்களில் *914* விரிவுரையாளர்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், *1,062* விரிவுரையாளர்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நியமனம் செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசு உதவிபெறும் கல்லூரிகளில் காலியாக உள்ள *2,600* விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**அரசு கலைக் கல்லூரிகளில் சுழற்சி முறை**

*2.4 2006-07* ஆம் கல்வியாண்டில் அரசு கலைக் கல்லூரிகளில் சுழற்சி முறையில் பட்டப் படிப்பு வகுப்புகளை நடத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.. முதற்கண் இத்திட்டம் *10* அரசு கல்லூரிகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் *2007-2008* ஆம் கல்வியாண்டில் மீதமுள்ள அனைத்து அரசு கலைக் கல்லூரிகளிலும் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்களின் சேர்க்கை வெகுவாக அதிகரித்துள்ளது.

**அரசுக் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்**

*2.5 2007-2008* ஆம் ஆண்டில் அரசுக் கல்லூரிகளில் *542* கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் பொருட்டு ரூ.*27.10* கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன.



2008 மே 6]

**இலவசக் கல்வி**

*2.6 2007-2008* ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளநிலை பட்டப் படிப்பு படிக்கும் மாணவ - மாணவியர்கள் செலுத்தி வந்த கல்விக் கட்டணம் அரசால் இரத்து செய்யப்பட்டது. இது பெற்றோரின் சுமையை வெகுவாகக் குறைத்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் *3,74,254* மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

**பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை இலவச படிப்புத் திட்டம்**

*2.7* பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை நினைவு மகளிர் இலவசப் பட்டப்படிப்புத் திட்டம் *1989-90* ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசக் கல்வி வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதால், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு பயில விரும்பும் ஏழை மாணவியரின் நலனைக் காப்பதற்காகவும், பட்ட மேற்படிப்பில் இலவசக் கல்வியினைப் பெறுவதற்காகவும், பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை திட்டம் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவியருக்கு *2007-2008* ஆம் ஆண்டு முதல் நீட்டித்து வழங்கி ஆணையிடப்பட்டது. இத்திட்டத்தின் பயனை அதிக மாணவியர் பெறுவதற்காக, பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.*24,000*/-லிருந்து ரூ.*50,000*/-ஆக இக்கல்வியாண்டில் இருந்து உயர்த்தப்பட்டது. *2007-2008* ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.*65.00* இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் *1,204* மாணவியர் பயன்பெற்றுள்ளனர்.

### 2007–2008–ல் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

**நாட்டு நலப் பணித் திட்டம் (என்.எஸ்.எஸ்.)**

*2.8* தமிழகத்தில் நாட்டு நலப் பணித் திட்டத்தை செயல்படுத்துவதற்கு *7:5* என்கின்ற விகிதாச்சாரத்தில் மத்திய அரசு மற்றும் தமிழக அரசால் மானியம் அளிக்கப்பட்டு வருகிறது. நாட்டு நலப் பணித் திட்டத்தின் கீழ் *2007-2008* ஆம் ஆண்டில் *3.36* இலட்சம் மாணவத் தொண்டர்கள் சேர்ந்து சேவை செய்து வருகின்றனர். *2007-2008* ஆம் ஆண்டில் நாட்டு நலப் பணித் திட்டத்திற்கு மொத்தம் ரூ.*766.57* இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மைய அரசின்

[2008 மே 6

பங்கு ரூ.447.17 இலட்சம் ஆகும். மாநில அரசின் பங்கு ரூ.319.40 இலட்சம் ஆகும். மாநில மற்றும் மத்திய அரசின் பங்காக இரண்டு தவணைகளில் வழங்கப்பட்ட தொகை ரூ. 677.81 இலட்சம் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**மகளிர் திறனேற்றம்**

2.9 இந்திய ஆட்சிப் பணி / இந்திய காவல் பணி தேர்வுகளில் பங்குபெறுவதற்கு மாணவியர்களுக்கு தனி இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பெண்களுக்கு இலவசப் பயிற்சி அளிப்பதற்காக சென்னை-4, இராணி மேரி கல்லூரி (தன்னாட்சி) மற்றும் மதுரை, அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் (தன்னாட்சி) கல்லூரி ஆகிய இரு அரசு மகளிர் கல்லூரிகளில் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மையத்திலும் 60 மாணவிகள் இந்திய ஆட்சிப் பணி / இந்திய காவல் பணி தேர்வு எழுத இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நடப்பு நிதி ஆண்டில் இத்திட்ட செயல்பாட்டிற்கென அரசு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**தமிழ் வழி பயிலும் மாணவ / மாணவியர்க்கு ஊக்கத் தொகை**

2.10 தமிழ் வழியாக கல்வி பயிலும் மாணவ / மாணவியர்களை ஊக்குவிப்பதற்காக தமிழ்வழிக் கல்வி ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் 1971-1972 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்வழி கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவ / மாணவியருக்கும் ஆண்டுக்கு ரூ.400/- ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

**தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி**

2.11 அரசு கல்லூரிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களில் குறிப்பாக கிராமப்புற பகுதிகளிலிருந்து வரும் மாணவர்கள் பல்கலைக்கழகத் தேர்வில் ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் தேர்ச்சி பெறுவதில் மிகவும் சிரமப்படுகின்றனர். இத்தகைய மாணவர்கள் மேற்கண்ட பாடங்களில் முழுமையான அளவில் தகுதி அடையச் செய்வதற்காக சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி கல்லூரி பாட வகுப்புகள் முடிந்தபின் மாலையில் நடத்தப்பெறுகிறது. மேலும், வார இறுதி நாட்களிலும் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன்மூலம் அவர்கள் கல்வியில் திறம்பெற்ற மாணவர்களோடு போட்டியிட முடிகிறது. மேலும், இச்சிறப்புப் பயிற்சியை முடித்த



2008 மே 6]

பின்னர் அவர்கள் பல்கலைக்கழகத் தேர்வுகளை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள முடிகிறது.

**தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு விவசாயத் தொழிலாளர்கள் விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம்**

2.12 தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்-விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம், 22-12-2006 ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் "விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பதிவுபெற்ற குத்தகைதாரர்கள் மற்றும் அவர்களது ஆதரவில் இருப்போரது சமூக, பொருளாதார மற்றும் கல்வித் தகுதி நிலையை மேம்படுத்தும் பொருட்டு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

2.13 தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாய குழந்தைகளின் கல்வி தகுதி நிலையை உயர்த்தும் பொருட்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உயர் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்க ரூ.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் 8,329 மாணவர்கள் பயன்பெற்றனர். இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:—

| வ. எண் | படிப்பு | மாணவர் இல்லத்தில் தங்காது படிப்பவர் | | மாணவர் இல்லத்தில் தங்கிப் படிப்பவர் | |
|---|---|---|---|---|---|
| | | ஆண்கள் (ரூ.) | பெண்கள் (ரூ.) | ஆண்கள் (ரூ.) | பெண்கள் (ரூ.) |
| 1. | பட்டப்படிப்பு (ஆண்டு ஒன்றுக்கு) | 1750 | 2250 | 2000 | 2500 |
| 2 | முதுகலை பட்டப்படிப்பு (ஆண்டு ஒன்றுக்கு) | 2250 | 2750 | 3250 | 3750 |

**ஐந்து அரசு கலைக் கல்லூரிகளில் மின்னணுவியல் நூலகங்கள் அமைத்தல்**

2.14 2006-2007 ஆம் ஆண்டு வரை 13 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இணையதள வசதியுடன் கூடிய

மின்னணுவியல் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2007-2008 ஆம் ஆண்டில் ஐந்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மின்னணுவியல் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**இலவச பேருந்து பயணச் சலுகை**

2.15 அரசுக் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டை வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 78,840 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

**ஒற்றைச் சாளரமுறை மாணவர் சேர்க்கை**

2.16 தமிழ்நாட்டிலுள்ள கல்வியியல் கல்லூரிகளில் 2007-2008 ஆம் ஆண்டு முதல் பி.எட். மாணவர் சேர்க்கையில் ஒற்றைச் சாளரமுறை அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் மாணவர் சேர்க்கை வெளிப்படையான முறையில் நடைபெறுவதால் தகுதி வாய்ந்த மாணவ மாணவிகள் பயன் அடைந்துள்ளனர். மேலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர் சேர்க்கையிலும் 2007-2008 ஆம் ஆண்டு முதல் கல்லூரியை அலகாகக் கொண்டு கலந்தாய்வு மூலமான ஒற்றைச் சாளரமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை மாணவர்களும் பெற்றோர்களும் வரவேற்றுள்ளனர்.

**2.17 2007–08 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இதர திட்டங்கள்**

1. சென்னை-5, மாநிலக் கல்லூரிக்கு ரூ.10.50 இலட்சம் செலவில் 30 புதிய கணிப்பொறிகள் வாங்கப்பட்டுள்ளன.

2. 10 அரசு கலைக் கல்லூரிகளில் ரூ.15.00 இலட்சம் செலவில் ஒலி, ஒளிக் கல்வி வசதி செய்யப்பட்டுள்ளது.

3. சென்னை, இராணி மேரி கல்லூரியில் டாக்டர் கலைஞர் வளாகம் கட்டுவதற்கு ரூ.2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. சென்னை மாநகரில் உள்ள மகளிர் கல்லூரிகளான பாரதி மகளிர் கல்லூரி, இராணி மேரி கல்லூரி, காயிதே மில்லத் கல்லூரிகளுக்கு தலா ரூ. 50.00 இலட்சம் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.





5. தமிழ்நாட்டிலுள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு வணிக ஆங்கிலப் பயிற்சியினை (Business English Certificate Course) வழங்க தமிழக அரசு முடிவு செய்தது. எனவே, மாணவர்களுக்கு இப்பயிற்சியை அளிக்க பிரிட்டிஷ் கவுன்சிலுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக அரசுக் கல்லூரிகளின் ஆங்கிலத் துறையைச் சார்ந்த 9 விரிவுரையாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தங்களது கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு வணிக ஆங்கிலப் பயிற்சியினை வழங்குவார்கள்.

6. தகவல் தொழில்நுட்பத் துறையில், குறிப்பாக கிராமப்புற மாணவர்கள் வேலை வாய்ப்பு பெறுவதற்கு ஏதுவாக மாணவர்களின் ஆங்கில மொழித்திறனை மேம்படுத்துவதற்கு 60 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ரூ.3.34 கோடி செலவில் மொழி ஆய்வகங்கள் அமைப்பதற்கும், 22 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் உள்ள மொழி ஆய்வகங்களை மேம்படுத்துவதற்கும் ரூ.73.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3. தொழில்நுட்பக் கல்வி

3.1 தமிழ்நாட்டில் தொழில்நுட்பக் கல்வியில் ஒருங்கிணைந்த முன்னேற்றத்தைக் கொண்டு வரவேண்டும் என்ற குறிக்கோளுடன் தொழில்நுட்பக் கல்வித் துறை 1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தொழில்நுட்பக் கல்வியில் பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு நிலையில் முன்னேற்றம் ஏற்படுத்தக்கூடிய கொள்கைகளை வகுப்பதற்கு தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் விளைவாக, தற்சமயம் தமிழ்நாட்டில் 6 அரசு பொறியியல் கல்லூரிகளும், 3 அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகளும், சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் 4 உறுப்புக் கல்லூரிகளும் மற்றும் 263 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும் உள்ளன. மேலும், 22 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளும், 37 அரசு உதவி பெறும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளும் மற்றும் 205 சுயநிதி பல்தொழில்நுட்பக் கல்லூரிகளும் செயல்பட்டு வருகின்றன.

[2008 மே 6

## முக்கிய சாதனைகள்

### சுயநிதி பொறியியற் கல்லூரிகளில் கூடுதல் கல்விக் கட்டணம் வசூலிப்பதைத் தடுக்க நடவடிக்கை

3.2 தமிழ்நாடு சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் கூடுதல் கல்விக் கட்டணம் மற்றும் முதலீட்டுக் கட்டணம் பெறுவதைத் தடைசெய்ய தொழில்நுட்பக் கல்வி இயக்கக அரசு அலுவலர் நால்வரை தமிழ்நாடு கல்வி நிறுவனங்கள் (கட்டாய நன்கொடை தடை செய்தல்) சட்டம் 1992-ன் விதி 9 (1)-ன்படி அதிகாரம் படைத்த அலுவலராக தமிழக அரசு நியமித்துள்ளது. சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்துள்ள அல்லது சேர விண்ணப்பிக்கும் மாணவர்களிடமிருந்து கல்லூரி நிர்வாகம் அதிகமாகக் கல்விக் கட்டணம் மற்றும் கட்டாய நன்கொடைக் கட்டணம் வசூலிப்பதாக புகார்கள் பெறப்படுமேயானால் சுயநிதிக் கல்லூரிகளின் ஆவணங்களை ஆய்வு செய்யவும், பரிசோதிக்கவும் இந்த அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன்மூலம் அதிக கல்விக் கட்டணமும் / முதலீட்டுக் கட்டணமும் வசூலிப்பதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

### அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கல்

3.3 2007-2008 ஆம் ஆண்டு உயர் கல்வி மானியக் கோரிக்கையின்போது சட்டப் பேரவையில் அறிவித்தவாறு, அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாமாண்டு பட்டயப் படிப்பு படிக்கும் 5,060 மாணவர்களுக்கு பாடப் புத்தகங்களை இலவசமாக தமிழக அரசு வழங்கியுள்ளது.

### அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டை வழங்கல்

3.4 2007-2008 ஆம் ஆண்டு உயர் கல்வி மானியக் கோரிக்கையின்போது சட்டப் பேரவையில் அறிவித்தவாறு, அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் 9,159 மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டையினை தமிழக அரசு வழங்கியுள்ளது.



2008 மே 6]

## 2007–2008–ல் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

### இளநிலை அறிவியல் பட்டதாரிகள் பொறியியல் கல்லூரிகளில் இரண்டாம் ஆண்டு நேரடி சேர்க்கை துவக்கம்

3.5 அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி குழுமம் வெளியிட்டுள்ள வரைமுறைகளுக்கேற்ப, இரண்டாமாண்டு சேர்க்கைக்கு அனுமதிக்கப்பட்ட 10 விழுக்காடு மாணவர் சேர்க்கையில் ஒரு விழுக்காட்டினை இளநிலை அறிவியல் பட்டதாரி மாணவர்களுக்கென ஒதுக்கி, அவர்கள் நேரடியாக பொறியியல் கல்லூரிகளில் இரண்டாமாண்டு சேர வகைசெய்யும் அனுமதி முறையை நடைமுறைப்படுத்தியுள்ளது.

### பொறியியல் கல்லூரிகளில் மேல்நிலைக் கல்வி (தொழில் கல்வி) மாணவர்களுக்குரிய சேர்க்கை இடங்களை அதிகரித்தல்

3.6 அதிக அளவில் மேல்நிலைக் (தொழில்) கல்வி பயின்ற மாணவர்கள் பொறியியல் கல்வி சேர்க்கைக்கு விண்ணப்பித்ததால், அம்மாணவர்களுக்கென சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டில் தற்போதுள்ள 700 இடங்களுக்குப் பதிலாக மொத்த அரசு ஒதுக்கீட்டு இடங்களில் 4 விழுக்காடு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

### தொழில்நுட்பக் கல்வித் தர மேம்பாட்டுத் திட்டம்

3.7 தரம் வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்கவும், தொழில்நுட்பக் கல்வித் தரத்தினை உயர்த்தவும், தொழில்நுட்பக் கல்வித் தர மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதற்கான மொத்த நிதி ஒதுக்கீடாக ரூ. 94.16 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 11 பயிலகங்களுக்குப் (5 அரசினர் பொறியியற் கல்லூரிகள், 3 அரசினர் பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 3 அண்ணா பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு) பிரித்து வழங்கப்பட்டது. இந்த நிதி ஒதுக்கீட்டினைப் பயன்படுத்தி, மேற்கூறப்பட்ட கல்வி நிறுவனங்களில் கட்டடப் பணி, தளவாடங்கள், அறைகலன்கள், புத்தகங்கள் மற்றும் கற்பிக்கும் உபகரணங்கள், தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகள், பயிற்சி மற்றும் கல்விச் சுற்றுலா, உள்நாடு, வெளிநாடு குறுகிய காலப் பயிற்சி, நுகர்பொருள், இயக்கம் மற்றும் பராமரிப்பு, பயிலகங்களை ஒருங்கிணைத்தல், சமுதாய சேவை மற்றும் பொருளாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

[2008 மே 6

**அரசு பொறியியல் கல்லூரி மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஆசிரியர்களை நியமித்தல்**

3.8 ஆசிரியர் தேர்வாணையத்தின் மூலம் 193 விரிவுரையாளர்கள் அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் 2006-07 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டனர். 2007-2008 ஆம் ஆண்டில் பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் 67 விரிவுரையாளர் பதவிகள் ஆசிரியர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்பட்டுள்ளன.

**புதிய அரசு பொறியியல் கல்லூரிகள் துவங்குதல்**

3.9 தமிழகத்தில் புதிய அரசு பொறியியல் கல்லூரிகள் துவங்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதன்படி 2008-2009 ஆம் கல்வி ஆண்டிலிருந்து விழுப்புரம், பண்ருட்டி, திண்டிவனம், நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரத்தில் புதிய பொறியியல் கல்லூரிகள் துவங்கப்படவுள்ளன. இக்கல்லூரிகள் அண்ணா பல்கலைக்கழகங்களால் துவக்கப்படும்.

## 4. பல்கலைக்கழகக் கல்வி

உயர் கல்வித் துறையின் ஆளுகையில் கீழ்க்கண்ட பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன:

1. சென்னைப் பல்கலைக்கழகம்
2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
3. பாரதியார் பல்கலைக்கழகம்
4. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
5. அழகப்பா பல்கலைக்கழகம்
6. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
7. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
8. பெரியார் பல்கலைக்கழகம்
9. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்



2008 மே 6]

10. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
11. அண்ணாமலை பல்கலைக்கழகம்
12. தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம்

**தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள்**

13. அண்ணா பல்கலைக்கழகம், சென்னை
14. அண்ணா பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்
15. அண்ணா பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி
16. அண்ணா பல்கலைக்கழகம், திருநெல்வேலி

### சென்னைப் பல்கலைக்கழகம்

4.1 இலண்டன் பல்கலைக்கழகத்தை முன்மாதிரியாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகம், இந்தியச் சட்டக் குழுவின் விதிமுறைகளின்படி 1857 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5 ஆம் நாள் நிறுவப்பட்டது. கல்கத்தா மற்றும் பம்பாய் பல்கலைக்கழகங்களும் சேர்த்து, இந்தியாவின் முதல் மூன்று பல்கலைக்கழகங்களுள் ஒன்றாய் விளங்குவது இது. முதலில் ஒரு தேர்வு அமைப்பாகத் தொடங்கிய சென்னைப் பல்கலைக்கழகத்தில், 1923 ஆம் ஆண்டு, சென்னைப் பல்கலைக்கழகச் சட்டத்தின்கீழ், ஆய்வு மற்றும் கல்விப் பணிகளும் சேர்க்கப்பட்டன.

4.2 பல்கலைக்கழக மானியக் குழுவின் 2(f) மற்றும் 12(b) விதிகளின்படி தொடக்க நாளிலிருந்து செல்லுபடியாவதான அங்கீகாரம், 1956-ல் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டது. தற்போது, இப்பல்கலைக்கழகம், சேப்பாக்கம் (முதன்மை வளாகம்), மெரினா, கிண்டி, தரமணி, சேத்துப்பட்டு (சென்னைப் பல்கலைக்கழகச் சங்கம்) மற்றும் மதுரவாயல் (தாவரவியல் கள ஆய்வகம்) ஆகிய ஆறு வளாகங்களில் அமைந்து இயங்கிவருகின்றது. இந்த ஆறு வளாகங்களுமே சென்னைப் பெருநகர எல்லைக்குள் அமைந்துள்ளன.

4.3 'தன்னாட்சிக் கல்லூரிகள்' (Autonomous Colleges) எனும் சித்தாந்தத்தை அறிமுகப்படுத்திய முதல் பல்கலைக்கழகம் சென்னைப் பல்கலைக்கழகமாகும். இவ்வகை ஏற்பாட்டால், 'தன்னாட்சிக் கல்லூரி' எனும் அங்கீகாரம் பெறும்முகமாக, கல்லூரிகள் தமது கல்வித்

[2008 மே 6

தரத்தையும், கட்டமைப்பு வசதிகளையும் உயர்த்தலாயின. மேலும் பல கல்லூரிகள், சிறப்புமிகு கல்லூரிகளாகத் தகுதி பெறவும் முயன்றன. இதனால் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கல்விச் சேவையின் தரம் உயர்ந்தது. தற்போது, 178 கல்லூரிகள் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ளன; இவற்றுள் 23 கல்லூரிகள் தன்னாட்சிக் கல்லூரிகளாகும்.

4.4 சென்னைப் பல்கலைக்கழகத்தில், 66 பயிற்றுவிப்பு மற்றும் ஆய்வுத் துறைகள் 17 புலங்களில் அமைந்துள்ளன.

4.5 2007-2008 ஆம் ஆண்டின்போது சென்னைப் பல்கலைக்கழகம் செய்து முடித்துள்ள சாதனைகள் பின்வருமாறு:

1. பேரவை இல்லம் புதுப்பிக்கப்பட்டது.
2. மென்திறன் பயிற்சி அறிமுகப்படுத்தப்பட்டது.
3. மாநில மற்றும் மைய அரசுகளின் உதவியுடன் 11 சிறப்பு மையங்கள் நிறுவப்பெற்றன.
4. UICIC மற்றும் ICOM வாயிலாக, கல்விக்கூடங்கள், தொழிலகங்கள் மற்றும் பெருநிறுவனங்களுக்கு இடையே புரிந்துணர்தலும், பரிமாற்றத் தொடர்பும் ஏற்படுத்தப்பட்டன.
5. வளாக நூலகங்களில், கணினிவழிச் சேவைகள் தொடங்கப்பட்டன.
6. கணினி வழி நிருவாகம் அறிமுகப்படுத்தப்பட்டது.

### மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

4.6 1966-ல் நிறுவப்பட்ட மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 73 துறைகளை உள்ளடக்கிய 18 புலங்கள் (Schools) உள்ளன. இப்பல்கலைக்கழகம் 133 இணைப்புக் கல்லூரிகளைக் கொண்டுள்ளது. இளைஞர் நலத் துறை, தேசிய சேவைத் திட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கானத் தனிப் பிரிவு, வயது வந்தோர் மற்றும் விரிவாக்க மையம் ஆகியவை மூலமாகப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககம் சுமார் 1.30 இலட்சம் மாணவர்களைக் கொண்டுள்ளது. தொலைநிலைக் கல்வி இயக்ககம்



2008 மே 6]

28 தகவல் மையங்கள், 16 கல்வி சேர்க்கை மையங்களைத் தமிழ்நாட்டிலும், 59 கல்வி மையங்களைப் பிற மாநிலங்களிலும், 7 கல்வி மையங்களை அயல்நாடுகளிலும் கொண்டுள்ளது.

4.7 பொது நிதியுதவிகளில் ஏற்படும் இழப்புகளைத் திறமையாக எதிர்கொண்டு சமாளிப்பதற்காக நிதி ஆதாரங்களைத் திரட்டுதல், உலகத் தரத்திற்கு நிகராக உள் கட்டமைப்பு வசதிகளை உயர்த்துதல் என்ற சிந்தனையுடன் கூடியதாகப் பல்கலைக்கழகத்தின் தொலைநோக்குப் பார்வை அமைகிறது. பல்கலைக்கழக மானியக் குழுவின் அனுமதி பெற்ற கல்லூரிகள் CSIR, DST, மற்றும் ICAR ஆகிய நிறுவனங்களிடமிருந்து நேரிடையாக நிதியுதவி பெற்றிட இப்பல்கலைக்கழகத் துறைகள் உதவி செய்து வருகின்றன. இதனை நிறைவேற்றுகின்ற வகையில், இணைப்புக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஆய்வுப் பணிகளில் ஈடுபடுவதற்கான செயல் நெறியை வகுப்பதில் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

4.8 பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு, பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், இப்பல்கலைக்கழகத்திற்கு பொது வளர்ச்சி நிதியாக ரூ.112.42 இலட்சங்களை வழங்கியுள்ளது.

4.9 பல்கலைக்கழகம் மற்றும் இணைப்புக் கல்லூரி மாணவர்கள் வேலை பெறுகின்ற வாய்ப்பினை அதிகரிக்கின்ற வகையில் ஆளுமைத் திறன் மேம்பாடு மற்றும் ஆங்கில மொழித் திறன் ஆகிய பாடங்களை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

4.10 பல்கலைக்கழகம் பல்துறை ஊடகத் திறன்களை வகுப்பறைகளிலும், ஆய்வுக் கூடங்களிலும் உருவாக்கி திறம்படப் பயன்படுத்த எண்ணி உள்ளது. இதன் மூலம் உலக அளவில் போட்டியிடக்கூடிய திறன் படைத்ததாகப் பல்கலைக்கழகம் உருவாகும்.

4.11 ஒரு கோளரங்கமும், அறிவியல் மையமும் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இது வெளிவட்டாரத் தொடர்புக்கு வழி வகுக்கும்.

### பாரதியார் பல்கலைக்கழகம்

4.12 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் கோவை மாநகரில் பாரதியார் பல்கலைக்கழகம் தமிழக அரசால் துவங்கப்பட்[...] ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில் [...]

228387
சென்னை-600 008

இணைப்புக் கல்லூரிகளாகக் கொண்டு பாரதியார் பல்கலைக்கழகம் செயலாற்றி வருகிறது. பல்கலைக்கழக மானியக் குழு 1985 ஆம் ஆண்டு மே மாதம் இதனை இந்தியப் பல்கலைக்கழகங்களுள் ஒன்றாக அங்கீகாரம் செய்தது. தற்பொழுது இப்பல்கலைக்கழகம் தேசிய தர நிர்ணயக் குழுவால் (NAAC) முதல்தர (A Grade) மதிப்பினைப் பெற்றுள்ளது.

4.13 கோவையில் செயல்பட்டு வந்த சென்னைப் பல்கலைக்கழகத்தின் தன்னாட்சி-முதுநிலை மையத்தின் ஒன்பது கல்வித் துறைகளுடன் பாரதியார் பல்கலைக்கழகம் செயலாற்றத் தொடங்கியது. தற்பொழுது 30 துறைகள், 12 கல்விப் புலங்களுடன் நம் நாட்டு மாணவர்களுக்கு உயர் கல்வியில் புதிய வாய்ப்புகளை வழங்குகின்ற வகையில் இயங்கி வருகிறது.

4.14 1983 ஆம் ஆண்டில் கோவை, ஈரோடு, நீலகிரி ஆகிய பகுதிகளிலுள்ள 33 கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்திருந்தன. 2001-2002 ஆம் கல்வி ஆண்டில் அது 109 கல்லூரிகளாக மூன்று மடங்குக்கு மேலாக உயர்ந்தது. 2007-2008 ஆம் கல்வியாண்டில் இப்பல்கலைக்கழகத்தில் 18 ஆராய்ச்சி மையங்களும், 143 கல்லூரிகளும் அங்கீகாரம் பெற்று இயங்கி வருகின்றன. 2007-2008 ஆம் கல்வி ஆண்டில் தொலைநிலைக் கல்வியில் 122 கல்வி மையங்கள் வழியாக 94 பாடப் பிரிவுகள் பயிற்றுவிக்கப் படுகின்றன.

4.15 இளநிலை, முதுநிலை இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகளை அறிமுகப்படுத்தும் நோக்கில் கோயம்புத்தூர், ஈரோடு, உதகை ஆகிய நகரங்களில் நிறைவுப் பள்ளியை நிறுவும் திட்டத்தை பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது. அடிப்படை ஆங்கில அறிவு, கணிதவியல் திறன், தருக்கத்திறன், மனஒருமைப்பாட்டுத்திறன் ஆகியவற்றிற்கான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பள்ளிகளில் ஒருமாத கால அளவிற்கு துறைசார் மற்றும் கருவிசார் பயிற்சிகள் மாணவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சிகளுக்குப் பிறகு மாணவர்களைப் பணியில் அமர்த்த காப்பீட்டு நிறுவனங்கள், தனியார் வங்கிகள், மென்பொருள் தொழில்நுட்ப நிறுவனங்கள் போன்றவை முன்வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் அதிக எண்ணிக்கையில் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.





**பாரதிதாசன் பல்கலைக்கழகம்**

4.16 பாரதிதாசன் பல்கலைக்கழகம் 1982 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியில் தோற்றுவிக்கப்பெற்றது. திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய எட்டு மாவட்டங்கள் இப்பல்கலைக்கழக ஆட்சி எல்லையில் அடங்கியுள்ளன.

4.17 22 முதுநிலைப் பாடங்களையும், 3 இளநிலைப் பாடங்களையும், 20 முதுநிலை பட்டயப் படிப்புகளையும், 5 பட்டயப் படிப்புகளையும் மற்றும் 3 சான்றிதழ் படிப்புகளையும் இப்பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது. இவை நவீன வேலைவாய்ப்பு வழங்கும் படிப்புகளாகும். இவை விருப்பார்ந்த தகுநிறை கல்வித் திட்டத்தின்கீழ் (Choice Based Credit System) செயல்படுகின்றன. மாணவர்கள் தாங்கள் விரும்பிய படிப்பினைத் தேர்வு செய்வதற்கான வாய்ப்பினை இது வழங்குகிறது.

4.18 பல்கலைக்கழக துறைகள் மற்றும் இணைவு பெற்ற கல்லூரிகளில் மென்திறன்/வேலைவாய்ப்பு உள்ளிட்ட இளநிலை மற்றும் முதுநிலை பட்டப் படிப்புகளில் படிப்புகள் உட்பட மாற்றியமைக்கப்பட்ட விருப்பார்ந்த தகுநிறை கல்வித் திட்டம் (Revised Choice Based Credit System) 2008-2009 கல்வி ஆண்டு முதல் அமல்படுத்தப்படவுள்ளது.

**அழகப்பா பல்கலைக்கழகம்**

4.19 அழகப்பா பல்கலைக்கழகம் 1985-ல் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள காரைக்குடியில் தோற்றுவிக்கப்பட்டது. அழகப்பா கல்வி நிறுவனங்கள் பல்துறை வித்தகரும் மிகச் சிறந்த கொடையாளருமான டாக்டர் ஆர்.எம். அழகப்ப செட்டியார் அவர்களால் உருவாக்கப் பெற்றவையாகும்.

4.20 7 அரசுக் கல்லூரிகள், 3 சுயநிதி கலை அறிவியல் கல்லூரிகள், 7 சுய நிதிக் கல்வியியல் கல்லூரிகள் உள்பட சிவகங்கை மற்றும் இராமநாதபுர மாவட்டங்களில் உள்ள அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அழகப்பா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. முதுகலை நுண் உயிரியல், முதுகலை தாவரவியல் மற்றும் காந்திய சிந்தனை பற்றிய பட்டய சான்றிதழ் படிப்புகள் ஆகியவை 2006-2007 ஆம் கல்வி ஆண்டு முதல் இணைப்புக் கல்லூரிகளில் புதிதாகத் துவங்கப்பட்டுள்ள படிப்புகளாகும்.

[2008 மே 6

4.21 சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில், உயிரி தொழில்நுட்பவியல், இயற்பியல், தொழில் வேதியியல், கணிதவியல், கணினி அறிவியல் மற்றும் பொறியியல், மேலாண்மையியல், வங்கி மேலாண்மையியல், பன்னாட்டு வணிகவியல், நிறுமச் செயலரியல், தமிழ், மகளிரியல், கல்வியியல், உடற்கல்வியியல், சுகாதார அறிவியல், கடல் மற்றும் கடலோரவியல், ஆங்கிலம் மற்றும் அயல் நாட்டு மொழிகள் ஆகிய பாடங்களில் அழகப்பா பல்கலைக்கழகமானது 26 பல்வேறுபட்ட துறைகள் மற்றும் மையங்களின் வழியாக முதுகலை, ஆய்வு நிறைஞர் மற்றும் முனைவர் பட்டங்கள் பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்கி வருகிறது.

4.22 2008-2009 ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழகத்தில் உயிரி மின்னியல் (Bio Electronics), உயிரி தகவலியல் (Bio Informatics) மற்றும் உயிரி உணர்தலியல் (Bio Sensor) என மூன்று துறைகள் துவங்கப்பட உள்ளன. மேலும், அதிநுண்ம அறிவியல் தொழில்நுட்பவியல் (Nano Science and Technology) மற்றும் விலங்குகள் சுகாதார மேலாண்மை (Animal Health Management) ஆகிய புதிய பாடப் பிரிவுகளை வழங்குவதற்காக இரண்டு புதிய துறைகள் துவங்கப்பட உள்ளன.

## அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

4.23 1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் கொடைக்கானலில் தோற்றுவிக்கப்பட்டது. மகளிரியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல், மகளிர் மேம்பாடு குறித்த திட்டங்களுக்கு ஆலோசனை நல்குதல், ஒருங்கிணைத்தல் ஆகிய பொறுப்புகள் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பட்டன. இப்பல்கலைக்கழகம், அனைத்துத் துறைகளிலும் ஆண்களுக்கு நிகரான நிலையைப் பெண்கள் எய்த வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளைக் கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்திற்கு திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களிலுள்ள மகளிர் கல்லூரிகள் பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளாக உள்ளன.

4.24 இப்பல்கலைக்கழகம் பொருளியல், ஆங்கிலம், கல்வியியல், வரலாற்றியல், மனைவாழ்வு நிருவாகம், சமூகவியல், தமிழியல், கணினி அறிவியல், மகளிரியல், அறிவியல் மற்றும் இசையியல் ஆகிய புலங்களைக் கொண்டுள்ளது. தேசிய தர நிர்ணயக் குழு இப்பல்கலைக்கழகத்துக்கு B++ தகுதியினை வழங்கியுள்ளது.



2008 மே 6]

4.25 தமிழகத்தில் மகளிரியலை பாடத் திட்டங்களில் மையப்படுத்திய ஒரே பல்கலைக்கழகம் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் ஆகும். முனைவர் பட்டப் படிப்பு / இளநிலை ஆய்வுப் படிப்பு / முதுகலைப் பட்ட வகுப்பு / இளங்கலை கல்வியியல் என்று அனைத்து நிலைப் பாடத் திட்டங்களிலும் ஆய்வு மற்றும் விரிவாக்கப் பணிகளும் மகளிரியலை முதன்மைப்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளன. இளநிலை மற்றும் முனைவர் பட்ட ஆய்வுகள் பகுதி நேர ஆய்வு/ முழு நேர ஆய்வு மற்றும் பல்கலைக்கழக மானியக் குழு நிதிநல்கை ஆய்வு என நடைபெற்று வருகின்றது. இதுவரை பல்கலைக்கழகத்தின்மூலம் 150 முனைவர் பட்டங்களும், 1,456 இளநிலை ஆய்வுப் பட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன. பெண் சிசுக் கொலை, பெண் தலைச்சுமைத் தூக்குவோர், கல் உடைப்போர், பாடநூல்களில் பாலியல் வேறுபாடு, மகளிரும் பொருளாதாரமும், விழுமியக் கல்வி, நுண்ணுயிரி தொழில்நுட்பம், உயிரி தொழில்நுட்பம், அதிநுண்ம தொழில்நுட்பம் ஆகியவற்றில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

4.26 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் 1990 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. தற்போது இப்பல்கலைக்கழகம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அபிஷேகப்பட்டி என்னும் ஊரில் அமையப்பெற்றுள்ளது. ஆழ்வார்க்குறிச்சி, பாளையங்கோட்டை மற்றும் இராஜாக்கமங்கலம் ஆகிய இடங்களில் இப்பல்கலைக்கழகத்தின் செயற்கைகோள் வசதிகொண்ட வளாகங்கள் உள்ளன. இப்பல்கலைக்கழகம் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்டங்களின் கல்வித் தேவைகளை நிவர்த்தி செய்து வருகிறது. தொலைதூரக் கல்வி முறையிலும் இப்பல்கலைக்கழகம் கல்விப் பணியை ஆற்றி வருகிறது.

4.27 இப்பல்கலைக்கழகத்தில் 24 துறைகள் உள்ளன. மேலும், 110 கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இத்துடன் 1 அங்கீகரிக்கப்பட்ட ஆய்வு மையம், 38 சமுதாயக் கல்லூரிகள் மற்றும் 83 விரிவாக்கக் கல்வித் திட்ட மையங்களும் உள்ளன. முதுநிலைப் பாடப் பிரிவுகள் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவுகள் தவிர பட்டயம் மற்றும் சான்றிதழ் பிரிவுகளும் இக்கல்லூரிகள் மூலமாக நடத்தப்படுகின்றன. இப்பல்கலைக்கழகம் 39 இளநிலை பாடப் பிரிவுகளும் 30 முதுநிலை பாடப் பிரிவுகளும் மற்றும் 79-க்கும் மேலான

[2008 மே 6

சான்றிதழ் மற்றும் பட்டய பாடப் பிரிவுகளும் 16 ஆய்வியல் நிறைஞர் மற்றும் 108 முனைவர் திட்டங்களையும் வழங்கி வருகின்றது.

4.28 2007-2008 கல்வியாண்டில் இளங்கலை மற்றும் முதுகலை பாடத் திட்டங்களைச் சீரமைப்பது சம்பந்தமாக பல பயிலரங்கங்கள் நடத்தப்பட்டன. அதன் அடிப்படையில் இப்பல்கலைக்கழகத்தைச் சார்ந்த இணைப்புக் கல்லூரிகளில் இளங்கலை மற்றும் முதுகலை வகுப்புகளுக்கான பாடத் திட்டங்களைப் பல்கலைக்கழக மானிய குழுவின் தற்போதைய விதிகளுக்குட்பட்டு மாற்றியமைக்கப்பட்டு, 2007-2008 முதல் இப்புதிய பாடத் திட்டம் அமலுக்கு வந்துள்ளது.

4.29 பல்கலைக்கழகத் துறைகளில் ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களை ஊக்குவிக்கப் பல்கலைக்கழகம் ஆய்வு உதவித் தொகை வழங்கி வருகின்றது. மாதம் ஒன்றுக்கு ரூ.2,000/-ம் ஆண்டொன்றுக்கு சில்லறைச் செலவினத்திற்காக ரூ.4,000/-ம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

4.30 பல்கலைக்கழக எல்லைக்குட்பட்ட கிராமப்புறத்தில் உள்ள ஏழைகள் மற்றும் பெண்களுக்கு மிகக் குறைந்த செலவில் மனோ கல்லூரிகள் மூலம் கல்வி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது, நாகம்பட்டி, சங்கரன்கோவில், புளியங்குடி மற்றும் சேரன்மகாதேவி ஆகிய நான்கு இடங்களில் இம்மையங்கள் செயல்படுகின்றன.

## பெரியார் பல்கலைக்கழகம்

4.31 பெரியார் பல்கலைக்கழகம் 1997 ஆம் ஆண்டு சேலத்தில் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மற்றும் படிப்பிற்காக தமிழ், வணிகவியல், கணிதவியல், இயற்பியல், வேதியியல், கணினி அறிவியல், உயிர் வேதியல், பொருளியல், கல்வியியல், உணவு அறிவியல், மேலாண்மை படிப்புகள் மற்றும் புவியியல் ஆகிய 12 துறைகள் உள்ளன.

4.32 2004-2005 ஆம் கல்வியாண்டிலிருந்து பெரியார் பல்கலைக்கழகம், மாணவர்கள் நலனுக்கென்று அவர்கள் வேலை வாய்ப்பு பெறும் பொருட்டு வழிகாட்டுதல்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கி வருகிறது. அத்துடன், வேலை வாய்ப்பும் பெற்றுத் தருகிறது.



2008 மே 6]

4.33 தேர்ச்சித் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் கல்வியாண்டிலிருந்து வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ள பிரிவினரின் முன்னேற்றத்திற்காகவும் கல்லூரியில் படிக்க முடியாதவர்களுக்காகவும் ஒரு வருட பட்டயப் படிப்பு பல்வேறு பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

4.34 திருவள்ளுவர் பல்கலைக்கழகம் 2002 ஆம் ஆண்டு வேலூரில் தோற்றுவிக்கப்பட்டது. இந்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வேலூர் கோட்டை வளாகத்தில் உள்ள நான்கு கட்டடங்களில் பல்கலைக்கழகக் கல்வித் துறைகளும் நிர்வாக அமைப்பும் இயங்கி வருகின்றன. மேலும், அரசு கல்வியியல் கல்லூரியின் கட்டடத்தில் செயல்முறை வேதியியல் துறை (Applied Chemistry) இயங்கி வருகிறது. இப்பல்கலைக்கழகத்திற்கென வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், சேர்க்காடு மற்றும் விண்ணம்பள்ளி கிராமங்களில் 112.68 ஏக்கர் நிலத்தில் சொந்தமாகக் கட்டடம் கட்ட அரசு ரூ.16.70 கோடி அளித்துள்ளது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் 16-02-2008 அன்று புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

4.35 இப்பல்கலைக்கழகத்தில், விலங்கியல் துறையில் முதுகலை அறிவியல் படிப்புக்கும், எம்.பில். மற்றும் முனைவர் பட்டப் படிப்புக்கும், பொருளாதாரத் துறையில் எம்.பில். மற்றும் முனைவர் பட்ட மேற்படிப்பிற்கும் முறையாக மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை வழங்கிய ரூ. 13.55 இலட்சம் நிதியுதவியுடன் பட்டுப்புழு வளர்ப்பு சம்பந்தமாக ஒரு ஆராய்ச்சித் திட்டம் விலங்கியல் துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.36 இப்பல்கலைக்கழகம் அதன் ஆளுகைக்கு உட்பட்ட கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் இயங்கி வரும் 52 இணைவு / ஒப்புதல் பெற்ற கல்லூரிகளுடன் துவங்கப்பட்டது. தற்போது இப்பல்கலைக்கழகத்துடன் 125 கல்லூரிகள் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 64 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 58 கல்வியியல் கல்லூரிகளும் உள்ளன, 3 கீழ்த்திசை பண்பாட்டுக் கல்லூரிகளும் உள்ளன.

[2008 மே 6

## தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

4.37 தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் திறந்தநிலைக் கல்வி, தொலைநிலைக் கல்வி முறைகளை ஒருங்கிணைக்கவும், மேம்படுத்துவதற்காகவும், 2002 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இது இந்தியாவில் மாநில அளவில் அமைந்த பத்தாவது திறந்தநிலைப் பல்கலைக்கழகமாகும்.

4.38 தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில், மேலாண்மையியல், கலையியல், கல்வியியல், அறிவியல், தொடர் கல்வியியல், சமூக அறிவியல், கணினி அறிவியல், சுகாதார அறிவியல், தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம் ஆகிய ஒன்பது துறை சார்ந்த பள்ளிகள் இயங்கிவருகின்றன.

4.39 இதுவரை கல்வி வாய்ப்புகள் கிடைக்கப் பெறாத அடித்தட்டு மக்களுக்கு மிகக் குறைந்த செலவில் தரமான கல்வியை வழங்குவதே தொலைநிலைக் கல்வியின் நோக்கமாகக் கொண்டு, தொடங்கப்பட்ட தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் முதல் ஆண்டிலேயே (2003-2004) 14 படிப்புகளைத் தொடங்கி ஏறத்தாழ 14 ஆயிரம் மாணவர்களைச் சேர்த்து சாதனை புரிந்தது. அடுத்த நான்கு ஆண்டுகளில் படிப்புகளின் எண்ணிக்கையை 76 ஆக உயர்த்தியதால் மாணவர் சேர்க்கை ஒரு இலட்சம் என்ற எண்ணிக்கையைத் தாண்டியுள்ளது. பி.ஏ., பி.எஸ்சி., பி.காம்., பி.பி.ஏ, பி.சி.ஏ, பி.எட்., மற்றும் எம்.ஏ., எம்.எஸ்சி., எம்.காம்., எம்.சி.ஏ., எம்.பி.ஏ ஆகிய மரபார்ந்த படிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

4.40 கற்றல் முறைகளை எளிமைப்படுத்தும் வகையில், தானே கற்றல் முறையில் (SIM) பாடநூல்கள் உருவாக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இதனை மேலும், மேம்படுத்தும் வகையில், இத்துறையில் அனுபவம் மிக்க நிறுவனங்களின் உதவியோடு, பாடநூல்களைக் குறுந்தகடுகளில் (CD) பதிவு செய்து, தேவையான ஒலி-ஒளிக் காட்சிகளை இணைத்து, 34 பாடங்களுக்கு மின்பாட நூல்கள் (e-content) உருவாக்கப்பட்டுள்ளன. கலந்தாய்வு வகுப்புகளில் மாணவர்கள் பங்கு கொள்ளும்போது, தங்களைத் தாங்களே சுயமாக மதிப்பீடு செய்துகொள்ளும் வகையில் இந்தக் குறுந்தகடுகள் உருவாக்கப்பட்டுள்ளன.



2008 மே 6]

### 4.41 2008–2009 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

- ➢ பிற நாடுகளில் பல்கலைக்கழக கல்வி மையங்களைத் தொடங்குதல்.
- ➢ அரசின் கொள்கை முடிவுக்கு ஏற்ப சமுதாயக் கல்லூரிகளுக்கு அங்கீகாரம் அளித்து அவற்றில் படித்துத் தேறிய மாணவர்கள் உயர் கல்வி பெறுவதற்கு வாய்ப்பளித்தல் மற்றும் சமுதாயக் கல்லூரிகளின் வளர்ச்சிக்கு ஆவன செய்தல்.
- ➢ தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் மின்னணு ஊடகத் தயாரிப்பு மற்றும் ஆய்வு மையத்தின்மூலம் மின்பாட நூல்கள் தயாரித்தல்.
- ➢ தமிழகத்தின் முக்கிய நகரங்களில் அமைந்துள்ள 12 மண்டல ஒருங்கிணைப்பு மையங்களை கணினி மூலம் ஒருங்கிணைத்தல்.
- ➢ தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள், பாடநூல் எழுதும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு மின்பாட நூல்கள் உருவாக்கும் பயிற்சியளித்தல்.
- ➢ இணைய வழி ஒலிபரப்பு வசதி (IP based Radio Broadcast Facility) பல்கலைக் கழகத்தின் தலைமையகத்தில் ஏற்படுத்துதல்.

## அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

4.42 அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1929 ஆம் ஆண்டு சிதம்பரத்தில் உயர்நிலை கல்வி பயிலும் உறைவிடப் பல்கலைக்கழகமாக மலர்ந்தது. இன்றைக்கு இப்பல்கலைக் கழகம் கிட்டத்தட்ட 1,000 ஏக்கர் பரப்பளவில் 48 துறைகளோடு விரிந்து பரந்துள்ளது. பல்கலைக்கழகத்தில் 204 பட்டம் மற்றும் பட்டய வகுப்புகளில் 21,000 மாணவர்கள் பயில்கின்றனர்.

4.43 பல்கலைக்கழகத்திலுள்ள அனைத்துத் துறைகளிலும் கணினி சார்ந்த பாடத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு இணைய தள வசதி செய்து தரப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்களிடையே தகவல் தொழில்நுட்பம் குறித்த விழிப்புணர்வு உருவாகிறது. தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார நிர்ணயக் குழு இப்பல்கலைக்கழகத்திற்கு B++ தகுதியை வழங்கி உள்ளது.

[2008 மே 6

*4.44* அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 2007-2008 ஆம் கல்வியாண்டு முதல் இயற்கை மற்றும் பேரிடர் மேலாண்மை குறித்த முதுநிலை பொறியியல் பாடப் பிரிவினை இந்தியாவிலேயே முதன் முதலாக பல்கலைக்கழக மானியக் குழுவின் நிதி உதவியுடன் துவக்கியுள்ளது.

*4.45* உயர் கல்வியில் ஆய்வு என்பது ஓர் முக்கியமான அங்கமாகக் கருதப்படுகிறது. இப்பல்கலைக்கழகத்தில் கடல் வாழ் உயிரியல் உயராய்வு மையம் பல மேன்மையான முக்கிய ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. குறிப்பாக அந்தமான், நிக்கோபர் தீவுகள் உள்ளடக்கிய இந்திய கிழக்குக் கடற்கரையிலும் பல முக்கிய ஆய்வுகளைத் தொடர்ந்து செய்து வருகிறது. இவ்வாய்வுகளுக்கு இந்திய பல்கலைக்கழக மானியக் குழுவும், மத்திய வனத் துறை அமைச்சகமும், மத்திய கடல் மேம்பாட்டுக் கழகமும் பல வகைகளில் நிதி உதவியினை அளித்து வருகின்றன. இவ்வகையிலான முதன்மை ஆய்வுகளால் சதுப்பு நிலக் காடுகள், உயிரினங்களின் பல பரிமாணங்கள் போன்றவை பாதுகாக்கப்படுகின்றன. இதுபோன்ற ஆய்வு நிகழ்வுகளை உலகின் பல அறிவியல் வல்லுநர்கள் பாராட்டியிருக்கிறார்கள். இதன் பயனாக ஐக்கிய நாட்டுப் பல்கலைக்கழகமும் இதைக் கண்டறிந்து ஏனைய அறிவியலாளர்களுக்கும், சுற்றுப்புற ஆர்வலர்களுக்கும் ஆசிய அளவிலான ஒரு பயிற்சி முகாமினை பரங்கிப்பேட்டையில் நடத்த முடிவு செய்துள்ளது.

## தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம்

*4.46* தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் 15-9-2005 அன்று நிறுவப்பட்டது. தற்போது சென்னை-6, கல்லூரி சாலையில் உள்ள ஈ.வெ.கி. சம்பத் மாளிகையில் தற்காலிகமாகச் செயல்பட்டு வருகிறது.

### விருப்ப அடிப்படை எண் முறையில் ஒரே சீரான பாடத் திட்டம்

*4.47* இப்பல்கலைக்கழகத்திலுள்ள 11 துறைகளிலும் இப்பல்கலைக்கழகத்தைச் சார்ந்த அனைத்து இணைப்புக் கல்லூரிகளிலும் கற்பிக்கப்படும் இளநிலை பட்டம், முதுநிலை பட்டம் மற்றும் முதுநிலை பட்டயங்களுக்கான அனைத்துப் பாடங்கள் விருப்ப அடிப்படை எண் முறையில் ஒரே சீரான பாடத் திட்டத்தின் மூலம் கற்பிக்கப்படுகின்றன.



2008 மே 6]

### முதலாவது பட்டமளிப்பு விழா

*4.48* 17-03-2007 அன்று இப்பல்கலைக்கழகத்தில் முதலாவது பட்டமளிப்பு விழா நடந்தது. அவ்விழாவில் 522 மாணவர்கள் பட்டங்களையும், 9 மாணவர்கள் பட்டயங்களையும் பெற்றார்கள்.

## 5. தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள்

### அண்ணா பல்கலைக்கழகம், சென்னை

*5.1* சென்னை நகரில் செயல்பட்டு வந்த நான்கு உறுப்புக் கல்லூரிகளான கிண்டி பொறியியல் கல்லூரி, அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி, கட்டடக்கலை மற்றும் திட்டமிடுதல் பள்ளி மற்றும் குரோம்பேட்டையிலுள்ள தொழில்நுட்ப நிறுவனம் ஆகிய நான்கு நிறுவனங்களையும், அவற்றின் நிருவாகங்களையும் இணைத்து பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் செயல்முறை அறிவியல் துறைகளில் ஒரு மேனிலை மையம் உருவாக வேண்டும் என்ற உயர்நோக்கத்தின் அடிப்படையில் 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 30-இன்படி 04-09-1978 அன்று தனித்தன்மை வாய்ந்த ஒரு பல்கலைக்கழகமாக அண்ணா பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது. அண்ணா பல்கலைக்கழகத்தின் உள்ளமைப்பு வசதிகள் சீரான முறையில் வளர்ச்சி அடைந்து, பொறியியல், தொழில்நுட்பம், செயல்முறை அறிவியல் துறைகளில் உலகம் போற்றிப் பாராட்டும் அளவிற்கு உன்னத நிலையையும், தரத்தையும் அடைந்துள்ளது.

*5.2* அண்ணா பல்கலைக்கழகத்தினை தமிழக அரசு 2001 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்களில், ஒருமை வகை (Unitary type) பல்கலைக்கழகமாக இருந்த இப்பல்கலைக் கழகத்தை இணைப்பு வகை (Affiliating type) பல்கலைக்கழகமாக மாற்றி தமிழகத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகளை இப்பல்கலைக்கழகத்துடன் இணைத்தது. 1-02-2007 முதல் சென்னை, திருவள்ளூர், வேலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள கல்லூரிகள் மட்டுமே சென்னை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

### பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி

*5.3* 1978 ஆம் ஆண்டிற்குமுன், 16 இளநிலை பாடத் திட்டங்களும், 26 முதுநிலைப் பட்டயத் திட்டங்களும், 6 பட்ட மேற் பட்டய திட்டங்களையும் மட்டுமே செயல்படுத்தி வந்துள்ளது. அண்ணா

[2008 மே 6

பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டபின், சமுதாயத் தேவைகளைக் கருதியும், தொழில்நுட்ப சவால்களை கருத்தில் கொண்டும், பல்வேறு புதிய பாடத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இன்றைய நிலையில் பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் செயல்முறை அறிவியல் துறைகளில் 44 இளநிலை பாடத் திட்டங்களும், (முழு நேரம்/பகுதி நேரம்) 99 முதுகலை பாடத் திட்டங்களும், (முழு நேரம்/பகுதி நேரம்) 5 பட்ட முன்னோடி ஆய்வுப் படிப்புகளும், ஆராய்ச்சி படிப்புகளும் நடைமுறையில் உள்ளன.

5.4 சர்வதேச அளவிலான தேவைகளையும், எதிர்பார்ப்புகளையும் எதிர்கொள்ளும் விதத்தில், 2007 ஆம் ஆண்டில் அண்ணா பல்கலைக்கழகம் தொலைதூர கல்வி மையம் ஒன்றை நிறுவி, அதன் மூலம் முதுகலை பட்டயப் படிப்பான-MBA, MCA, M.Sc. போன்ற திட்டங்களைத் துவக்கி செயல்படுத்தி வருகிறது.

5.5 அண்ணா பல்கலைக்கழகத்தின் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி மையத்தின் மூலம், அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு மட்டுமல்லாமல், பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள பல சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கும் இப்பல்கலைக்கழகம் வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

**இதுவரை செய்துள்ள முக்கியமான சாதனைகள்**

5.6 தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகாரக் குழுவின் பரிந்துரையின்படி இப்பல்கலைக்கழகம் 5 நட்சத்திரத் தகுதியைப் பெற்றுள்ளது.

5.7 பல்கலைக்கழக மானியக் குழு, அண்ணா பல்கலைக்கழகம் சென்னையை "முதன்மை நிலைத் தீவு" என்று காரணப் பெயரிட்டு, அண்ணா பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வரும் "சுற்றுச்சூழல் அறிவியல்" மையத்தை 'உள்ளாற்றல் மிக்க முதன்மை நிலை' மையமாக மாற்றியது.

5.8 'அண்ணா பல்கலைக்கழகம், சென்னை' இந்திய வான்வெளி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து முதலாவதாக 'நுண்-விண்கோள்' தயாரிக்கும் திட்டத்தை பெறுகின்ற முதல் பல்கலைக்கழகமாகும். 'ANUSAT' விண்கோள் ஒரு இந்திய பல்கலைக்கழகத்தால் வடிவமைக்கப்பட்டு, உருவாக்கப்படும் முதல் விண்கோள் ஆகும். வெள்ளம், தீ போன்ற இயற்கை பேரிடர்கள் ஏற்படும்போது, மக்களை



2008 மே 6]

எச்சரிப்பதற்கும், தமிழக அரசால் இவ்விண்கோள் பயன்படுத்தப்படும். இந்திய வான்வெளி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், பெங்களூர், அண்ணா பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியான, சென்னை தொழில்நுட்ப நிறுவனத்தில் செயல்படும் விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு 50 இலட்சம் ரூபாயை, 'ANUSAT' திட்டத்தை முடிப்பதற்கு ஏதுவாக வழங்கியுள்ளது.

5.9 அதிநுண்ம அறிவியல் தொழில் நுட்பவியலுக்கென்று, விசேட மையம் ஒன்று அண்ணா பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ளது. தூய்மையான அறை வசதிகளை உருவாக்குவதற்கும், 'குறை கடத்தி கருவிகளை' உருவாக்குவதற்கும் துவக்கத் தொகையாக (Seed money) தமிழக அரசு ரூ.50 இலட்சம் வழங்கியுள்ளது.

5.10 அண்ணா பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவ/மாணவியர்களின் வேலை வாய்ப்புத் திறனை அதிகரித்துக் கொள்ளும் வகையில், எல்காட் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களான இன்போசிஸ், சிடிஎஸ்., ஸ்கோப் போன்ற நிறுவனங்கள் துணையுடன், அண்ணா பல்கலைக்கழகம், 'பயிற்சியாளர்களுக்கான பயிற்சி' என்ற திட்டத்தின்கீழ் தொடர் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. மாணவர்களுக்கு தகவல் தொடர்பு மற்றும் மென்பொருள் திறன் ஆகியவற்றில் சிறந்த முறையில் பயிற்சியளிக்க ஏதுவாக ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இதன் மூலம் 250-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பயன் அடைந்துள்ளனர்.

**2008–2009 ஆம் ஆண்டில் செயல்படுத்தவுள்ள திட்டங்கள்**

5.11 அண்ணா பல்கலைக்கழகம், சென்னை தகவல்-தொழில்நுட்ப பூங்கா ஒன்றையும் அமைக்கவுள்ளது. 'C-DAC' நிறுவனமானது, மேற்கண்ட பூங்காவை அமைப்பதற்குத் தேவைப்படும் உள்ளமைப்பு வசதிகளையும், ஆராய்ச்சிக்குத் தேவையான உதவிகளையும் செய்ய முன்வந்துள்ளது.

5.12 2008-2009 ஆம் ஆண்டில், இளநிலை உயிர்-மருத்துவப் பொறியியல், முதுநிலை உணவு தொழில்நுட்பம் மற்றும் முதுநிலை அதிநுண்ம தொழில்நுட்பம் ஆகிய புதிய பாடப்பிரிவுகளைத் தொடங்கவுள்ளது.

[2008 மே 6

## அண்ணா பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

5.13 அண்ணா பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு சட்டம் எண் 41/2006-ன்படி 1-2-2007 முதல், பாரதிதாசன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியின் வளாகத்தில் செயற்பட்டு வருகிறது. பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியான பாரதிதாசன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியின் நிலம், கட்டடம், தளவாடம், மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட அனைத்தும் அண்ணா பல்கலைக்கழகம் திருச்சிராப்பள்ளியின் கட்டுப்பாட்டின்கீழ் வந்துள்ளது. தமிழகத்தில் உள்ள திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், கடலூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 48 சுயநிதி பொறியியல் கல்லூரிகள், ஒரு அரசு பொறியியல் கல்லூரி, ஒரு உறுப்புக் கல்லூரி மற்றும் மத்திய மின்னணு வேதியியல் ஆராய்ச்சி நிறுவனம், காரைக்குடி (Central Electrochemical Research Institute) உள்பட 51 பொறியியற் கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

5.14 தரமான கல்வியை கடின உழைப்பு, சரியான சாதனங்கள் மற்றும் தொழில்நுட்பம் வாயிலாக அளித்தல், கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த கல்வி வழங்குதல்மூலமாக அவர்களது வறுமையை அகற்றுதல், சுற்று வட்டாரத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்கூடங்களில் பணிபுரிவோரின் கல்வித் தகுதியை உயர்த்துதல், பல தொழில்நுட்பக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் கல்வி மற்றும் வாழ்க்கைத் தரத்தை அதி நவீன தொழில்நுட்பம் வாயிலாக மேம்படுத்துதல், ஆய்வு மையம் உருவாக்குவதன்மூலம் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு உண்டான இணக்கமான சூழலை உருவாக்குதல், வேலைக்கு அமர்த்தும் திறனை மாணவர்களிடையே வளர்த்துவதன் மூலம் வேலை வாய்ப்பை அதிகரித்தல் மற்றும் தலைசிறந்த வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுடன் ஏற்படும் உடன்பாட்டின் வாயிலாக அறிவு மற்றும் தகவல் பரிமாற்றம் மேற்கொள்ளுதல் ஆகியவை இப்பல்கலைக்கழகத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

5.15 தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல் மற்றும் கணினி அறிவியல் ஆகிய துறைகளில் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு M.E., Pervasive Computing Technology என்ற முதுகலைப் பாடப் பிரிவை



2008 மே 6]

திருச்சி அண்ணா பல்கலைக்கழகம் 2007-2008 கல்வியாண்டு முதல் வழங்கி வருகின்றது.

5.16 பள்ளிகளிலிருந்து புதிதாக கல்லூரிகளுக்கு முன்னேறும் முதலாமாண்டு தொழில்நுட்ப மாணவர்களுக்கு ஆண்டு இறுதியில் ஏற்படும் பாடச்சுமையைக் குறைத்து, அதே சமயம் கல்வியின் தரம் சிறிதும் குறையாமல் தொழில்நுட்பக் கருத்துகளை ஆழ்ந்து கற்கும் பொருட்டு பருவ தேர்வு முறை 2007-2008 கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## 2008–2009 ஆம் ஆண்டில் செயல்படுத்தவுள்ள திட்டங்கள்

5.17 மின்னணு கற்றலுக்கான (e-learning) மென்பொருளை அறிமுகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடங்கப்பெற்ற பின்னர், பல்கலைக்கழகத்தில் நிகழ்த்தப்படும் சிறந்த விரிவுரைகளை 48 இணைப்புக் கல்லூரிகளில் பயில்பவர்கள் தற்போதுள்ள 2 மெகாபைட் திறனைக் கொண்டு, வீடியோ கான்பரன்சிங்மூலம் கேட்டுப் பயன்பெற முடியும்.

5.18 தர மேம்பாட்டுத் திட்டம் (Quality Improvement Programme) மூலம் தொழில் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் போதிய அனுபவமுள்ள ஆசிரியர்களை முதுநிலை படிப்புகளிலும், ஆராய்ச்சி படிப்புகளிலும் சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் உயர்கல்வியின் தரத்தினை நிச்சயம் உயர்த்தும்.

5.19 கல்வி பயிலும்போதே வேலை வாய்ப்பு பெற்ற இறுதியாண்டு மாணவர்கள் உலகத் தரத்திற்கு ஏற்ப தங்களை உயர்த்திக்கொள்ள, தொழில்நிறுவனங்களின் நிதியுதவியுடன் வளாகத்திலேயே பயிற்சியளிக்க உள்ளது.

## அண்ணா பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்

5.20 தமிழ்நாடு சட்டம் 42/2006-ன்படி கோவை அண்ணா பல்கலைக்கழகம் 1-2-2007 அன்று உருவாக்கப்பட்டது. கோவை, ஈரோடு, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், கரூர், நீலகிரி ஆகிய எட்டு மாவட்டங்களில் அப்போது இருந்த அனைத்துப் பொறியியல் கல்லூரிகள் மற்றும் எதிர்காலத்தில் புதிதாகத் துவங்கப்படும் பொறியியல் கல்லூரிகள் அனைத்தும் கோவை அண்ணா பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்படும். தற்போது 3 அரசுப் பொறியியல் கல்லூரிகள், 2 அரசு

உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், மற்றும் 74 தனியார் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் ஆகியவை கோவை அண்ணா பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்று செயல்பட்டு வருகின்றன.

## 2007–2008 ஆம் வருடத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்

### பாடத் திட்டம்

5.21 தொழில் நிறுவனங்களில் வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப அவர்களின் ஆலோசனைகளோடு 14 பொறியியில் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் இளங்கலை, முதுகலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளுக்கு பாடத் திட்டங்கள் வகுக்க தனித்தனியாகக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 50 சதவீதம் உறுப்பினர்கள் தொழில் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### கணினிமூலம் பொறியியல் வரைபடப் பாடம்

5.22 முதலாமாண்டு பொறியியல் பாடத் திட்டத்தில் இதுவரை இருந்து வந்த பொறியியல் வரைபடப் பாடத்துக்கு (Engineering Drawing) பெரிய அறைகள் மற்றும் நிறைய உபகரணங்கள் தேவை. இதைத் தவிர்க்கவும் மற்றும் நவீன கணினி தொழில்நுட்பத்தை மாணவர்களுக்கு எடுத்துச் செல்லும் நோக்கிலும், மேற்குறிப்பிட்ட பாடத்துக்கு முழுவதுமாக கணினி மூலம் வரைபடம் வரைவதற்கு (Auto CAD) மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை கோவை அண்ணா பல்லைக்கழகம் அதன் அனைத்துக் கல்லூரிகளிலும் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப் பாடத்தைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன.

### அலுவலக நிர்வாக மென்பொருள் பயிற்சி மையம் (SAP Business One Software Training Centre)

5.23 உலகம் முழுவதும் அலுவலக நிர்வாக மென்பொருள் (SAP Software) துறையில் அதிக அளவில் வேலைவாய்ப்பு இருப்பதைக் கருத்தில் கொண்டு, தமிழகத்திலேயே முதன்முன்றயாக, கோவை அண்ணா பல்கலைக்கழகமும் SAP-ன் அங்கீகாரம் பெற்ற சென்னையிலுள்ள இன்போஸ்பெக்ட்ரம் நிறுவனமும் இணைந்து கோவை அண்ணா பல்கலைக்கழகத்தில் அலுவலக நிர்வாக மென்பொருள் பயிற்சி மையத்தை (SAP Business One Training Centre) அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளன. இம்மையத்தில் கோவை அண்ணா பல்கலைக்கழக மாணவர்களுக்கு வெளிச்சந்தையைவிட மிகக் குறைந்த கட்டணத்தில் மென்பொருள் பயிற்சி அளிக்கப்படும்.





## அண்ணா பல்கலைக்கழகம், திருநெல்வேலி

5.24 தமிழ்நாடு சட்டம் 28/2007-ன்படி, திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழகம் 17-9-2007-ல் உருவாக்கப்பட்டது. திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் மதுரை ஆகிய ஐந்து மாவட்டங்களில் அப்போது இருந்த அனைத்துப் பொறியியல் கல்லூரிகள் மற்றும் எதிர்காலத்தில் புதிதாகத் துவங்கப்படும் பொறியியல் கல்லூரிகள் அனைத்தும் திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்படும். தற்போது 1 அரசுப் பொறியியல் கல்லூரி, 1 அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரி மற்றும் 41 தனியார் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் ஆகியவை திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்று செயல்பட்டு வருகின்றன. இப்பல்கலைக்கழகம், திருநெல்வேலி அரசினர் பொறியியற் கல்லூரிக் கட்டடத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகம் 9 பட்டப் படிப்புகள் மற்றும் 8 பட்ட மேற்படிப்புகள் ஆகியவற்றைக் கொண்ட பல்கலைக்கழகத் துறைகளை அமைக்க எண்ணியுள்ளது. மேலும், பல்கலைக்கழக நிருவாகத்தில் மின் ஆளுமை முறையை நடைமுறைப்படுத்தியுள்ளது.

## 6. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

6.1. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் தமிழக அரசால், ஒரு தன்னாட்சி நிறுவனமாக 1983 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் இயங்கி வருகின்றது. மக்களிடையேயும் குறிப்பாக மாணவ சமுதாயத்தினரிடையேயும், அறிவியல் தொழில்நுட்ப விழிப்புணர்வை உருவாக்குவது இம்மையத்தின் முக்கிய நோக்கமாகும்.

6.2 தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், சென்னையில் கோளரங்கத்துடன்கூடிய பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தை நிறுவியுள்ளது. பி.எம். பிர்லா கோளரங்கம் சென்னையில் 11-5-1988 அன்று நிறுவப்பட்டது. பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம் 17-9-1990 அன்று முதல் செயல்படத் தொடங்கியது. பார்வையாளர்களே

[2008 மே 6

கையாண்டு புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அமைக்கப்பட்ட 700 காட்சிப் பொருட்கள் இக்காட்சிக்கூடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

6.3 திருச்சிராப்பள்ளியில் உள்ள அண்ணா அறிவியல் மையம் 10-6-1999 அன்று முதல் செயல்படத் தொடங்கியது. இம்மையத்தில் கோளரங்கம், அறிவியல் பூங்கா, மரபு சாரா எரிசக்திப் பூங்கா மற்றும் சுற்றுச் சூழலியல் காட்சிக் கூடம் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

## 2007–2008–ல் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

6.4 இம்மையத்தின் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளில் அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த தற்காலிகக் கண்காட்சிகள், பயிற்சி பட்டறைகள், கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், குறுகியகால வகுப்புகள், வானியல் முகாம்கள், வினாடி வினா, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, வரைகலைப் போட்டி, கணிதத் திறன் தேர்வு, வானியல் ஒலிம்பியாட், வானியல் திறன் தேர்வு, 'அறிவியல் அறிஞரைச் சந்தியுங்கள்' மற்றும் 'மருத்துவத் துறை அறிஞரைச் சந்தியுங்கள்' நிகழ்ச்சிகள், குறுகியகால வானவியல் பயிற்சி வகுப்புகள், கணிப்பொறி பயிற்சி வகுப்புகள் ஆகியனவும் அடங்கும்.

6.5 மேலும், அரிய வானியல் நிகழ்வுகளின்போது சிறப்பு வான்நோக்கு நிகழ்ச்சிகள், ஒவ்வொரு இரண்டாம் சனிக்கிழமைதோறும் பொதுமக்களுக்கான இரவு வான் நோக்குதல் நிகழ்ச்சிகள் என, பல நிகழ்ச்சிகளை அறிவியல் தொழில்நுட்ப மையம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

6.6 24 நேரிடையாகப் பழகிடும் காட்சிப்பொருட்கள் அடங்கிய ஒரு நடமாடும் அறிவியல் கண்காட்சிப் பேருந்தும், சிறிய கோளரங்கமும் கிராமப்புற ஊர்களுக்குச் சென்று அப்பகுதி மக்களுக்கு அறிவியல் தொழில்நுட்ப அறிவைப் பரப்பி வருகின்றன.

6.7 மைய அரசின் தேசிய கடல்சார் கழகத்துடன் இணைந்து ரூ.50 இலட்சம் செலவில் "கடல்சார் காட்சிக்கூடம்", சென்னையில் உள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது.



2008 மே 6]

## 2008–2009–ல் நிறைவேற்றவுள்ள திட்டங்கள்

6.8 மைய அரசின் கலாச்சார அமைச்சகத்தின் 50 விழுக்காடு நிதியுதவியுடன் ரூ.650 இலட்சம் செலவில் கோயம்புத்தூரில் மண்டல அறிவியல் மையம் அமைக்கப்படும்.

6.9 மாநிலத்தின் இதர பகுதிகளில் உள்ள பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் வானவியல் பற்றி எளிதாகவும், மகிழ்ச்சி பெறும் வகையில் அறியும்பொருட்டு ரூ.15 இலட்சம் மதிப்பில் மூன்று நடமாடும் கோளரங்கங்கள் வாங்கப்படும்.

6.10 ரூ.20 இலட்சம் மதிப்பில் பி.எம்.பிர்லா கோளரங்கத்தில் நிகழ்ச்சிகளை மேம்படுத்தும் வகையில் கண்ணாடி கூரை மற்றும் பிளாஸ்மா திரை அமைக்கப்படும்.

6.11 திருச்சிராப்பள்ளியில் உள்ள அண்ணா அறிவியல் மைய கோளரங்கத்தில் ரூ.15 இலட்சம் மதிப்பில் முப்பரிமாண திரையரங்கம் அமைக்கப்படும்.

## 7. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

7.1 தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் தமிழ்நாடு அரசால் தன்னாட்சி நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டது. ஆய்வாளர்களிடமும், ஆசிரியர்களிடையேயும் அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுகளை, முக்கியமாக சமூக நலத்திற்கு உதவும் ஆய்வுகளை, ஊக்குவிக்கவும்; மாணவர்களிடையே அறிவியல் தொழில்நுட்ப சிந்தனையை மேம்படுத்தவும்; மக்களிடையே அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இம்மன்றத்தின் முக்கியக் குறிக்கோள்களாகும்.

7.2 மன்றம் 1984-ல் ஏற்படுத்தப்பட்டதிலிருந்து 100-க்கும் மேற்பட்ட சமூக உயர்வுக்குரிய ஆய்வுகளையும், சுமார் 10 இலட்சம் மக்களுக்கு பயனுள்ள வகையில் அறிவியலைப் பரப்பும் நிகழ்வுகளையும் செயல்படுத்தியுள்ளது. இந்திய அரசின் அறிவியல் துறைகளோடு தொடர்பு கொண்டு, பல்வேறு திட்டங்களுக்கு நிதியுதவி பெற்றுள்ளது.

[2008 மே 6

## 2008–2009–ல் நிறைவேற்றவுள்ள திட்டங்கள்

### அறிவியல் தொழில்நுட்ப திட்டங்கள்

7.3 அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு சமுதாயத்திற்கும் தமிழகத்திற்கும் பயன்படக்கூடிய திட்டங்களில் ஆராய்ச்சி செய்வதற்கு இரண்டாண்டுகளுக்கு ரூ.2.00 இலட்சம் முதல் ரூ.3.50 இலட்சம் வரை நிதி உதவி அளிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின்மூலம் வேளாண்மை, சுற்றுப்புறச் சூழல், மருத்துவயியல், சமூகவியல் மற்றும் பொறியியல், தொழில்நுட்பம் போன்ற பிரிவுகளில் மாநிலத்தின் மேம்பாட்டிற்குரிய திட்டங்கள் செயல்படுத்தப்படும். 2008-2009 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆய்வுகள் மேற்கொள்ளும் நிறுவனங்களில் உள்ள அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இத்திட்டத்தின்கீழ் ஆராய்ச்சி மேற்கொள்ள ரூ.25.00 இலட்சம் நிதி உதவி அளிக்கப்படும்.

### மாணவர் ஆராய்ச்சித் திட்டம்

7.4 மாணவர்களிடையே இருக்கும் அரிய திறமைகளை அறிவியல் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், அறிவியல் தொழில்நுட்பவியல், மருத்துவயியல், வேளாண்மையியல், கால்நடை மருத்துவயியல், சமூகவியல், உயிரியியல் போன்ற துறைகளில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் இறுதியாண்டில் பயின்றுவரும் மாணவர்களுக்கு சமுதாயத்திற்கு பயன்படக்கூடிய ஆராய்ச்சித் திட்டங்களைச் செய்வதற்கு அதிகபட்சமாக ரூ. 10,000/- வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. 2008-2009-ல் சுமார் 200 ஆய்வுத் திட்டங்களுக்கு ரூ.15 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படவுள்ளது.

### கருத்தரங்கு, சூழியம், அறிவியல் மாநாடு நடத்துவதற்கு பகுதி நிதியுதவி அளித்தல்

7.5 அறிவியலறிஞர்கள், ஆசிரியர்கள், தொழில் நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டு கருத்தரங்குகள், சூழியங்கள், அறிவியல் முகாம்கள் நடத்தி அறிவியல் கருத்துப் பரிமாற்றங்கள் செய்து கொள்ளவும், கலந்துரையாடவும் வழி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் கருத்தரங்கு, சூழியம், அறிவியல் மாநாடு நடத்துவதற்கு தமிழகத்திலுள்ள அமைப்புகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்கு ஒரு பகுதி நிதியுதவி



2008 மே 6]

அளிக்கப்படுகிறது. 2008-2009 ஆம் ஆண்டில் 20 கருத்தரங்குகள்/ சூழியங்கள் / கலந்துரையாடல் நிகழ்வுகள் நடத்த பகுதி நிதியுதவியாக சுமார் ரூ.5.50 இலட்சம் வழங்கப்படவுள்ளது. இதனால் அறிவியலறிஞர்கள், கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் பயனடைவர்.

### இளம் அறிவியலறிஞர்களுக்கு பயண நிதி உதவி அளித்தல்

7.6 இத்திட்டத்தின்கீழ், தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்கள்/ கல்லூரிகள்/ ஆராய்ச்சி மையங்களில் பணி புரிந்து வரும் 40 வயதுக்கு கீழ் உள்ள இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் பன்னாட்டு மாநாடுகளில் கலந்து கொண்டு தங்களுடைய ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளைச் சமர்ப்பிக்க செல்லுவதற்குத் தேவையான விமான பயணத் தொகையில் 50 விழுக்காடு வரை நிதி உதவியும் மற்றும் அத்தகைய உள்நாட்டு மாநாடுகளில் பங்குகொள்வதற்கு 100 விழுக்காடு இரயில் பயணக் கட்டணமும் நிதி உதவியாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2008-2009 ஆம் ஆண்டு 15 இளம் அறிவியலறிஞர்களுக்கு பயண நிதி உதவியாக ரூ. 4.50 இலட்சம் அளிக்கப்படவுள்ளது.

### இளம் அறிவியலறிஞர்களுக்கு ஆதரவு ஊதியம் அளித்தல்

7.7 35 வயதுக்குட்பட்ட இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொழில்நுட்பங்களின் நுணுக்கங்களை நன்கு கற்றுக்கொள்வதற்காக, அவர்களை வெளிமாநிலத்திலுள்ள, பல்கலைக்கழகங்கள் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் ஏதாவது ஒன்றில் ஒரு முதுநிலை அறிவியலறிஞருடன் சேர்ந்து ஆராய்ச்சி செய்யவும் நுண் கருவிகளின் செயல்முறை தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொள்ளவும் ஊக்கப்படுத்துவதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்படி அவர்களுக்கு தாங்கள் பணிபுரியும் தாயக நிறுவனங்களில் பெற்றுவரும் மாதச் சம்பளத்துடன் கூடுதலாக மாதம் ரூ.3,000/- ஆதரவு ஊதியமாக இரண்டு முதல் ஆறு மாதங்களுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் பயிற்சி/நுண்கருவிகளின் செயல்முறை தொழில்நுட்பத்தைக் கற்றுக்கொள்ளவும், பயிற்சி பெறவும் முடியும். 2008-2009-ல் சுமார் ரூ.1,80,000 செலவில் 5 விஞ்ஞானிகளுக்கு நிதியுதவி அளிக்கப்படவுள்ளது.

[2008 மே 6

## தமிழக அறிவியலறிஞர்கள் விருது

7.8 தங்களது திறமை மற்றும் முன்னோடியான அல்லது தலைசிறந்த செயல்முறை ஆராய்ச்சி ஆகியவற்றின்மூலம் தங்களது துறையில் சிறந்த பங்களிப்பினை செய்ததன் வாயிலாக தமிழகத்தின் அறிவியல் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு பங்காற்றிய அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களை ஊக்கப்படுத்துவதும் பெருமைப்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு அறிவியலறிஞருக்கும் ரூ.10,000/- ரொக்கமும், தாமிரப் பட்டயமும், சான்றிதழும் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் (i) வேளாண்மை (ii) உயிரியல் (iii) வேதியியல் (iv) பொறியியல் தொழில்நுட்பம் (v) சுற்றுப்புறச் சூழலியல் (vi) மருத்துவம் (vii) கணிதவியல் (viii) இயற்பியல் (ix) சமூகவியல் (x) கால்நடை மருத்துவயியல் போன்ற துறைகளில் விருதுகள் வழங்கப்படுகின்றன. 2008-2009-ல் ரூ.3.00 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

## அறிவியல் தொழில்நுட்பத்தைப் பரப்புதல்

7.9 அறிவியல் தொழில்நுட்பப் பயன்களை விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளிடையே பரப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், அரசு சாரா தன்னார்வ அமைப்புகள்மூலம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களைச் சார்ந்த நோக்கங்களை அறிவியல் கண்காட்சிகள், ஆசிரியர் பயிற்சி முகாம்கள், பொது விரிவுரைகள், கண்ணொலி ஒளிக்காட்சி, காட்சிவில்லைகள், வினாடி வினா போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகளின்மூலம் நடத்துவதற்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. 2008-2009-ல் மொத்தம் ரூ.10.00 இலட்சம் செலவில் 50 நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 2 இலட்சம் மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பயனுறுவர்.

## இளம் மாணவ அறிவியலறிஞர்கள் செயல் திட்டம்

7.10 நமது மாநிலத்தில் ஒன்பதாம் வகுப்பு பயின்று வரும் அறிவியலில் திறமை வாய்ந்த இளம் மாணவர்களுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி பற்றி போதனை செய்து அவர்களிடையே அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் படிப்பை தேர்ந்தெடுப்பதற்குரிய ஆர்வத்தை உருவாக்குவதே இத்திட்டத்தின்



2008 மே 6]

முக்கியக் குறிக்கோளாகும். இத்திட்டத்திற்கு நுழைவுத் தேர்வுமூலம் பல்வேறு மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு பெயர் பெற்ற கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் திறமை வாய்ந்த பேராசிரியர்களால் மே திங்களில் ஒருமாத கால சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. சுமார் பத்து கல்வி மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 மையங்களில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் 400 மாணவர்களுக்கு ஒரு மாத பயிற்சி அளிக்கும் வகையில் 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.20.00 இலட்சம் நிதியுதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## புதுமைத் தொழில்நுட்பமும் பரவலாக்கமும்

7.11 நமது மாநிலத்தில் அதிக எண்ணிக்கையிலான ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்மூலம் நன்மை பயக்கும் தொழில்நுட்பங்களும் அறிவியல் செயல்பாடுகளும் வெளிக்கொணரப்படுகின்றன. இத்தகைய ஆராய்ச்சியின் பயன்கள் பயனாளிகளைச் சென்றடைய சிறிது காலம் தேவைப்படுகிறது. எனவே, இத்தகைய புதுமை தொழில்நுட்பங்களை உடனடியாக பயனாளிகளுக்குக் கொண்டு செல்ல தேவையான பயிற்சிகளும், இதனை ஊக்குவிக்க வழிமுறைகளும் தேவை. இதனைக் கருத்தில் கொண்டு புதுமைத் தொழில்நுட்பமும் பரவலாக்கமும் திட்டத்தின் மூலம் நமது மாநிலத்திலுள்ள மத்திய, மாநில கல்வி மற்றும் ஆய்வு நிறுவனங்களில் வெளிக்கொணரப்படும் புதிய பயனுள்ள தொழில்நுட்பங்களைக் கல்வி மற்றும் அறிவியலாளர்கள்மூலம் உரிய பயனாளிகளுக்கு எடுத்துச் செல்ல தேவையான பயிற்சி மற்றும் பட்டறைகள் ஏற்பாடு செய்யப்படும். இத்திட்டம் 2008-2009 ஆம் ஆண்டில், ரூ. 5.00 இலட்சம் நிதியுடன் செயல்படுத்தப்படும்.

## கிராமப்புற பள்ளிகளில் அறிவியல் கல்வியின் தரத்தை உயர்த்துதல்

7.12 கிராமப்புற பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் அறிவியல் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை அறிவியல் பாடங்களை நடத்தும் இடைநிலை ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. கல்வியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் சுமார் 50 ஆசிரியர்களுக்கு தரமான பரிசோதனைக் கூடங்கள் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 5 நாட்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் அறிவியல்

பாடங்களில் உள்ள கடினமான பகுதிகளுக்கு விளக்கங்களும் மற்றும் செயல்முறைப் பரிசோதனைகளும் கல்லூரி ஆசிரியர்கள்மூலம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. வரும் 2008-2009 ஆம் நிதியாண்டில் ரூபாய் 8.00 இலட்சம் செலவில் 10 மாவட்டங்களில் சுமார் 500 அறிவியல் ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 8. அறிவியல் நகரம்

8.1 சென்னை நகரில் கிண்டி மற்றும் தரமணி பகுதியில் கல்வி மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளும் 60-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் அண்ணா பல்கலைக்கழகம், இந்திய தொழில்நுட்பக்கழகம் (I.I.T.), மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (CLRI), தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் ஆகிய மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள் அமைந்த இப்பகுதி அறிவியல் நகரம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிவியல் நகரத்தின் நோக்கம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை வளர்ப்பதாகும். இந்த அறிவியல் நகரத்தில் அமைந்துள்ள நிறுவனங்களில் சுமார் 1500-க்கும் மேற்பட்ட முனைவர் பட்டத்திற்கான ஆய்வுகள், 3,500 ஆராய்ச்சி மாணவர்களை கொண்டு 1,500-க்கும் மேற்பட்ட ஆய்வுகள் அறிவியல் பொறியியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அறிவியல் நகரத்தில் உள்ள நிறுவனங்களில் சுமார் ரூ.500 கோடிக்கு மேல் மதிப்புள்ள அறிவியல் தொழில்நுட்பப் பரிசோதனை உபகரணங்களும் கருவிகளும் உள்ளன. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்காக அறிவியல் நகரம் பல அரிய அறிவியல் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறது.

8.2 இந்த நகரத்தில் தற்சமயம் அமைந்துள்ள நிறுவனங்கள் மற்றும் அமையவிருக்கும் புதிய நிறுவனங்களின்மூலமாக அறிவியல் தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்தல், இந்த தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் மூலதன நிறுவனங்களுக்கிடையே தொழில்நுட்பங்களைப் பரிமாற்றம் செய்தல், உலக அளவில் தொழில்நுட்பங்களை முன்கூட்டியே அறிவது மற்றும் கணக்கிடுதல் மற்றும் உறுப்பினர் நிறுவனங்களின் பயன்பாட்டிற்குத் தேவையான இந்திய அளவிலான மற்றும் உலக அளவிலான மாநாடுகளை நடத்த ஏதுவாக அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்ட ஒரு வளாகத்தை உருவாக்கி அதை நன்கு பராமரித்தல் ஆகியவை அறிவியல் நகரின் முக்கியக் குறிக்கோள்கள் ஆகும்.



## 2007–2008–ல் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

8.3 முன்னேறும் தொழில்நுட்பங்களான மரபியல் தொழில்நுட்பம், அதிநுண்ம தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை ஆகியவற்றில் மாணவர்களுக்கான விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன.

8.4 சென்னை மாநகராட்சி அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அவர்கள் அறிவியல் உலகைப்பற்றி தெரிந்துகொள்வதற்காக 10 அறிவியல் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன.

8.5 அறிவியல் விழா நடத்தப்பட்டது. இவ்விழாவில் கண்காட்சி மட்டுமல்லாமல் தலைசிறந்த விஞ்ஞானிகள் அழைக்கப்பட்டு மக்களுடன் உரையாடுவதற்கும் சிறப்பு சொற்பொழிவு ஆற்றுவதற்கும் வழி வகை செய்யப்பட்டது.

8.6 அறிவியல் சார்ந்த தலைசிறந்த விரிவுரைகள், பள்ளி மாணவர்களுக்கான அறிவியல் நிபுணர்களை சந்தித்தல் அறிவியல் நகர உறுப்பினர் நிறுவனங்களுடன் சேர்ந்து அறிவியல் மாநாடு / கருத்தரங்குகள் நடத்துதல், அறிவியல் கண்காட்சிகள் நடத்துதல், அறிவியல் முகாம்கள் நடத்துதல், பள்ளி மாணவர்களுக்கு அறிவியல் விருதுகள் வழங்குதல் ஆகியவை அறிவியலை பிரபலப்படுத்துதல் திட்டத்தின் கீழ் செய்யப்படும் திட்டங்களாகும். இதுவரை 348 பள்ளி மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

87 பெண் அறிவியல் நிபுணர்களின் நிலையைக் கண்டறிய அறிவியல் நகரம் நாடு முழுவதும் உள்ள பெண் அறிவியல் நிபுணர்களின் புள்ளி விவரங்களைச் சேகரித்து இணைய தளத்தின் மூலம் எல்லோருக்கும் கிடைக்க வழி வகுத்துள்ளது. பெண் அறிவியல் நிபுணர்களை ஊக்குவிப்பதற்காக அறிவியல் நகரம், தமிழ்நாடு இளம்பெண் விஞ்ஞானி விருது மற்றும் வாழ்நாள் பெண் சாதனையாளர் விருது ஆகிய விருதுகளை வழங்கி வருகிறது. இதுவரை 32 தமிழ்நாடு இளம்பெண் விஞ்ஞானி விருது மற்றும் 12 வாழ்நாள் பெண் சாதனையாளர் விருதுகளை அறிவியல் நகரம் வழங்கியுள்ளது.

8.8 தகவல் மையம் ஏற்படுத்துதல் திட்டத்தில் பொறியியல் கல்லூரிகள், பல்தொழில்நுட்பக் கல்லூரிகள், உணவக மேலாண்மை மற்றும் சமையல் தொழில்நுட்பப் பாடங்கள் வழங்கும் உயர் கல்வி நிறுவனங்களின் புள்ளி விவரங்கள் அறிவியல் நகரத்தின் இணைய

[2008 மே 6

தளமான www.tamilnaduscientists.com-இல் வழங்கப்பட்டுள்ளது. காப்புரிமை பற்றிய சேவைகளும் அறிவுரைகளும் scicity.@dataone.in என்ற மின்னஞ்சல் மூலம் வழங்கப்படுகிறது. உலகிலுள்ள அறிவியல் சார்ந்த திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கும் முகமைகள், உலகிலுள்ள ஆய்வு நிறுவனங்கள், அறிவியல் மன்றங்கள் மற்றும் அறிவியல் தொழில் நுட்பத்தில் வளர்ச்சி பற்றிய குறிப்புகள் இவ்விணைய தளத்தில் காணலாம். இத்தகவல்களால் மாணவ சமுதாயமும், ஆராய்ச்சியாளர்களும் பயன் பெறுவர்.

## 2008–2009-ல் நிறைவேற்றவுள்ள திட்டங்கள்

### உடல் ஊனமுற்ற மாணவர்கள் பயன்பெறுவதற்காக அறிவியல் நிகழ்ச்சிகள்

*8.9* அறிவியல் நகரம் வருடத்திற்கு *4* அறிவியல் சார்ந்த நிகழ்ச்சிகளை உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு நடத்த உத்தேசித்துள்ளது. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பங்கு பெறுவதற்கு சென்னையிலுள்ள பல்வேறு பள்ளிகளிலுள்ள சுமார் *100* உடல் ஊனமுற்ற மாணவர்கள் அழைக்கப்படுவர். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.*2.00* இலட்சம் ஆகும்.

### அறிவியல் கருத்துகள் பரிமாற்றங்கள் பற்றிய கருத்தரங்குகள்

*8.10* அறிவியல் தொழில்நுட்பம் குறித்த பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் சமுதாயத்தில் நிலவும் பல்வேறு சிக்கலான பிரச்சினைகளைக் தீர்ப்பதற்கு எப்படி அறிவியல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது என்பது குறித்தும் அறிவியல் நகரம் நான்கு நாள் கருத்தரங்கு ஒன்றினை நடத்த உள்ளது. இக்கருத்தரங்கில் பங்கேற்பவர்கள் அறிவியல் கதைகள், நிகழ்ச்சிகள், அறிவியல் கட்டுரைகள் மற்றும் செய்தி ஊடகம், நவீன மின்னணு ஊடகம் போன்ற பல்வேறு ஊடகங்களுக்குக் குறிப்புகள் எழுதுதல் ஆகியவற்றில் அடிப்படை பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.*8.00* இலட்சம் ஆகும்.

### சென்னை அறிவியல் விழா 2009

*8.11* சென்னை அறிவியல் விழா *2009* அறிவியலைப் பிரபலபடுத்துதல் முயற்சியில் மக்களிடையே அறிவியல் பற்றிய பொது விழிப்புணர்வு, அறிவியல் ஆராய்ச்சி முடிவுகளை மக்களிடையே மிக எளிமையான மற்றும் புதுமையான முறையில் எடுத்துச்செல்லும் வகையில்



2008 மே 6]

திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வறிவியல் விழாவில் *40* முதல் *50*-க்கும் மேற்பட்ட தலை சிறந்த நிறுவனங்களின் அறிவியல் காட்சிப் பொருட்கள், பள்ளி மற்றும் கல்லூரிகளின் பரிசு பெற்ற அறிவியல் காட்சிப் பொருட்கள், விஞ்ஞானிகளின் செய்முறை விளக்கம், அறிவியல் சார்ந்த திரைப்படம், பொதுமக்கள் - விஞ்ஞானிகளிடையே கலந்துரையாடல் ஆகியவை நடைபெறும். அதுமட்டுமல்லாமல் வினாடி வினா, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, பொம்மலாட்டம் போன்ற நிகழ்ச்சிகளும் நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் மொத்த மதிப்பீடு ரூ.*30.00* இலட்சம் ஆகும்.

## 9. தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

*9.1* தமிழ்நாடு ஆவணக் காப்பகம் தலைமைச் செயலக மற்றும் பிற துறை ஆவணங்களை அரசின் மேற்கோள்களுக்காகவும் மற்றும் வரலாற்று ஆராய்ச்சிக்காகவும் பாதுகாத்து வருகிறது. தமிழ்நாடு ஆவணக் காப்பகம் தற்கால வரலாற்றில் முனைவர் ஆராய்ச்சி மையமாக சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் சுமார் *2.30* இலட்சம் அரிய நூல்கள் உள்ளன. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் ஒரு மாதகால ஆவண மேலாண்மை பயிற்சி அளிக்கப்படுகிறது. மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர் மற்றும் கடலூரில் இயங்கி வருகின்ற மாவட்ட ஆவண மையங்கள் மாவட்ட அளவிலான அரசு அலுவலகங்களிலிருந்து முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்களைச் சேகரித்து பாதுகாத்து வருகின்றன. தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மாவட்ட விவரச்சுவடிகளைத் தயாரித்து வெளியிட்டு வருகிறது. சமீபத்தில் தூத்துக்குடி மாவட்ட விவரச்சுவடி இரண்டு தொகுதிகளாக தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

*9.2* தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் *12*-வது நிதிக் குழு மானியத்தின்கீழ் பாரம்பரிய சின்னங்களைப் பாதுகாக்க பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இது போன்று பகுதி-II திட்டத்தின்கீழ், தமிழ்நாடு ஆவணக்காப்பகம் படிப்படியாக கணினி மயமாக்கப்படுவதுடன் நவீனப்படுத்தப்பட்டும் வருகிறது. *2008-2009* பகுதி-II திட்டத்தின்கீழ் நிர்வாகப் பிரிவை கணினி மயமாக்கிடவும் மற்றும் கணினி வழிப் பதிப்புமுறை கருவிகள் அமைத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

[2008 மே 6

## 10. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம்

*10.1* மாநில அளவிலான உயர் கல்வித் திட்டங்களை மேம்படுத்துவதற்கும், உயர் கல்விக்கான மாநில மற்றும் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கு உதவும் வகையிலும் தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம், ஒரு தன்னாட்சி அமைப்பாக உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம் மாநில உயர் கல்வி அமைச்சரைத் தலைவராகக் கொண்டு செயல்படுகிறது.

*10.2* உயர் கல்வி மற்றும் ஆய்வு தொடர்பாக அரசு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவை இம்மன்றத்தை அணுகும் போது அவற்றுக்குத் தக்க அறிவுரைகள் வழங்குதல்; உயர் கல்வி மேம்பாட்டிற்கான தகுந்த திட்டங்களை மாநில அளவில் உருவாக்குதல்; பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு அவ்வப்போது வழங்கும் நெறிமுறைகளுக்கிணங்க உயர் கல்வி நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்தும் வகையில் அவற்றின் செயல்பாடுகளைத் திட்டமிட்டு உருவாக்கிடவும் அவற்றை நிறைவேற்றவும் உதவி செய்தல்; மாநில அளவில் உள்ள கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் மேம்பாட்டுத் திட்டங்களைத் தெரிவு செய்து மன்றத்தின் குறிப்பு மற்றும் பரிந்துரையுடன் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவிற்கு அனுப்புதல் மற்றும் திட்டப் பணிகளின் செயலாக்கத்தைக் கண்காணித்தல்; உயர் கல்வி நிறுவனங்களுக்கிடையே பணிகளின் செயலாக்கத்தைக் கண்காணித்தல்; உயர் கல்வி நிறுவனங்களுக்கிடையே ஒத்துழைப்பினை உயர்த்துதல், ஒருங்கிணைத்தலை மேம்படுத்துதல் மற்றும் அவை தொழில் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதற்கான வாய்ப்பு வசதிகளைக் கண்டறிதல்; பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு மற்றும் அரசு விதிமுறைகளுக்கிணங்க, புதிய உயர் கல்வி நிறுவனங்களைத் தோற்றுவிப்பதற்கான நெறிமுறைகளை வடிவமைத்தல்; மாநிலத்தில் உயர் கல்விக்கென கூடுதல் நிதி ஆதாரங்களை ஏற்படுத்தும் வழிவகை குறித்து அறிவுரை நல்குதல்; உயர் கல்விக்கான பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் இதர கல்வி நிறுவனங்களில் பாடத் திட்டத்தை செழுமைப்படுத்தவும், காலத்திற்கேற்ற வகையில் கல்வித் தரத்தை சீரமைக்கவும் உதவுதல்; கல்வித் தரத்தை நிர்ணயித்து அதன் தொடர்ச்சியாக நிதி நல்கைக் குழுவிற்கு தேவையான உதவி புரிதல்; கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கிடையேயான திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் மேம்படுத்துதல், கண்காணிப்புத் திட்டம் ஏற்படுத்துதல் ஆகியவை இம்மன்றத்தின் முக்கியப் பணிகளாகும்.



2008 மே 6]

## 2007–2008–ல் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

*10.3* உலகளாவிய போட்டி காரணமாக பாடத்திட்டத்தினை மேம்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்து இம்மன்றம் பல கருத்தரங்குகளை நடத்தியது. அவை இளங்கலை (தமிழ்), இளம் இலக்கியவியல் (தமிழ்), இளம் வணிகவியல், இளங்கலை (பொருளியல்), இளம் அறிவியல் (விலங்கியல்), இளம் அறிவியல் (தாவரவியல்), இளங்கலை (வரலாறு) ஆகியனவாகும். தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பலகலைக்கழகங்கள், தன்னாட்சிக் கல்லூரிகள் ஆகியவற்றிலிருந்து பேராசிரியர்கள் இரண்டு நாள் கருத்தரங்கில் கலந்துகொண்டு, கலைத் திட்டம், பாடத் திட்டம் ஆகியவை சிறப்பாக உருவாக்க தங்கள் திறமைகளைப் பங்களித்தனர். பொருளியல், வணிகவியல் ஆகிய பாடங்களில் ஒருங்கிணைப்பாளர்கள் பாடத் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுத்தனர். இந்தப் பாடத் திட்டம் பயன்படுத்துவதற்கேற்ற வகையில் அனைத்துப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பங்கேற்பாளர்கள் ஆகியோருக்கு அனுப்பப்பட்டது.

*10.4* மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்திலிருந்து பெறப்பட்ட நிதியினைக் கொண்டு 13 இளநிலை பட்ட வகுப்புகளுக்கான நூல்கள், வல்லுநர்களால் தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 10.5 2008–2009–ல் நிறைவேற்றவுள்ள திட்டங்கள்

- மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகங்களில் உயர் தனிச் சிறப்பு மையங்களை உருவாக்குதல்
- கல்லூரிகளைத் தன்னாட்சி கோரி விண்ணப்பிக்க ஊக்குவித்தல், தன்னாட்சி நிலை பெற உதவி செய்தல்
- ஆசிரியர் பணியிடைப் பயிற்சிக் கல்லூரிகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்
- பாடத்திட்டத்தினை மேம்படுத்தவும் காலத்திற்கேற்ற மாற்றங்களைச் செய்யவும் பல்கலைக்கழகங்களுக்கு உதவிடுதல்
- தேர்வு முறையினை மேம்படுத்த பல்கலைக்கழகங்களுக்கு உதவிடுதல்
- ஆய்வுத் திட்டக் கருத்துருக்கள் தயாரிக்க ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்

[2008 மே 6

- மாநிலத்திலுள்ள பல்கலைக்கழக நூலகங்களை இணைத்தல்
- பல்கலைக்கழகங்கள் மின் ஆளுகை முறையில் செயல்பட ஊக்குவித்தல்
- கல்வி நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்
- கல்வி நிறுவனங்களில் கல்வித் தணிக்கையினை மேற்கொள்ளுதல்
- பாடநூல்களை தமிழ் மொழியினில் உருவாக்குதல்
- உயர் கல்வியில் ஆராய்ச்சிப் பணிகளுக்கு உதவிடுதல்
- ஆராய்ச்சி குறித்த பணிகளை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கு நிதியுதவி அளித்தல்
- உயர் கல்வியின் நிலை குறித்த அறிக்கை தயாரித்தல்
- கல்லூரி/பல்கலைக்கழகங்கள் மேலும் புதியதாக தேர்ந்தெடுக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்

## 11. தமிழ்நாடு மாநில உருது மன்றம்

*11.1* தமிழகத்தில் உருது மொழியினை வளர்க்கவும் மற்றும் மேம்படுத்தும் நோக்கத்துடன் 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உருது மன்றம் ஏற்படுத்தப்பட்டது. இந்த மன்றம் மாநில உயர் கல்வி அமைச்சரைத் தலைவராகக் கொண்டு செயல்படுகிறது.

*11.2* அரசு அளித்த நிதி உதவியின்மூலம் இம்மன்றம் இரண்டு கருத்தரங்குகள் மற்றும் இலக்கியக் கூட்டம் மற்றும் ஒரு பொது நிகழ்ச்சி ஆகியவற்றை நடத்தி அதில் கலந்து கொண்ட சிறந்த உருது புலவர்களுக்கும், தகுதி பெற்ற உருது மாணவர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. மேலும் தகுதி பெற்ற புலவர்களுக்கு அவர்களது இலக்கியப் படைப்பினை அச்சிடுவதற்கு நிதி உதவியும் வழங்கப்பட்டன.

*11.3* தமிழ்நாடு உருது அகாடமி, உருதுமொழியின் வளர்ச்சிக்காக 2008-2009-ல் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவு எடுத்துள்ளது:—



2008 மே 6]

(அ) அரசு / மாநகராட்சி பள்ளிகளில் உருது மொழி நூல்கள் அடங்கிய நூலகம் அமைக்க நிதியுதவி வழங்குதல்.

(ஆ) உருதுமொழி பயிற்சி நிறுவனம் அமைத்தல்.

(இ) உருதுமொழி பண்டிதர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்குதல்.

(ஈ) உருதுமொழி மாணவர்களின் உயர் கல்விக்கு நிதியுதவி அளித்தல்.

*11.4* 2007-2008 ஆம் ஆண்டில் அரசு ரூ. 6,17,042/- மானியமாக இம்மன்றத்திற்கு வழங்கியுள்ளது.

## கல்லூரிக் கல்வி

**அட்டவணை—1**

**மாநிலத்திலுள்ள கல்லூரிகளின் எண்ணிக்கை 2007—2008**

| கல்லூரிகள் வகை | அரசு கல்லூரிகள் | தனியார் கல்லூரிகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | உதவி பெறும் கல்லூரிகள் | சுயநிதி கல்லூரிகள் | |
| கலை மற்றும் அறிவியல் | 62 | 133 | 328 | 523 |
| உடற்கல்வி | – | 3 | 6 | 9 |
| கீழ்த்திசை | – | 10 | – | 10 |
| சமூகப்பணி பள்ளி | – | 2 | – | 2 |
| கல்வியியல் | 7 | 14 | 288 | 309 |
| பல்கலைக்கழக கல்லூரிகள் | 7 | – | – | 7 |
| **மொத்தம்** | **76** | **162** | **622** | **860** |

## அட்டவணை – 2

### மாணவர் சேர்க்கை 2007–2008

| கல்லூரிகள் வகை | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | | | | | | மாணவர் சேர்க்கை விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இள நிலை | முது நிலை | ஆராய்ச்சி படிப்பு | முனைவர் பட்டம் | கல்வி இயல் | மொத்தம் | இள நிலை | முது நிலை | ஆராய்ச்சி படிப்பு | முனைவர் பட்டம் | கல்வி இயல் | மொத்தம் |
| அரசு கல்லூரிகள் | 44258 | 3709 | 460 | 140 | 1053 | 49620 | 43134 | 3569 | 451 | 135 | 1053 | 48342 |
| உதவி பெறும் கல்லூரிகள் | 96774 | 19487 | 2430 | 420 | 1760 | 120871 | 79932 | 15743 | 2403 | 401 | 1760 | 100239 |
| சுயநிதி கல்லூரிகள் | 102907 | 25069 | 1050 | 200 | 13900 | 143126 | 62925 | 12267 | 1037 | 190 | 13860 | 90279 |
| மொத்தம் | 243939 | 48265 | 3940 | 760 | 16713 | 313617 | 185991 | 31579 | 3891 | 726 | 16673 | 238860 |



## தொழில்நுட்பக் கல்வி

### அட்டவணை – 3

### 2007–2008–ஆம் ஆண்டு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை, மொத்த இடங்கள் மற்றும் சேர்க்கப்பட்ட மாணவர் சேர்க்கை பற்றிய விவரங்கள்

| வ. எண் | பிரிவு | பயிலகங்களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | மாணவர் சேர்க்கை | பொது | | பி.ப | | மி.பி.ப | | ஆதி திராவிடர் | | பழங்குடியினர் | | மொத்தம் | | மொத்தம் (ஆண் + பெண்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| 1 | அரசு | 22 | 5160 | 5031 | 149 | 155 | 1419 | 814 | 859 | 392 | 761 | 398 | 57 | 27 | 3245 | 1786 | 5031 |
| 2 | அரசு உதவி | 34 | 12980 | 12318 | 374 | 100 | 5620 | 1185 | 2568 | 438 | 1654 | 299 | 68 | 12 | 10284 | 2034 | 12318 |
| 3 | இணைப்பு பெற்றவை | 3 | 215 | 127 | 2 | 0 | 53 | 0 | 35 | 0 | 36 | 0 | 1 | 0 | 127 | 0 | 127 |
| 4 | சுயநிதி | 205 | 69316 | 64055 | 4951 | 554 | 30987 | 2854 | 16160 | 1166 | 6724 | 542 | 107 | 10 | 58929 | 5126 | 64055 |
| | மொத்தம் | 264 | 87671 | 81531 | 5476 | 809 | 38079 | 4853 | 19622 | 1996 | 9175 | 1239 | 233 | 49 | 72585 | 8946 | 81531 |

## அட்டவணை – 4

### 2007–2008 ஆம் ஆண்டு பொறியியற் கல்லூரிகளின் எண்ணிக்கை, மொத்த இடங்கள் மற்றும் சேர்க்கப்பட்ட மாணவர் சேர்க்கை பற்றிய விவரங்கள்

| வ. எண் | பிரிவு | பயிலகங்களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | இதர பிரிவினர் | | பிற்படுத்தப் பட்டோர் | | மிகவும் பிற்படுத்தப் பட்டோர் | | ஆதி திராவிடர் | | பழங்குடியினர் | | மொத்தம் ஆண் + பெண் | | மொத்தம் சேர்க்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | | | |
| 1 | அரசு | 6 | 1900 | 126 | 69 | 643 | 342 | 271 | 126 | 232 | 107 | 12 | 5 | 1284 | 648 | 1933 |
| 2 | அரசு நிதி உதவி | 3 | 2130 | 279 | 118 | 699 | 397 | 250 | 128 | 195 | 125 | 15 | 3 | 1438 | 771 | 2209 |
| 3 | சுயநிதி | 263 | 104814 | 13066 | 5964 | 27691 | 18174 | 10979 | 5569 | 5492 | 2881 | 122 | 47 | 57350 | 32635 | 89985 |
| | மொத்தம் | 272 | 108844 | 13471 | 6151 | 29033 | 18913 | 11500 | 5823 | 5919 | 3113 | 149 | 55 | 60072 | 34055 | 94127 |



வரைபடம்-1

தமிழ்நாட்டில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் எண்ணிக்கை




| | 1995-1996 | 1996-1997 | 1997-1998 | 1998-1999 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 | 2002-2003 | 2003-2004 | 2004-2005 | 2005-2006 | 2006-2007 | 2007-2008 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரசு கல்லூரிகள் | 65 | 65 | 65 | 67 | 67 | 67 | 67 | 67 | 67 | 67 | 67 | 74 | 76 |
| அரசு உதவி பெறும் கல்லூரிகள் | 160 | 160 | 160 | 161 | 161 | 161 | 161 | 162 | 162 | 162 | 162 | 162 | 162 |
| சுயநிதி கல்லூரிகள் | 98 | 122 | 158 | 175 | 194 | 235 | 249 | 249 | 249 | 274 | 441 | 567 | 622 |

■ சுயநிதி கல்லூரிகள் ■ அரசு உதவி பெறும் கல்லூரிகள் ■ அரசு கல்லூரிகள்


வரைபடம்-2
326272
325621
331900
349823
371631
420174
430821
405742
472598
525436
568226
600136
674486
சுயநிதி கல்லூரிகள்
அரசு உதவி பெறும் கல்லூரிகள்
அரசு கல்லூரிகள்




வரைபடம்-3
149342
162114
171578
182509
207944
214574
220080
210984
250429
276362
309653
328026
364222
அரசுக் கல்லூரிகள்
அரசு உதவி பெறும் கல்லூரிகள்
சுயநிதிக் கல்லூரிகள்




| | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-01 | 2001-02 | 2002-03 | 2003-04 | 2004-05 | 2005-06 | 2006-07 | 2007-08 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுயநிதிக் கல்லூரிகள் | 76 | 106 | 118 | 143 | 209 | 225 | 222 | 213 | 224 | 238 | 263 |
| அரசு உதவிபெறும் கல்லூரிகள் | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 |
| அரசுக் கல்லூரிகள் | 7 | 7 | 7 | 7 | 6 | 6 | 6 | 6 | 6 | 6 | 6 |
| அண்ணா பல்கலை. கல்லூரிகள் | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 |






| | 2001-02 | 2002-03 | 2003-04 | 2004-05 | 2005-06 | 2006-07 | 2007-08 |
|---|---|---|---|---|---|---|---|
| சுயநிதிக் கல்லூரிகள் | 46096 | 56033 | 44566 | 45934 | 62648 | 70291 | 89995 |
| அரசு உதவிபெறும் கல்லூரிகள் | 1383 | 1562 | 1712 | 1675 | 1728 | 1788 | 2200 |
| அரசுக் கல்லூரிகள் | 1408 | 1436 | 1828 | 1857 | 1885 | 1974 | 1933 |
| அண்ணா பல்கலை. கல்லூரிகள் | 1313 | 1403 | 1509 | 1538 | 1575 | 1564 | 1681 |

வரைபடம் - 6

தமிழ்நாட்டிலுள்ள பல்தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை




| | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-01 | 2001-02 | 2002-03 | 2003-04 | 2004-05 | 2005-06 | 2006-07 | 2007-08 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரசு உதவிபெறும் கல்லூரிகள் | 125 | 143 | 142 | 156 | 147 | 147 | 145 | 146 | 153 | 166 | 205 |
| அரசுக் கல்லூரிகள் | 35 | 35 | 35 | 35 | 41 | 41 | 40 | 39 | 37 | 37 | 37 |
| சுயநிதிக் கல்லூரிகள் | 21 | 21 | 22 | 22 | 22 | 22 | 22 | 22 | 22 | 22 | 22 |

சுயநிதிக் கல்லூரிகள் ■ அரசுக் கல்லூரிகள் □ அரசு உதவிபெறும் கல்லூரிகள்



வரைபடம் - 7

தமிழ்நாட்டிலுள்ள பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை




| | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-01 | 2001-02 | 2002-03 | 2003-04 | 2004-05 | 2005-06 | 2006-07 | 2007-08 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரசு உதவிபெறும் கல்லூரிகள் | 17143 | 21282 | 16004 | 12057 | 20814 | 28097 | 29003 | 32370 | 41745 | 49924 | 64121 |
| அரசுக் கல்லூரிகள் | 6957 | 6544 | 6878 | 6486 | 7469 | 8506 | 9148 | 10135 | 11317 | 11264 | 12619 |
| சுயநிதிக் கல்லூரிகள் | 3589 | 3651 | 3635 | 3093 | 4240 | 4062 | 4826 | 4824 | 4984 | 5026 | 5031 |

சுயநிதிக் கல்லூரிகள் ■ அரசுக் கல்லூரிகள் □ அரசு உதவிபெறும் கல்லூரிகள்

[2008 மே 6

## இணைப்பு II

[474 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## மானியக் கோரிக்கை எண் 20—உயர் கல்வித் துறை அறிவிப்புகள், 2008–2009

### அறிவிப்பு–1

#### அரசு கலைக் கல்லூரிகள் நிலை உயர்த்துதல்

இரண்டு முதுகலைப் பட்டப்படிப்புகளையும், 2000-க்கும் அதிகமான மாணவர்களையும் கொண்ட இரண்டாம் நிலைக் கல்லூரிகள் முதல்நிலைக் கல்லூரிகளாக தரம் உயர்த்தப்படுகின்றன.

தமிழகத்தில் தற்போதுள்ள 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 2005-2006 வரை 14 கல்லூரிகளும், 2006-2007-ல் 7 கல்லூரிகளும் ஆக மொத்தம் 21 கல்லூரிகள் முதல்நிலை கல்லூரிகளாக தரம் உயர்த்தப்பட்டன.

2007-2008 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட 6 அரசு கலைக் கல்லூரிகள் முதல்நிலை கல்லூரிகளாக தரம் உயர்த்தரப்பட்டுள்ளன:—

01. அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை
02. அரசு கலைக் கல்லூரி, தருமபுரி
03. அழகப்பா அரசு கல்லூரி, காரைக்குடி.
04. அரசு மகளிர் கல்லூரி, கும்பகோணம்
05. அரசு மகளிர் கல்லூரி, புதுக்கோட்டை
06. அரசு ஆடவர் கல்லூரி, நந்தனம், சென்னை.

### அறிவிப்பு–2

#### அரசு கலைக் கல்லூரிகளில் ஒளி, ஒலி வசதிகள் செய்தல்

தற்போது, கல்லூரிகளில் கல்வி கற்பிக்கும் முறை பல மாற்றங்களை சந்தித்து வருகிறது. பாடங்களை ஒலி, ஒளி வசதிகளைக் கொண்ட உபகரணங்கள் மூலம் கற்பிப்பது சிறந்த முறை எனக் கல்வி வல்லுநர்களால் கருதப்பட்டு, அம்முறை செயல்படுத்தப்பட்டும்



2008 மே 6]

வருகிறது. இவ்வசதி பெரும்பாலான அரசு கலைக் கல்லூரிகளில் ஏற்படுத்தப்படாமல் இருந்து வருகிறது. எனவே, மேற்படி ஒலி, ஒளி வசதிகள் மூலம், வகுப்பறைகளில் கல்வி கற்பிப்பது என முடிவு செய்யப்பட்டு அதற்குத் தேவையான திரை, எல்.சி.டி. புரொஜெக்டர் மற்றும் ஒலிப்பெருக்கி கருவிகள் ஆகியவை பொருத்துவதற்கு ஆவன செய்யப்பட வேண்டுமென இவ்வரசால் முடிவு செய்யப்பட்டு, 2007-2008 ஆம் ஆண்டு 10 கல்லூரிகளில் ஒளி, ஒலி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2008-2009 ஆம் கல்வியாண்டில் கீழ்க்கண்ட 25 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ரூ.50 இலட்சம் செலவில் இவ்வசதி ஏற்படுத்தப்படும்:—

| வ. எண் | கல்லூரியின் பெயர் |
|---|---|
| 01. | அரசு கலைக் கல்லூரி, அரியலூர். |
| 02. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்), பர்கூர் |
| 03. | இராஜேஸ்வரி வேதாசலம் அரசு கலைக் கல்லூரி, செங்கல்பட்டு. |
| 04. | காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி, சென்னை. |
| 05. | அரசு கலைக் கல்லூரி, நந்தனம், சென்னை. |
| 06. | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, செய்யாறு. |
| 07. | அரசு கலைக் கல்லூரி, சிதம்பரம். |
| 08. | அரசு கலைக் கல்லூரி, கோயம்புத்தூர். |
| 09. | அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி. |
| 10. | அரசு கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி. |
| 11. | அருள்மிகு மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, மதுரை. |
| 12. | அரசு கலைக் கல்லூரி, மேலூர். |
| 13. | நாமக்கல் கவிஞர் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, நாமக்கல். |
| 14. | லோகநாத நாராயணசாமி அரசினர் கலைக் கல்லூரி, பொன்னேரி. |

[2008 மே 6

| வ. எண் | கல்லூரியின் பெயர் |
|---|---|
| 15. | அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, புதுக்கோட்டை. |
| 16. | சேதுபதி அரசினர் கலைக் கல்லூரி, இராமநாதபுரம். |
| 17. | அரசு கலைக் கல்லூரி, சேலம். |
| 18. | அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை. |
| 19. | இராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருநெல்வேலி. |
| 20. | குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர். |
| 21. | அருள்மிகு சுப்பரமணியசாமி அரசு கலைக் கல்லூரி, திருத்தணி. |
| 22. | பெரியார் ஈ.வெ.ரா. கலைக் கல்லூரி, வேலூர் |
| 23. | முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி, வேலூர் |
| 24. | திரு. கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி, விருத்தாசலம். |
| 25. | அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, வாலாஜாபேட்டை. |

## அறிவிப்பு–3

### அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலைக் கல்லூரிகளில் ஆசிரியர் நியமனம்

தமிழகத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2000-க்கும் அதிகமான பணியிடங்கள் காலியாக இருந்தன. கல்வியின் தரம் உயர்த்திட பாடுபடும் இந்த அரசு, அரசு கல்லூரிகளில் ஆசிரியர்களை நியமிப்பது மிக முக்கியம் என்று உணர்ந்து அதனடிப்படையில் 2007-2008 ஆம் கல்வியாண்டில் கல்லூரிகளில் 914 விரிவுரையாளர்களை ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் தேர்வு செய்து, அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் நியமனம் செய்துள்ளது. மேலும், 2,600 பணியிடங்கள் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பணியமர்த்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.



2008 மே 6]

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1,062 விரிவுரையாளர்கள் வரும் கல்வியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நியமிக்கப்பட உள்ளனர். அவற்றில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தவருக்கென கணக்கிடப்பட்டுள்ள 522 பின்னடைவு விரிவுரையாளர் பணியிடங்கள் (Shortfall Vacancies) சிறப்பு நியமனம் (Special Recruitment) மூலம் முழுமையாகவும், மீதமுள்ள 540 விரிவுரையாளர் பணியிடங்கள் பொது நியமனம் (General Recruitment) மூலமாகவும் நிரப்பப்படவுள்ளன.

மேலும் 31-5-2008 ஆம் நாளன்று அரசு கல்லூரிகளில் காலியாகவிருக்கும் ஆசிரியப் பணியிடங்கள் 640-ம் இந்த ஆண்டிலேயே நிரப்பப்படும். ஆக இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு அரசு கலைக் கல்லூரிகளில் 914 விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும், 1,744 பணியிடங்கள் இந்த ஆண்டு நிரப்பப்படும். அது இல்லாமல், உதவி பெறும் கல்லூரிகளில் 2,600 பணியிடங்கள் நிரப்பிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆக இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, கல்லூரிகளில் 5,076 ஆசிரியப் பணியிடங்கள் நிரப்பிட நடவடிக்கை எடுத்திருப்பது என்பது இதுவரை எந்த அரசும் செய்யாத சாதனை மட்டுமல்ல, இதன் மூலம் உயர் கல்வியின் தரம் உயர்த்திட வழி வகுக்கப்பட்டுள்ளது.

## அறிவிப்பு–4

### அரசு கலைக் கல்லூரிகளில் புதிதாக நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் புதிதாக நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு கற்பித்தல் முறைகளில் பயிற்சி அளிப்பதன்மூலம் அவர்களால் மாணவர்களுக்கு சிறந்த முறையில் கல்வியை வழங்க முடியும் என்பதால், அவர்களுக்கு ஒரு மாதம் பயிற்சியினை வழங்க அரசால் முடிவு செய்யப்பட்டு, அதன்படி 2007 ஆம் ஆண்டில் ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 914 விரிவுரையாளர்களுக்கு, தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தால் ஒரு மாதம் பயிற்சி வழங்கப்பட்டு, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

[2008 மே 6

அதுபோலவே, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், இவ்வாண்டும் ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் நியமனம் செய்யப்படவுள்ள 1,744 விரிவுரையாளர்களுக்கும் தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தால் ஒரு மாதம் பயிற்சி அளிக்கப்படும்.

## அறிவிப்பு–5

### விருப்பார்ந்த தகுநிறை கல்வித் திட்டம்

### (Choice Based Credit System)

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், கல்லூரிகள் தொகுப்பு திட்டமும் (Cluster System), விருப்பார்ந்த தகுநிறை கல்வித் திட்டத்தினை (Choice Based Credit System) அறிமுகப்படுத்தும் நோக்கோடு, கல்வியின் தரத்தினை மேம்படுத்தவும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கொண்டு வருவதன் அவசியம் குறித்து பரிசீலிக்க மூன்று துணை வேந்தர்கள் அடங்கிய ஒரு குழுவை அரசு அமைத்தது. இக்குழு தனது அறிக்கையை அரசுக்கு அளித்துள்ளது. 2008-2009 ஆம் கல்வியாண்டு முதல் அனைத்து கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் விருப்பார்ந்த தகுநிறை கல்வித் திட்டம் கட்டாயமாக்கப்படும், சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் சோதனை அடிப்படையில் கல்லூரிகள் தொகுப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

## அறிவிப்பு–6

### தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம் அமைத்தல்

மாநில அளவிலான உயர் கல்வித் திட்டங்களை மேம்படுத்துவதற்கும், உயர் கல்விக்கான மாநில மற்றும் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கும் நிறுவப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் போன்று, தொழில்நுட்பக் கல்வி மேம்பாட்டிற்கானத் திட்டங்களை மாநில அளவில் உருவாக்குவதற்காக, தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம் (Tamil Nadu State Council for Technical Education) ஒன்று புதிதாக ஏற்படுத்தப்படும்.



2008 மே 6]

## அறிவிப்பு–7

### அரசு பொறியியல் கல்லூரிகளில் மின்னணு நூலகங்கள் ஏற்படுத்துதல்

இந்த ஆண்டு ரூபாய் 57 இலட்சம் செலவில் மின்னணு நூலகங்கள் கீழ்க்கண்ட இரண்டு அரசு பொறியியல் கல்லூரிகளில் ஏற்படுத்தப்படும்:—

1. அரசு பொறியியல் கல்லூரி, திருநெல்வேலி.
2. அரசு பொறியியல் கல்லூரி, பர்கூர்.

## அறிவிப்பு–8

### பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா கட்டடங்கள்

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டை நினைவு கூறும் வண்ணம் இந்த ஆண்டு உயர் கல்வித் துறையின்கீழ் இயங்கும் அனைத்து அரசு கல்வி நிறுவனங்களில் கட்டப்படும் கட்டடங்களுக்கு "பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா கட்டடம்" என்று பெயர் சூட்டப்படும்.

## அறிவிப்பு–9

### அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு கணினி வழங்குதல்

கீழ்க்கண்ட ஐந்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ரூ.88.00 இலட்சம் செலவில் கணினி வசதிகள் செய்து தரப்படும். இதனால், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் பயன் பெறுவர்.

| வ. எண் | கல்லூரியின் பெயர் | தேவைப்படும் கணினி விவரம் |
|---|---|---|
| 1. | டாக்டர் கலைஞர் அரசு கலைக் கல்லூரி (சட்டமன்றப் பொன்விழா), குளித்தலை | 50 |
| 2. | அரசு கலைக் கல்லூரி, சுரண்டை | 50 |
| 3. | அரசு கலைக் கல்லூரி, கரூர் | 40 |

[2008 மே 6

| | | |
|---|---|---|
| 4. | முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி, வேலூர். | 40 |
| 5. | எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கல்லூரி, திருப்பூர். | 40 |
| | மொத்தம் | 220 |

## அறிவிப்பு–10

### அரசு கலைக் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள்

உயர் கல்வியின் வளர்ச்சியில் உள்கட்டமைப்பு வசதிகள் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒரு கல்லூரியின் வகுப்பறைகளின் எண்ணிக்கை, அவற்றில் கற்பிக்க ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் மற்றும் கல்வி கற்பிப்பதில் தற்கால முன்னேற்றங்கள் வகுப்பறையில் ஏற்படுத்துதல் ஆகியவை உயர் கல்வியின் தரம் உயர்த்துபவை. இத்தகைய வசதிகள் அரசு கல்லூரி மாணவர்களுக்கு சென்றடைய வேண்டுமென்ற நோக்கில், 2006-2007 மற்றும் 2007-2008 ஆகிய ஆண்டுகளில் ரூ.31.50 கோடி மதிப்பீட்டில் 622 வகுப்பறைகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு, கட்டடங்கள் முடியும் தருவாயில் உள்ளன. இந்த ஆண்டு மேலும் கூடுதலாக 520 வகுப்பறைகள் ரூ.39.00 கோடியில் கீழ்க்கண்ட கல்லூரிகளில் கட்டி முடிக்கப்படும். இதன்மூலம் அரசுக் கல்லூரிகளில் வகுப்பறைகளுக்கான தேவை முழுமையாக பூர்த்தி அடையும்.



2008 மே 6]

| வ. எண் | கல்லூரியின் பெயர் | | கட்டப்பட உள்ள வகுப் பறைகள் |
|---|---|---|---|
| 1. | அரியலூர் | அரசு கலைக் கல்லூரி | 17 |
| 2. | ஆத்தூர் | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, வட சென்னிமலை. | 12 |
| 3. | சென்னை | காயிதே மில்லத் அரசு கலைக் கல்லூரி. | 10 |
| 4. | சென்னை | இராணி மேரி கல்லூரி | 10 |
| 5. | சென்னை | வெலிங்டன் சீமாட்டி மகளிர் கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம் | 5 |
| 6. | சென்னை | மாநிலக் கல்லூரி | 24 |
| 7. | சென்னை | அரசு கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம், சைதாப்பேட்டை. | 5 |
| 8. | சென்னை | அரசு கலைக் கல்லூரி, நந்தனம். | 12 |
| 9. | சென்னை | டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரி, வியாசர்பாடி. | 5 |
| 10. | சென்னை | பாரதி மகளிர் கலைக் கல்லூரி, வட சென்னை. | 20 |
| 11. | செய்யாறு | அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி. | 14 |
| 12. | சிதம்பரம் | அரசு கலைக் கல்லூரி. | 5 |
| 13. | கோயம்புத்தூர் | அரசு மகளிர் கல்வியியல் கல்லூரி. | 5 |
| 14. | கோயம்புத்தூர் | அரசு கலைக் கல்லூரி. | 10 |
| 15. | கடலூர் | பெரியார் கலைக் கல்லூரி. | 12 |
| 16. | குடியாத்தம் | அரசு திருமகள் ஆலை கலைக் கல்லூரி. | 5 |
| 17. | கரூர் | அரசு கலைக் கல்லூரி தான்தோன்றிமலை. | 15 |
| 18. | கிருஷ்ணகிரி | அரசு கலைக் கல்லூரி. | 15 |
| 19. | கும்பகோணம் | அரசு மகளிர் கலைக் கல்லூரி. | 12 |
| 20. | கும்பகோணம் | அரசு ஆடவர் கலைக் கல்லூரி. | 5 |
| 21. | மதுரை | அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரி. | 13 |
| 22. | மன்னார்குடி | மன்னை இராஜகோபாலசாமி அரசு கலைக் கல்லூரி. | 12 |
| 23. | மயிலாடுதுறை | தர்மபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கலைக் கல்லூரி. | 13 |

| வ. எண் | கல்லூரியின் பெயர் | | கட்டப்பட உள்ள வகுப் பறைகள் |
|---|---|---|---|
| 24. | முசிறி | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி. | 15 |
| 25. | நாமக்கல் | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி. | 5 |
| 26. | நாமக்கல் | நாமக்கல் கவிஞர் அரசு மகளிர் கலைக் கல்லூரி. | 8 |
| 27. | பரமக்குடி | அரசு கலைக் கல்லூரி. | 6 |
| 28. | பொன்னேரி | உலகநாத நாரராயணசாமி அரசு கலைக் கல்லூரி. | 7 |
| 29. | புதுக்கோட்டை | மாமன்னர் அரசு கலைக் கல்லூரி. | 20 |
| 30. | புதுக்கோட்டை | அரசு கல்வியியல் கல்லூரி. | 5 |
| 31. | புதுக்கோட்டை | அரசு மகளிர் கலைக் கல்லூரி. | 15 |
| 32. | இராமநாதபுரம் | சேதுபதி அரசு கலைக் கல்லூரி. | 10 |
| 33. | இராசிபுரம் | திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரி. | 9 |
| 34. | சேலம் | அரசு கலைக் கல்லூரி. | 5 |
| 35. | சேலம் | அரசு மகளிர் கலைக் கல்லூரி. | 7 |
| 36. | சிவகங்கை | அரசு மகளிர் கலைக் கல்லூரி. | 7 |
| 37. | தஞ்சாவூர் | குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி. | 5 |
| 38. | திண்டிவனம் | அ. கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரி. | 5 |
| 39. | திருநெல்வேலி | இராணி அண்ணா அரசு கலைக் கல்லூரி. | 5 |
| 40. | திருப்பூர் | சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி. | 10 |
| 41. | திருப்பூர் | எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரி. | 13 |



| வ. எண் | கல்லூரியின் பெயர் | | கட்டப்பட உள்ள வகுப் பறைகள் |
|---|---|---|---|
| 42. | திருத்தணி | அருள்மிகு சுப்ரமணியசுவாமி அரசு கலைக் கல்லூரி. | 5 |
| 43. | திருவாரூர் | திருவி.க. அரசு கலைக் கல்லூரி. | 13 |
| 44. | திருச்சி | அரசு கலைக் கல்லூரி. | 13 |
| 45. | திருச்சி | பெரியார் ஈ.வெ.ரா. அரசு கலைக் கல்லூரி. | 20 |
| 46. | உதகமண்டலம் | அரசு கலைக் கல்லூரி. | 18 |
| 47. | உடுமலைப் பேட்டை | அரசு கலைக் கல்லூரி. | 11 |
| 48. | வேலூர் | முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி. | 10 |
| 49. | வேலூர் | அரசு கல்வியியல் கல்லூரி. | 5 |
| 50. | விருத்தாச்சலம் | திரு. கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி. | 5 |
| 51. | வாலாஜாப் பேட்டை | அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி. | 7 |
| | | மொத்தம் | 520 |

## அறிவிப்பு–11

### அரசு கலைக் கல்லூரிகளில் சுற்றுச் சுவர் கட்டுதல்

2008-2009 ஆண்டில் 12 அரசு கலைக் கல்லூரிகளில் சுமார் ரூ.103.00 இலட்சம் செலவில் சுற்றுச் சுவர் கட்டப்படும். இதன்மூலம் அரசு மகளிர் கல்லூரிகள் அனைத்திற்கும் சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்படும். கல்லூரிகளின் விவரம்:—

[2008 மே 6

| வ. எண் | கல்லூரியின் பெயர் | கட்டப்படவுள்ள சுற்றுச்சுவரின் நீளம் (மீ) |
|---|---|---|
| 1. | சேதுபதி அரசு கலைக் கல்லூரி, இராமநாதபுரம் | 50 |
| 2. | குந்தவை நாச்சியார் மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர் | 50 |
| 3. | இராணி அண்ணா மகளிர் கலைக் கல்லூரி, திருநெல்வேலி. | 150 |
| 4. | அரசு மகளிர் கலைக் கல்லூரி, பர்கூர் | 815 |
| 5. | எம்.வி.எம். அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல் | 1000 |
| 6. | அரசு மகளிர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி | 390 |
| 7. | அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரி, மதுரை | 260 |
| 8. | நாமக்கல் கவிஞர் அரசு மகளிர் கலைக் கல்லூரி, நாமக்கல் | 223 |
| 9. | அரசு மகளிர் கலைக் கல்லூரி, நிலக்கோட்டை | 870 |
| 10. | அரசு மகளிர் கலைக் கல்லூரி, சிவகங்கை | 498 |
| 11. | எஸ்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருப்பூர் | 330 |
| 12. | தருமபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கலைக் கல்லூரி, மயிலாடுதுறை | 520 |
| | மொத்தம் | 5156 |



2008 மே 6]

## அறிவிப்பு—12

### அரசு கலைக் கல்லூரிகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்

2008-2009 நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளவாறு, கீழ்க்காணும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தண்ணீர் வசதியுடன் 188 நவீன கழிப்பறை தொகுப்புகள் ரூ.752.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும். இதன்மூலம் கீழ்க்கண்ட கல்லூரிகளில் சுகாதாரமும் சுற்றுப்புற சூழ்நிலையும் மேம்படுத்தப்படும்:—

**கல்லூரிகளின் விவரம்**

| வ. எண் | அரசு கலைக் கல்லூரி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | காயிதே மில்லத் அரசு கலைக் கல்லூரி, சென்னை | 6 |
| 2. | இராணி மேரி கல்லூரி, சென்னை | 7 |
| 3. | பாரதி மகளிர் கல்லூரி, சென்னை | 5 |
| 4. | எம்.வி.எம். அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல் | 3 |
| 5. | அரசு மகளிர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி | 2 |
| 6. | அரசு மகளிர் கலைக் கல்லூரி, கும்பகோணம் | 5 |
| 7. | தர்மபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கலைக் கல்லூரி, மயிலாடுதுறை | 2 |
| 8. | நாமக்கல் கவிஞர் அரசு மகளிர் கலைக் கல்லூரி, நாமக்கல் | 3 |
| 9. | அரசு மகளிர் கலைக் கல்லூரி, நிலக்கோட்டை | 1 |
| 10. | அரசு மகளிர் கலைக் கல்லூரி, புதுக்கோட்டை | 3 |
| 11. | அரசு மகளிர் கலைக் கல்லூரி, இராமநாதபுரம் | 1 |
| 12. | அரசு மகளிர் கலைக் கல்லூரி, சேலம் | 3 |
| 13. | குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர் | 4 |

[2008 மே 6

| வ. எண் | அரசு கலைக் கல்லூரி | எண்ணிக்கை |
|---|---|---|
| 14. | இராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருநெல்வேலி | 3 |
| 15. | எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருப்பூர் | 3 |
| 16. | அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, வாலாஜாப்பேட்டை | 2 |
| 17. | அரசு மகளிர் கலைக் கல்லூரி, சிவகங்கை | 2 |
| 18. | அரசு மகளிர் கலைக் கல்லூரி, பர்கூர் | 2 |
| 19. | அரசு கலைக் கல்லூரி, அரியலூர் | 4 |
| 20. | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, வட சென்னிமலை, ஆத்தூர் | 2 |
| 21. | இராஜேஸ்வரி வேதாச்சலம் அரசு கலைக் கல்லூரி, செங்கல்பட்டு | 2 |
| 22. | மாநிலக் கல்லூரி, சென்னை | 6 |
| 23. | அரசு கலைக் கல்லூரி, நந்தனம், சென்னை | 3 |
| 24. | டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரி, வியாசர்பாடி, சென்னை | 1 |
| 25. | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, செய்யாறு | 3 |
| 26. | அரசு கலைக் கல்லூரி, சிதம்பரம் | 3 |
| 27. | அரசு கலைக் கல்லூரி, கோயம்புத்தூர் | 4 |
| 28. | பெரியார் அரசு கல்லூரி, கடலூர் | 4 |
| 29. | அரசு கலைக் கல்லூரி, தருமபுரி | 4 |
| 30. | அரசு திருமகள் ஆலைக் கல்லூரி, குடியாத்தம் | 2 |
| 31. | அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி | 3 |
| 32. | அரசு கலைக் கல்லூரி, தான்தோன்றிமலை, கரூர் | 6 |
| 33. | அரசு கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி | 2 |



2008 மே 6]

| வ. எண் | அரசு கலைக் கல்லூரி | எண்ணிக்கை |
|---|---|---|
| 34. | அரசு கலைக் கல்லூரி, கும்பகோணம் | 4 |
| 35. | மன்னை இராஜகோபாலசாமி அரசு கலைக் கல்லூரி, மன்னார்குடி | 3 |
| 36. | அரசு கலைக் கல்லூரி, மேலூர் | 2 |
| 37. | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, முசிறி | 2 |
| 38. | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, நாமக்கல் | 2 |
| 39. | லோகநாத நாராயணசாமி, அரசு கலைக் கல்லூரி, பொன்னேரி. | 2 |
| 40. | மாமன்னர் கல்லூரி, புதுக்கோட்டை | 6 |
| 41. | சேதுபதி அரசு கலைக் கல்லூரி, இராமநாதபுரம் | 2 |
| 42. | திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரி, இராசிபுரம் | 4 |
| 43. | அரசு கலைக் கல்லூரி, சேலம் | 7 |
| 44. | மன்னர் துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரி, சிவகங்கை | 2 |
| 45. | மன்னர் சரபோஜி அரசு கலைக் கல்லூரி, தஞ்சாவூர் | 3 |
| 46. | அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை | 3 |
| 47. | அ. கோவிந்தசாமி, அரசு கலைக் கல்லூரி, திண்டிவனம் | 2 |
| 48. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி அரசு கலைக் கல்லூரி, திருத்தணி | 1 |
| 49. | திரு.வி.க. அரசு கலைக் கல்லூரி, திருவாரூர் | 7 |
| 50. | பெரியார் ஈ.வெ.ரா. கலைக் கல்லூரி, திருச்சி | 6 |
| 51. | அரசு கலைக் கல்லூரி, உதகமண்டலம் | 6 |

[2008 மே 6

| வ. எண் | அரசு கலைக் கல்லூரி | எண்ணிக்கை |
|---|---|---|
| 52. | அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை | 2 |
| 53. | முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி, வேலூர் | 2 |
| 54. | அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம் | 3 |
| 55. | திரு. கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி, விருத்தாச்சலம் | 4 |
| 56. | சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர். | 1 |
| 57. | அரசு கலைக் கல்லூரி, திருவெறும்பூர் | 2 |
| 58. | அரசு கலைக் கல்லூரி, பரமக்குடி | 1 |
| 59. | வி.எஸ்.எஸ். அரசு கலைக் கல்லூரி, பூலாங்குறிச்சி. | 1 |
| மொத்தம் | | 188 |

## அறிவிப்பு–13

### கும்பகோணம் அரசு கலைக் கல்லூரிக்கு செல்ல காவிரி ஆற்றில் நடைபாலம் அமைத்தல்

கும்பகோணம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு கும்பகோணம் நீதிமன்ற சாலையில் இருந்து சென்றுவர காவிரி ஆற்றின் குறுக்கே 80 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட நடைபாலம் பயன்படுத்த இயலாத அளவுக்கு சேதமைடந்துள்ளது. இதன் விளைவாக இக்கல்லூரியைச் சார்ந்த 2500-க்கும் மேற்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் நடைபால வசதியின்றி, இரண்டு கிலோ மீட்டருக்கும் அதிகமான தூரம் மாற்றுப் பாதையில் சுற்றி வந்து கல்லூரியை அடையவேண்டிய நிலை உள்ளது. இதனை கருத்தில் கொண்டு, மாணவர்களின் நலனுக்காக ரூ.41.50 இலட்ச மதிப்பீட்டில் புதிய நடைபாலம் இந்த நிதியாண்டு கட்டி முடிக்கப்படும்.



2008 மே 6]

## அறிவிப்பு 14

### சேலம் அரசினர் பொறியியல் கல்லூரி நூலகத்தில் கூடுதல் வசதிகள்

சேலம், அரசினர் பொறியியல் கல்லூரிகள் நூலகக் கட்டட வசதிக்காக ரூ.100 இலட்சம் 2006-2007-ல் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சிறந்த நூலக வசதியினை ஏற்படுத்தும் வகையில், நவீன வசதிகள் கொண்ட நூலகமாக உருவாக்கும் விதத்தில், இந்த நூலக கட்டடம், தலை சிறந்த பல்கலைக்கழகங்கள் / நிறுவனங்களிலிருந்து பல்வேறு புத்தகங்கள், இதழ்கள் ஆகியவற்றை மாணவர்கள் பெற்று பயனடையும் வகையில் மின்னணு நூலகம் (e-Library)-ஆக செயல்பட வடிவமைக்கப் பட்டுள்ளது. இதற்குத் தேவைப்படும் கணினிகள், மின்னணு நூலக மென்பொருள், மின்தடைமாற்றிகள் மற்றும் மின் இணைப்பு அமைத்தல் ஆகிய வசதிகள் ரூ.87.50 இலட்சம் மதிப்பீட்டில் செய்து தரப்படும்.

## அறிவிப்பு–15

### அறந்தாங்கி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் கூடுதல் இயற்பியல் ஆய்வுக்கூடம்

அறந்தாங்கி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் ஒவ்வொரு பிரிவிலும் 60 மாணவர்கள் பயின்று வருகின்றனர். தற்போதுள்ள இயற்பியல் ஆய்வுக்கூடத்தை ஒரே சமயத்தில் 30 மாணவர்கள் மட்டுமே பயன்படுத்த இயலும். அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி குழுமத்தின் பரிந்துரையின்படி 60 மாணவர்களுக்கு 240 ச.மீ.-ல் இயற்பியல் ஆய்வுக்கூடம் இருக்க வேண்டும். தற்போதுள்ள ஆய்வுக்கூடம் 126 ச.மீ. மட்டுமே உள்ளது. எனவே, 60 மாணவர்களுக்கு பாடம் நடத்த வசதியாக மேலும் 30 பேருக்கு உரிய ஆய்வுக்கூடம் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

## அறிவிப்பு–16

### தூத்துக்குடி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் ஒரு வரைவு அறை கட்டுதல்

தூத்துக்குடி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில், தற்போது 25.50 சதுர அடி பரப்பில் இரண்டு வரைவு அறைகள் உள்ளன. முதலாம்

[2008 மே 6

ஆண்டு அனைத்துப் பாடப் பிரிவுகளிலும் மற்றும் இயந்திரவியல் மற்றும் அமைப்பியல் துறைகளிலும் வரைவு ஒரு பாடமாக உள்ளதால், இந்த வரைவு அறைகள் போதுமானதாக இல்லை. எனவே, 2,500 சதுர அடி பரப்பளவில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு வரைவு அறை கட்டப்படும்.

## அறிவிப்பு–17

### மதுரை தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரியில் உள்ள நூலகக் கட்டட வசதிகளை விரிவாக்கம் செய்தல்

மதுரை தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரியில் உள்ள நூலகம் 3350 சதுர அடி அளவில் முதல் தளத்தில் உள்ளது. இது தற்போதைய மொத்த மாணவர்கள் எண்ணிக்கையான 1241-க்கு போதுமானதாக இல்லை. எனவே, ரூ.42.00 இலட்சம் மதிப்பீட்டில், 2750 சதுர அடி பரப்பளவில் இரண்டு தளங்களாக புதிய நூலகக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதில் தரைத் தளம், புத்தகங்கள் வைக்கும் இடமாகவும், முதல் தளம் படிக்கும் அறையாகவும் கட்டப்படும். தற்போதுள்ள நூலகம் இந்த முதல் தளத்துடன் இணைக்கப்படும்.

## அறிவிப்பு–18

### திருச்சி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் தற்போதுள்ள மாணவியர் விடுதியில் முதல் தளம் கட்டுதல்

திருச்சி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியின் மாணவியர் விடுதியின் தரைத் தளத்தில் 15x15 அடி பரப்பளவில் 11 அறைகள் 2475 சதுர அடி பரப்பில் உள்ளன. அறைக்கு 6 மாணவியர் வீதம் 66 மாணவியர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அதிக மாணவியர் தங்குவதற்கு வசதியாக ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில், 4000 சதுர அடி பரப்பளவில் முதல் தளத்தில் குளியலறை மற்றும் கழிப்பறை வசதிகளுடன் 11 அறைகள் கட்டப்படும்.

## அறிவிப்பு–19

### வேலூர் தந்தை பெரியார் அரசினர் பொறியியல் கல்லூரியில் உள்ள மகளிர் விடுதியில் உணவு அருந்தும் கூடம் கட்டுதல்

வேலூர், தந்தை பெரியார் அரசினர் பொறியியல் கல்லூரியில் பயின்று வரும் 175 மாணவியரில் 110 மாணவிகள் விடுதியில் தங்கி



2008 மே 6]

பயின்று வருகின்றனர். தற்போதுள்ள விடுதியில் தங்கும் அறைகள் மட்டுமே கட்டப்பட்டுள்ளன. உணவு அருந்தும் கூடங்கள் ஏதும் கட்டப்படவில்லை. எனவே, 75 மாணவிகள் ஒரே சமயத்தில் உணவருந்தும் விதத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய உணவு அருந்தும் கூடம் ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

## அறிவிப்பு–20

### பர்கூர் அரசினர் பொறியியல் கல்லூரியில் ஒரு புதிய கட்டடம் கட்டுதல்

பர்கூர் அரசினர் பொறியியல் கல்லூரியில் தற்போதுள்ள EEE கட்டடத்தில் 3 வகுப்பறைகள் மற்றும் 4 ஆய்வுக்கூடங்களும் உள்ளன. அண்ணா பல்கலைக்கழகத்தின் மாற்றியமைக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி கூடுதலாக 7 ஆய்வுக்கூடங்கள் தேவைப்படுகின்றன. அதிகரிக்கப்பட்ட மாணவர் சேர்க்கைக்காக அனைத்து ஆய்வுக்கூடங்களையும் ஒரே கட்டடத்தில் செயல்படுத்துவது பராமரிக்க ஏதுவாக அமையும். எனவே, ஆய்வுக்கூடங்களும், வகுப்பறைகளும் அமைப்பதற்கு ஏற்ற வகையில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய கட்டடம் கட்டப்படும்.

## அறிவிப்பு–21

### பொறியியல் கல்லூரிகளுக்கு பேருந்துகள் வாங்குதல்

தற்பொழுது கோவை, திருநெல்வேலி மற்றும் காரைக்குடி ஆகிய மூன்று அரசு பொறியியல் கல்லூரிகளில், தலா ஒரு பேருந்து வீதம் வழங்கப்பட்டுள்ளன. இவை 25 ஆண்டுகளுக்கு முன் வாங்கப்பட்டவை. வேலூர் மற்றும் பர்கூர் அரசு பொறியியல் கல்லூரிகளுக்கு இதுவரை பேருந்து ஏதும் வழங்கப்படவில்லை.

இந்நிலையில், கோவை, திருநெல்வேலி மற்றும் காரைக்குடி அரசு பொறியியல் கல்லூரிகளில் உள்ள பழைய பேருந்துகளுக்குப் பதிலாக ரூ.48.00 இலட்சம் செலவில் புதிய பேருந்துகள் வாங்க அனுமதி வழங்கப்படும்.

[2008 மே 6

## அறிவிப்பு–22

### அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல்

அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் அந்தந்த கல்லூரிகளின் தேவையின் அடிப்படையில் ரூ.172.00 இலட்சம் செலவில் கூடுதல் வகுப்பறைகள், கூடுதல் செய்முறை கூடங்கள், விடுதிக் கட்டடம் மற்றும் மின் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## அறிவிப்பு–23

### அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு கணினி வாங்குதல்

2008-2009 ஆம் ஆண்டு முதல் தேவையின் அடிப்படையில் அனைத்து அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் "சுழற்சி முறை" (Shift System) திட்டம் செயல்படுத்த இருப்பதால், மாணவர்களுக்கு அதிக கணினிகள் தேவைப்படும். எனவே, 22 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு 750 கணினிகள் ரூ.2.60 கோடி செலவில் வாங்கப்படும்.

## அறிவிப்பு–24

### தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்திற்கு உள்கட்டமைப்பு வசதிகள்

2002 ஆம் ஆண்டு வேலூரில் தொடங்கப்பட்ட திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு டாக்டர் கலைஞரின் ஆட்சி 2006-ல் பதவியேற்கும் வரையில் நிரந்தர கட்டடம் கட்டுவதற்கு நிலமோ, நிதியோ ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இவ்வரசு பதவி ஏற்றபின்தான் அப்பல்கலைக்கழகத்திற்கு நிரந்தரமாக கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், சேர்காடு மற்றும் விண்ணம்பள்ளி கிராமங்களில் 112.68 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து அதில் சொந்தமாக கட்டடம் கட்ட ரூ.16.70 கோடி இவ்வரசு ஒதுக்கீடு செய்தது. இதே போன்று 2005 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் எந்தவித உள்கட்டமைப்பு வசதிகளும் இல்லாமல் இயங்கி வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பின்தான் இப்பல்கலைக்கழகத்திற்கு நிரந்தர கட்டடங்கள் கட்டுவதற்கும், விளையாட்டு மற்றும் உடற்கல்வி வளர்ச்சிக்குத் தேவையான விளையாட்டு அரங்குகள் அமைப்பதன் முக்கியத்துவத்தினையும் கருத்தில் கொண்டு காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மேலக்கோட்டையூர் கிராமத்தில் 125 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. உள்கட்டமைப்பு வசதிகள் அமைப்பதற்கு இந்த ஆண்டே தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.



2008 மே 6]

## அறிவிப்பு–25

### புதிய பொறியியல் கல்லூரிகள் தோற்றுவித்தல்

2008-2009 ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு திண்டிவனம், விழுப்புரம், பண்ருட்டி, நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய ஐந்து இடங்களில் புதிய பொறியியல் கல்லூரிகள் தொடர்புடைய அண்ணா பல்கலைக்கழகங்கள் மூலமாக துவங்கப்படும்.

புதிய பொறியியல் கல்லூரி துவங்குவதற்குத் தேவையான 10 ஏக்கர் நிலமும், ரூ.20.00 கோடியையும், பெரம்பலூர் தொகுதி மக்களவை உறுப்பினரும், மாண்புமிகு மத்திய அமைச்சருமான திரு. அ. இராசா அவர்கள் ஆவன செய்வதாக மாண்புமிகு முதலமைச்சரிடம் உறுதியளித்ததின் அடிப்படையில், அரியலூர் மாவட்டத்தில் ஒரு புதிய பொறியியல் கல்லூரி திருச்சிராப்பள்ளி, அண்ணா பல்கலைக்கழகம்மூலம் துவங்கப்படும். இப்புதிய பொறியியல் கல்லூரிகள் 2008-2009 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படும்.

## அறிவிப்பு–26

### ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் பட்டியல் வெளியிடுதல்

ஒவ்வொரு கல்வியாண்டும், கல்வியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நடைபெறுமுன் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் இணைவு பெற்ற அங்கீகரிக்கப்பட்ட கல்வியியல் கல்லூரிகளின் பட்டியல் வெளியிடப்படும். இதன்மூலம் அங்கீகாரம் இல்லாத கல்வியியல் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்வது தடுக்கப்படும்.

[2008 மே 6

## அறிவிப்பு—27

### 2008-2009 ஆம் கல்வியாண்டு முதல் மதிப்பெண் சான்றிதழ் தர முறையில் (Grading Method) வழங்குதல்

தற்போது வழக்கத்தில் இருக்கும் மதிப்பெண் சான்றிதழ் முறையில் வெளிநாடுகளில் பணி மற்றும் உயர் கல்வி பயில்வதற்காக செல்லும்போது மாணவர்களுக்கு சில பிரச்சனைகள் ஏற்படுகின்றன. கல்வி உலக மயமாக்கப்பட்டுள்ள நிலையில், உலகளாவிய நடைமுறைக்கேற்ப நமது மதிப்பெண் சான்றிதழ்களும் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே அனைத்து பல்கலைக்கழகங்களையும் கலந்தாலோசித்து, 2008-2009 ஆம் கல்வியாண்டு முதல் பல்கலைக்கழகங்களில் தற்போது நடைமுறையில் இருக்கும் மதிப்பெண் சான்றிதழில் மதிப்பெண் வழங்குவதற்குப் பதிலாக தர முறையினை (Grading Method) செயல்படுத்திட அரசு பல்கலைக்கழகங்களை அறிவுறுத்தும்.

## அறிவிப்பு—28

### அரசு கலைக் கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகள் தொடங்குதல்

*2008-2009 ஆம் கல்வி ஆண்டில் கீழ்க்கண்ட 15 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்படும்:—*



2008 மே 6]

| வ. எண் | கல்லூரியின் பெயர் | பாடப் பிரிவுகள் |
|---|---|---|
| 01 | அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை | இளநிலை கணினி அறிவியல் (B.Sc. Computer Science) |
| 02 | அரசு கலைக் கல்லூரி, கரூர் | இளம் வணிகவியல் (கணினி பயன்பாடு) (B. Com., Computer Application) |
| 03 | எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கல்லூரி, திருப்பூர் | முதுநிலை கணினி அறிவியல் (M.Sc. Computer Science) |
| 04 | திரு.வி.க. அரசு மகளிர் கல்லூரி, திருவாரூர் | பி.ஏ. ஜர்னலிசம் மற்றும் மாஸ் கம்யூனிகேசன் |
| 05 | உலகநாத நாராயணசாமி அரசு கல்லூரி, பொன்னேரி | முதுநிலை. கணினி அறிவியல் (M.Sc. Computer Science) |
| 06 | அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, சேலம் | கணினி பயன்பாடு (B.C.A.) |
| 07 | அறிஞர் அண்ணா அரசு கல்லூரி, வாலாஜாபேட்டை | முதுநிலை கணினி அறிவியல் (M.Sc. Computer Science) |
| 08 | அரசு கலைக் கல்லூரி, பரமக்குடி | முதுநிலை கணினி அறிவியல் (M.Sc. Computer Science) |
| 09 | அழகப்பா அரசு கல்லூரி, காரைக்குடி | கணினி பயன்பாடு (B.C.A.) |
| 10 | அரசு கலைக் கல்லூரி, இராமநாதபுரம் | பி.எஸ்.சி. (கணிதம்) |
| 11 | இராணி அண்ணா அரசு கலைக் கல்லூரி, திருநெல்வேலி | எம்.ஏ. (மனித வள மேம்பாடு) HRD |
| 12 | அரசு கலைக் கல்லூரி, சிதம்பரம். | பி.பி.ஏ. (Retail Management) |
| 13 | குந்தவை நாச்சியார் அரசு கலைக் கல்லூரி, தஞ்சாவூர். | பி.பி.ஏ. (Retail Management) |
| 14 | டாக்டர் அம்பேத்கர் அரசு கல்லூரி, சென்னை | பி.பி.ஏ. (Financial Management) |
| 15 | அரசு ஆடவர் கலைக் கல்லூரி, நந்தனம் | பி.பி.ஏ. (மனித வள மேம்பாடு) HRD |
| 16 | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம் | முதுநிலை தகவல் தொழில்நுட்பம் (M.Sc. Information Technology) |

[2008 மே 6

## அறிவிப்பு—29

### கல்லூரி மாணவர்களுக்கு உளவியல் சார்ந்த ஆலோசனை வழங்குதல்

அண்மையில் நடத்தப்பட்ட கள ஆய்வில் ஆண்டுக்கு 6000 மாணவர்கள் தற்கொலை செய்துகொள்கிறார்கள் என்று செய்தி வெளியாகி உள்ளது. அதில் 41% தேர்வின் பயத்தாலும், தேர்வு முடிவுகளின் பயத்தாலும் ஏற்படுகிறது என்று தெரிய வந்துள்ளது. 2007 ஆம் ஆண்டு ஒரு மாணவரின் தற்கொலை தொடர்பான வழக்கில் மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி K.N. பாஷா அவர்கள், மாணவர்களுக்கு உளவியல் சார்ந்த ஆலோசனை வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கி இருந்தார்கள். அதன் அடிப்படையில் முன்னாள் துணை வேந்தர் முனைவர் S.P. தியாகராஜன் தலைமையில் அரசு ஒரு குழு அமைத்தது. அந்தக் குழு பரிந்துரைகளின் குறிப்பிடத் தகுந்தது (1) மாணவர்களுக்கு உளவியல் சார்ந்த ஆலோசனையை வழங்குதல் அவசியம். (2) மாணவர்களின் மதிப்பெண் சான்றிதழ்களில் Fail (F) என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக திரும்பவும் தேர்வு எழுத வேண்டும் என்ற பொருளில் Reappearance (RA) என்று குறிப்பிடலாம் என்பதாகும்.

இப்பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளலாம் என இவ்வரசு முடிவு செய்து அதனடிப்படையில் உளவியல் நிபுணர்கள் சங்கத்துடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் விளைவாக அச்சங்கத்தினர் மாணவர்களின் உளவியல் பிரச்சனைக்காக இலவச ஆலோசனை வழங்க இசைவு அளித்துள்ளனர்.

2008-2009 ஆம் ஆண்டு முதல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகளில் ஒவ்வொரு கல்லூரிக்கும் ஆண்டின் தொடக்கத்தில் ஒரு முறையும் மற்றும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறையும் மாணவர்களுக்கு உளவியல் ரீதியாக ஆலோசனை வழங்கப்படும்.

2008-2009 ஆம் ஆண்டு முதல் மதிப்பெண் சான்றிழ்களில் Fail (F) என்பதற்குப் பதிலாக திரும்பவும் தேர்வு எழுத வேண்டும் (RA) என்று குறிப்பிடப்படும் முறையும் நடைமுறைக்கு கொண்டு வரப்படும்.



2008 மே 6]

## அறிவிப்பு—30

### பொறியியல் கல்லூரியில் மாணவர் சேர்க்கைக்கான மதிப்பெண்கள் குறைப்பு

தமிழகத்தில் பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை மிக வேகமாக வளர்ந்து வருகிறது. 1980 வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் 6-ம் அண்ணா பல்கலைக்கழக கல்லூரிகள் 4-ம் சேர்த்து மொத்தம் 10 கல்லூரிகள் மட்டும்தான் இருந்தன. இந்த நிலை மாறி பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 272-ஆக உயர்ந்துள்ளன. 2005-2006 ஆம் ஆண்டில் ஒற்றைச் சாளர முறையில் சிறுபான்மையினர் அல்லாத கல்லூரிகளில் 50%, சிறுபான்மையினர் கல்லூரிகளில் 30% அரசு ஒதுக்கீடாக இருந்த நிலை மாறி, 2006-2007 ஆம் ஆண்டு இந்த அரசு பதவி ஏற்றதில் இருந்து சிறுபான்மையினர் அல்லாத கல்லூரிகளிலே 65% அரசு ஒதுக்கீடாகவும், சிறுபான்மையினர் கல்லூரிகளில் 50% அரசு ஒதுக்கீடாகவும் மாறி அமைந்துள்ளது. மேலும் 2007-2008 ஆம் கல்வி ஆண்டு முதல் மாணவர்களுக்கு நன்மை பயக்க வேண்டும் என்ற அடிப்படையில் நுழைவுத் தேர்வும் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆயிரக்கணக்கான கிராமப்புற மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளில் அதிகளவில் சேர்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இருந்த போதிலும் 2006-2007 ஆம் கல்வி ஆண்டு மாணவர்கள் சேராமல் 19,652 அரசு ஒதுக்கீட்டு இடங்கள் காலியாக இருந்தன. 2007-2008 ஆம் கல்வி ஆண்டில் 14,721 இடங்கள் காலியாக இருந்தன. மேலும் இந்த ஆண்டு புதிதாக அரசு மற்றும் சுயநிதி கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் பொறியியல் கல்லூரிகளில் படிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் பொறியியல் கல்லூரிகளில் இடங்கள் காலியாக இருப்பதையும் மனதில் கொண்டு இந்த ஆண்டு முதல் கீழ்க்கண்டவாறு பொறியியல் கல்லூரிகளில் சேர்வதற்கான மதிப்பெண்களை குறைப்பதற்கு அரசு முடிவு எடுத்துள்ளது:—

[2008 மே 6

| பிரிவு | மேல்நிலைக் கல்வியில் பெறவேண்டிய குறைந்தபட்ச மதிப்பெண் |
|---|---|
| பொதுப் பிரிவினர் | 60% லிருந்து 55% ஆக |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 55% லிருந்து 50% ஆக |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் | 50% லிருந்து 45% ஆக |
| பட்டியல் இனத்தவர் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் | மேல்நிலை கல்வி தேர்வில் தேர்ச்சி மட்டும் பெற்றால் போதும் |

இதன்மூலம் அதிக அளவில் மாணவர்கள் பொறியியல் கல்வியில் சேர வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## அறிவிப்பு–31

### பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் நிறைவு பள்ளித் திட்டம் (Finishing School) செயல்படுத்துதல்

பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் தேர்ச்சிபெறும் மாணவர்கள் பணியில் சேருவதற்கு முன்பாகவே அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் முறை நிறைவுப் பள்ளித் திட்டமாகும். இத்திட்டத்தில் தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப தொழில் கல்வி முடித்த மாணவர்களுக்குத் தேவையான வகையில் பாடத்திட்டம் உருவாக்கப்படுகிறது. தொழில்நுட்பத் திறன் மற்றும் மென்திறனில் மாணவர்களுக்குப் பயிற்சி தந்து அவர்கள் பணி வாய்ப்பினை மேம்படுத்தி தொழிற்சாலைகளுக்குத் தேவையான திறன் பெற்றவர்களை உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

பல்வேறு பாடப் பிரிவுகளிலிருந்து தேர்ச்சிபெறும் மாணவர்களுக்கேற்ப பல்வகையிலும் பயனளிக்கக் கூடிய வகையில் இத்திட்டம் உருவாக்கப்படும். தொழிற்சாலைகளின் பணியாளர் தேவைக்கும், கல்வித் திட்டத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் களைய இத்திட்டம் தேவைப்படுகிறது. இத்திட்டம் இந்தக் கல்வி ஆண்டு முதல் அனைத்து அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும்



2008 மே 6]

பாலிடெக்னிக் கல்லூரிகளில் நடைமுறைப்படுத்தப்படும். பொறியியல் பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு முடித்தவர்கள் (அல்லது) இறுதியாண்டு பயின்று வரும் மாணவர்கள் இத்திட்டத்தில் சேர தகுதி உள்ளவராவர். இத்திட்டம் குறைந்த கட்டணத் தொகையில் 5 வார கால அளவில் நடத்தப்படும். மாணவர்களின் செயல்திறனுக்கேற்ப தேர்ச்சிச் சான்றிதழ் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின்மூலம் வழங்கப்படும்.

## அறிவிப்பு–32

### பொறியியல் கல்லூரிகளில் முன்னாள் இராணுவத்தினர் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீடு அதிகரிப்பு

பொறியியல் இராணுவத்தினரின் பிள்ளைகளுக்கான இட ஒதுக்கீட்டினை 81-ல் இருந்து 150 (அண்ணா பல்கலைக்கழகத்தில் 8, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் 34, சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் 108) இடங்களாகவும் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கான இடங்களை 42 இடங்களில் இருந்து 100 (அண்ணா பல்கலைக்கழகத்தில் 12, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் 88) இடங்களாகவும் உயர்த்தப்படும்.

## அறிவிப்பு–33

### அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் சுழற்சி முறை

2006-2007 மற்றும் 2007-2008 ஆகிய கல்வி ஆண்டுகளில், அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சுழற்சி முறை வகுப்புகள் தொடங்கப்பட்டன. இது அனைத்துத் தரப்பினாலும் வரவேற்கப்பட்டதைக் கருத்தில்கொண்டு, 2008-2009 ஆம் கல்வி ஆண்டு முதல் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் சுழற்சி முறை கொண்டுவர அரசு முடிவு செய்துள்ளது. இதன்மூலம் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டயப் படிப்பு படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை உயரும். இதன்மூலம் அதிக எண்ணிக்கையிலான ஏழை எளிய மாணவர்கள் தொழில்நுட்பக் கல்வி பயில்கின்ற வாய்ப்பினை பெறுவர்.

[2008 மே 6

## அறிவிப்பு–34

### அரசு பொறியியல் கல்லூரிகளில் உள்ள மாணவர் சேர்க்கைக்கான இடங்களை அதிகரிப்பது

அரசு பொறியியல் கல்லூரிகள் பல வருடங்களுக்கு முன்னர் தொடங்கப்பட்டபோதிலும் அங்கு உள்ள பொறியியல் படிப்புகளில் இடங்கள் மட்டும் அப்படியே தொடர்ந்து இருந்து வரும் நிலை. ஏழை குடும்பங்களிலிருந்தும், கிராமப்புறங்களிலிருந்தும் வரும் மாணவர்கள் தங்களது பொருளாதார சூழ்நிலையில் தனியார் கல்லூரிகளில் அதிக அளவில் கட்டணம் கட்டி படிக்க முடியாத நிலை இதனைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு அரசு நிதி உதவியோடு அண்ணா பல்கலைக்கழகங்கள்மூலம் 5 பொறியியல் கல்லூரிகள் தொடங்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். இதன்மூலம் கிட்டத்தட்ட 1,200 இடங்கள் உருவாக்கப்படும். அதுமட்டுமல்ல, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை ஏறத்தாழ 360 இடங்களை இந்த வருடம் முதல் அதிகரித்துள்ளது. அது மட்டுமல்லாமல், அரசு பொறியியல் கல்லூரிகளில் 600 கூடுதல் இடங்கள் ஏற்படுத்தப்படும். இதன்மூலம், இந்த ஆண்டு மட்டும் 2,160 கூடுதல் பொறியியல் படிப்பிற்கான இடங்கள் அரசு மற்றும் பல்கலைக்கழக பொறியியல் கல்லூரிகளில் ஏற்படுத்தப்படும்.

## அறிவிப்பு–35

### பட்டப் படிப்பு படிக்கும் காலத்திலேயே தொழிற்படிப்பும் படித்தல்

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்கள் தங்களுடைய வேலைவாய்ப்பினை பெருக்கிக்கொள்வதற்கு வகை செய்யும் வகையில் வேலைவாய்ப்பை அளிப்பதற்கான பட்டயப் படிப்பு அல்லது சான்றிதழ் படிப்பு படிப்பதற்கு அனுமதிக்கலாம் என்ற கருத்து துணை வேந்தர்கள் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது. மாணவர்கள் 3 ஆண்டு முடிவில் பொதுவான ஒரு பட்டமும், தொழிற்படிப்பில் ஒரு பட்டயம் (Diploma) அல்லது சான்றிதழ் (I.T.I.) பெறுவதன்மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு மிக அதிக அளவிலே அதிகரிப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும்.



2008 மே 6]

## அறிவிப்பு–36

### சமுதாயக் கல்லூரிகள்

நம் நாட்டில் தொழிலாளிகளின் எண்ணிக்கையில் 9 சதவிகிதம் பேர் அமைப்புசார் தொழிலும், 91 சதவிகிதம் பேர் அமைப்புசாராத் தொழிலும் உள்ளனர். அமைப்புசாராத் தொழில் செய்யும் 91 சதவிகிதத்தில் பெரும்பாலானோர் முறையான கல்வி பயிலாதவர்களாகவே இருக்கிறார்கள். முறையான பயற்சி இல்லாத தொழிலாளர்கள் (Unskilled Labour) ஆக இருக்கிறார்கள்.

இந்த நிலை போக்கப்பட வேண்டும். அதற்காக கலைஞர் அரசு ஒரு புரட்சிகரமான முடிவை எடுத்திருக்கிறது. திறந்த நிலைப் பல்கலைக்கழகம் மூலமாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ‘பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில்’ (Polytechnic Colleges), சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மற்றும் விடுமுறை காலங்களிலும் அந்தந்த மாவட்டத்தில் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கு, அவர்கள் விருப்பப்படுகிறபொழுது அங்கு சென்று பயிற்சி பெறலாம். மேலும், தொழிற்சாலைகளில் பணிபுரியும் முறையான பயிற்சி இல்லாத தொழிலாளர்கள் (Unskilled Labour) அந்தந்த தொழிற்சாலைகளில் சான்றிதழ் படிப்பு படிக்க ஏற்பாடு செய்யப்படும். திறந்தநிலைப் பல்கலைக்கழகம் மூலமாக அவர்களுடைய திறன் பற்றிய தேர்வு நடத்தப்படும். தேர்வு பெறுபவர்களுக்கு தொழிற்படிப்பில் சான்றிதழ் வழங்கப்படும். அதன்மூலம் அவர்களுக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அதிக ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்புகள் உருவாகும். இந்த சான்றிதழ் படிப்பில் சேர்பவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரிந்தாலே போதும்.

## அறிவிப்பு–37

### புதிய பல்கலைக்கழகங்கள் துவக்குதல்

தமிழகத்தில் மூன்று புதிய பல்கலைக்கழகங்கள் அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதற்கு தமிழக அரசின் சார்பில் மிகுந்த நன்றியினையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறோம். அதில் ஒன்று “உலகத் தரம் வாய்ந்த பல்கலைக்கழகமாக” (World Class University) அறிவிக்கப்பட்டிருக்கிறது.

[2008 மே 6

மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் பிறந்து வளர்ந்த திருவாரூரில் மத்திய பல்கலைக்கழகம் அமைக்க மத்திய அரசு முன்வந்துள்ளது. அதற்கு மத்திய அரசிற்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம்.

மேலும், மூன்றாவதாக அமைய உள்ளது, நிகர்நிலைப் பல்கலைக்கழகமான "இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம்".

ஆக இந்த மூன்று பல்கலைக்கழகங்களையும் ஒரே ஆண்டில் தமிழகத்திற்கு பெறுவதற்காக பலமுறை மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அவர்களிடம் நேரிலும், மாண்புமிகு பிரதமரிடமும், அன்னை திருமதி சோனியாவிடமும் கடிதம் மூலமும், நேரிலும் வலியுறுத்திப் பெற்றுத்தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞரின் சாதனை, தமிழகத்தின் கல்வி வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சாதனை ஆகும்.

உலகத்தில் பெரும்பாலான நாடுகளில் காண இயலாத இணைவு (Affiliated) கல்லூரி முறை இந்திய உபகண்டத்தில் மட்டுமே உள்ள கல்வி முறையாகும். தன் சொந்த நாட்டில் இம்முறையைக் கடைப்பிடிக்காத பிரிட்டிஷ் அரசு (British Government) இந்தியாவில் இதனை அறிமுகம் செய்தது. இந்திய உயர் கல்வியில் இருக்கும் மிகப்பெரிய சாபமாக இதனைக் கருதும் கல்வியாளர்கள் பலர் உள்ளனர். இந்தியாவில் உயர் கல்வியை குறித்து ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்டிருக்கின்ற திரு. சாம் பிட்ரோடா அவர்கள் தலைமையிலான தேசிய அறிவுசார் ஆணையம் (National knowledge Commission) தனது அறிக்கையில் "இந்தியாவில் மிகக் குறைவான பல்கலைக்கழகங்களே உள்ளன என்பதால், இதன் எண்ணிக்கையை குறைந்தபட்சம் 1,500 ஆக உயர்த்த வேண்டும்" என்று கூறியுள்ளது. நம்மைவிட சிறிய நாடான ஜப்பானில் 569 பல்கலைக்கழகங்கள் உள்ளன. ஆனால், நம் நாட்டில் சுமார் 350 பல்கலைக்கழகங்கள் மட்டுமே உள்ளன. புதிய பல்கலைக்கழகங்கள் தோன்றிடத்தான் உயர் கல்வியில் புதிய சிந்தனைகளும், எழுச்சியும் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. மேலும், தற்பொழுது உயர் கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதம் 12%-லிருந்து 25% ஆக அதிகரிப்பதற்கு புதிய பல்கலைக்கழகங்கள் அவசியமான ஒன்றாகும். இணைவுக் கல்லூரிகள் முறை படிப்படியாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு முனைப்புடன் உள்ளது.



2008 மே 6]

I

இதன் அடிப்படையில், முதல் கட்டமாக தென் இந்தியாவில் உருவாக்கப்பட்ட முதல் கல்லூரியும், 1840 ஆம் ஆண்டு முதல் 168 ஆண்டுகளாக கல்விப் பணியாற்றிவரும் வரலாற்றுச் சிறப்பும், நோபல் பரிசு பெற்ற சர்.சி.வி. இராமன் மற்றும் முனைவர் எஸ். சந்திரசேகரன், நோபல் பரிசுக்கு இணையான ஏபல் (Abel) பரிசு பெற்ற கணித பேராசிரியர் சீனுவாச வரதன் போன்றவர்களை உருவாக்கிய பெருமைகொண்ட சென்னை மாநிலக் கல்லூரியையும்

II

தஞ்சை மண்ணில் 1854 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட முதல் கல்லூரியும், 154 ஆண்டுகளாக கல்விப் பணியாற்றிவரும் வரலாற்றுச் சிறப்புமிக்க கல்லூரியும், தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத ஐயர். போன்ற பெருமைமிக்கவர்கள் பேராசிரியர்களாகப் பணியாற்றிய கல்லூரியும், கணித மேதை இராமானுஜம் போன்ற சான்றோர்கள் கல்வி பயின்ற பெருமை கொண்ட "கேம்பிரிட்ஜ் ஆப் சவுத் இந்தியா" என அழைக்கப்படும் கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரி மற்றும் கும்பகோணம் அரசு பெண்கள் கல்லூரியும் இணைந்தும்

III

கோவையில் 1852 ஆம் ஆண்டு பள்ளியாகத் தொடங்கி கல்லூரியாக மேம்படுத்தப்பட்ட கல்லூரி, 156 ஆண்டுகளாக கல்விப் பணியில் உள்ள வரலாற்றுப் பெருமைகளைக் கொண்ட கோவை அரசு கலைக் கல்லூரி மற்றும் கோவை அரசு பெண்கள் கலைக் கல்லூரியும் இணைந்தும்

IV

தமிழகத்தில் முதன் முறையாக 94 ஆண்டுகளுக்கு முன்னர் மகளிருக்கு என உருவாக்கப்பட்ட முதல் கல்லூரியான சென்னை இராணி மேரி கல்லூரி ஆகிய தொன்மைவாய்ந்த இந்தக் கல்லூரிகளை பல்கலைக்கழகமாக தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருகிறது. அதனை செயல்படுத்தும் முகத்தான் தொன்மை வாய்ந்த இந்த நான்கு கல்லூரிகளும் ஒருமை வகை (Unitary Type) பல்கலைக்கழகங்களாக 2008-2009 ஆம் கல்வி ஆண்டு முதல் செயல்படத் தொடங்கும்.

[2008 மே 6

இவற்றோடு, தொழில்நுட்பக் கல்லூரிகளில் புகழ்பெற்ற அரசு உதவிபெறும் கல்லூரிகளான

V

பி.எஸ்.ஜி. பொறியியல் கல்லூரி, கோயம்புத்தூர் மற்றும் அதனுடன் இணைந்த கல்வி நிறுவனங்கள்

VI

மதுரை தியாகராஜா பொறியியல் கல்லூரி மற்றும் தியாகராஜர் கலைக் கல்லூரி இணைந்து இந்தக் கல்வி ஆண்டு முதல் ஒருமை வகை (Unitary Type) பல்கலைக்கழகங்களாக தரம் உயர்த்தப்படும்.

VII

மேலும், கல்வியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை அதிக அளவில் அதிகரித்து வருகின்றன. தற்போதுள்ள பல்கலைக்கழகங்களில் அவை இணைவுக் கல்லூரிகளாக உள்ளன. கலை, அறிவியல், வணிகவியல், கணிப்பொறியியல் மற்றும் மேலாண் படிப்புகளுடன், கல்வியியல் கல்லூரிகளும் ஒருசேர பல்கலைக்கழகங்களில் இணைவு பெறுவதால், கல்வியியல் பாடத்திட்டங்களுக்கு சரியான முறையில் பல்கலைக்கழகங்களால் கவனம் செலுத்தாத நிலை உள்ளது. கல்வியியல் கல்லூரிகள் தொடர்பாக அதிக அளவில் நிருவாகப் பணிகளில் ஈடுபட வேண்டியுள்ளதால், மற்றப் பிரிவுகளுக்கும் சரியான முக்கியத்துவம் தர இயலாத நிலை உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு கல்வியல் ஆராய்ச்சி மற்றும் பட்ட மேற்படிப்புகளை ஊக்குவிக்க கல்வியியலுக்கு என்று தனியே ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கப்படும். சென்னை, வெலிங்டன் சீமாட்டி மகளிர் கல்வியியல் கல்லூரி மற்றும் சென்னை சைதாப்பேட்டையில் இயங்கி வரும் கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தையும் இணைத்து சென்னை, வெலிங்டன் சீமாட்டி மகளிர் கல்வியியல் கல்லூரி வளாகத்தில் இப்பல்கலைக்கழகம் உருவாக்கப்படும். இந்தப் பல்கலைக்கழகம், கல்வியியல் மேலாண்மைப் படிப்பிற்கும், பயிற்றுவித்தலின் புதிய முறைகளை அறிமுகப்படுத்துவதற்கும், புதிய தொழில்நுட்பங்களை கல்வியியல் கல்லூரிகளில் அறிமுகப்படுத்துவதற்கும் உறுதுணையாக இருக்கும் கல்வியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், ஒரே காலக் கட்டத்தில் மாணவர்



2008 மே 6]

சேர்க்கை, குறிப்பிட்ட கால அளவுக்குள் தேர்வுகள் நடத்துதல் மற்றும் தேர்வு முடிவுகள் வெளியிடுவதில் தற்போது காணப்படும் குழப்பங்கள் இந்தப் பல்கலைக்கழகம் உருவாக்குவதன்மூலம் ஒழுங்குபடுத்தப்படும்.

இந்த ஆண்டு தமிழகத்திற்கு மைய அரசின் மூன்று பல்கலைக்கழகங்கள், அரசு கல்லூரிகள் தரம் உயர்த்துவதால் உருவாகும் நான்கு பல்கலைக்கழகங்கள், கல்வியியல் பல்கலைக்கழகம், அரசு நிதி உதவி பெறும் கோவை பி.எஸ்.ஜி. கல்வி நிறுவனங்கள் மற்றும் மதுரை தியாகராஜர் கல்வி நிறுவனங்களை தரம் உயர்த்துவதால் அமைக்கப்படும் இரண்டு பல்கலைக்கழகம் ஆக மொத்தம் பத்து பல்கலைக்கழகங்கள் தமிழகத்தில் இந்த ஆண்டு முதல் செயல்படத் துவங்கும்.

இந்திய வரலாற்றிலேயே, ஒரு மாநிலத்தில் ஒரே ஆண்டில் பத்து பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தி இருப்பது தமிழகத்தில்தான் என்பது நமக்கு பெருமை சேர்க்கக் கூடிய வரலாற்றுச் சாதனையாகும்.

ஒஒஒ

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228381
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.